உ

திருச்சிற்றம்பலம்

சைவ சபை,

பாளையங்கோட்டை.

25-வது ஆண்டு நிறைவுமகாசங்கப்

பிரசங்கங்கள்.

காணுடுகாத்தான் மாட்சிதங்கிய,

ஸ்ரீமத்,

S. R. M. M. C. T. பெத்தாச்சி செட்டியார் அவர்கள்,

பொருளுதவியால் அச்சிடப்பட்டது.

ராமநிலைய விவேகானந்த முத்திராக்ஷாசாலை,

வேப்பேரி, சென்னை.

1912.

FOREWORD.

The lectures delivered at the Saiva conference held in May 1911 under the auspices of the Saiva Samayabivirthi Sabha (now Saiva Sabha), Palamcottah, when that ardent scholar and Patron of Tamil, the late lamented Pandithurai Thevar avergal, Zamindar of Palavanatham, presided, are printed and published in a book form for the use of the public. Some of these lectures, we are sorry to say, were not given to us by the learned lecturers. Of those that were received by us, we regret one was missed on its way to the press. The rest are printed herein.

We have to thank the others for their kind permission to have them printed and published. Our deep debt of gratitude is also due to that liberal-hearted gentleman Sriman S. R. M. M. C. T. Pethachi Chettiyar avergal of Kanadukathan, but for whose liberal help this book will not have seen the light of the day and who has also promised us a press for future publications of the kind.

Sriman T. Chelvakesavaraya Mudaliar avergal, M.A., an invaluable acquisition to the cause of our Sabha in Madras took a great deal of trouble in seeing these and other works of the Sabha through the press. We tender our earnest thanks for his kind and unostentatious but still very valuable help in this and other respects.

Lastly we owe a word of apology for the trouble we have given to Mr. T. Bakthavathsalam Pillai avergal, B.A., M.B.P.I., in requiring him to get our works done at short notice. He did it carefully and neat enough, showing thereby a spirit of good will towards our work.

V. S. SIVAGNANA DESIKAR,

Secretary.

SECOND SAIVA CONFERENCE

HELD UNDER THE AUSPICES OF

SAIVA SABHA, PALAMCOTTAH.

The Sabha was established in 1886. The objects of the Sabha are to cultivate the Dravidian languages with a view to bring to light the close relation that exists between their different branches, to advance the social condition of the Dravidians so as to impress on them their common ancestry, to exert an influence on holders of trust properties and make them manage those properties in a way conformable to the needs of modern times and above all to popularise the Dravidian religion.

Of the various ways the Sabha adopts to carry out these its objects, holding annual Saiva Conferences is one and accordingly the Sabha held its first conference in May 1910 at Palamcottah under the Presidentship of the late Srimath P. Pandithurai Thevar Avergal, Zemindar of Palavanatham. The second conference was held also at Palamcottah in May 1911 under the presidentship of the same learned Zemindar whose untimely death the Sabha greatly laments, whose abilities, it may be impertinent on our part to speak of, and to whose generosity and public-spiritedness, all the Tamil world is immeasurably indebted.

This conference met in a splendid pandal erected for the purpose and its proceedings lasted for 3 days. On the first day at 9 A.M. the president was heartily received at the Bridge Station and in a procession conducted to Palamcottah. The meeting commenced at 2 P.M. with the recital of Devaram. People from several parts and from both sexes were eagerly gathered together and the audience numbered about 3000. The President took the chair amidst cheers and a welcome address was presented to him by the Honourable S. T. Shanmugam Pillai Avl. President of the Reception Committee. The 25th Annual report of the Sabah was read and copies of

the same were distributed amoung the audience. Then came the most interesting part of the proceedings, the lectures. The president opened the meeting with a short and sweet address. Many gentlemen and two ladies from distant parts were pleased to oblige us with their learned essays, on subjects allied to literary, social, moral and religious nature. Some gentlemen had their essays written in English, some expressed their inability to be here on the date of the conference and kindly sent us their essays and all these have been published in a book so that they may be in a tangible form even to those who had not the benefit of hearing them read in the conference.

On the second day Sriman Sivagnana Desikar delivered a stirring lecture on 'Trust properties and their management' at the close of which a business meeting was held with M. R. Ry. N. A. V. Somasundram Pillai Avl., B.A., B.L., the President of the Sabah in the chair.

In this meeting a Sub-Committee was appointed to do things necessary to induce the heads of the Thiruvavadurai and other Mutts to bring about reforms in the management of their trusts and report their work to the conference.

The conference closed with a hearty vote of thanks to the president, the lecturers and other gentlemen and volunteers who were of immense help for successfully carrying out the conference.

This, in short, is the report of the second conference.

பொருளடக்கம்.

பக்கம்.

1. Welcome Address.
   The Honorable S. T. Shanmugam Pillai Avl, President, Reception Committee. ... 1-3

2. வந்தனப் பத்திரம்.
   சைவ சபை, பாளையங்கோட்டை. ... 4

3. தமிழ்க் கல்வி.
   ஸ்ரீமத் த. கைலாச பிள்ளை அவர்கள், யாழ்ப்பாணம். ... 5-8

4. தமிழ் மக்களின் காகரீகம்.
   ஸ்ரீமத் T. செல்வகேசவராய முதலியார், அவர்கள் M. A. சென்னை. ... 9-22

5. தமிழ் மாதரின் பண்டைக்கால நிலை.
   பண்டிதை ஸ்ரீமதி அலர்மேல் மங்கை யம்மாள் அவர்கள். ... 23-36

6. Saint Pavanandi.
   Srimath M. S. Purnalingam Pillai, Avl., B. A., L. T., Tinnevelly. ... 37-42

7. Problem of Caste.
   Rao Sahib Doctor C. B. Rama Rao, B.A., M D. ... 43-48

8. சிவாலயங்களும் சிலாலிகிதங்களும்.
   ஸ்ரீமத் அரிகர ஐயர் தமிழ்ப்பண்டிதர் அம்பா சமுத்திரம். ... 49-58

9. மனத்துய்மை.
   ஸ்ரீமத் G. S. துரைசாமி பிள்ளை அவர்கள் தமிழ்ப்பண்டிதர், C. M. S. High School, Palamcottah. ... 59-68

10. தெரிந்து செயல்வகை.

ஸ்ரீமத் M. S. பூர்ணலிங்கம்பிள்ளை
அவர்கள், B.A., L.T., திருநெல்வேலி. ... 69-73

11. தருமத்தரபனம்.

ஸ்ரீமத் T. பக்தவத்சலம் பிள்ளை
அவர்கள், B.A., M.B.P.I., சென்னை. ... 74-85

12. ரிஸலூஷன் ... 86-87

13. சன்மார்க்கம்.

ஸ்ரீமத் வி. பி. காந்திமதிநாத பிள்ளை
அவர்கள், B.A., வக்கீல், அம்பா சமுத்திரம் ... 88-100

14. வைதீக சைவப்பிரபாவம்.

ஸ்ரீமத் அரங்கசுவாமி ஐயரவர்கள்,
Clerk, District Munsiff's Court,
குளிச்சல். ... 101-128

15. கடவுள் இலக்கணம்.

ஸ்ரீமத் வெ. தில்லை நாயக முதலியார் அவர்கள்,
சிதம்பரம். ... 129-136

16. ஆன்ம இலக்கணம்.

ஸ்ரீமத் பொ. முத்தய பிள்ளை அவர்கள்
தூத்துக்குடி. ... 137-145

17. Essentials of a true religion.

Srimath J. M. Nallaswami Pillai, Avl.,
B.A., B.L., District Munsiff, Guntur.... 146-150

18. Discourse on Problem of Life.

The Honorable S. T. Shanmugam
Pillai, Avergal. ... 151-153

WELCOME ADDRESS

OF

The 2nd Saiva Conference held at Palamcottah.

LADIES AND GENTLEMEN,

I now rise on this platform to do the very same pleasant duty that I did, about this time last year, viz., that of welcoming our noble President-Elect, the several select Pandits and cultured delegates as well as our guests to this the Twenty-fifth Anniversary Meeting of our religious Sabha here. Sometime in April last, when our ever energetic and indefatigable Secretary announced his intention to call me again to perform this function, I was afraid I would have to deny myself the privilege and pleasure of it, owing to the pressure of various other duties that then awaited me, and I duly informed him of the fact, and asked him to pitch upon some other gentleman, near at hand, better fitted, and more free to undertake the task, but for reasons best known to him, he was inexorable and insisted on my going over here for the purpose, in spite of any difficulties in my way. Thus, there was no alternative left, and I have had to climb down all the way 400 miles from, if I may say so, the Olympian height of the Blue Mountains to which I had taken my exodus for shelter from the scorching plains below, to obey the call of a sacred public duty.

Ladies & gentlemen, Let me now hurry up the performance of my legitimate duty. On my own behalf and on behalf of the whole Saiva Community whom this Sabha represents, I most heartily and delightfully welcome, you, Sir, President-Elect, and all of you Ladies and gentlemen, who have, at a great personal sacrifice, in this most disagreeable weather, come all the way from your distant homes, to attend this anniversary meeting of the Sabha, and to encourage and help forward its efforts in the direction of reforming and raising the moral and religious tone of the Society, by your learned lectures and discourses on our most ancient, historic and ever revered religion and kindred subjects.

Ladies and Gentlemen, Our Sabha has done its best to give you a fitting reception and to secure you all possible comforts and convenience during your short sojourn amidst us. Should there be any defects in our arrangements, as no human scheme or action can possibly be perfect, we appeal to your generous sympathy to indulgently overlook them, taking our will for the deed, and to condescendingly accept our welcome.

Ladies and Gentlemen, as will be seen from the programme of work already published, the present session of this Sabha will be held for three consecutive days, commencing from to-day, during which lectures or speeches will be delivered by more than a score of Pandits and others of practical learning and experience. They represent different classes of the Hindu Community distributed over a wide area of our Province and of the Hyderabad State. While our own district has the credit of contributing almost one-half the number, the other half have come forth from various other centres, viz. three, including a lady representative from the Madras City, four from Madura including our president-Elect, two from South Arcot, one from each of the three centres, Trichinopoly, Salem and Guntur, and one from Secundrabad, who may count for many, being a solitary lady representative for the whole of the Nizam's Dominions. One and all of these would seem the pick among the cultured of our society. For instance, as most of you are aware, our President-Elect, M.R.Ry., Pandithorai Tevar Avergal, is a gentleman of high status in society combined with rare qualifications of the head and heart. A direct representative of the ancient and illustrious Sethupati family of Ramnad, he is himself a premier Zamindar and a noble man in every sense of the term. As a scholar, he is a conspicuous figure in the world of letters, and as regards philanthropy, he yields to none of his class. He has founded, in the ancient capital of the Pandiahs, a College known as the Madura Tamil Sangam. Being a revival, in miniature, of the puranic Sangam of old, which, for centuries, lay unearthed in the dead past, it stands a monument of his fame for all time to come. He is none the less interested in promoting religion and morality, and scarcely spares himself an opportunity of taking a leading part in all such movements, as is exemplified in the present case. So, a

better selection cannot be made for the office of President. Then, of the remaining delegates, some have already distinguished themselves by their learned speeches from this Platform, while about the rest, we may well presume from the subjects they have proposed to deal with that they are also worthy representatives of learning and civilization. In fact, the Sabha has collected and brought in a best lot of zealous workers in the cause of humanity. There is no doubt that their speeches will be highly interesting and instructive, and it only remains for the audience to patiently hear them and then to assimilate and utilize the knowledge they acquire in the right direction of attaining the noblest ends of life.

Ladies and Gentlemen, with these words, let me ask our President-Elect to take the chair and proceed with the regular business of the meeting.

மாண்புவாய்ந்த,

ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்,

பாலவநத்தம் ஜமீன்தாரவர்கள்.

முப்பொருள் படைத்த முதறி செல்வ!

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்றனர் 'பொய்யில் புலவர்'. அறிவுடையோர் தாமடையு மின்பத்தை உலகினரடையும்படி விரும்புவர். இன்பந்தரற்கே யன்றிச் சின்னட் பல்பிணிச் சிற்றுயிர்வாழ்க்கைக் குறுதுணை யாவதும் கல்வியே. அக்கல்வியின் பயனை யாவரு மடைந்து கோடற் பொருட்டே இந்திய கலையாராய்ச்சிக் கழகம் ஒன்றைத் தாபிக்கப் பொருளீந்தனன் 'தாதா' வாகிய டாடா. நீயோ வென்னின் தமிழ் மக்கள் அனைவரும் தம் தாயின் பழநலம் பேணிப் பயனெய்து மாறு உன் 'உடல் பொருள் ஆவி' மூன்று மீந்தனை. நும்தம செயல்கள் இத்துணைச் சிறப்பின வெனச் சரித்திரமே செப்பும் பின்னுள்,

கலைவாண! தமிழன்னை தன்கலை முழுவதும் பெருகுமாறு நீ நீடு வாழ்வாய்!

சித்தாந்தச் செல்வ! சென்ற ஆண்டினிற் போலவே, இவ்வருடத்தினும் எங்கள் வேண்டுகோளை மறுத்தற்கியலாது இக்கழகத் தலைமை பூண ஒருப்பட்டனை. இதற்காக யாங்கள் மிகவும் கடப்பாடுடையேம்.

அன்று அம்மகா சங்கத்தை அணிபெற நடத்திய உன் அருந்திறம் வியந்த யாங்கள் இன்னும் ஓர் முறை அக்காட்சி யெய்தப் பெறுவோமா வென்று நினைந்தேம். இன்று அக்காட்சியை மறுமுறை கூட்டித்தந்த முழுமுதற் கடவுளாம் சிவபெருமான் திருவடியை இறைஞ்சி இம்மகா சங்கத்தைக் கூட்டுகின்றோம்.

இங்ஙனம்,

சைவ சமயாபிவிர்த்தி சபையார்,

பாளையங்கோட்டை.

27—5—11.

சிவமயம்.

தமிழ்க் கல்வி.

தமிழ்ப்பாஷையானது இந்தியாவிலே தென்பாகத்திலும் இலங்கையிலே வடபாகத்திலும் பிறவிடங்களிலும் வழங்குகின்றது. இப்போது இதனைப் பேசுவோருடைய தொகை இரண்டுகோடிக்கு மேலாகும். சம்ஸ்கிருதபாஷை ஒருகாலத்தில் எவ்வளவு விருத்தியாயிருந்ததோ அவ்வளவு தமிழும் விருத்தியாயிருந்தது. இப்பொழுது சமித்திரா எனவழங்கும் தீபாந்தர முதலிய தேசங்களிலும் இத்தமிழ் ஒரு காலத்தில் வழங்கியதென்பதற்கு, ஐந்து ஆறு வருஷங்களுக்கு மூன் அங்கே கண்டெடுக்கப்பட்ட பழைய சிலாசாசனங்களே சான்றாகும். இப்பாஷைக்கு வயசு,வருஷங்களாலின்றி, யுகங்களால் எண்ணப் படல் வேண்டும்.

இத்தமிழ்ப் பாஷையில் உருத்திரம் முதலாகிய ஒன்பது ரசங்களு மமைந்த நூல்கள் பலவிருக்கின்றன; இராச நீதிகளைக் கூறும் நூல்கள் பல விருக்கின்றன; இதிகாசமெனப்படும் சரித்திரங்களைச் சொல்லும் நூல்கள் பலவிருக்கின்றன; கைபாகஞ் செய்பாகந் தவறுமற் செய்யப்பட்டவழி நோ யை உடனே தப்பாமற்கண்டிக்கும் மருந்தைச் சொல்லும் நூல்கள் பலவிருக் கின்றன; நெடுங்காலத்துக்குப் பின்னே வரப்போகின்ற பலங்களை முன்னே றச்சொல்லும் சோதிட நூல்கள் பலவிருக்கின்றன; சன்மார்க்க விதிகளைக் கூறும் நீதிநூல்கள் பலவிருக்கின்றன; கணக்கு நூல்கள் பலவிருக்கின்றன; பதார்த்தங்களை அளக்கிற தருக்கநூல்கள் பலவிருக்கின்றன; மாட கூட கோபுராதிகளைச் செய்யும் விதிகளைக் கூறும் சிற்பநூல்கள் பலவிருக்கின் றன. இவைகட்கெல்லாம் மேலாக எல்லையின்றியிருக்கும் சமயநூல்கள் பல விருக்கின்றன. இந்நூல்களுட் பற்பல இறந்துபோயது மெய்யே. இன் னும் இருப்பவைகளோ கொஞ்சமல்ல. இக்காலத்திலோ இவைகள் கற்பவ ரின்மையால் மூலைகளுள் கிடந்து உக்கியும் கறையானும் பூச்சியும் தின்னப் பட்டும் அழிகின்றன. இன்னும் பலகாலஞ் செல்லினும் ஐரோப்பியர் அறி தற்கரிய வித்தைகள் பல இந்நூல்களிலிருக்கின்றன. தம்முடைய பிரசங்கத் தைக்கேட்டு, எவ்வளவு சாதகங்களும் பலமற்றவர்களும் யுத்தசன்னத்தராகு மாறும், ஆயிரம் பிறைகண்ட கிழவரும் காமத்தை விரும்புமாறும், இங்ங னமே ஒன்றொன்றற்கு அருகரல்லாதவர் அததில் உற்சாகமுடையராகும்ப டிக்குப் பிரசங்கித்த தமிழ்ப் பண்டிதர்கள் பலர் இருந்தார்கள்.

இவ்வாறாகவும், தமிழ்ப் பிள்ளைகள் பலர் தமது சுயபாஷையைக் கற்காது இங்கிலிசையே படிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அது இடுப்பிலே வேட்டி கட்டாது தோளிலே அங்கவஸ்திரம் போட்டுக்கொண்டாற்போல் இருக்கின் றது.

சுவைகளுள் இனிப்பு நன்றென்பன் ஒருவன், உறைப்பு நன்றென்பன் ஒருவன், புளிப்பு நன்றென்பன் ஒருவன்; நிறங்களுள் செம்மை நன்றென்பன் ஒருவன், கருமை நன்றென்பவன் ஒருவன், பசுமை நன்றென்பன் ஒருவன்; இப்படியே எல்லாருக்கும் ஒரு பொருள் நன்றாயிராது. ஐரோப்பியர் விஷயத்திலோ அவர்களுக்கு நல்லனவெல்லாம் நமக்கும் நல்லனவாயும் அவர்களுக்கு ஆகாதனவெல்லாம் நமக்கும் ஆகாதனவாயும் விட்டன. நம்மவர் எவ்வளவு இங்கிலீசைப் படிப்பினும் அவர்களைப்போலப் புகைவண்டி முதலிய ஒரு வேலையையும் இன்றுவரையும் செய்ததில்லை. அவர்கள் செய்ததைப் பார்த்துஞ் செய்ய இயலவில்லை: இது பெருவெட்கம். விவேகமுடைய பிள்ளைகளுக்கு எந்தப் பாஷையென்றிருக்கிறது. விவேகம் ஒன்றே. தமிழ் விவேகமென்றும் இங்கிலீசு விவேகமென்றும் இரண்டில்லை. ஒன்றைத் தமிழால் நினைப்பதும் இங்கிலிசால் நினைப்பதும் சரியேயாம். இங்கிலிசில் அகஸ்தர் மூன்தெரியாத பருத்திதுறையிலுள்ள ஆறுமுகர் என்பவர் செய்த எல்லாக் கிரகங்களுடையவும் கதிவக்கிர முதலியவற்றோடு கூடிய அதிநூதனமான மணிக்கூட்டுக்கு எந்த இங்கிலிசு காரணம்? இனி, கம்பருடைய கற்பனைசத்திக்கும் மில்றன் உடைய கற்பனைசக்திக்கும் என்ன வேற்றுமை யிருக்கின்றது? காளிதாசருடைய நாடகத்துக்கும் ஷேக்ஸ்பியர் உடைய நாடகத்துக்கும் என்னபேதம்? அன்னம் பட்டர் செய்ததும் தருக்கமே, மில் செய்ததும் தருக்கமே. ஆதலால் ஒருவனுடைய உள்ளக் கருத்தை அலங்கரிப்பது விவேகமன்றிப் பாஷையன்று. இதனை அறியாமற் சில பிள்ளைகள் தமிழ் படிக்கிறதில் என்ன இருக்கிறதென்கிறார்கள். இப்பொழுதை ஆகாயரதத்தை மெச்சுவோருள் எந்த மாணாக்கன் அகத்தியர் முதலாயினோர் எப்படி ஆகாயவழிக்கொண்டு முற்காலத்திற் போனார்கள் என்று அறிந்து அதைக் கண்டுபிடிக்க முயன்றவன்? இங்கிலீசு வைத்தியத்தை மெச்சுவோருள் எந்த மாணாக்கன் சந்தானகாரணி சல்லியகாரணி சமனியகாரணி என்னும் மருந்துகளைத் தேடிப்பார்த்தவன்? இப்பொழுதை வெடிமருந்து குண்டு பீரங்கிகளை மெச்சுவோருள் எந்த மாணாக்கன், மோகப்படை ஞானப்படைகளைக் கண்டறிய விரும்பினவன்? எவன், இருந்தவிடத்திலிருந்து செலுத்திய அம்பு மற்றை யுலகங்களுக்கும் போகும்படி இராமர் முதலானோர் எப்படி என்ன மந்திரஞ் சொல்லினர் என்று ஆராய்ந்தவன்? ஐரோப்பியருடைய வினையாட்டுச் சாமான்களை மெச்சுவோருள் எந்த மாணாக்கன் கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணத்திற் சொன்ன யந்திரப்பொறிகள் எவ்வாறு செய்யப்பட்டனவென்று ஆராய்ந்தவன்? இப்பொழுதைக் கட்டடங்களை மெச்சுவோருள் எவன் கந்தபுராணம் இராமாயணம் சிலப்பதிகாரம் என்பவைகளிற் சொல்லப்பட்ட மாளிகைகள் சூளிகைகள் கோபுரங்கள் நிலாமுற்றங்கள் செய்குன்றுகள் எழினிலை மாடங்கள் எப்படி அமைக்கப்பட்டனவென்று ஆராய்ந்தவன்! மந்திரத்தால் எப்படித் தமிழர் விஷந்தீர்த்தார் என்று எவன் ஆராய்ந்தவன்? இவ்வாறு இன்னும் பற்பல வுள்ளனவாக, தமிழில் என்ன இருக்கிறதென்று சில பிள்ளைகள் கேட்பது என்னை! தமிழ் படித்தால் உத்தியோகமாகுமா பணஞ்சம்

பாதிக்கலாமா என்றும் கேட்கிறார்கள். எந்தத் தேசத்திலும் பெருஞ்செல்வர் வியாபாரிகளேயன்றி உத்தியோகத்தர் அல்லர்.

இனி, இங்கிலிசுப்பாஷை வருதற்கு முன் நம்மவர் சோறுகறி பலகார வகை உண்ணவில்லையா! வேட்டி உத்தரீயம் சட்டை மூலக்கச்சுத் தரிக்க வில்லையா! கட்டில் மெத்தையிற் சயனிக்கவில்லையா! கண்ணாடி பார்க்கவில் லையா! விசிறிகொண்டு வீசிறவில்லையா! சிங்காசனம் இரத்தினக் கம்பளம் இவற்றி லிருக்கவில்லையா! இரத்தினாபரணம் பொன்னாபரணம் மூடி இவை தரிக்கவில்லையா! பீதாம்பர மணியவில்லையா! வீணையிசை யாழிசை குழலி சை கேட்கவில்லையா! செருப்பிடலில்லையா! குடைபிடிக்கவில்லையா! மாடங் கள் சாளரங்கள் உப்பரிகைகளோடு கூடிய மாளிகைகளில் வாசம்பண்ணவில் லையா! இரதம் குதிரை யானை இவை யேறவில்லையா! வில் வேல் வாள் மூதலிய ஆயுதம் பிடிக்க வில்லையா! அணிவகுத்துப் போர் செய்யவில்லை யா! போரில் எல்லாமிழந்த பகைவனை நீ போய் நாளைக்குவா என்று தரும நீதியோடு அனுப்பவில்லையா! பதினெட்டுப் பதத்ததாய வழக்கை விசாரணை செய்யவில்லையா! கருப்பஞ்சாற்றி லட்டகற்கண்டு சர்க்கரை தின்னவில் லையா! தலைக்கு எண்ணெயிடவில்லையா! சாந்து சந்தனம் கஸ்தூரி புழுகு பூமாலை இவை தரிக்கவில்லையா! சரவிளக்கு தூக்கு விளக்கு குத்துவிளக்கு சட்டவிளக்கு இவை கொண்டு தீபமேற்றவில்லையா! மருந்துகின்று வியாதி மாற்றவில்லையா! தங்களைப் பிராமணர், சத்திரியர், வேளாளர், வணிகர், ஆசா ரியர், சீடர், படைத்தலைவர், நிமித்திகர், மருத்துவர், குயவர், சித்திரகாரர், கண்ணுளர், கொல்லர், தச்சர், தட்டார், சிற்பாசாரியர், கன்னர், வண்ணர், நாவிதர், வேதகாரர், காருகர், துன்னர், செம்மார், பாணர், மாலுமி, பண்ணு வார், மெய்காப்பாளர், ஒற்றர், வாலுவர், கூத்தர், குயிலுவர் முதலாகப் பகுத் துக்கொண்டு உலகியல் நடத்தவில்லையா! வித்தியாசாலை யமைத்துக் கல்வி கற்பிக்கவில்லையா! அரிவாள் இருப்புப்பாரை கலப்பை எழுத்தாணி முதலிய வைகள் வைத்திருக்கவில்லையா! பிறதேசங்கட்குப்போக மரக்கலங்கள் செய் து வைத்திருக்கவில்லையா! உண்டாட்டு களியாட்டு புனல்விளையாட்டு முதலா னவை அயரவில்லையா! விமானங்களி லிவர்ந்து ஆகாய வழிக்கொண்டு செல் லவில்லையா! தீக்கடைக்கோல் கொண்டு நெருப்புச் செய்யவில்லையா! இவை களையெல்லாம் நம்முடைய மூதாதையர்கள் அனுபவித்தார் என்பது, இங்கிலி சுப்பாஷை இத்தேசத்துக்குவரச் சொப்பனங் காணுதற்கு முன்னே செய்யப் பட்ட கந்தபுராணம் இராமாயணம் முதலிய தமிழ்க்காவியங்களுள்ளும் பழைய சங்கத்து நூல்களுள்ளும் ஒன்றையேனும் வாசித்தவர்களுக்கு நன்றாக விளங்கும்.

கந்தபுராணம் பாடப்பட்டு ஈ000-வருஷங்களுக்கு மேலாயினவென் றும் இராமாயணம் பாடப்பட்டு ஈ000-வருஷங்களுக்கு மேலாயினவென் றும் சிலப்பதிகாரம் பாடப்பட்டு உ00-வருஷங்களுக்கு மேலாயின வென் றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவற்றிற்கு "சகாத்த மெழுநூற்றின் மேலா யிலகுகந்தபுராணமரங்கேற்றினானே" என்பதும், "சகாத்த மெண்

ணூற்றேழின் மேற்சடையன்'' என்பதும், கயவாகுவின் சரித்திரங் கூறப் பட்டதும், முறையே சான்றாகும். சொல்லப்பட்ட அக்காலத்தன்றி வேறு பிற்காலத்தில் மேலே சொல்லப்பட்ட நூல்கள் செய்யப்பட்டனவென்பதற்கு வேறு பிரமாணமில்லாமையாலும், இந்த நூல்களிற் பிற்காலத்திலுள்ள இந்துஸ்தானி இங்கிலிசு முதலிய பாஷைச் சொற்களொன்றும் வந்து கலவாமையாலும், பிற்காலத்திற் சொல்லப்பட்டதொன்றை முற்காலத்திற் செய்யப்பட்டதென்று சொல்லுதலினால் போதப்பயனின்மையாலும், இந்நூல்கள் அவ்வக்காலத்திற் செய்யப்பட்டன வென்பதற்கு யாதும் ஐயுறவில்லை. இஃதொன்று அங்கீகரிக்கப்படுமாயின், தமிழ் நூல்களில் எல்லாச் சாத்திரங்களும் இருந்தன வென்பது தெள்ளிதிற்றுணியப்படும். இங்கிலிஷிலே முன்னே சுருங்கியிருந்த நூல்களை யெல்லாம் பின் விரித்து விரித்துச் செய்வார்கள். தமிழிலோ அதற்குமாறாக முன் விரித்து கிடந்த நூல்களை யெல்லாம் பின்சுருக்கிச் செய்வார்கள். முத்தமிழும் விரவிய அகத்தியமும் இயற்றமிழிலே ஐந்திலக்கணமுமைந்த தொல்காப்பியமும், இரண்டிலக்கணமு முடைய நன்னூலும், இலக்கணச்சுருக்கமுமே இதற்கு உதாரணமாகும். இதுமுற்காலத்தில் அனேக விஸ்தாரமான நூல்கள் தமிழிலே இருந்தனவென்பதைக்காட்டுகின்றதன்றோ. முற்காலத்திருந்த முச்சங்கங்களிலும் அறுஆ-பேர் நூலராங் கேற்றினரென்று சொல்லப்பட்டிருன்றது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நூலாக வைத்து எண்ணினும் சங்கத்திலரங்கேற்றிய நூல்கள் அறுஆ-வேண்டுமே. சங்கமழிந்தபின் எத்தனையாயிர நூல்கள் அரங்கேறின! எந்த இடத்திலும் இல்லாததொன்று வருணிக்கவாது. பொருளில்லாமற் சொல்லிராது. கோபுரம் என்று ஒரு பொருள் இல்லாதபோனால் கோபுரம் என்னும் சொல்லுமில்லையன்றோ. சோறு, கறி, வேட்டி, உத்தரீயம், கட்டில், மெத்தை, கண்ணாடி என்றற்றொடக்கத்துச் சொற்கள் எப்பொழுது உண்டோ அப்பொழுது அப்பொருள்களும் உண்டென்று முடியும். இச்சொற்களெல்லாம் பழைய நூல்களிலிருத்தலால் அக்காலத்துத் தமிழர் இவைகளையெல்லாம் கண்டு கழித்தார் என்பது திண்ணம்.

த-கை.

தமிழ் மக்களின் நாகரீகம்.

தமிழ் மக்களாவார் நெடுங்காலமாய்த் தமிழ் வழங்குதலான நாட்டில் பழைய தமிழ்க் குடிகளாய் நின்று நிலைபெற்று வருகின்ற மாபினர். தமிழ் வழங்குநாடாவது இந்தியாவில் வடக்கே வேங்கடத்துக்கும் தெற்கே குமரிக்கும் இடைப்பட்ட முக்கோண நாடு- நன்னூலார் காலம் வரையில் இலக்கியங்களும் இலக்கணங்களும் கிழக்கிலும் மேற்கிலும் கடலே எல்லையாகக் கூறியிருத்தலால், தமிழ் நாட்டில் முற்காலத்தில் மலையாளம் என்பதொரு மொழி வழங்கியதில்லை என்பது தணிவு. மலையாளத்தில் பழமையான நூல்கள் இல்லாமையும் இதனை வற்புறுத்தும். இப்பொழுது மலையாள நாடு என்பது பழைய தமிழிலக்கியங்களில் சேரநாடு என்றே வழங்கியது. சேரமானும் தமிழ்நாட்டு மூவேந்தரில் ஒருவன். தமிழ் மக்களின் முற்கால நாகரீக வாராய்ச்சியில் மலைநாடு தமிழ்நாட்டில் அடங்கியதே. பிற்கால நாகரீக வாராய்ச்சியில் அது அங்ஙனம் அடங்காது. மலையாளிகளும் கன்னடரும் வடுகரும் தமிழரோடு வைத்து த்ராவிடர் என்கிற எண்ணிக்கையில் உறுவாராயினும், இங்கே அவர்களைப்பற்றி ஆராய்ச்சியில்லை.

த்ராவிடர்கள் ஆர்யர்களுக்கு முன்னரே இந்தியா முழுவதும் பரவியிருந்த ஓர் கூட்டத்தினர். இவர்கள் இந்தியாவின் பூர்வ குடிகள் என்பது சில சரித்திர வாசிரியருடைய கொள்கை. இந்தியாவிற்கு அப்பாற்பட்ட தேசங்களிலிருந்து இமயமலையின் வடமேற்கு வடகிழக்குக் கணவாய்களின் வழியாகவும் வேறு வழியாகவும் வந்து குடியேறினவர் என்பது சிலருடைய கொள்கை. இவ்விரண்டில் ஒருதலைதணிதலான ப்ரமாணங்கள் கிடைக்கவில்லை. கங்கைக் கரையிலிருந்து ஈழமண்டலம் வரையில் உள்ள அநார்யரான த்ராவிடர்களில் பல மாபினர் இன்றளவும் வேறு கலப்பின்றி ஒரே வகையான குணங்குறிகள் உள்ளவர்களாகத் தோன்றுதலால், இவர்கள் ஆதியில் இந்தியா முழுவதும் பரவியிருந்தனர் என்பது உறுதியான கொள்கையே. கங்கை குலாதிபர் என்றும் கங்காபுத்ரர் என்றும் வேளாளர்கள் தங்களை வழங்கி வருவதும் இதற்கியைந்த ப்ரமாணம். வடமேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவில் வந்து குடியேறிய ஆர்யர்கள் வடக்கிலிருந்த த்ராவிடர்களையும் பிறரையும் வென்று காலாந்தரத்தில் சுயாதீனம் பெற்றனர். விந்த்ய பர்வதம் விந்த்யாரண்யம் நருமதை முதலியன இடைப்பட்டிருந்தமையால் நெடுங்காலம் வரையில் ஆர்யர்கள் தெற்கே ப்ரவேசிக்கவில்லை. தெற்கிலிருந்த த்ராவிடர்கள் தங்களளவில் சுயாதீனமுடையவராய் இனிது வாழ்ந்திருந்தனர். இவர்களில் தென்கோடியில் நிலைத்தலானவர்களே தமிழ்மக்கள்.

ஓர் நாட்டில் வழங்கும் பழமையான நூல்வழக்கையும் உலக வொழுக்கையும் வகைப்படுத்தி இலக்கணமும் ஸ்ம்ருதியும் இயற்றப் புகுமிடத்தில், அந்

நாட்டில் குடியேறினவர்களும், அந்நாட்டை வெற்றிகொண்டவர்களும், தங்களிடத்தில் வழங்கும் மரபுகளை ஒட்டி அம்மரபுகளின் வகைகளிலே அவ்வழக்குகளையும் ஒழுக்கங்களையும் கூறுபடுத்தியுரைப்பது, கல்விமான்கள் கண்டறிந்த உண்மை. இரண்டொரு காரணங்களால் இது விளக்கமாகும். தமிழ் நாட்டில் அகப்பொருளான களவொழுக்கத்தை விளக்கவந்தவர் "மறையோர் தேவத்து மன்றலெட்டனுள், துறையமை நல்யாழ்த் துணைமையோரியல்பே" என்றார். "அந்தணாருமறை மன்ற லெட்டனுள், கந்தர்வ வழக்கமென்மனார் புலவர்" என்றதும் அதனை. தமிழிலக்கியப் போக்கையொட்டி உரைக்குமிடத்தில், "களவனப்படுவது யாதென வினவின், வளைகெழு முன்கை வளங்கெழு கூந்தல், மூவெயிற்றமர்நகை மடநல்லாளொடு, தேவயவிழ்தண்டார்க் காமனன்னோன், வினையாட்டிடமென வேறு மலைச்சார்ல், மானினங் குருவியோடு கடிந்து விளையாடும், ஆயமுஞ் சோழியு மருவி நன்கறியா, மாயப்புணர்ச்சி யென்மனார் புலவர்" என்பதேயாம் அது. ஐந்திரநிறைந்த தொல்காப்பியர் "விளிகொள்வதன்கண் விளியோடெட்டே" என்று வேற்றுமையை எட்டாக்கினர். தமிழ்மொழிக்கே உரியதான வினைக்குறிப்பைத் தத்தித்தத்தில் அடக்கிவிட்டனர் ப்ரயோகவிவேக முடையார். தமிழில் மூதலில் இலக்கணமியற்றினோர் தமிழ்நாட்டில் குடியேறிய ஆர்யமுனிவர்கள். அவர்கள் ஆர்யவர்த்தத்தில் வழங்கிய மரபுகளைப் பின்பற்றித் தமிழில் பொருளிலக்கணத்திலும் தமிழ்மக்களை நாற்பாற் பிரிவினராகக் கொண்டனர்.

கடைச்சங்கமிருந்த பிற்காலத்தில் வணிகர் ஒரு பிரிவினர் இருந்ததாகப் புலப்படுகின்றது. ஆயினும் அவர்களை ஆர்ய வைச்யரென்று கொள்வதற்கான நிமித்தம் ஒன்றும் இல்லை. பட்டினப்பாலையில் "கொலைகடிந்தும் களவு நீக்கியும், அமார்ப்பேணியும் ஆவுதியருத்தியும் நல்லாளொடு பகடோம்பியும், சான் மறையோர் புகழ்பரப்பியும், பண்ணிய மட்டியும் பசும்பதங்கொடுத்தும், புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக், கொடுமேழி நசையுழவர், நெடுதகத்துப் பகல்போல, நடுவுநின்ற நன்னெஞ்சினோர், வடுவஞ்சி வாய்மொழிந்து, தமவும் பிறவும் ஒப்பநாடிக், கொள்வதூஉ மிகைகொளாது, கொடுப்பதூஉங் குறைபடாது, பல்பண்டம் பகர்ந்து வீசும், தொல்கொண்டித் துவன்றிருக்கை" என்னுமிடத்தில் நன்னெஞ்சினோரை எழுவாயாகக்கொண்டு வேதவாணிகர் என்பர் நச்சினார்க்கினியர். உழவரை எழுவாயாகக்கொண்டு வேளாண் செட்டிகள் என்னினும் இவ்விடம் மரபுவழுவாகாது. இதுநிடக்க, உழுவித்துண்ணும் வேளாளரில் மறமிக்கவர்கள் சிற்றரசாகவும், மூவேந்தரும் வேளாளரோடு உறவுமுறையுடையவராகவும் காணப்படுதலால், ஆர்யக்ஷத்ரியரான அரசர்கள் தமிழ்நாட்டில் இருந்ததாக எங்ஙனம் துணிதல் கூடும்? மஹாபாரதம் அநுசாசனிக பர்வத்தில் "சகர் யவனர் காம்போஜர் தாரவிடர் கலிந்தர் புலிந்தர் உசினர் கோலிசர்ப்பர் மஹிஷகர் என்னும் யுத்தப்பயிற்சியுள்ள ஜாதியார் ப்ராமணரைப் பார்க்காமையால் வர்ணசாரம் இலராயிருக்கின்றனர்" என்று கூறியிருக்கின்றது. இதற்குமேல் வேறு சான்று வேண்டுமா?

சரித்திரவாராய்ச்சிக்கு முற்பட்ட காலத்தில் ஆர்யர் தமிழ்நாட்டில் குடியேறியிருந்தது பார்ப்பனப்பாங்கன் என்றூற்போன்ற வழக்குகளால் புலப்படும். கடைச்சங்க மிருந்தகாலத்தில் ஆர்யமதம் வேரூன்றிவிட்டது. கல்வி மேம்பாட்டினலும் சிஷ்டாசாரங்களாலும் ஆர்யரையும் ஆர்ய முனிவர்களையும் தமிழ்மக்கள் போற்றிவந்ததனால், அக்காலக் குடிகளில் ஆர்யர்களுக்கு ஒரு விதத்தில் தலைமை ஏற்பட்டது. வேளாளரில் உழுதுண்போரே ஜனத்தொகையில் பெரும்பாலினராதலால், அவர்களுக்கு அரசியலிலும் குடியலிலும் விசேஷ கௌரவம் உண்டாகவில்லை. ஆகவே இவர்களை ஆர்யர்கள் ஆர்யவர்த்தத்து சூத்ரரோடு ஒப்பாகக் கீழோரெனக் கொண்டனர். தமிழ்நாட்டில் வேளையோர் குறவர் இடையர் வலையர் வேடர் என்பவர். பறையர் பள்ளர் முதலானோர் மருதநிலத்தில் ஏவல்செய்வோர்.

இங்ஙனம் சரித்திர விளக்கைக்கொண்டு பார்க்குமிடத்தில், "மேலோர் மூவர்க்கும் புணர்ந்த காரணம், கீழோர்க்காகிய காலமுமுண்டே" என்றும், "அறவலகப்பட்ட பார்ப்பனப்பக்கமும், ஐவகைமரபின் அரசர்பக்கமும், இரு மூன்று மரபின் ஏனோர் பக்கமும்" என்றும் "ஓதலுந்தூதும் உயர்ந்தோர் மேன"! "வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"; "வேளாண் மாந்தர்க் குழுதூணல்லது, இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" என்றும், "அடியோர் பாங்கினும் வினைவலபாங்கினும்"; "ஏவல்மரபினேனோர்" என்றும் வருவன உள்ளபடி விளக்கமாகும். "வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும், கீழ்ப்பாலொருவன்" என்ற புறமும் இதுவேயாம். "ஏவல் மரபினேனோர்" என்பதைத் "துடியன்பாணன் பறையன் கடம்பனென், றிந்நான்கல்லது குடியுமில்லை" என்னும் புறம் ஒருவாறு விளக்கும்.

"வடபான் முனிவன் றடவினுட்டோன்றிச், செம்பு புனைந்தியற்றிய சேணெடும் புரிசை, உவராவீகைத் துவரையாண்டு, நாற்பத்தொன்பது வழிமுறைவந்த வேளிருள்வேளே" என்கிற புறப்பாட்டால், வேளாளர் வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்ப்பாலினரல்லர்: இவர்களை இங்ஙனங் கொள்ளலானது பிற்காலத்தில் வந்தேறியானதோர் வழக்கேயாம் என்பது தெளிவு.

நாகரீகம் என்பதற்கு நகரஸம்பந்தம் என்பது சொற்பொருள். வழக்காற்றில், இது, மிருகத்தன்மையான மலேச்ச வியல்பு நீங்கிச் சீர்திருத்த மெய்தியிருக்கும் நிலைமை என்று பொருள்கொள்ளும். மிருகத்தன்மையாவது, பசிகடுகுமளவில் உணவுதேடல், தன்னினும் இளைத்த உயிர்களை வருத்தல், வெய்யில் பனி மழை முதலியவற்றைப் பொருட்டு செய்யாது காட்டில் நினைத்த விடத்தில் ஸஞ்சரித்தல் என்றூற்போன்ற தன்மை. இன்னோரன்ன தன்மையுடன் வாழ்வதே மனிதனுக்கு ஆதியான வாழ்க்கை. இங்ஙனம் காட்டுமிராண்டியாய் வாழும் இயல்பே மலேச்சவியல்பு. அது நீங்கிச் சீர்திருத்தமெய்தலாவது, ஆடுமாடுகளை ஆதாரவாகக்கொண்டு ஓரிடத்தில் நிலைவரமாக வீடுகட்டியிருக்கவும் பயிர்செய்துண்ணவும் நூலநெய்துடுக்கவும் வகையறிந்து திருத்

தமெய்தலாம். இத்திருத்தம் எய்தமளவில் "நானர்? உலகம் எங்ஙனம் நடை பெறுகின்றது? என் கடப்பாடுகள் என்ன?" என்ற விசாரணைகள் தொட ரும். ஈதெல்லாம் நாகரிகத்தை அடைதற்கான முதற்படிகள்.

இந்த நிலைமையில் குடியியலும் அரசியலும் ஏற்படும். குடியியல் பெரு குமளவில் குப்பங்களும் பட்டினங்களும் பெருகும். வாணிகம் தலைகாட்டும். எற்கெனவே அரசியலும் வலியுறும். உறவே பட்டினங்களில் ப்ரதானமான நகரம் உண்டாகும். நகர ஸம்பந்தமான சீர்திருத்தங்களை எய்தியிருக்கும் நிலை மையே நாகரீகமாம் இந்த நிலைமையில் மனிதன் பாங்குபாவனையறிந்து ஒழுக்கமுடையவனுகிறான். அதாவது மனித லக்ஷணம் இன்னது, அதற் கேற்ற ஆசாரங்கள் இன்னவை என்பதறிந்து, சிஷ்டாசாரங்களை மேற் கொள்பவனுகிறான். ஸமயக்கோட்பாடுகளும் ஒழுங்கடைதலாகின்றன. இந்த நிலைமைக்கு இன்றியமையாத ஸௌகர்யங்களும் ஒவ்வொன்றாய் உண்டாகின் றன. ஆகவே கேவலமான மிருகத்தன்மை நீங்கி மனிதத்தன்மை அடைவது என்பதே நாகரீகம் என்பதற்கு ஸ்தூலமான பொருள்.

பல ஜாதியார் அடைந்துள்ள நாகரீக நிலைமைகளில், ஒப்புமை வகையால் இன்னது சிறந்ததென்று கூறுவதல்லது, உள்ளபடி இன்னதேயென்று நாகரீ கத்தை வரையறுத்தல் இயலாது. குடியியலும் அரசியலும் ஒழுங்காக நடை பெறுவதற்கான சாதனங்களைப் பெற்றிருப்பதே நாகரீகத்துக்குரிய லக்ஷணம் என்று ஒருவாறு சொல்லலாம். இந்த சாதனங்கள் மிகுந்தும் குறைந்தும் இருப்பதே அந்தந்த ஜாதியாருடைய நாகரீக நிலைமையின் வேறுபாட்டிற்குக் காரணம். சாதனங்கள் வேறுபடுவதற்கான காரணங்கள் பல உண்டு. அவை தேயவியற்கை, சீதோஷ்ணஸ்திதி, வர்த்தக ஸம்பந்தங்கள், கல்விவிற்பத்தி, தரைத்தனரீதி, சுயாதீனபராதீனங்கள் முதலியனவாம்.

தமிழர்களுடைய நாகரீகத்தை ஆராயப் புகுமிடத்தில், மேற்கூறிய அம் சங்களில் ஆவனவற்றை ஆராய்ந்துபார்த்து, வேறு நாட்டினர்களோடு ஒப்பிட் டால், இவர்கள் எம்மாத்திரம், அவர்களுக்கும் இவர்களுக்கும் உள்ள தாரதம் யம் என்ன என்னும் விஷயங்களை விடுத்தல் வேண்டும். நாகரீக நிலைமை கா லத்துக்குக்காலம் வேறுபடுதலால், ஆதிகாலத்திலும் மத்யகாலத்திலும் அவர் கள் எய்தியிருந்த நாகரீக நிலைமைகள் எத்திறத்தன: பிற்காலத்தில் எய்த லான நிலைமை எத்திறத்தது என்னும் விஷயங்களையும் விடுத்தல் வேண்டும். தற்கால நிலைமையை உள்ளபடி தணிந்தால் இனி எதிர்காலத்தில் இவர்கள் மேற்கொள்ளத்தக்க சீர்திருத்தங்களை ஆராயப்புகுவதற்கு இடமுண்டாகும். அங்ஙனம் செய்வதே இந்த வ்யாஸத்தை "இந்த ஸபையார் முன்னிட்டுக் கொண்ட நோக்கம் போலும்.

இந்த வ்யாஸத்துக்குரிய பல திறங்களையும் பலபட ஆராய்வதற்கு நிரம் பிய தமிழிலக்கியப் பயிற்சியும் சிலாசாஸன வாராய்ச்சியும் கர்ண பரம்பரை யான பல ஐதிகங்களும் சரித்திரப் போக்கை தணித்தறிதலான அநுபவ

முதிர்ச்சியும் பிறவும் வேண்டும். இத்தனையுங் கொண்டு ஆராய்வதற்கு ஏற்ற புலமையும் காலமும் சாதனங்களும் வேண்டும். இக்கூறுகளில் ஒன்றும் பற்றாத நான் இந்த வ்யாஸத்தை தற்குறிகரமாக முடிப்பது அஸாத்யம். பரும் படியாகச் சில கூறுகளைச் சுருக்கிக் கூறுகிறேன்.

அதுமாலுடு அங்கதன் முதலியோர் சீதையைத் தேடிச் செல்லுற்ற வழியை விளக்குமிடத்து ராமாயணத்திலும், அர்ஜுனன் தீர்த்த யாத்திரையை உரைக்குமிடத்து பாரதத்திலும், தமிழ்நாட்டையும் தமிழ் மக்களையும் பற்றி உரைத்திருப்பது பலரும் உணர்ந்தபடி. ஸமஸ்க்ருதத்தில் காத்யாயனருடைய உரையிலும் அசோகருடைய ராஜ சாசனங்களிலும் தமிழ்நாட்டு மூவேந்தரையும் பற்றிக் குறித்திருப்பது ப்ரஸித்தம். "ஓரைவர் ஈரைம்பதின்மர் உடன் றொழுந்த, போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த, சேரன்" என்று சிலப்பதிகாரத்திலும், "வலங்குளைப்புரவி யையொடு சினை இ, நிலந்தலைக்கொண்ட பொலம்பூந்தும்பை, ஈரைம்பதின்மரும் பொருது களத்தொழியப், பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" என்று புறப்பாட்டிலும், ஒரு சேரமான் பாரதப் போரில் பாண்டவர் துர்யோதனாதியர் என்னும் இருவகையார் சேனைக்கும் உணவளித்தான் என்கிற செய்தி கூறியிருக்கின்றது. "நெடியோன் குன்றமூந் தொடியோள் பௌவமும்" என்னும் அடியை விளக்குமிடத்து, "தலைச்சங்கமிருந்தகாலத்து...பஃறுளியெனும் ஆற்றிற்கும் குமரியென்னும் ஆற்றிற்கும் இடையே எழ்தெங்க நாடு முதலிய நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்லம் முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் கடல்கொண்டொழிந்தது" என்று அடியார்க்கு நல்லார் கூறியுள்ளார். ஜியாலஜி என்கிற சாஸ்திரமுணர்ந்த புலவர்களும் ஆப்ரிகாமுதல் ஆஸ்ட்ரேலியா வரையில் இந்தியாவோடு தொடர்புபட்ட ஒரு கண்டம் இருந்ததென்றும் அது கடலில் அமிழ்ந்துவிட்டதென்றும் கொள்கின்றனர். இக்கூறியவற்றால் சரித்திரவாராய்ச்சிக்கு முற்பட்ட காலத்தில், தமிழ்நாட்டின் பரப்பும் தமிழ்மக்களின் மேம்பாடும் விளங்கும். அக்கால நிலைமையை ஒருவாறு அறிந்துகொள்வதற்கான வழிகள் இரண்டுண்டு. அவை தமிழ்ச் சொற்களின் ஆராய்ச்சியும் தமிழ்ப் பழமொழிகளின் ஆராய்ச்சியுமாம்.

பழைய நிகண்டுகளை ஆராய்ந்து பார்க்குமளவில் சில வடதிசைச் சொற்கள் தமிழில் வழக்காற்றில் வந்திருப்பது தெளிவாகும். அவை தமிழ்மக்களுக்கு ஆதிகாலத்தில் ஏற்படாத சில நாகரீகக் கூறுகளை விளக்குகின்றன. அரசியலுக்குரிய ஆறங்கங்களில் ஐந்தண்டு: அமைச்சரான மந்திரிகள் இல்லை. குடிகள் கூடியிருத்தலான ஊர்ஸபை குப்பம் பாக்கம் பட்டினம் முதலியன உண்டு; க்ராம நகரங்கள் இல்லை. வருணபேதங்களைப் பற்றிய குறிப்பில்லை; இனமும் மரபுமான குடிகளும் குடிமக்களும் உண்டு. காந்தர்வ விவாஹம் என்கிற பெயர் இல்லை. ஆயினும் அதனொடொத்த களவொழுக்கம் உண்டு; களவொழுக்கத்தை உடன்றொடரும் கற்பொழுக்கமும் உண்டு. பயிரிடுதல் நூனூற்றல் தணிநெய்தல் முதலிய தொழில்கள் உண்டு; கிருஷி-காருகம்-

தோவத்தி-அங்கவஸ்திரம் முதலிய சொற்கள் இல்லை. இரும்பு பொன் வெள்ளிகளைக்கொண்டு செய்த கருவிகளும் அணிகளும் உண்டு; நவமணிகள் இல்லை. சிற்றெண்களையும் சில பின்னங்களையும் குறித்தலான சொற்கள் உண்டு. பேரெண்களுக்குரிய சொற்கள் இல்லை. அவைகளை உறையிட்டறிவார்கள். வாலாயமான பண்டமாற்றலுக்குரிய எடுத்தலளவை முகத்தலளவைகள் உண்டு. சிறுபொழுது பெரும்பொழுது நாள் திங்கள் ஆண்டு முதலிய காலப் பிரிவுகள் உண்டு. சிறுபொழுதை அளவிட்டறிதலான நாழிகை வட்டில் உண்டு. நவக்ரஹங்களில் புதனுக்கும் சனிக்கும் தமிழ்ப்பெயர்கள் இல்லை. சைவ வைஷ்ணவ தேவதைகள் விக்ரஹங்கள் இல்லை; பொதுவான கடவுள் உண்டு. அந்தக்காரணங்களையும் மனோபாவங்களையும் விளங்க உரைத்தலான சொற்கள் இல்லை. மிகச்சில சொற்களை அவைகளை ஸ்தூலமாகக் குறித்து வந்தன. அக்காலத் தமிழ்மக்கள் மோக்ஷ நரகங்களை அறியார்; அவர்களுக்கு ஆத்ம ஞானம் உண்டாகவில்லை. தொகுத்துச் சொல்லுமிடத்தில் லௌக வாழ்க்கைக்கு இன்றியமையாத லௌகர்யங்களும் நாகரீக வளர்ச்சிக்கு ஆதாரமான அம்சங்களும் ஆர்யர்கள் வருமுன்னரே தமிழ்மக்கள் எய்தியிருந்தனரென்பது இவ்வாராய்ச்சியால் உறுதிப்படுகின்றது.

ஹீப்ரு வேதத்தில் குரங்கு கபீம் என்றும் மயில் தகிம் என்றும் வழங்கியிருப்பதாக யூரொப்பிய வாசிரியர்கள் காட்டுகின்றனர். கபீம் என்பது கபி என்கிற ஸம்ஸ்க்ருத வார்த்தை. தகிம் என்பது தோகை என்கிற தமிழ்வார்த்தை. அகில் என்கிற வார்த்தையும் அவ்வேதத்தில் வருவதாக உரைக்கின்றனர். யவனர்களான க்ரேக்கர்களுடைய பாஷையில் அரிசி என்பது அரிஜா என்றும் சுக்கு என்பது (இஞ்சிவேர்) ஜிஞ்ஜிபேர் என்றும் இலவங்கமென்கிற கருவா கார்பியன் என்றும் வழங்கிவருகின்றன. ரோமர்களுடைய பழைய பூகோள படங்களில் இந்தியாவின் தென்கோடி ப்ரதேசம் டமிரிகே என்று குறித்திருப்பது தமிழகத்தை. இவையெல்லாம் தமிழ்நாட்டின் ப்ரபலம் யூரொப் வரையில் எட்டியிருந்ததை விளக்குகின்றன.

பதினெண் கீழ்க்கணக்கில் பழமொழி நானூறு என்கிற நீதிநூல், ஒவ்வொரு பொருளை ஒவ்வொரு பழமொழியால் விளக்குவதாய் நானூறு வெண்பாக்கள் கொண்டது. அப்பழமொழிகளை அந்நூலின் பாயிரத்தில் "பண்டைப்பழமொழி" என்பதனால், அவற்றின் ஆராய்ச்சி நமக்கு வேண்டிய சில அம்சங்களை விளக்குவனவாகும். அவற்றுள் இன்றளவும் வழங்கிவருவனவும் பல உண்டு. "மச்சேற்றி ஏணிகளைவு". "கொற்சேரி தன்னூசி விற்றறிவாரில்"-"அயிலாலே போழ்ப வயில்"-"நிறைகுடம் நீர்தளும்பலில்"-"செய்தானை யொவ்வாத பாவையோவில்"-"நூகத்துப் பகலாணிபோன்று"-"இறைத்தோறும் ஊறுங்கிணறு"-"அணியெல்லாம் ஆடையின் பின்"-"தூளையெண்ணூர் அப்பந்தின்பார்"-"முதலிலார்க்கு ஊதியமில்லை"-"கடல் போயும் ஒன்றிரண்டாம் வாணிகமில்"-"தமக்கு மருத்துவர்தாம்"-"கற்றலிற் கேட்டலே நன்று"-"குலவிச்சை கல்லாமற் பாகம்படும்"-"ஓதக ஊரோமொறு"- நாகரீகத்துக்கு அடியான அம்சங்களை அறிதற்கு இவை சாலும்.

கடைச்சங்கம் எற்பட்டது கிறிஸ்தவ சகாப்தத்துக்குச் சற்று முன்பின் னான காலம் என்பது இப்பொழுது தணிவான உண்மை. அதுசற்றேறக் குறைய இருநூறு வருஷகாலம் இருந்ததென்று ஒருவாறு கொள்ளலாம். அக்காலத்தோடு அதற்கு முன்னும் பின்னும் சிறிது தொடர்ச்சியான காலமே தமிழ் மக்களுடைய நாகரீகத்தின் மத்யகாலமாய்த் தமிழர்களுடைய நாகரீக நிலைமையை நூற்சார்புகளால் அறியத்தக்கதாய் இருப்பது. இந்திய சரித்ரத் துக்கும் தென்னாட்டுச் சரித்ர வாராய்ச்சிக்கும் ஆரம்பமான காலமாக இருப்ப தும் இதுவே. காலப்போக்கையொட்டி இதனை மத்யகாலமாகக் கொள்ளி னும், தமிழ்மக்கள் தங்களளவில் உச்சநிலை உற்றிருந்த காலம் இதுவே. யூரொபில் க்ரேக்கர்களும் ரோமர்களுமே அக்காலத்தில் நாகரீகமுற்றிருந்த வர்கள். மற்றவர்கள் எறக்குறைய மிலேச்ச நிலைமையில் இருந்தனர். எஷ் யாவில் உற்பத்தியான கிறிஸ்தவ மதம் இன்னும் யூரொபில் வேரூன்றவில்லை. எஷ்யாவில் முகம்மதிய மதம் இன்னும் உண்டாகவேயில்லை. முகம்மதியரும் கேவலமான நிலைமையில் இருந்தனர். கிழக்கில் சீனர் மாத்ரமே மிகவும் பழ மையான நாகரீகம் உற்றிருந்தவர்கள். இந்தியாவில் ஜைனமதமும் பௌத்த மதமும் விஸ்தாரமாக ப்ரவர்த்தித்திருந்தன. பௌத்தமதம் எஷ்யாவின் தென் கிழக்கு பாகமனைத்தும் பரவுதற்கு ஆதார பீடமான அசோகன் முதலான போராசர்கள் வடவிந்தியாவில் வீற்றிருந்தனர். ஒரோர் காலத்துச் சேர சோழ பாண்டியர்கள் ஒருவரோடொருவர் போர் செய்வதும் அயல்நாட்டராசரோடு போர் செய்வதும் தவிர, வேறு குழப்பங்கள் தமிழ்நாட்டில் இல்லை. மதத் வேஷம் இல்லாமல் குடிகள் தங்களுக்கு விருப்பமான ஸமயங்களை மேற் கொண்டிருந்தனர். தங்களுக்கு விருப்பமான விஷயங்களைக் கல்வி மண்ட பங்களில் எடுத்துப் பேசுதலான ஸ்வதந்த்ரம் கல்விமான்களுக்கு உண்டு. க்ருஷி- காருகம்- வர்த்தகம்- சிவிதாஸ்ருஷ்டி முதலியவெல்லாம் தலையெடுத் திருந்தன. தமிழ்நாடு பெரிய வ்யாபாரஸ்தானமாய் விளங்கியிருந்தது. இங்ங னம் குடிகளும் கோன்களும் ஒங்கி உயர்வுற்றிருந்தமையால், தமிழ்மக்கள் உலகிலுள்ள ஏனைநாட்டினர்க்கு எவ்வகையிலும் இளைத்துக்காட்டாமல், நாக ரீகம் சிறந்த சிலர்க்கு இணையானவர்களே என்னலாம்படி விளங்கியிருந்தனர்.

கிறிஸ்தவ சகாப்தத்தின் தொடக்கத்தில் ஸ்ட்ராபோ என்கிற யூரொபி யர் "செங்கடலில் மியாஸ் ஹொர்மாஸ் என்கிற துறைமுகத்திலிருந்து இந்தி யாவுக்குச் செல்லுற்ற நூற்றிருபது மரக்கலங்களைக் கண்டேன்" என்றெ ழுதியிருக்கிறார். ரோம சக்ரவர்த்தியான அகஸ்டஸ் ஸீஸருக்கு நண்பனும் படைத்துணையுமாக விரும்பி ஒரு பாண்டியன் இருமுறை சில ப்ரதானிக ளைத் தூதனுப்பின செய்திஎயயும் அவர் குறித்திருக்கிறார். க்ரேக்கர்கள் இந்தியாவோடு செய்திருந்த வர்த்தகத்தை விரித்தரைக்கையில், ப்ளினி யென்பவர், (தற்காலக் கணக்கின்படி) எழுபத்துமூன்று லக்ஷம் ரூபா பெறு தலான சரக்குகள் இந்தியாவிலிருந்து வருஷவாரியில் தருவிப்பதாக உரைத் திருக்கிறார். தமிழரசர்களையும் தமிழ்த் துறைமுகங்களையும் தமிழ்நாட்டிலி ருந்து ஏற்றுமதியாகிவந்த சரக்குகளையும் பற்றிய பல விவரங்கள் அந்த வர

லாற்றால் விளங்குகின்றன. அக்காலத்துத் தமிழரசருடைய படையிலும் அங்கக்காவலிலும் ரோமவீரர்களான யவனர்களே நியமித்திருந்தது சிலப்பதிகாரம் முல்லைப்பாட்டு முதலிய நூல்களால் விளங்கும்.

குடிகள் தங்களுக்கு ப்ரதிநிதிகளாக நியமிக்கும் மஹாஜனமும் பார்ப்பாரும் மருத்துவரும் நிமித்திகரும் அமைச்சருமான ஐம்பெருங்குழுவுடன் தமிழரசர் அக்காலத்தில் அரசாட்சி செய்திருந்தனர். தமிழ்நாட்டு மூவேந்தரும் அறமும் மறமும் ஆற்றலும் உடையவரென்றும் குடிகள் செல்வமும் கூழின் பெருக்கமும் உடையவரென்றும் இளங்கோவடிகள் கூறுகின்றனர். கண்ட நாடுகொண்டு கொண்டநாடு விடாஞன காரிகாற்சோழன் ஹிமவானது பர்யந்தம் திக்விஜயம் செய்தவனென்றால், அக்காலத்தமிழ் மக்களுடைய நாகரீகத்துக்கு வேறு சான்று என்னவேண்டும்? கண்ணகியைக் கோவலன் அழைத்துச் செல்லுதலான ஊர்களையிடையிட்ட நாட்டுவர்ணனையால் நாட்டுவளங்களின் விசேஷமும் குடிகளின் வாழ்க்கைச் சிறப்பும் விளங்கும். இவை அக்காலத்துப் பிறவிலக்கியங்களாலும் விளங்கும். காவேரிப்பூம்பட்டினம் மதுரை என்னும் நகர்களின் வர்ணனைகளைப் பட்டினப்பாலை மதுரைக்காஞ்சி சிலப்பதிகாரம் என்னும் நூல்களில் ஒதுகின்ற வளவில், சென்னை பொம்பாய் கல்கத்தா முதலிய தற்கால தரைத்தன ராஜதானிகளும் அவைகளுக்கு இணையாகுமோ என்கிற ஐயம் எழுகின்றது. வடமொழியிலும் ஒருபழந்தனிப்பாட்டில் "நகரேஷு காஞ்சி" என்று வருவதாகக் கூறிவருகின்றனர். அச்சுவீத்தை தபால் ஏற்பாடுகள் நீராவிமின்சாரங்களின் அற்புதச்செயல்கள் எனுமிவை நீங்கலாக, அக்காலத் தமிழருடைய நாகரீகம் தற்கால யூரொபியருடைய நாகரீகத்துக்கு எவ்விதத்திலும் குறைந்ததன்று.

கவிதாஸ்ருஷ்டியில் அக்காலமே தமிழ் நலத்தை நன்கு புலப்படுத்துவது. கம்பருக்கு இப்பாற்பட்ட நூல்கள் பெரும்பாலும் மொழிபெயர்ப்பும் ஸ்தோத்ரங்களும் ஆனவை. ஸ்தோத்ரரூபமானவை அந்தாதிகளாய் மடக்கும் யமகமும் வைத்து மாணக்கரைத் திக்குமுக்காடச் செய்பவை. தமிழ்க்கவிரஸமெல்லாம் கலித்தொகை புறநானூறு முதலிய சில சங்கநூல்களில் ஏறியிருக்கின்றன. வள்ளுவர் போல் மூப்பாலுரைத்தவர் எப்பாலுமில்லை. நம்முடைய பழைய கவிகளெல்லாம், தற்காலத்தில் நனிநாகரீகம் பெற்றுள்ள யூரொபிய கவிகளும் கைகூப்பித் தொழத்தக்கவர்கள். தமிழ்நாட்டினருடைய இந்த கௌரவத்தை அறிந்த யூரொபியர்கள் பெஸ்கி யென்கிற வீரமாமுனிவரும் காலஞ்சென்ற போப்பையரும் போன்ற சிற்சில கிறிஸ்தவப் பாதிரிகளே. தமிழிலிருந்து வீரமாமுனிவர் லாடின் பாஷையில் செய்த மொழிபெயர்ப்புகளையும் போப்பையர் இங்க்லீஷில் செய்த மொழிபெயர்ப்புகளையும் காலஞ்சென்ற கனகசபை பிள்ளையவர்கள் "ஆயிரத்தெண்ணூறு வருஷங்களுக்கு முற்பட்ட தமிழர் நிலைமை" என்றெழுதிய இங்க்லீஷ் வ்யாஸத்தையும் கண்டு யூரொபியர்கள் இப்பொழுது "அம்மா, தமிழர்களே என்னவோ மிலேச்சர் என்றிருந்தோம. நாம் அநாகரீகராக இருந்த காலத்தில் இவர்கள் இத்தனை ஏற்றம் பெற்றிருந்தனரே" என்று அதிசயித்து நெட்டுயிர்ப்புறுகின்றனர்.

தமிழில் முற்காலத்தில் வழங்கிய நாடகங்கள் இசையுங்கூத்துங் கலந்தவை. ஸமஸ்க்ருத யூரொபிய ரீதியான நாடகங்கள் இல்லாதகுறைதான் தமிழ் வடமொழியைக்கண்டு நாணுதலான காரணம். நாடகத்தோடு வசன நூல்கள் இல்லாத குறைதான் தமிழ் யூரொபிய மொழிகளுக்கு இளைத்துக் காட்டுதலான காரணம். புதுரீதியான நாடகம் இப்பொழுதுதான் தமிழ் நாட்டில் பாலவிகை பெற்று வருகிறது. அச்சுவித்தை பரவி, காகிதம் மலிவுற்றமையால், வசன நூல்கள் பெருகி வருகின்றன. இவைகளின் போக்கு ஒழுங்கடைவதற்கும், இவைகளில் கொள்ளவும் தள்ளவும் தக்கவைகளை வரையறுப்பதற்கும், சிலகாலமாகும். இடையிலே இவைகளை நிடப்படுத்துதலான சில சங்கங்களும் சில சீத்தலைச்சாத்தனர்களும் ஏற்படாவிடில் தமிழ் மரபு நிலைதிரிந்து மாண்பிழத்தலாகும். வேறு பாஷைகளிலிருந்து மொழிபெயர்த்துக்கொள்ளத்தக்கனவற்றை இன்னும் செய்யாமலிருப்பதைப்பற்றி எவரைப் பழிப்போம்? இருந்தவன் எழுவதற்குள் நின்றவன் நெடுந்தூரமல்லவா? தமிழபிமானிகள் எச்சரிக்கை கொள்ளவேண்டும். எப்படிப்பட்ட லெளகீகமான கருத்துக்களையும் ஏற்றியுரைக்கவல்ல புஷ்டி வசனநூல்களில் ஏறுகிற வரையில் நமது நாகரீகம் இறங்குபடியான தென்றே எண்ணவேண்டும்.

கடைச்சங்கத்திற்குப் பிற்பட்ட காலத்தில், ஜைனபௌத்தமதங்கள் தமிழகத்தில் பின்னும் வேரூன்றி, சில அரசருடைய அபிமானத்தால் மற்ற மதங்களைத் தலையெடுக்கவொட்டாமல் ஒடுக்கிவந்தன. வடவிந்தியாவிலும் இவ்விதமே நடந்துவந்தது. ஜைனபௌத்தமதங்கள் ஆத்மார்த்தமான விசாரணை செய்வதில்லை. ஹேழை நல்வினை தீவினைகளுக்குக் காரணம்: அதனை அறச்செயல்களால் ஒழித்துப் பிறவியை அறுப்பதே முத்தியென்பது அவற்றின் கொள்கை. பகவத்விசாரணை மனிதனுக்கு ஏட்டாதென்று கொண்டு அதனை ஒரு சிறிதும் செய்வதேயில்லை. ஜீவகாருண்யம் உண்மை முதலிய சில ஸுசீலங்களே அவற்றின் முக்யாம்சம். திருக்குறளில் துறவறவியலில் இந்த வாடையே வீசுகின்றது. நாலடிநானூறும் பழமொழி நானூறும் ஜைநநூல்களேயாயின. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பௌத்தசாரமே உள்ளுற ஊறியவை. பின்னுல் ஏற்பட்ட மற்ற சிறு காப்பியங்களும் பெருங்காப்பியங்களும் ஜைனசாரமே உள்ளுற ஊறியவை. ஆகவே தமிழ் நாட்டில் அருளும் உண்மையும் தலையெடுத்தலான ஒழுக்கங்களும் ஏற்றபெற்றி மேற்பட்டு வந்ததற்கு இம்மதக்கொள்கைகளே காரணமாயின.

இங்ஙனம் நிகழ்ந்து வருகையில், வடவிந்தியாவில் சில காரணங்களால் ஆர்யமதம் மறுபடியும் தலையெடுத்து ஜைநபௌத்தமதங்களை வேரறுக்கலுற்றது. தமிழ் நாட்டிலும் அந்த ஆவேசம் பரவுதலாயிற்று. அங்ஙனமாகையில் பக்திமான்களான சைவநாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் ஏற்பட்டார்கள். அவர்களுடைய மாஹாத்மியங்களால் சைவ வைணவ மதங்கள் புத்துயிரும் புது வலியும் பெற்று ஓங்குதலுற்றன. பௌத்த மதம் முன்னும் ஜைநமதம் அதன் பின்னும் ஒடுங்குதலுற்றன. கி.பி. ஏழாவது நூற்றாண்டின் முற்பாதியின் பிற்பகுதியில் இந்தியாவில் பௌத்த ஸ்தலயாத்திரை செய்

திருந்த ஹியன்ட்ஸியாங் என்னும் சீனர் "தென்னிந்தியாவில் பௌத்தப் பள்ளிகள் பாழடைந்திருக்கின்றன. பௌத்தர்கள் மிகச்சிலரே உள்ளார். நூற்றுக்கணக்காண ஹிந்து ஆலயங்கள் உண்டாயிருக்கின்றன. பாஷண்டங்களான நிக்ரந்தர்களே விசேஷித்திருக்கிறார்கள்" என்று தமது யாத்ரைவரலாற்றில் எழுதியிருக்கிறார். ஜைநர்கள் ஒடுங்குதலாகி சைவத்திருமுறைகளும் வைஷ்ணவத் திருமொழிகளும் பரவுதலுற்றபின் கொஞ்சகாலத்தில் வேதாந்த விசாரணை உதிக்கலாயிற்று. அவ்விசாரணையில் சிறிது சிறிதாய் விளைந்த வேறுபாடுகள் கிளம்பத் தொடங்கின. இங்ஙனம் கிளம்புதலான வேறுபாடுகளில் அத்வைதமும் விசிஷ்டாத்வைதமும் லோகப்ரஸித்த மானவை. இவைகளுக்கெல்லாம் தமிழகமே ஜன்மபூமி.

ஜைநபௌத்தர்கள் காலத்தில் அவர்களுடைய மதங்களின் அபிவிர்த்தியின் பொருட்டாக ஜைநபௌத்தப் பள்ளிகள் ஏற்பட்டிருந்தன. அந்த மர்மத்தை அநுஸரித்தே சைவமடங்களையும் ஜீயர்மடங்களையும் ஸமயாசார்யர்களும் ஸமயாபிமானிகளும் ஏற்படுத்தலாயினர். அந்த மடங்கள் அந்தந்த ஸமயாநுசாரத்துக்குரிய அபிவிர்த்திகளே நாடி ஏற்றபெற்றி நடந்துவருவனவாயின. ஸமயதூல்களையும் ஏனையிலக்கண விலக்கியங்களையும் கற்பிக்கவும், பழையநூல்களைப் பரிபாலிக்கவும், அரசரபிமானம் அறுதலான காலத்தில் தமிழ் உய்ந்திருக்கவும், அம்மடங்களே மூலஸ்தானங்களாக விளங்கி வந்தன. அவைகளின் வரவு செலவுகளை திடப்படுத்தவும் நடபடிகளை கவனித்துக் கண்டிக்கவும் வழிகள் இல்லாமையால், சில இடங்களில் சில சீர்கள் மாறி விட்டன. ஆயினும் சிற்சில நன்மைகள் இன்னும் அவைகளால் நடந்துவருவது ப்ரத்யக்ஷம்.

இக்காலத்தில் சைவவைணவ ஆலயங்கள் பல்கின. தமிழில் சைவவைணவ புராணங்களும் ப்ரபந்தங்களும் பெருகுதலுற்றன. வர்ணாச்ரமதர்மாசாரங்கள் குடிவாழ்க்கையோடு அபேதமாய்ப் பின்னிப் பிணைதலாயின. இங்ஙனம் மதாவேசம் புகுந்து மறுமைப் பேறுகளையே விரும்பி புத்திமான்களான பெரியோர்கள் லௌகிக வித்தியில் கவலையற்றவர்களாயினர். ஆகவே லௌகிகவித்திக்கு அவச்யமான சாஸ்த்ராவாராய்ச்சி, அவ்வத் தொழிலுக்குரிய சாதனங்களின் அபிவிர்த்தி முதலான துறைகளில் ஊக்கம் மேன்மேல் எழுவதின்றிக் குடிகள் ஒரே ரீதியான வாழ்க்கையில் உற்றிருத்தலாயினர். இங்ஙனம் தமிழகம் ஒருபால் ஏற்றம் பெற்றதாயினும், ஒருபால் ஜாதியபிமானமும் ஸமயாபிமானமும் முதிர்தலாய்ச் சிலதீங்குகளும் உடன் தொடர்வனவாயின. இத்தீங்குகள் நாகரீகவளர்ச்சிக்கு விரோதமாதலால் நாகரீகம் நெடுங்காலம் ஒரே நிலையில் நிற்பதாயிற்று.

கொடுங்கோல் மன்னருடைய ஆட்சியில் அரசன் இட்டதே சட்டம்: குடிகளுக்கு யாதொரு சுயாதீனமும் இராது. செங்கோல் நடக்கின்ற தேயங்களில் அரசன் அவ்வக்காலங்களில் ஏற்படுகிற சட்டங்களையும் பொதுவான நீதிகளையும் நடத்திவருகின்றவனே: அவ்வித தேயங்களில் குடிகளுக்குச் சில சுயாதீனங்கள் உண்டு. க்ராமபரிபாலன தேசபரிபாலன விஷயத்தில்

இங்ஙனம் சிலகாலமாக இங்கிலீஷ் துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்கிற ப்ரதேச சுயாதீனம் தமிழ்மக்களுக்குப் புதிதானதன்று. இது புராதனமாய் நெடுங்காலமாகத் தமிழ் நாட்டில் நடந்தேறி வந்ததே. க்ராம கார்யங்களை நிர்வாஹம் பண்ணும் பொருட்டு க்ராம ஜனங்கள் கூடி, வயது ஸொத்து கல்வி கேள்வி முதலிய யோக்யதைகளை அநுஸரித்துச் சில பெரியோர்களை மஹாஸபையாக நியமிப்பார்கள். பயிர்ஸம்பந்தமான வ்யவஹாரங்களைப் பார்வையிடுவதற்கும், எடுத்தலளவை முகத்தலளவை நாணயம் முதலியவைகளைப் பரிசோதிப்பதற்கும், வழக்கு விசாரணை செய்வதற்கும், மற்ற வ்யவஹாரங்களை நடத்துவதற்கும் வெவ்வேறு ஸபைகள் வருஷவாரியில் ஏற்படும். இவைகள் மஹாஸபையின் ஆட்சிக்கு உட்பட்டவை. க்ராமஸிப்பந்திகள் ஏற்றபெற்றி அந்தந்த ஸபையின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள். அந்தந்த ஸபையின் தஸ்தவேஜுகளையும் தீர்வைவசூல் முதலிய சணக்குகளையும் அததற்குரிய சிப்பந்திகள் ஒழுங்காக வைத்திருப்பர். துரைத்தன அதிகாரிகள் அவைகளை அப்போதப்போது பார்வையிடுவர். ஆலயதர்மகர்யம் தர்மஸத்ரம் முதலியவற்றின் பொருட்டு தானங்கள் செய்வோர் தானசாஸனங்கள் ஏற்படுத்தி, சாஸனத்தில் கண்டபடி நடத்தலான உரிமையை மஹாஸபையாரிடம் ஒப்பிப்பார்கள். வடவிந்தியாவிலும் பல மாகாணங்களில் இவ்வித சுயாதீனம் வழங்கி வந்தது சரித்ரமூகத்தால் அறியலானதே. ஆகவேக்ராமபரிபாலன சுயாதீனம் த்ராவிடர்களில் நெடுங்காலமாக நிகழ்ந்துவருவதான ஒரு ஸம்ப்ரதாயமென்பது தெளிவு.

அரசன் மண்டலாதிபதியாய் ராஜதானியிலிருந்து ஆட்சி செய்வான். ஒவ்வொரு மண்டலமும் பலகோட்டங்களையும் கோட்ட மொவ்வொன்றும் பலக்ராமங்களையும் அடக்கியிருக்கும். ப்ரதி க்ராமத்திலும் ஸபைகள் உண்டு. அந்த ஸபைகளில் தலைமையுள்ளவர்கள் கூடுவது நாட்டாண்மை ஸபை நாட்டாண்மைத் தலைவர்கள் கூடுவது மஹாநாடு. அரசருக்குரிய ஐம்பெருங்குழுவில் மாசனம் என்பது இதுவே. இப்பொழுது சென்னையில் மஹாஜனஸபை என்றுபெயர் வைத்திருப்பது ஒருவாறு இதை ஒத்ததே. மொத்தத்தில் சூடிகளுடைய குறை முறைகளை மஹாநாடு என்கிற ஸபையார் பரிகரிப்பர். அவர்களால் பரிகரிக்கலாகாதனவே அரசஸந்நிதானத்தை அடைவனவாகும். காஞ்சிமாநகரில் தொண்டை மண்டல வேளாளருக்குப் பெருநாட்டுமடம் என்ப தொருமடம் உண்டு. நத்தத்தார் கோட்டத்தார் இப்பெருநாட்டு மடத்தில் கூடிப் பேசி ஜாதிவழக்கு முதலான வ்யவஹாரங்களை முடிவுசெய்துகொள்வது வழக்கம். "இந்திரலோகக்கம்போல் இருந்தது பெரியநாடே" என்று கம்பர் கூறியிருப்பது அங்ஙனம் வேளாளர்கள் பெரிய நாட்டுமடத்தில் கூடியிருப்பதையே.

செங்கற்பட்டு ஜில்லாவில், உத்தரமல்லூரில், வைகுண்டபெருமாள் ஆலயத்தில், கி. பி. பத்தாவது நூற்றாண்டின் தொடக்கத்தில், பரகேசரிவர்மன் என்கிற சோழன் ஏற்படுத்திய ஒரு சிலாசாஸனத்தில், உத்தரமல்லூரைச் சேர்ந்த க்ராமபரிபாலன விதிகளைச் சீர்திருத்திய விவரம் கண்டிருக்கிறது.

அதில் ஸபையாரை நியமித்தலான ஒழுங்கு விளக்கியிருக்கிறது. பெரியரும் சிறியருமான க்ராமவாஸிகள் ஓரிடத்தில் கூட்டம் கூடவேண்டும். ஆலயங்களின் அர்ச்சகர்கள் யாவரும் கூட்டத்தில் வந்திருக்கவேண்டும். ஸபையாக நியமிக்கத்தக்கவர்கள் பெயர்களை ஒவ்வொரு ஓலைநறுக்கில் எழுதி அத்தந்த நத்தம் வாரியாத் தனித்தனி கட்டுகளாகக் கட்டிவைக்கவேண்டும். அர்ச்சகர்களில் வயதுமுதிர்ந்தவர் வெறுங்குட மொன்றைக் கையிலெடுத்துக் கொண்டு கூட்டத்தின் மத்தியில் நிற்கவேண்டும். ஓலைக்கட்டுகளை ஒவ்வொன்றாகக் குடத்தைக் குலுக்கி ஒன்று மறியாத ஓர் சிறுவனையழைத்துக் குடத்தில் கையிட்டு ஓர்நறுக்கையெடுக்கச்செய்து அதை மத்யஸ்தர் கையில் கொடுக்கவேண்டும். அந்த நறுக்கில் உள்ள பெயரை மத்யஸ்தன் வாசித்த பிறகு மற்ற அர்ச்சகர்கள் ஒவ்வொருவரும் வாசித்துக் காட்டவேண்டும். அதன்மேல் அந்தப் பெயர் எல்லாருக்கும் அங்கீகாரமாகும். இங்ஙனம் நத்தத்துக் கொவ்வொருவராக க்ராம பரிபாலன மஹாஸபை ஏற்படுத்துவதென்று மேற்படி சாஸனத்தில் கண்டிருக்கிறது.

அரசன் பலமற்றவனுய் அரசாட்சி மாறினும் மாறும்; மகாநாடு என்கிற மரபொழுக்கம் மாறுவதில்லை. வருகின்ற வேற்றரசன் இந்த மஹாநாடு என்னும் சுயாதீனத்துக்கு ப்ரதிகூலம் தேடினால் அரசாட்சி நடவாது. குடிகள் காடேறி மலையேறி அலங்கோலமாயினும் ஆவர்: தங்கள் சுயாதீனத்தைக் கைவிடார்கள். இது வடவிந்தியாவிலும் இங்ஙனமே மரபாக இருந்தது. தமிழ்மக்கள் ஓர்காலத்தில் குடியரசாக இருந்தவர்களென்றும் அக்காலத்தில் அவர்களுக்குக் கோட்டைகள் உண்டென்றும் கர்ணபரம்பரையாகப் பெரியோர்கள் சொல்லிவருவதுண்டு. வேளாண் செட்டிகளை நாட்டுக் கோட்டைச் செட்டிகள் என்பது இதற்கு ஒரு ஸாக்ஷி. போனவை போக அவர்களில் இன்னும் நிகழ்ந்துவருகின்ற சில நிகழ்ச்சிகளும் இதனை வலியுறுத்துகின்றன. சில காலம் குறும்பரசர் முதலியோரால் சீரழிந்த இந்த சுயாதீனம் இப்பொழுது இங்கிலிஷ் துரைத்தனத்தில் காலகதிக்கேற்றவாறு வேறுவிதமாக மூளைகிளம்பியிருப்பது, இந்துக்கள் இந்தப்பழைய சுயாதீனத்தைப் பழையபடி பெறுவதற்கான உபாயமாகலாம். கல்விகேள்விகள் முதலான அம்சங்களில் தமிழ்மக்களும் பிறரும் இயைந்தமட்டில் தங்கள் வம்சஸ்தர்களை ஆதரித்து அபிவிர்த்தி செய்யாவிடில் மூளைகிளம்பியிருக்கிற இந்த சுயாதீனம் ஒங்கி வளராது. நாகரீக வளர்ச்சிக்கு இந்த ப்ரதேச சுயாதீனம் மிகச்சிறந்த சாதனமாகையால் இதனை இவ்வளவாக விரித்துரைத்தல் வேண்டியதாயிற்று. இதனை மற்றொன்று விரித்தலாகக் கொள்ளவேண்டா.

பயிரிடுதலே தமிழ்மக்கள் பொதுவாக மேற்கொண்டிருந்த தொழிலாகையால், அத்தொழில் நன்குநடக்குமாறு பதினெண் குடிமக்கள் ஏற்பட்டிருந்தனர். எழுபதில் நெல்லாளரை விளித்தற் சிறப்பில் கம்பர் "பற்றுடைய பதினெண்மர்" என்பது இவர்களையே. இவர்கள் நாவிதன்-சுயவன் வண்ணான்-ஓலையெழுதி மோச்சன்-ஐவகைக்கம்மாளர்-மூவகைவாணியர்-மாலைகாரர்-தையல் வேலைசெய்யும் பாணர்-காவலுக்குரிய பள்ளிகள்-வலையன்-

இடையன்-விருதுகூறுவோன் என்பவர்கள்-இந்தப் பதினெண்மருக்கும் வேளாண்குலத்தினர் சுபத்திற்குத் தாலிகூறையும் அசுபத்திற்கு ஆடை காஷ்ட முதலியனவும் கொடுத்துதவுவர். இப்பதினெண் குடிமக்களுக்கும் மான்ய மும் உண்டு. அக்காலத்தில் இவர்கள் வேறு விதத்தில் தலையெடுப்பது மூடி யாது. அப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் இல்லாத இக்காலத்தில் இவர்கள் தலை யெடுக்கிற விஷயங்களில் எவரும் ப்ரதிகூலங்கள் தேடாமல் விட்டால் பல நன்மைகள் ஏற்படுவதற்கு இட முண்டாகலாம். "யாரறிவார் நல்லாள் பிறக் குங் குடி". இன்னும் மறவர் முதலான மரபினருள்ளும் அநேக சீர்திருத் தங்கள் வேண்டும். தேசத்தில் அனேக பெரிய கார்யங்களைச் செய்யத்தக்க பேர்கள் இவர்களில் கொட்டையினுள்ளே வித்துப்போல் இருக்கின்றனர். நிலமும் நீரும் இயைந்தாலன்றே வித்து முளைத்து வ்ருக்ஷமாகும்.

தற்கால யூரொபியரைப்போல் பாங்கிகளும் வர்த்தகசாலைகளும் ஏற்ப டுத்தி நடத்தவும், இம்மியளவும் பிசகாமல் கணக்கு வைக்கவும், கணக்குப் பரிசோதனை செய்யவும், தமிழ்மக்கள் வகையறிந்தவர்களே. இங்கிலீஷில் வழங்கும் வர்த்தகக் கணக்குப் புஸ்தகம் ஒவ்வொன்றுக்கும் நேர்நேரான கணக் குப் புஸ்தகம் தமிழிலும் வழங்கிவருகின்றது. இவைகளெல்லாம் தமிழ் மக்க ளுடைய ஸ்வயாநுபவத்தில் ஏற்பட்டவை. கொள்ளைக்குப் போனாலும் கூட் டாகாது என்பது இவர்களுடைய கொள்கை. அதனால் இவர்களில் பரஸ்பர நம்பிக்கை இன்னும் பெரும்பான்மையாய் உண்டாகவில்லை. ஆயினும் தனிகர் சிலர் தங்கள் தங்கள்மட்டில் பெரிய பெரிய வ்யாபாரங்களை நடத்தி வருகின் றனர். இதற்கு உதாரணமாக இருப்பவர் வேளாண் செட்டிகள். அவர்களு டைய வ்யாபாரமும் காசுக்கடைகளும் ஆப்ரிகா முதல் ஆஸ்ட்ரேலியா வரை யில் பரவியிருக்கின்றன. திரைகடலோடியும் திரவியம் தேடிவந்தவர்கள் இவர் களே. இவர்களில் அனேகர் சொந்தத்தில் கப்பல் வர்த்தகம் செய்தவர்கள். ஆயிரவருஷங்களுக்கு முன்னும் திருவெண்காட் டடிகளுடைய சரித்ரமே இதற்கு ஸாக்ஷி. இவர்களும் வேறு தனிகர்களும் கூட்டாக முதற்பொருள் வைத்துப் பெரிய கார்யங்களை நடத்தத் தொடங்கினால் தமிழ்நாட்டில் மற்ற வர்களுடைய வர்த்தகம் ஒடுங்கும். தமிழ்நாடு மிகவும் மதிப்பேறி மகிமைபெ றுவதாகும். அதுசெய்யாத வரையில் தமிழகம் வருஷத்துக்கு வருஷம் இறங் குபடியாகி இழைத்துப்போகும். நாகரீகமும் ஓங்காது ஒரு தேசத்தின் நாகரீ கத்துக்கும் பெருமைக்கும் அதன் வ்யாபாரமே முக்யமான அறிகுறியாம்.

மற்றநாகரீக அம்சங்களை எவ்வளவாக நாம் அபிவிர்த்தி செய்துவந்தா லும், பெண்களளவில் சீர்திருத்தம் உண்டாகி மேம்பாடடைகிற வரையில் நம்முடைய நாகரீகம் முற்றுப்பெற்றதாகாது இன்னும் அவர்களைக் கேவலம் பசுப்போல் வைத்திருப்பது யூரொபியர் நம்மைக்கண்டு நகையாடுவதற்கு இட மாக இருக்கின்றது. நம்முடைய பிள்ளைகளின் பாலவிக்ஷைக்குரியவர்கள் இவர்களே. இவர்கள் தங்கள்மட்டில் ஸரியான பாலவிக்ஷை பெறுதவர்களாக இருந்தால் நம்முடைய பிள்ளைகள் ஸரியான பாலவிக்ஷையைப் பெறுவதெங் ஙனம்? குடும்பபாரத்தில் ஒருபாதி பாரம் பெண்களைப் பொறுத்ததே. பாரம்

தாங்குதற்கேற்ற சரீரவலிமையும் மனவலிமையும் இவர்களுக்கு உண்டாகாவிட்டால், இல்வாழ்க்கை யென்னும் வான்சகடம் எங்ஙனம் ஒழுங்காக நடைபெறும்? நம்முடைய தேசாசார மதாசாரங்களையும் நமது தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதியையும் ஆலோசித்துப் பார்க்கையில், ஒரே அடியில் மிகப்பெரிய சீர்திருத்தங்களைச் செய்வதும் ஸாலபஸாத்யமாகாது. இரண்டு தலைமுறைக்கு முன்னிருந்த நிலைமையில் பெண்கள் இப்பொழுது இல்லை: இரண்டொரு படி ஏறியிருக்கிறார்கள் என்பது உண்மையே. ஒவ்வொரு தலைமுறையில் ஒவ்வொருபடி ஏறிவந்தாலும், நன்மையும் ஒவ்வொரு படியாகத் தொடர்ந்துவரும். இதற்குரிய உபாயங்களைச் செய்கிறவரையில், மற்றக் கார்யங்களெல்லாம் வீண்கார்யங்களாகவே முடியும். தற்காலப்போக்கை உய்த்துணருமிடத்தில் பெண்களின் சீர்திருத்தம் ஈடேறக்கூடியதே என்பது ஸ்பஷ்டம். நம்முடைய ஸ்த்ரீரத்நங்களில் சிலர் அங்கங்கே அரங்கேறி வருவதே இதற்கு அறிகுறி. இந்த ஸபையின் கண்மணிகளாக இருவர் இங்கே அரங்கேறியிருப்பது நமக்கு ஊக்கத்தை அளிக்கின்றது. இனி ஊக்கத்தைக் கைவிடலாகாது.

தமிழ்நாடு சிறிது வெப்பம் மிக்கதாகையால், தமிழ்மக்கள் பெரும்பான்மையாய்க் காட்சிக்குக் கரியராக இருப்பினும், ஆண்களும் பெண்களும் அந்தசந்தம் உடையவர்களே. இவர்களுடைய தேசாபிமானமும் பாஷாபிமானமும் ராஜவிச்வாஸமும் காலங்கண்டவைகளே. எவ்வளவு கஷ்டமான கார்யங்களையும் ஸாதிப்பதில் மற்றவர்களுக்குக் குறைந்தவரல்லர். பெண்களின் கற்புநிலைமை எடுத்துக்காட்டானது. இவர்களுடைய குடித்தனப் பாங்கும் பிறர் பாராட்டத்தக்கது. மொத்தத்தில் இவர்கள் மானத்தையே உயிரினும் பெரிதாகக் கொள்பவர். எண்ணென்கறங்களில் இவர்கள் செய்து மறந்தனவே வேறுசிலர் செய்வன. இவ்விதமான அரிய குணங்கள் வாய்ந்த இவர்களுடைய நிலைமையைத் தற்கால ஸென்ஸஸ் கணக்கால் ஆராய்ந்து பார்க்கும்போது ஏறக்குறைய ஸரிபாதி பேர்கள் தமிழ்ப்பயிற்சி தானும் இல்லாதவர்களாக இருக்கின்றார்கள் என்பதை அறியுமளவில், வயிறு பற்றியெரிகின்றது. தலை நாணிக் குனிகின்றது. எண்சாணுடலும் ஒரு சாணுக்குன்றிவிடுகின்றது. "எடுப்பின் கிளையுட் சுழிந்தா ரெடுக்க" என்பதை மறந்துவிட்டீர்களோ? ஓ தமிழ்மக்களே.

தமிழ் மாதரின் பண்டைக்கால நிலை.

ஆரியர் பழக்கவழக்கங்களே சிறப்புடையனவென்றும், அக்குலப் பெண்களே பண்டு நன்னிலைமையி லிருந்தார்களென்றும், வடமொழிக்குத் தென்மொழி ஒப்பாகாதென்றும், மற்றைமொழிகளெல்லாம் ஆரியத்திலிருந்துண்டானவைகளே யென்றும், சிலர் தம் வாய்கொண்ட மட்டும் கூறுகின்றனர். ஆனல், ஆரிய மாதர்களுக்கு எவ்வாற்றானும் தமிழ்மாதர்கள் தாழ்ந்தவர்களல்லரென்பதற்குப் போதிய சான்றுகளுள. தமிழ்மொழி ஆரியக் கலப்பென்பது ஒரு சிறிதுமில்லாத ஓர் தனிமொழி. அங்ஙனமே தமிழரும் ஆரியர் வருவதற்கு முன்னரே அரசியல், அமைச்சு, குடிகளது உரிமை, ஒற்றுமை, நாகரீகம், உலகெங்கணுஞ்சுற்றி வியாபாரஞ்செய்தல், கடலில் மாக்கலஞ் செலுத்துதல் முதலிய பல வழிகளிலு முதன் முதல் நாகரீகம் பெற்றிருந்தவராவர். ஆரியர் ஈண்டு வருவதற்கு முன்னரே தமிழ் அரசியலின் பெருமை எண்டிசாமுகத்தும் பரவியிருந்தது. அரசனோடு அவன் துணையும் சிம்மாசனத்தில் ஒக்க வீற்றிருந்தனள். பெண்பாலெவருமே வீட்டிலடைபட்டிராமல் அறிவிற் சீரியராய் இஷ்டப்படி யெங்குஞ் சஞ்சரிப்பர். எப்பெண்களும் தங்களுக்கிஷ்டமில்லாத ஓர் மூடனை மணஞ்செய்ய விரும்பார்கள். பெண்களும் தேகாப்பியாசத்திற்குரிய விளையாட்டுகள் விளையாடி ஆரோக்ய திடசரீரிகளாயிருந்தனர். யாழ்வாசித்தல், புல்லாங்குழல் ஊதல், ஓவியமெழுதல் முதலிய நானவித கலைஞானங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர். "கலைவல்லார்" என்று சிந்தாமணியிலும் "கலைமகளிரி" என்று திருச்சிற்றம்பலக் கோவையாரிலும் பெண்களின் பெயர்கள் குறிக்கப்படுதலால், சிற்பசித்திர சங்கீதாதி நற்கலைகள் தொன்று தொட்டே பெண்களுக்குரியவை யென்று ஏற்படுகின்றது. இதுவுமன்றி, தேச கேஷமத்தின் பொருட்டு உயிரைத் துரும்பென மதித்த ஆடவரைப் போலவே பெண்களும் உண்மையான தேசாபிமானமுள்ளவர்களாய் இருந்தார்களெனத் தெரிகின்றது. ஆரியர்கள் இப்பொழுது ஆத்மசுத்தியும் தேகசுத்தியும் அபேக்ஷிப்பவர்களாயிருப்பினும் பூர்வம் பெரும்பாலும் ஊணுண்பவர்களாயிருந்தார்கள். தமிழ் மக்களோ எக்காலத்தேனும் மதுமாம்சாதிகளில் பிரீதிகொண்டவர்களல்லர். இவ்வண்ணம் தமிழ்நாடு, ஒவ்வொன்றிற்கும் நிலைக்களமாயிருந்தது போல், பெண்களது கல்விக்கும் தைரியத்திற்கும் இடமாயிருந்தது. தமிழ்மக்களின் பூர்வீக நாகரீகத்திற்கு ஆடவர்கள் வேறுபல காரணங்கள் கூறுவார்களாயினும் அவையனைத்திற்கும் மூலகாரணம் பெண்களே. எனெனில், அக்காலத்துத் தமிழ் மாதர்கள் தம்மக்களுக்குத் தக்கபடி கல்வி கற்பித்திராவிடின் அம்மக்கட் கூட்டமாகிய ஜனசங்கம் பேரும் பெருமையும் பெற்றிருக்க நியாயமில்லை. தாய்மார் தம்மக்களுக்குக் கல்வியுடன் தைரியமும் தேசாபிமானமும் இளமையிலிருந்தே ஊட்டி வந்ததினுற்றுன், அவர் தமிழ் நாட்டிற்கு ழைத்து நற்கீர்த்தி விளைத்தனர். இக்காலத் தமிழ் மாதருக்கு வீரமுஷ்மிப்பிரபாவமின்னதெனத் தெரியாதெனினும் நம் பூர்வீகத் தமிழ்மாதரின் சரிதை

களே ஆராய்வோமாயின் வீரத் தாய்மார்களும் கல்வி கேள்வியிற் சிறந்த வனிதையரும் நற்பெண்டிரும் எங்குமிருந்தன வென்றேற்படுவதற்கையமில்லை. உயிரைத் துரும்பென மதித்துச் சுதேச க்ஷேமத்தின் பொருட்டுப் போர்புரியும்படி ஜப்பானிய மாதர்கள் தம்மக்களுக்குப் புத்தி புகட்டினரென எவருமே இக்காலத்தில் ஓர் பெருந்திருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டுகின்றனர்கள். இவ்வருமையான தேசாபிமான குணம் பண்டைக்காலத்துத் தமிழ் மாதரிடம் இல்லாமலில்லை. நடக்குங் குழந்தை தவறினும் பிரமாதப்படுத்தும் தென்னாட்டு நங்கையர்க்குத் தமிழ்மாதரின் பூர்வீக தைரிய நிலைமை யித்தன்மையதென்று விவரித்தல் பொருத்தமுடையது. நமது மூதாட்டிகளின் பூர்வ நற்சரிதைகளே யறியாதவரே தமிழ்மாதருக்கு அச்சமே ஆபரணமென்பர். அறிந்தோர் ஒருபோதும் அங்ஙனஞ் சொல்லார்கள். தைரிய விஷயத்தில் ஸ்திரீ ஜாதிக்குள்ளே முதன்மை சொல்லவேண்டுமாயின், வடதேச வனிதையரைப் பார்க்கினும் தென்தேசத் தமிழ்மாதரின் பண்டைக்கால வீரப் பிரதாபமே முந்தியதென மொழிதல் வேண்டும். ''வீரத்தாய்மார்'' என்று செந்தமிழ்ப் பத்திராதிபரால் ஓர்விஷயம் வெளியிடப்பட்டுள்ளது. அதனைப் படித்துப் பார்ப்பின் தமிழ்மொழியிலுள்ள பழைய காப்பியங்களிலே இவ்வுண்மைக்குத் தக்க சான்றுகள் பலவுள என்று எவருமே சொல்லத் துணிவர். அக்கால மகளிரின் மன தைரியத்தைப்பற்றித் தமிழ் நூலாகிய புறநானூறென்னும் புராதன நூலில் நன்கு பிரஸ்தாபிக்கப்படுகின்றது. வீரச்சுவையே மற்றைச் சுவையினும் மிகுத்திருக்கின்றது. அதன் பொருளோமட்டும் ஒருவாறு சுருக்கிச் சொல்லுகிறேன். ''தம்மக்களே வீராக்குதல் தாய்மார் தங்கடமை'' யென்று பொன்முடியாரென்னும் பெண்புலவர் பாடியுள்ளார். இக்கால மாதர்களுக்கு இஃது பொன்போன்ற போதனையன்றோ. தகப்பன் தலைவன் முதலியோர் படுகளத்திலிறந்தும் மனம் பதைக்காது, ஓர் தைரிய லட்சுமி தனது ஒரே மகனை மறுபடியும் உற்சாகப்படுத்திச் சுதேசத்திற்காகப் போர்புரிய வனுப்பினளென, ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்மணி கூறியுள்ளார். என்னே! பண்டைக்காலத் தமிழ்மாதரின் மனோதைரியம்! இம்மட்டோ தன் மகன் யுத்தகளத்து யானையாற் கொல்லப்பட்டானென்று அவனை முதுமைப்பருவத்தில் பெற்றெடுத்த ஓர் கிழவி கேட்டு ஈன்றபொழுது அவள் அடைந்த சந்தோஷத்தைப் பார்க்கினும் தைரியவான் என்று மெய்ப்பிக்கும்படி இறந்தபொழுது எண்மடங்கு அதிக சந்தோஷத்தை அடைந்தாளென, ''பூங்கணுத்திரை'' என்னுமோர் பெண்புலவர் பாடியுள்ளார். இன்னும், தன் மகன் போரில் புறங்கொடுத்தானென்று கேட்டுச் சகிக்காத மாதொருத்தி, சந்தேக நிவர்த்தியின் நிமித்தம், சேறிச்சினந்து யுத்தகளஞ் சென்று பார்க்க, அங்கே அவன் இரு துண்டாய் வெட்டுண்டு மடிந்து கிடப்பதைக்கண்டு களிகூர்ந்தாளென 'நச்செள்ளையார்' என்னும் மாதரசிரோன்மணி பாடியுள்ளார். ''கொல்லும் வேலினையுடைய வீரமக்களுக்கு யுத்தசமயத்தில் வீராவேசம் பிறந்ததுமன்றி வீட்டிலிருக்கும் அரிவைமார்களுக்கும் இனமுண்டாயிற்று என்று புறப்பொருட்பிறைகளில் ''மூதின்முல்லை'' யிற் கூறப்பட்டிருப்பதாய்த் தெரிகின்றது. இம்மட்டோ, தகடூர் யாத்திரை என்

ஞமோர் பழைய நூலில் ஓர்தாய் தன்மகன் யுத்தகளத்திலே சாகப்பெறின் அதுவே அவனது மூக்கிய கடமையும் தானதர்ம கிரியைகளும் ஆகுமெனக் கூறிஞளெனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. காவற்பெண்டு என்னும் பெயருடைய மறவர்குலப் பெண்ணொருத்தி புலியொத்த மகனொருவனை யுத்தகளத்திற்கு அனுப்பிவிட்டு அவனைப் பெற்றெடுத்த தன் வயிறு புலி கிடந்த கன்முழையாகக் கருதினளெனத் தெரிகின்றது. பண்டைக்காலத் தத் தமிழர்க்குள்ளே "காவற்குடி" யென்றோர் வகுப்பினர் இருந்தனர் என்றும் அக்காலத்தில் அவர்கள் அரசனது மெய்க்காவல் ஊர்க்காவல் முதலிய பல வேலைகளையும் புரிந்தார்களென்றும் அம்மரபிலுதித்த கூத்திரியப் பெண்ணை இவ்வண்ணம் பேசியவளென்றும் தெரிகின்றது. இத்தகைய பொருளுடைய உதாரணச் செய்புள்கள் எத்தனையோ பழைய இலக்கியங்களில் மலிந்து கிடப்பன தமிழ்நூற் பயிற்சிபுள்ளவர் அறியாத விஷயமன்று. இதிலோர் அற்புத விஷயமென்னவெனில், பெண்களே பெண்களின் தைரிய குணத்தைப் பற்றிப் பொருமையொழித்து வியந்து பாடியதேயாகும். அவ்விஷயத்தைமட்டும் வநிதையர் முதல் எவருமே வியந்து கொண்டாட வேண்டும். என்னே! தமிழ்மாதரின் பண்டைக்கால நன்னிலை! தேச கேமத்தின் பொருட்டும் நலங்கருதினரிலரே. இதுவுமன்றி நல்லிசைப் புலமைவாய்ந்த மெல்லியிலார்கள் பண்டைக்காலத்திலே ஊர்கள் தோறும் பலரிருந்தனரென்று தெரிகின்றது. "ஆதிமந்தியார்" பூதப்பாண்டியன் றேவியார் வரதுங்கபாண்டியன் றேவியார், முதலிய பலர் கற்பினுக் கணிகலமாயிருந்ததுவுமன்றி நல்லிசைப் புலமைவாய்ந்த மெல்லியலாருமாவார். ஔவைப்பெருமாட்டி அன்பு பாராட்டிவந்த "பாரிமகளிர்" என்னுமோர் கன்னிகைக்கும் கல்விகலஞ் சிறந்ததென்று தெரிகின்றது. இம்மட்டோ. "காரைக்காற் பேயம்மையார்" வில்லிபுத்தூர்க் கோதையார், குன்றியாள், நெடும்பல்லியத்தை, கழார்க்கீரனெற்றியார், அள்ளூர் நன்முல்லையார், நன்னாகையார், கச்சிப்பேட்டு நன்னாகையார், நக்கண்ணையார், வெள்ளிவீதியார், வெண்பூதியார், மாரோகத்து நப்பசலையார், முதலிய பல பெண்கள் பண்டைச்காலத்தில் தமிழ்மொழியில் பாண்டித்திய முள்ளவர்களாயிருந்தார்களென்று மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகை வாயிலாய் பத்திராதிபர் வெளியிட்ட விஷயத்தை யாவருமறிவர். இவ்வியாசங்களைப் பின்பற்றி இன்னும் பல வியாசங்கள் வெளியாதல் வேண்டும். அதுவே பெண்கல்வி வியாபகத்திற்கோர் சாதனமாகும்.

---

(2) தமிழ்நாட்டு நங்கையரின் கல்வியாபகம்.

தமிழ் மாதர்களுக்குக் கல்வியுளதென்பதற்கு மத்தியகால நிதர்சனங்கள் பலவுள. தென்னிந்தியாவை மூவேந்தர் அரசாளுகையிலே, ஏகம்பவாணனென்றொருவனிருந்ததும், அவன் வரலாறு வீரைதாசமஞ்சரியிலும் வேறிடங்களிலும் காண்கிறபடி வாணன் மகளாலியால் பாடப்பட்டதென்று சொல்லும் பாடலும், கம்பன் வீட்டு வெள்ளாட்டிகள் பாண்டியன்பேரில் பாடியதாய்ச்சொல்லும் நான்கு வெண்பாக்களும் பர்த்தாவைச் சிறையினின்று மீட்க பாண்டிமாதேவி பாடியதாய்ச் சொல்லும் பிறவும் காணப்படுகின்றன. வாணன், கம்பன் காலத்திலிருந்தனரே அலரே என்று சிலருக்குச்சந்தேக முண்டாயினும் தமிழ் மாதரின் பண்டைக்கால கல்வி விஷயத்திற் சந்தேகிப்பாரிலர். இம்மட்டோ? இந்நாட்டில் ஔவையாரின் பெயரை அறியாத சிறியாருமிலரே. இவ்வம்மையவர்கள் இராஜதந்திரத்திலும் நுண்ணறிவுடையராயிருந்தமையின் அதிகமான் என்னும் அரசரால் காஞ்சிக்குத் தலைவராயிருந்த தொண்டைமானிடந்தூது விடுக்கப்பட்டார். மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் திருக்குறளை அரங்கேற்றியபோது திருவள்ளுவர், இடைக்காடர் இவர்களோடு ஔவையாருமிருந்தனரென்று இயம்புவாருமுளர். குலோத்துங்கச் சோழனுக்குப் பட்டாபிஷேகங் கூடியபோது ஔவையாரும் ஆங்குச்சென்று அவனை "வரப்புயர" என்று வாழ்த்தினர். அங்குள்ளோர் அதன் பொருளை விளக்கும்படி விரும்பினர். "வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக்கோனுயரும், கோனுயரக் கோனுயரும்" என்று அதன் பொருளை அப்பொழுது விளக்கி இராஜாங்கத்திற்குங் குடிகளுக்கு முள்ள உரிமை முதலியவைகளை நன்கு எடுத்துக்காட்டினர். இவ்வம்மை செய்த நூல்கள் "சுருங்கச்சொல்லல் விளங்க வைத்தல் என்னுமிரண்டழகும் பொருந்தியவை மேற்றிசைப்பெண்கள் தம்மக்களின் கல்வி நிலைமையைக் கருதிப்பாடுபடுவதைப்போல இவ்வம்மையும் சுதேசாபிமானத்தினால் தூண்டப்பெற்று அக்காலத்திற்றானே இந்நாட்டுக்கிறவர் சிறுமியர்களின் கல்வியபிவிர்த்தியைக் கருதிப்பாடுபட்டுள்ளாரென்பதிற் சந்தேகமில்லை. இதற்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னுமிரண்டு நூல்களையும் எழுத்தின் முறைவைப்பாற் செய்திருப்பதே போதியசான்றும். எனினுங் கற்றறிந்தோர் பொருட்டுந் தங்கல்வி வன்மையைக் காட்டியுள்ளார். இவைகள் மிகச்சிறிய நூல்களேயாயினும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாவ்வகைப் புருஷார்த்தங்களையும் நன்கு விளக்குவனவால் இப்போது ஆங்கிலேயத்தினும் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கு முலாவிவருகின்றன. இவ்வம்மையைப் போல பஞ்சமர்யாவருமே படிப்பதெக்காலம்? படித்தமாதரை ஔவையாரைப் போலவே கௌரவிப்பதற் காட்சேபணையில்லையே. ஔவையார் புலச்சிவயிற்றிற் பிறந்த பேதையே யெனினும், கம்பன் ஒட்டக்கூத்தன் முதலிய ஆண்சிங்கங்களும் அவள்முன் அஞ்சியே நின்றனர்.

இஃது எவ்வாறாயினுமாகுக. ஔவையாரென்னும் பெயருடையவர்கள் இரு வரென்றும், அவரவர்களிருந்தகால விவரங்கள் இவைகளென்றும், அவர் கல்வி கேள்விகளின் தாரதம்மியமும் இன்னின்னவை யென்றும் விவகரிப்பாரு முளர். இஃதெப்படியாயினும் இவ்விருவரும் பெண்களென்பதை ஆக்ஷேபிப் பாரெவருமிலர். வேறுசில பெண்களோவெனில் கடவுள்மீது ஸ்தோத் திரப் பாடல்களைப் பாடியுள்ளார்கள். அவர்களுள் சைவசம்பந்தமான காரைக் காலம்மையும் வைணவசம்பந்தமான சூடிக்கொடுத்த நாச்சியாரும் பிரதான மானவர்கள். சைவவைணவ சமயத்சார்கள் இவ்விரு பெண்மணிகளையும் எவ்வளவோ மதித்துள்ளார். காரைக்காலம்மையார் செய்த பதிகத்தைச் சை வர்கள் திருமுறைகளுட் சேர்த்துள்ளார்கள். அப்படியே சூடிக்கொடுத்த நாச்சியார் செய்த பிரபந்தங்களை வைணவர்கள் திவ்யப் பிரபந்தத்துள் முத லாயிரத்தில் சேர்த்துள்ளார்கள். இதிலுல் தமிழர்கள் தங்கள் பெண்களையும் அவரது கல்வி கேள்விகளையும் பண்டைக்காலத்திற்றானே நன்குமதித்துள் ளார்களென்பது விளங்கவில்லையா? திருக்குறள், நாலடி, காசிகாண்டம் முத லிய நூல்களிலெல்லாம் பெண்களின் கற்பிலக்கணம் பேசப்படுவதால் அக் காலத்த கர்த்தாக்கள் காலத்திற்கு முன்னும் பின்னும் தமிழ்மாதர்கள்கல்வி பயின்றிருக்க வேண்டுமென்றும் எக்காலத்தும் அவர்கள் கற்கவேண்டு மென்ற நற்கருத்தை அவ்வாசிரியர் கொண்டிருந்தனரென்றும் புலப்படுமன் றே! பாலகாண்டத்தில் நாட்டுப் படலத்திலே கோசலநாட்டுப் பெண்களின் குணாதிசயங்களைக் கம்பர் வருணிப்பதை நோக்கின் அந்நாட்டுப் பெண்கள் யாவருமே நிச்சயமாய்ப் படித்திருந்தனரென்று றேற்படுகின்றது. இவை போன்றவைகளை யெல்லாம் வடமொழி சம்பந்தமென்றும் கட்டுக்கதைக ளென்றும் கழறினும் கம்பரிருந்த காலத்திலே இத்தமிழ் நாட்டின்கண் படித் த பெண்கள் பலரில்லாவிடத்துத் தமிழ்மொழியில் இங்ஙனங் கற்பிக்க நியா யமிராதென்க. தமிழில் கம்பர் முதலியவரும், தெலுங்கில் திக்கன்ன முதலி யவரும், வடமொழி வல்லோரின் திறமைக்குத்தங்கள் திறமை எவ்வாற் றானும் தாழ்ந்ததல்லவென்று காட்டினவராவர். கம்பர் கற்பனையிலும் உண் மையில்லாமற் போகாதாதலின் அக்காலத்துப் பெண்கல்விக்கு நாம் இக்கா லத்திற் கண்டுங்கேட்டு மதிசயிக்கும் ஐரோப்பா, அமெரிக்கா, முதலிய மேற் றிசைக் கண்டங்களின் பெண்கல்வியுமீடாகாது. சரஸ்வதி கூறுமிடத்து தற் சமயம் நாகரீகப்பட்ட மேற்றேசத்துப் பெண்களைப் போலவே திராவிட தேசமுழுவதும் கற்றறிந்த பெண்கள் பலரிருந்தனரென்பதிற் சந்தேகமில்லை. அப்படிக்கற்ற பெண்களுள் சிலர் குலபத்தினிகளாகவும், சிலர் ரிஷிபத்தினி களாகவும், சிலர் அரசபத்தினிகளாகவும், சிலர் வேசிகளாகவும், சிலர் வெள் ளாட்டிகளாகவும், சிலர் தபசிகளாகவும் இருந்திருக்கின்றனர். ஆதலால் நம் தமிழ்நாட்டில் பூர்வத்தில் இன்னின்ன ஜாதி சமயத்தினர் மட்டுந்தான் கற்க வேண்டுமென்றும், இன்னின்ன இனத்தவர் கற்கப்படாதென்றும், சூத்தி ரரும் பெண்களும் படிக்கப்படாதென வடமொழியார் தர்மவிதியொன்று எற்படுத்தி விலக்கினதுபோல விலக்கினவர் ஒருவருமிலர். தற்சமயம் மேன் மையுற்றிருக்கும் மேற்றிசையாரைப் போலவே கல்வியென்னுந்தானே ஆண்

பெண் என்னுமிருபாலர்க்கும் இன்றியமையாதென்று தமிழ் தேசத்தினர் அறிந்தேயிருந்தனர். மணலினிடத்தே கேணியானது தோண்டிய அளவாய்ச் சுரப்பதுபோல மாந்தர்க்கு அறிவானது அவரவர்கள் கற்ற கல்வியளவேயாகு மென்று பொருட்படப் பொதுவாய்க் குறள்வாக்கியம் கூறுகிற்கின்றது. இக்குறட்பாவிலிருக்கும் "மாந்தர்" என்னும் பதம் இருபாலாரையுங் குறிக் கிறதேயன்றி ஆடவரைமட்டும் குறிக்கவில்லை. ஆதலால் கல்வி இருபாலர்க் குஞ் சொந்தமென்பதை ஒருவர் சொல்லவேண்டுவதில்லை. ஆடவர் கல்விக் குமுன், பெண்கல்வி, பிரகாசிக்காதென்பாராயின் கல்வியிற் பெரிய கம்ப ரின்முன் ஒளவையின் பாண்டித்தியம் பிரகாசிக்காமற் போகவில்லையே. தமிழறிவாள் என்னும் பெண்ணின் கல்விவன்மைக்கு எத்தனை பண்டிதர்கள் தலைவணங்கி அவமானமடைந்தனர். கலைமதங்காட்டிய அக்கன்னிகையின் மனோராச்சிய எல்லையை வெல்ல எப்பண்டிதர்களாலு மாகாமற்போகவில் லையா? கடைசியில் கடைச்சங்கத்து நக்கீரர் அவரும் ஒருவாறு செய்த தந்தி ரோபாயத்தால் வென்றனரேயன்றி வேறுவழியில் வெற்றிகொள்ளவில்லை யே? ஆதலின் பெண்கள் ஞானத்திற் குறைவுற்றிருக்க வேண்டுமென்ப தொன்றுமில்லை. பூர்வம் அரசன் முதல் யாவரும் பெண் கல்விப்பிரியரும், கற்ற பெண்ணிற்குத்தக்க வரனைத்தேடி மணஞ்செய்வோரும், கற்ற பெண் களையே விரும்பும் கல்விமான்களும் நூதன நூற்களைச்செய்வோரும் செய் விருப்போருமாக விருந்தனரென்பதிற் சந்தேகமில்லை. இராஜா எப்படியோ அப்படியே குடிகளுமென்பது போல அரசரே கல்விப்பிரியராயிருந்தமை யால் அவர் மனைவி மக்களும் குடிகளும் கல்விப்பிரியராயிருந்தார்கள். அதி வீராம பாண்டியன் கல்விப்பிரியராயிருந்ததும் அரசன் கூர்மபுராணம், நைடதம் காசிகாண்ட, முதலிய நூற்களியற்றியதும் அவர் பாடிய நைடதத் திற்குச் சாற்றுக்கவி அவரது மனைவியே கூறினளென்பதும் மிகப்பொருத்த முடையதன்றோ? கம்பராமாயணத்தைப் பார்வையிட்ட ஸ்ரீரங்கத்தார் அதை அரங்கேற்றுவதற்கு அக்காலத்திற், தஞ்சையிலிருந்ததாசி அஞ்சனாக்ஷியின் புகழுரையு மிருப்பதுமிக அவசியமெனப்புகன்று அவரை அவளிடமனுப்பி அவள் புகழுரையும் பெற்றுவரச் செய்தனர். கம்பர் கல்வியிற் பெரியோராயி னும் கேவலம் ஓர் தாசிப்பெண்ணை மதித்து அவள் புகழுரையும் பெற்று வந்தது பண்டைக்காலத் தமிழ்த்தேசத்தின் பெருமைக்கு ஏற்ற உதாரண மாகுமென்பதற்கையமில்லை.

---

(3) சேரநாடு.

சேரசோழ பாண்டியர் ஆண்ட மூவிடங்களில் மலையாளம் சேரநாட்டெல்லைக்குள் அடங்கியிருக்கிறது. அந்நாட்டு ஸ்திரீபுருஷர்கள் வேற்றிடங்களுக்குச் செல்லாதிருக்கும் பொருட்டு மருமக்கள் தாயமும் குடியரசும் பிராமணர் நன்மைக்குரிய சில விதிவிலக்குகளும் பரசுராமரால் ஏற்படுத்தப்பட்டன என்பர். இச்சேரநாட்டைத் துளுவம், குடகு, கேரளம் முதலிய சில பகுதிகளாகப் பிரிப்பர். மலையாளத்தின் தென்பாகத்தைக் கேரளமென்பர். ஔவையார் விவாசமில்லாத கன்னிகையேயாயினும் சேரசோழ பாண்டிய நாடுகளிலும் அவற்றின் தலைநகரங்களிலும் எங்குமே தைரியமாய்ச் சஞ்சரித்து எவரோடும் வாதிட்டு ஆண்மையுள்ள ஆடவரையும் வென்று அரோகதிடசரீரியாய் நெடுங்காலஞ் ஜீவித்திருந்தவராவர். இவ்வுத்தமியைத் தமிழர் மறந்தனர். மாடம் பிளாவடஸ்கி (Madam Blavatsky) அனி பெஸண்டு (Anne Besant) முதலிய அன்னிய தேசமாதர்களுக்கெல்லாம் பிறந்த நாள் உற்சவங்களும், திருநாளும், அவர்கள் பேரால் ஞாபகார்த்த மண்டபங்களும், உபந்நியாச மேடைகளும், புஸ்தகசாலைகளும், வாசகசாலைகளும் இத் தமிழ்நாட்டிலெங்கு மேற்படும்பொழுது நமது ஔவைப்பெருமாட்டி முதலியோரை அவ்வித கௌரவத்திற்குட்படுத்தாதது ஏனோ? பண்டைக்கால நல்லிசை மெல்லியலார்களைக் குருபூஜை முதலியவற்றுல் பெருமைப்படுத்திஞல் அது தற்காலப் பெண்கல்விக்கு ஓர் தூண்டுகோலாயிருக்குமன்றே! இந்த நாடானது படித்த பெண்கள் ஒருவருமே இல்லாத நாடல்லவே. இந்நாட்டில் எவ்வினத்தார் படியாதிருந்தார்கள். குறமகள் இளவெயினி என்னும் தமிழ்மாது மலைநாட்டு வாசிகளாகிய குறவர் குடியிற் பிறந்தவரேயாவர். குறமகள் குறிபோயினி என்னும் நல்லிசைமெல்லியலுக்கு இளையாளெனத் தெரிகின்றது. குறத்திகளை இக்காலத்தில் இழிகுலத்தினரெனக் கருதுகின்றனர். பண்டைக்காலத்திலோ அக்குறத்திகளும் நன்முய்த் தமிழ்படித்திருந்தார்களென விளங்குகின்றது. பேய்மகள் இளவெயினி என்னும் மற்றொரு மாது சோமாஞைப்புகழ்ந்து பாடி அவரிடம் தக்க பரிசும் பெற்றுள்ளாளெனத்தெரிகின்றது. காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்மணிகளும் சோமாஞைப்புகழ்ந்துபாடி அவரால் விசேஷப்பரிசுபெற்று அரசனருகே சமமாய் வீற்றிருக்கும் சிறப்பும் பெற்றுர்கள். ஆதலின் பண்டைக்காலத்திலே எச்சாதியாயிருப்பினும் கல்வி நலஞ்சேர்ந்த பெண்களை கௌரவித்தனர். இது நல்ல மூன் மாதிரியன்றே? இக்காலத்துப் பிரபுக்கள் இவ்வழியைப் பின்பற்றவேண்டும். ஒன்றினையும் எதிர் பாராது தேசத்திற் குழைப்பவர்க்கு வெள்ளிப்பதக்கம், தங்கப்பதக்கம் கௌரவப்பட்டம் முதலியவைகளைக் கொடுத்தாதரிக்கவேண்டும். மதுரை நான்காந்தமிழ்ச்சங்கத்தார் பரீட்சையிற்றேறும் மாணவரை மட்டும் ஆதரிப்பது விசேஷமாகாது. பழயபடி தேசமெங்குமே தமிழ்ப்பாஷை வியாபிக்கப் பிரயத்தனப்படவேண்டும். எவ்விடத்தும் தமிழரசியின் செங்கோல் செல்ல வழி செய்யவேண்டும். தமிழ்,

தெலுங்கு, இவ்விரண்டு தேசங்களுக்கு மிடையிலுள்ள கர்நாடக தேச மும் தமிழ்நாதிற்கு அன்னிய விடமல்லவே. பேசும்பாஷையாலும் ஜனங் கள் நடையுடைபாவனைகளாலும் கன்னடதேசத்தவரும் ஓர் தேசத்தவரென் பதற் கையமில்லே. கன்னடபாஷையை ஒருகோடியே மூன்று லக்ஷம் ஜனங் கள் இப்பொழுது பேசுகின்றார்கள் இக்கன்னடமும் தமிழேயன்றி வேறில் லே. தமிழையே ஜீவாதாரமாய்ப் பெற்றுள்ளது. ஓர்காலத்தில் சேரமண்டலத் தில் கோயமுத்தூர், சேலம், தொண்டநாடு தென்மலையாளம், கொச்சி, மைசூர், எனும் பலவிடங்களும் சேர்ந்திருந்தனவாதலின் சர்நாடகமும் சேரநாட்டிற்கு ள் அடங்கும். இப்பொழுதும் அத்தேசத்தில் தமிழ்க்குடிகள் இலர் என்பதில் லே. இதுவுமன்றி "திகளர்" என்னும் ஓர்வகை தமிழ் ஜனங்கள் மைசூர் முத லியவிடங்களில் இன்னுமிருக்கின்றார்கள். இக்கர்நாடக தேசத்திலும் விவேக வதிகள் உற்பவியாமற் போகவில்லே. அக்கமாதேவி என்னும் பக்தி வைராக் கியமுள்ள ஸ்திரீரத்தினம் 12-வது சகாப்தத்திலே இருந்ததாய்த்தெரிகின் றது. இவ்வம்மையின் தாயின் பெயர் சுமதி. தகப்பன் பெயர் நிர்மலன். இவ ர்கள் வசித்தவிடம் கர்நாடகத்திலே "உடுதடை" என்னுமோர் கிராமமாகும். இவ்வம்மை அவர்கள் லிங்கபலிஜ ஜாதிப்பெண். பால்யத்திலிருந்து தாய் தந் தையர்களிடத்தில் வளர்ந்து வரும் நாளிலேயே சிவ பக்தி யுடையவளாயிருந் தாள். யௌவன புருடனான அத்தேசத்து விச்சலனென்னும் சமணவரச னொருவன் இவ்வம்மையின் அதிரூப சௌந்தரியத்தைக்கண்டு, மணஞ்செய் துகொள்ள விரும்பினன். இவ்வம்மை இராணி பதவியையும் திரஸ்கரித்து பக்தியே முக்திக்கு வழியென்று நம்பி விவாகமில்லாமலே யிருந்துவிட நிச் சயித்ததுமன்றி, தன்னே விரும்பி நின்றவனே வீரசைவனுக்கமுயல, அவன் மறத்தினுல் துறவு பூண்டு அவன் ராஜ்ஜியத்திலிராது அத்தட்சணமே சர் வசங்கப்பரித்தியாகஞ்செய்து ஞானசாரியரைத் தேடித்திரிந்து இலிங்கமதஸ் தாபகராகிய பசவனுடைய சபையைச்சேர்ந்து அங்கே அல்லம பிரபு என் னும் மகானிடம் ஞானோபதேசத்தை யடைந்தாள். இவ்வம்மையார் தம் வாழ் நாளெல்லாம் விவாகமில்லாமலேயே யிருந்து, சைவசமயத்தை வியாபிக்கச் செய்வதிலே பசவன்ன அவர்கட்கு மிகச்சகாயமாய் நின்றார். இவளுக்கிருந்த சித்தவைராக்கியத்தையும், தெய்வபக்தியையும், ஞானசற்குணங்களையும் கண் ட ஜனங்கள் அம்மையவர்களேப் பார்வதியம்சமாகவே நம்பினர்கள். பெருங் காய மிட்ட குடுக்கையில் வாசனே போகாதென்பது போல தற்காலத்தில் பழைய சேரநாடாகிய மைசூரில் பெண் கல்வி சிறப்புற்றோங்கி வருகின் றது. சாமுண்டி யென்னும் பெண்தேவதை ஓர் காலத்தில் அவதார மெடுத்து மகிடாசுரனை சம்ஹரித்துக்குடிகளேக்காத்த விடமாகையால் மைசூரென்னும் பெயர் பெற்ற தென்பர். இவ்விஷயம் எங்ஙனம் தோற்றினும் தற்சமய மிருக்கும் இராஜாங்கத்தைக் கொடுங்கோலரசராகிய மகம்மதியரிடமிருந்து சம்பாதித்துக் குடிகளே சம்ரட்சித்தவர் லட்சுமி அம்மணி தேவி என்பதற் கையமில்லே. இன்றேல் மைசூரில் மகம்மதிய ராஜாங்கமே இன்றளவும் நிலே த்திருக்கும். இவ்வம்மையவர்கள் தன் ராஜ்ஜியத்தை யிழந்த டிப்புவின் கொ டியகிறையிலிருந்து நற்படக்கையும் கல்லுணவுமின்றி நாட்கழித்து நல்லா

டையுமில்லாதிருந்து மகம்மதியர் கட்டுக்காவலுத்தாண்டி வெளிப்படுத்துவ தற்கு வழியின்றி வருந்தினர். இவ்வளவு கஷ்டத்திலிருப்பினும் அப்பொ ழுது நம் நாட்டிற்குப்புதிதாய் வர்த்தகசம்பந்தமாய் வந்த ஈஸ்டு இந்தியா கம் பெனியாரைப் பலதடவைகளிலுந் தூண்டி திருமலைராவ் என்னுமோர் உத் தமரை இரகசியமாயனுப்பி அக்கம்பெனியார் மூலமாய் ஜெயம்பெற்று தன் னினத்தார்கள் வம்ச பரம்பரையாக ஆண்டு வந்த ராச்சியத்தைத்திரும்பிக் கைப்பற்றிய பிரத்தியட்ச சாமுண்டி தேவதை இப்பெண்பால் என்பதிற் பி ழையில்லை. மைசூர்ராஜ்ஜிய சரித்திரத்தை எழுதின கர்னல் வில்ஸ் என்பவர் இந்தம்மாளின் குணாதிசயங்களைப்பற்றி மிகச்சிறப்பித்தெழுதியுள்ளார். இவ் வம்மையவர்கள் யுத்தகளத்திற்குப்போய் நேர்முகமாய் நின்று சண்டையொ ன்றுஞ் செய்யாவிடினும் யுத்த முயற்சிக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் அதிக ரகசியத்திற் செய்து அதன் பின்னரன்றே ஆங்கிலேயரைத் தூண் நிற்கும்படிக்கோரினள். மைசூர் பிரஜைகளனைவருமே தங்கள் இராணிக்கு அநுகூலமாயிருந்தபடியால் ஆங்கிலேயர் ஓர்கொடியில் ஜெயசீலராய்த்திரும்ப நேர்ந்தனர். தற்சமயத்திலிருக்கும் வாணிவிலாஸ் மகாராணியும் சில நாள் பட் டத்தைத்தாங்கி நிர்வகித்தது யாவருமறிந்த விஷயமே, இப்பழைய சேரநா டோ பெண்கள் முன்னேற்றத்தில் பிரீதி கொண்டுளது. பெண்களுக்கென இப்போது மகாராணி காலேஜ் என்றோர் உயர்தரக்கலாசாலையும், பெண்கல் விக்கேற்ற பிற சாதனங்களும், பூர்வீக இத்தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ளபடி யால் மைசூர் சீக்கிரம் முற்பட்டு விடுமென்பதிற்சந்தேகமில்லை. மைசூர்மாதர்க ளின் நன்னிலைமைக்குத்தமிழ்மாதர்கள் களிகூறல்வேண்டும். மைசூரைப்போ லவே சேரநாட்டின் தற்கால இராஜதானியாகிய திருவனந்தபுரமும் பெண்கல் வியில் பிரீதிகொண்டதென்பது பிரத்தியட்சம். ஆயிரத்தில் எட்டுப்பெண்கள் மைசூரில் படிப்பதாயின் திருவாங்கூரில் ஆயிரத்தில் 31 பெண்கள் படிப்பதா யத்தெரிகின்றது. இந்தியாவிலெவ்விடத்திலும் திருவனந்தபுரத்தைப்போலப் பெண் கல்வி வியாபிக்கவில்லை. மலையாள மாதர்கள் இன்னு மதிகமாய்க் கற் றுத்தேர்ந்து தமிழ் மாதரின் பண்டைக்கால நன்னிலை உண்மை யென்று மெய்ப்பிக்க முயலுவார்களென்று நம்புகின்றேன். மலையாளத்திலோ ஸ்திரீ களுக்குச் சுதந்தர மதிகமென்பதற்கையமில்லை. அவர்கள் மூற்பட பலசாத கங்களுள இப்பூர்வீக சேரநாட்டுப்பெண்கள் எக்காலத்திலும் சுதந்தரமின்றி வீட்டிலடைப்பட்டிருந்தவர்களல்லர். சமீபகாலத்திலுங்கூட அத்தேசத்திலரா சாட்சி செய்த பெண்களும் பலருளர். 1677ஆம் ஆண்டு உய்யமாராணியார் ராஜ்ஜியபாரம் செய்துள்ளார். 1798-முதல் 1810-வரையில் கௌரிலக்ஷ்மி ராணியாரும், 1810 முதல் 1815 வரை கௌரிபார்வதிபாயம்மாளும், 1847 முதல் 1860 வரை ருக்மணி பாயம்மாளும் வேறு சிலரும் அவ்வப்பொழுது அத்தேசத்தை ஆண்டார்களெனத்தெரிகின்றது. மற்றத்தேசங்களில் ஆட வருக்கென்றேற்பட்டிருக்கும் சொத்து சுதந்தரம் மலையாளத்தில் மாதர்க ளுக்கென ஏற்பட்டு ஆதிகாலமுதல் பெண்சந்ததியார்களுக்கே குடும்பத்தி லும் பாத்திதை யிருந்துவருகின்றது. பெண்மக்களைச் சுதந்திரவதிகளாய் வீட்டில் வைத்து ஆதரிக்கும் நற்பழக்கம் யாழ்ப்பாணம் முதலிய விடங்களில்

இன்னு மிருக்கின்றது. ஆனால் மலையாள மாதர்களின் நடையுடைபாவனைகளிற் சிலவற்றை நான் மனப்பூர்வமாய் வெறுக்கின்றேன். அதை விவரிக்கவும் என் மனம் நாணுகின்றது. தமிழ் தேசத்தை அடுத்து வசிப்பவரும் பூர்வீகத்தமிழ் மாதருமாகிய இம்மலையாள மாதர்கள் தமிழ் மாதர்களைப் போலவே நடையுடை பாவனைகளைத்திருத்திக்கொண்டு ஒருவனையே மணஞ்செய்து வீட்டுப்பாஷையையும் தமிழாக்கி தமிழரோடு சம்பந்தஞ்செய்து தமிழ் தேசத்தின் விஸ்தீரணத்தைப் பலவிதத்திலும் பெருக்குவரென நம்புகின்றேன். மலையாளபாஷையைப் பேசும் 64, 00000 ஜனங்கள் தமிழரோடு பழயபடி ஒன்றுபடின் தமிழ்மாதிற்கோர் ஊன்று கோலாகும். திருவாங்கூர் மகாராஜா முதலியோர் மனம் இவ்வழியிற்றிரும்பவேண்டும். தமிழபிமானிகளும் அந்நாட்டிற் போய் வேலை செய்யவேண்டும். பழயபடியே அநாசார வழிகளிலிருப்பின் அவ்வவமானம் தமிழ் மாதரையும் சாருமென்பதற்கையமில்லை.

---

(4) ஆந்திரர்.

கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 300 வருடங்களுக்கு முன்னரே ஆந்திர ராஜ்ஜியம் மகோன்னத நிலைமையிலிருந்தது. ஆந்திரர் ஆரியவம்சத்தினரென்று ஒருவாறு தோற்றினும் திராவிடர்களோடு பிற்காலத்தில் பலவிதத்திலும் சம்பந்தப் பட்டுள்ளார்கள். பண்டைக்காலத்தில் அந்தஸ்தையும் யோக்கியதையையும் பொறுத்து விவாகங்களும் நடந்தேறின. அன்றி ஆந்திரமென்னும் தெலுங்கு பாஷையும் தமிழ் மொழியை மாதாஸ்தானமாய் உடையதாகையால் அப்பெண்களைப்பற்றியும் சிறிதுவிஸ்தரித்தலும் மிகப் பொருத்தமுடைத்தென்றே நினைக்கின்றேன். தமிழின் உறழ்ச்சி பிறழ்ச்சியே தெலுங்காய்த் தோன்றுவதால் தெலுங்கர் தமிழ் நாட்டிற் கன்னியர்களல்லர். சாளுக்கிய வம்சத்தில் 26-வது அரசனான விமலாதித்தன் 1015-ஆம் வரு முதல் 1022-ஆம் வரைக்கும் ராஜ்ய பரிபாலனஞ் செய்துளான். இவ்வரசன் ராஜேந்திர சோழனுடைய தங்கையும் ராஜசேகரவர்மாவினுடைய குமாரத்தியுமாகிய குண்டமாம்பதேவி என்பவளை விவாகஞ் செய்து கொண்டான். இவ்வம்மையின் வயிற்றிலே இராஜராஜ நரேந்திரன் பிறந்தான். இந்தத்தமிழ் மாதின் வயிற்றிலுதித்தவனே வடமொழி பாரதத்தை ஆந்திர மொழியில் எழுதத் தூண்டினவனுமாவான். அன்றி இது தெலுங்கில் ஆதிகாவியமென்று அவர்கள் சொல்லினும் அது ஒருபோதும் பொருந்தாது. இஃதெங்ஙனமாயினும் தெலுங்கு பாஷைக்குப் பிராண பிரதிஷ்டையளித்தவன் இவனே என்பதற்கையமில்லை. இவனைத் தெலுங்கு தேசத்தார் இக்காலத்திலும் மறப்பதில்லை. இவனுடைய தூண்டுதலினாலேயே நன்னயபட்டு என்னும் வித்வான் வடமொழிபாரதத்தைத் தெலுங்கில் மொழிபெயர்த்தான். நன்னயபட்டு எழுதின பாரதத்தை திக்கன்ன என்பார் பூரணமாக்கினர். இவர் புத்திவிசேஷத்தை வியாஸபகவானினும் விசேஷித்துச் சொல்லுகின்றார்கள். தெலுங்கு பாஷை இப்பொழுது இந்தியாவின் மூன்றாவது பாஷையாகப்

பிரகாசிக்கின்றது. வியாபகவிஷயத்தில் தமிழும் அதற்கு சுடல்ல. தமிழ்பா ஷையைப்போலவே தெலுங்கும் வடமொழி சம்பந்தமில்லாததோர் பாஷை யாகும். தமிழ் மாதர்களைப்போலவே ஆந்திரமாதர்களும் திராவிட தேசத்தில் கல்விகற்றிருந்தார்கள். கிருஷ்ண தேவராயலுவின் குமாரத்தி மோகனாங்கி, கும்மாமூல்லா தஞ்சை அரசன் தாசிபுதல்வியாகிய முத்துப்பழனி, தாரி கொண்ட வெங்கமாம்ப, மதனசுபத்திரம்ம, முதலிய பலராவர். ஆனால் தமிழ் மாதர்களைப்போல இவர்கள் பழங்காலத்தவரல்லர். இதுவுமன்றி ஆந்திர ஸ்தி ரீகளும் தைரியவதிகளாகவு மிருந்தார்கள். இதற்குச் சில திருஷ்டாந்தத் தைச் சொல்கின்றேன். பதின்மூன்றும் நூற்றாண்டிலே சூர்யவம்சத்தரசருள் ஒருவனான மனுமசித்தி யென்னும் நிருபன் நெல்லூரையுத்த பிரதேசங்க ளைப் பரிபாலித்துவந்தான். அவன் சமஸ்தானத்தில் கவி திக்கன்ன, காரிய திக்கன்ன, கட்க திக்கன்ன, என்று மூன்று சகோதரர்களிருந்தார்கள். கட்க திக்கன்னவின் மனைவி விவேகவதியாயும் கல்விகற்றவளாயும் தைரியசாலி யாயுமிருந்தாள். கற்றவளாகையால் எவ்வகையில் தன் கணவனுக்குக் கீர்த்தி யுண்டாக்கலாமென சதா ஆலோசித்துக்கொண்டிருப்பாள். புருஷன் ஏதா வது தவறிநடந்தால் தனது புத்திசாதுரியத்தால் அவனைத் திருத்திவிடுவாள். இப்படியிருக்கும் நாளிலே ஓர்சமயத்தில் மனுமசித்தியென்னும் அரசன் பேரில் விரோதிகள் படையெடுத்து வந்தார்கள். அப்பொழுது அரசன் கட்கதிக்கன்னவைப் படைத்தலைவனுக்கி அவனுக்கு வேண்டிய சைனியத் துணையுஞ் சேர்த்துப் போர்புரியும்படி ஏவினான். கட்கதிக்கன்ன தைரிய முள்ளவனேயாயினும் மாற்றான் படைகளோடு போராடிப் பார்த்தும் விரோ திகள் அதிகரித்ததினால் தனக்கு ஜெயமுண்டாகுமென்னும் நம்பிக்கை இழந்து அதைரியப்பட்டுப் போர்க்களத்திலிருந்து வீட்டிற்குத் திரும்பி ஓடி வர ஆரம்பித்தான். தனது புருஷன் விரோதிகளுக்குப் பயந்து ஓடிவருகின் றனென்பதைக் கேள்விப்பட்ட அவன் மனைவிக்கு ஆற்றொண்ணாத் துயரு ண்டாயினும் சமயோசித புத்தியுள்ளவளாகையால் அதை மனதில் வைத்துக் கொண்டு புருஷன் வருவதற்குள் ஸ்நானத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு புருஷன் வந்தவுடனே உபசரிக்காது மிகவெறுப்போடு குளிப் பதற்குத் தயைசெய்யுங்களென்று சொன்னாள். தன் மனைவி முகத்தில் கோபக்குறி தோன்றியிருப்பதைக்கண்டு ஒன்றும்பேசாது நீராடுதற்குச் சென் றான். அங்கே ஸ்திரீகள் செய்து கொள்வதுபோல குறுக்கே ஓர்கட்டிலை வைத்திருப்பதையும் அம்மஞ்சத்தினருகே சேலையுடன் மஞ்சள் அரைத்து வைத்திருப்பதையும் கண்டு பிரமித்து இஃதென்னவெனக் கேட்கவாரம்பித் தான். அதற்குள் அவ்வீரமாதா, பர்த்தா அவர்கட்கு மறுபடியும் பௌருஷ முண்டாகும்படி "இதுகாறும் மாமி மருமகள் இருவரே இவ்வீட்டிற் பெண் களாயிருப்பதாக நினைத்திருந்தோம். இப்பொழுது நீங்களும் யுத்தத்தில் புறங் காட்டிப் புருஷத்தன்மை யென்பதின்றி யோடிவந்ததினால் ஸ்திரீகளுக்குச் சமானமேயானீர்கள்" என்றுகூறி வீட்டில் மூன்று ஸ்திரீகளாலேமென்று பொருள்படும்படி ஓர் செய்யுளைத் தெலுங்கிற் பாடினாள். இச்செய்யுள் நாரா

சம் போற் செவியில் விழவே கட்கதிக்கன்ன மறுபடியும் இரணரங்கத்திற் குச்சென்று ஜெயசிலனுய்த் திரும்பினுன் என்றோர் சரித்திரமுளது. இவ் வண்ணம் தமிழ்நாட்டையடுத்த ஆந்திர தேசத்திலும் வீரத்தாய்மார்கள் அரே கரிருந்ததினுலேயே அவர்கள் பெற்றெடுத்த மக்களும் நன்னிலைமையிலிருந் தார்கள். இம்மட்டோ, ஒரேகல்லின் பேரில் கோட்டையைக்கட்டி அதற்கு ஓரங்கல் என்று நாமதேயமிட்டு அதைச்சுற்றிலும் அழகான பட்டணமொன் றை ஆந்திரர் அமைத்துக்கொண்டிருந்தனர். இது தற்காலம் நைஜாம்ராஜ்ஜி யத்திலுள்ளது. இவ்விடத்திலே சுமார் மூப்பத்தெட்டு வருஷம் வரையில் ருத்ரம்மகாரு தர்மராஜ்ஜிய பரிபாலனம் பண்ணியுள்ளதாய்த் தெரிகின்றது. இவ்வம்மை கணபதி அரசரின் மனைவி, யாதவகுலத்தில் ஜனித்தவளாது, கி. பி. 1257-வது வருஷமுதல் 1295-ஆம் வருஷம் வரையிலும் அதாவது 38 வருஷகாலம் இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்து தனது மங்கள குணங்க ளால் மிகவும் பிரக்கியாதியடைந்திருந்தாள். தேவகிரி அரசன் இவ்வம்மை யின் பேரில் படையெடுத்துவர அவனை எதிர்த்து விரட்டியடித்தாள். இம் மாதரசி தன் வயிற்றில் பிறந்த அருமைமக்களைப் போலத் தன் குடிகளை அன்பாய் ஆதரித்து வந்ததால் தேவியின் அவதார மென்று குடிகள் யாவரும் தொழுதேற்றினர். இவ்வம்மை ராஜ்ஜியஞ் செய்கையில் "மார்க் போலோ" என்னுமோர் ஐரோப்பியர் நேரில் தான் கண்டதைக் கண் டவாறு கீழக்குறிக்கின்றபடி வியந்து புகழ்ந்து வரைந்துளார். "ருத்ரம்மகா ரு, 40 வருடகாலமாக ராஜ்யபரிபாலனம் செய்கிறாள். அரசனிருந்த காலத் தைப்பார்க்கினும் இராணியின் பரிபாலனம் நன்றாயிருக்கின்றது. சாந்தம், தயை, நியாயபரிபாலனம், பொறுமை, சமாதானம் முதலிய சகல உத்தம குணங்களையும் எங்கும் வியாபிக்கச் செய்தாள். மற்ற எந்தராஜாவிடத்திலும் எந்த ராணியிடத்திலும் இவ்வளவு அன்பு பிரஜைகளுக் கேற்பட வில்லை யென்று நான் நிச்சயமாய்ச் சொல்வேன்" என்பதே. கேவலம் ராஜஸ்திரீ கள் மட்டுமென்பதன்று. பொதுவாய் யாவரிடத்துமே யோக்கியதை யிருந் தது. பல்லாரி விஜயகரத்தாசராகிய கிருஷ்ண தேவராயரவர்கள் காலத் திலே அநேகமாய் அரிவையர்கள் நாட்டகத்திலும், கல்வி கேள்விகளிலும், தைரியத்திலும் சிறந்துவிளங்கினர். அனேக பெண்கள் உருவினகத்தியோடு ராஜஸ்திரீகளைப் பாதுகாத்துவருவர். இராயர்வீட்டு ஸ்திரீகள் வெளிச் செல் லும்போதும் மீளும்போதும், எறிச்செல்லப் பற்பலவிதமான அழகிய மூடு பல்லக்குகளும் அவற்றைச் சுமந்து செல்வதற்குப் பணிப்பெண்களும் உடன் செல்வதற்கு மெய்காப்பாளரும் பெண்களே யேற்பட்டிருந்தனர். இதுவு மன்றி (12000) பன்னிரண்டாயிரம் பெண் வேலைக்காரர்கள் அவர் சமஸ் தானத்திலமர்ந்திருந்து மற்ற வித்தைகளோடுகூட யுத்தாப்பியாசத்தைக்கற்ற நால்களையுங்கற்று மல்யுத்தம், வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய தேகாப்பியாசத் தொழில்களிலும் தேர்ந்திருந்தனரென்றுத் தெரிகின் றது. 1854-வது வருஷத்தில் ருஷியாவுக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்த யுத் தத்தில் காயம்பட்ட போர்வீரர்களுக்குச் சிகிச்சை செய்யத் தனித்து சென்ற

மிஸ்டைடிங்கேலே அபரிமிதமாய்ப் புகழ்கின்றார்கள். கிருஷ்ண தேவராயர் காலத்திலே சுமார் இரண்டாயிரம் பெண்மணிகள் மட்டும் படைக்களத்தில் உத்தியோகமாய் அமர்ந்திருந்து படைவீரர்களுக்குத் தண்ணீர் முதலியவை களைக் கொடுத்துக் கொண்டிருந்தனரெனப் போர்த்துக்கீய சரித்திராசிரிய ரொருவர் எழுதியுள்ளார். இம்மட்டோ, கல்வி கேள்விகளிலும், சங்கீத சாகித் திய ஞானத்திலும், கைத்தொழிற் றிறமையிலும், சட்ட நியாயந்தெரிந்து சபையில் அச்சமின்றி வாதிக்கும் வன்மையிலும் ஆடவரைப்போலவே பெண்க ளும் தேர்ந்திருந்தனரென்றுந் தெரிகின்றது. அக்காலத்தில் அரிவையர் தங் களுக்குள் நேரும் சண்டைசச்சரவுகளைப் பெரும்பாலும் தாங்களே விசா ரித்து நீதிசெலுத்தி வந்தனரென்றும் வரைந்துளார்கள். இத்தகைய சுதந் தரம் மேற்றிசைப் பெண்களுக்கே இன்னும் கிடைக்கவில்லை. ஓர்காலத்தில் ஆந்திர பலிஜஸ்திரீகள் விஜயநகரத்திலிருந்த உயர்வினும் அதிகமாக ஒருவரி ருக்கப்போவதில்லை. அவர்கள் பின்சந்ததி இப்பொழுது தமிழ்நாட்டிலடைந்த தாழ்வினும் ஒருவர்வரப்போகிறதில்லை. திராவிடதேச ஸ்திரீகள் யாருமே பூர் வீக நன்னிலைமைக்கு வரமறுபடியும் முயற்சிக்கவேண்டும். ஆரியர் நன்னிலை மையே சிரேஷ்டமென்று கொண்டாடுபவர் அதனினும் பழைமையான நாகரீ கம்பெற்ற இத்தமிழ்மாதரின் தாழ் நிலைமைக்கு இரங்காததேனே? தமிழ் நாட்டின்பேரில் மெய்யன்புள்ளவர்கள் பலவழிகளிலும் பாடுபடவேண்டும். தென்னாட்டுப் பூர்வீகப்பெண்கள் முன்னேற்றத்திற்கு ஐரோப்பா அமெரிக்கா முதலிய மேற்றிசைக் கண்டங்களும் ஈடாகாவே. அத்தேச வாசிகளடைந்த நாகரீகமெல்லாம் சமீபத்தில் வந்ததன்றே? ஆந்திர ஸ்திரீகள் முன்னேற்றத் திற்கு விஜயநகரம் மாத்திரமன்று. தமிழ்நாட்டிலும் அரசாட்சி செய்த ஆந் திரஸ்திரீகளும் சிலருளர். திருச்சிராப்பள்ளி அரசராகிய விஜயரங்க சொக்க லிங்கநாயுடுவின் தர்மபத்தினியாகிய மங்கம்மகாரு என்னும் மாதரசிரோமணி செங்கோல் செலுத்தினதை எவர்தானறியார்கள். அவ்வம்மையவர்கள் காலத் திலே தனது சகோதரனொருவன் அதிரூபவதியாயிருந்த பெண்ணொ ருத்தியைக் கற்பழிக்க முயன்றான். கற்புக்கணிகலமாகிய அவ்வுத்தமி அரசியுடன் முறையிட மங்கம்மாணி சற்றுந்தாட்சண்யமின்றி உடன் பிறந்த சகோதரனென்று பாராது அவனைத் தாயுமானவர் மலையினுச்சியிலிரு ந்து தலைகீழாய்த்தள்ளிவிடும்படி ஆக்ஞாபித்தார். இதுவன்றே பக்ஷபாத மின்றிய ராஜாங்கமாகும். இவ்வம்மையவர்கள் ஆயிரத்து அறுநூற்று எண் பத்தேழாம் வருடமுதல் ஆயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதாம் வருடம் வரையிலும், ராஜ்யபரிபாலனம் பண்ணியுள்ளார் அவ்வுத்தமி பரிபா லனம் பண்ணுகையிலே தரித்திரமென்பதின்றி மதுரை அதியுன்னத நிலை மையிலிருந்ததாய்ச் சொல்லப்படுகின்றது. மைசூர், திருவனந்தபுரம், தஞ்சை முதலிய நகரர்களும் அஞ்சும்படியாய் ஆளுகை செய்தார். சத்திரம் சோலை சாலைகளையும், மாடமாளிகை கூடகோபுரங்களையும், குளம், மண்டபங்கள், தண்ணீர்ப்பந்தல் முதலிய பலதான தர்மங்களையும் செய்துள்ளார். அவர் காலத்தில் வைத்த விருக்ஷங்கள் இன்னும் நமக்குக்குளிர்ந்த நிழலைத்தருகின்

றன. காசியிலிருந்து ராமேஸ்வரம் வரையிலும் மங்கம்மகாரு செய்த தான தர்மங்களுக்கு அளவு சங்கையில்லை. இவ்வம்மையவர்கள் தர்மிஷ்டையாயிருந்ததுமன்றி ராஜதந்திரங்களிலும் தேர்ந்த நிபுணையாயிருந்தனர். சர்வமத சமரச ஞானமுடையவர். தன் குடிகளுக்கு நன்மை பல செய்ததுமன்றி, பரதேச வாசிகளாகிய கிறிஸ்தவ பாதிரிமார் முதலிய எனைய மதஸ்தர்களையும் அன்போடாதரித்தார். அந்நன்றிக்குப்பிரதி நன்றியாக கிறிஸ்தவப்பாதிரிமார்கள் நன்னெஞ்சுடனே இந்நாட்டிலெங்கும் பெண்கல்வி வியாபிக்கப் பாடுபடுவரென எதிர்பார்க்கின்றேன். இவ்வம்மைக்குப்பின் 1731-ஆம் ஆண்டு முதல் 1738-ஆம் ஆண்டு வரையிலும் மீனாட்சம்மகாரும் மதுரையை ஆண்டதாய்த் தெரிகின்றது. பதினேராம் நூற்றாண்டில் தஞ்சைமாநகரிலும் நாயுடு சமஸ்தானம் நன்னிலைமையிலிருந்தது. தஞ்சை அரசன் புதல்வி மோகனாங்கிக்கு இஷ்டமில்லாத ஓர் தண்மார்க்கனை மணஞ்செய்து கொள்ளும்படி ஹிம்சிக்க, கல்வி கற்ற கன்னிகையாகையால் அதற்கவள் இணங்காது பிணங்கியதுமன்றி ரகசியத்தில் திருச்சிராப்பள்ளி அரசராகிய சொக்கநாதநாயுடுவை சுயம்வரம் செய்துகொண்டாள். இவ்விவாக மனஸ்தாபத்தால் தஞ்சைக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் யுத்தம்நேரிட்டு அரசன் ஆக்ஞைனபின்படி அந்தப்புரம் நெருப்புப்பற்றி யெரியும்போது மோகனாங்கி அந்நெருப்பினின்று உயிர்தப்பி கோட்டைமதிலேறி குதித்தோடி புருஷனோடு சேர்ந்து கொண்டாள். இத்தியாதி விஷயங்கள் படித்தவர்களறிந்திருப்பர். தற்காலத்தில் ஆந்திரதேசம் பழையபடியே நன்னிலைமைக்கு வரக்கூடிய முயற்சிகள் பலவும் செய்யப்படுகின்றன. கேரளமும் கர்நாடகமும் அங்ஙனமே தம் பூர்வீக நாகரீகத்தில் திரும்பிவிடுமென்பதற் கையமில்லை. தெலுங்கு தேசத்தில் ஸ்திரீசமாஜங்கள் அங்கங்கே ஸ்தாபனமாகின்றன. கற்றபெண்கள் பலரும் தேசத்திற்குப் பாடுபடுகின்றார்கள். கிராந்தாசிரியர்களும் பத்திரிகைகளுக்கு விஷயதானஞ் செய்வோரும் அதிகரித்துவருகின்றார்கள். தமிழ்மாதரின் பண்டைக்கால அறிகுறிக்கு தமிழ்தேசத்தை அடுத்த ஆந்திரதேசத்தில் தோன்றும் குறிகள் நற்குறிகளேயாகும். திராவிடதேசம்முழுவதும் பழையவுன்னத நிலைமைக்கு வருவதற்குரிய ஏற்பாடுகள் பலவுஞ் செய்தல் வேண்டும். செய்யின் தென்னாட்டுப் பெண்களும் பிறரும் முற்படுவது நிச்சயம்.

SAINT PAVANANDI, CRITIC AND TEACHER.

The devotion of the Jains to the enrichment and extension of Tamil Literature cannot be overrated. Among their immortal works may be mentioned the *Nannul*, composed by the Jain ascetic, Pavanandi of Janakapuram, about Conjeevaram, at the request of Siya Ganga, a tributary prince under Kulottungachola III. Though based on Tolkappiyam, the oldest Tamil grammar extant, and though the prefatory lines refer to the work having been perfected in all its five parts of letters, words, matter, prosody and rhetoric, the renowned and most popular work of the ascetic treats of the first two sections alone; and whatever be the fate of the other three parts devoured by time or by white ants, the fragment shows what a clear thinker, analyst and systematiser the author was, and how the lapse of seven centuries has not robbed it of a tithe of its original freshness and charm. The exordium to this excellent treatise affords materials to us wherewith to form a true estimate of the sage in his double capacity of critic and teacher.

As a critic he has laid down canons of criticism which, examined under the search-light of modern works on the subject, are a medley of processes of thought and diction, but, looked at with the spectacles of seven hundred years ago, speak volumes of the author's keen judgment and judicious selection of materials. According to him a classic is god-given or god-inspired, supplemental or derivative; and a supplemental classic is marked off from the derivative by the degree and extent of its divergence from the original in respect of subject-matter and treatment. If the divergence be small and in minor matters, it is called supplemental; if large and in important items, it is known as derivative classic. But both supplemental and derivative classics are bound to quote the textual sutras without garbling or mutilation. Every classic is intended to teach virtue, wealth, pleasure and bliss, and to embody one of the seven objects contemplated by the author. It is the critic's first function to see if the composer of a classical work has fallen in or out with the long-

established truths or doctrines, or accepted and rejected them in part, or refuted them, or has established a brand-new truth, or has, in cases of dilemma, when doctors disagreed, embraced a cause most convincing to him, or has picked holes in the writings of others, or has expounded his own view of a matter independent of the light shed upon it by others. After he has made out the *motif* or the rationale of a classic, the critic then begins to sit in judgment upon it with a view to display its beauties and to ferret out its flaws, and demonstrates that his function is not, as it is popularly imagined, one sided. viz., the detection of weak points, but two-sided, discovering faults and excellences alike. The faults that an expert eye lights upon in examining a new work as it does upon specks in precious gems, are ten in number. Excessive brevity leads to obscurity. Diffuseness is its antepodes. Frequent repetitions induce disgust and tediousness. Inconsistency is flat contradiction. Impurity consists in the use of foreign, slang, vulgar or provincial terms in a dignified composition. Ambiguity leaves the mind in doubt as to meaning. Verbosity is applied to a collection of words full of sound and fury and signifying nothing. Digression is a disproportionate expansion of a subordinate idea which distracts the mind from the main topic. By languid close is meant the gradual weakening of the strength in thought and expression as the work comes to a close. Pleonasm is a redundant use of words which needs to be lopped off. A good classic must then shun these faults, over-brevity, diffuseness, iteration, inconsistency, impurity, ambiguity, verbosity, digression, flagging, pleonasm; and it must possess the ten beauties enumerated below: perspicuity, interest, exquisite expression, depth, good mapping of the subject, systematic ordering of the topics, pregnant significance, conformity with good usage, choice-illustrations. The critic's next function is to examine the use or employment of the *yuktis* or devices, which are thirty-two as mentioned in the *Nannul*. These include the afore-mentioned seven topics, ten faults and ten beauties, to which are added five points anew. The theme must be stated at the outset. The old and archaic things must be brushed off and new ones espoused. Testimony and authority must be relied on. Reference must be made, prospective and retrospective. Relevancy aud cogency must

be demonstrated. All these thirty-two devices were pressed into service in the composition of a memorable work, and the *sutras* of which it consisted required commentaries or *bhashyas* on account of their laconism. Since the *bhashyas* often formed part and parcel of old classics and were classics in themselves, the critic was enjoined the addtional duty of pronouncing his opinion and passing his judgment on the worth of the commentaries in respect of each of their fourteen characteristics *viz*, pure text, purport, construing, word-meaning, paraphrasing, citing parallel passages, questioning, answering queries, adding fresh explanatory matter, free exposition, the relevancy of the sutras comprising chapters or sections, giving the meaning boldly in doubtful cases, the result of this, and quoting authority. If the commentaries comprise a few of these points, as purport, lexicon, illustration and catechism, they are called *Kandikais* or brief *bhashyas;* if they exemplify all and are lucid in their exposition, they are known as elaborate or diffuse *bhashyas or Viruthis.*

The Pedagogics of Pavanandi fall into two main divisions, (a) the qualifications of the teacher and the qualities of the pupil, and (b) how to teach and to learn. A teacher, according to the sage, must be a man of high birth. Those tbat have risen from the ranks have generally none of the ring of magnanimity and broad-mindedness ; and, however high there intellectual culture, the narrowness of their heart peeps out at times and tinges all their sayings and doings. He must have a rich endowment of good-will and mercy and patience. Where these virtues are wanting, the schoolmasters are the veritable brethren of Mr. Squeers in Dicken's Nicholas Nickleby, and their schools are none other than Do-the-Boys-Halls. Where love rules, the rod has no place. The impatience of the modern teacher is much to be regretted, and the deterioration in the quality of the present-dayproduct is due to the lack of this essential element of success. Good temper counts more than intellectual equipment, and a knowledge of the ways of the world is a necessary supplement and corrective to the bookish or ideal view of life and its doings. It is a common reproach that the schoolmaster is an unpractical man. The prince of dramatists and the prince of novelists have not spared him. A teacher must be in touch with everything that goes on

in the world and is expected to be a walking cyclopedia. A clouded mind is worse than a vacant brain. Above all a teacher must have faith in God, respect himself, and command the respect of the world. Lack of self-respect leads to loss of public esteem, and the status of the teacher has gone down for lack of Busbyism.† Pavanandi has compared a teacher to the earth, a mountain, a balance, and a flower. Like the earth, his knowledge must be wide and deep and solid, his patience exemplary, and his teaching productive. Like the mountain his intellectual wealth must be inexhaustible and varied, his eminence conspicuous and unassailable, and his generosity disinterested and unrequitable. Like the balance, he must resolve doubts, be true, just and impartial to all. Like the flower, he must draw the world to himself by his personal fascination, amiable manners and *sine qua non* character. The saint deprecates incommunicativeness, meanness, deceit, envy, avarice, intimidation on the part of a teacher, and likens such an incompetent teacher to a pot of marbles, a rough palmyra, a cotton-stuffed Demi john, and a slanting cocoanut tree. The *immethodical* teacher is like a jar of marbles and works without a plan. The *inaccessible* teacher is like the rough-barked palmyra whose fruit cannot be reached unless it drops of itself. The *imperfect* teacher is like the Demi john, hard to put in and hard to take out. The *negligent* teacher, like the slanting cocoanut palm, helps strangers and not his own benefactors. A good teacher selects a suitable place, chooses a fit hour, invokes god on a *dais*, and imparts his knowledge in a clear and methodical manner, amiably, willingly and directly, with a due regard to the capacity of the

† Dr. "Richard Busby" (1606-1695), the most famous of English Schoolmasters, was appointed Headmaster of Westminster School in 1640, and discharged the duties of his office until his death. He is the type of pedagogues alike for learning, assiduity and the application of the birch. As a most successful teacher for over half a century, he bred up the greatest number of learned scholars that ever adorned any age or nation. Once when the Soverign of the land paid a visit to his school, Dr. Busby took his Majesty over the class-rooms with his hat on, and when he was asked how he had dared to neglect that politeness which was due to kings, he replied that he was the monarch of his realm and that, within the four corners of his little kingdom, his pupils should not know that there was a greater man than he.

learner. The learner may be his own son, the son of his *Guru*, a prince, one who will pay well, or who will be serviceable to him in the years to come, or who is very intelligent. Learners are of three orders. The wranglers or the topmen are discriminative like the swan, and reflective like the cow. The Optimes or middling class are receptive like the sand, and unoriginal in their talk like the parrot. The Wooden Spoons or the lowest resemble cracked pots that let out everything, are capricious like goats, muddling like buffaloes, and retentive of dregs like the ghee-strainers. The Saint proceeds to tell us who are unfit to learn and to whom no instruction should be imparted. They are the lazy, the sleepy, the indigent, the tipsy, the conceited, the dull-headed, the lusty, the sickly, the thievish, the sulky, the despondent, the cruel, the vile, and the lying. The reclamation of these unworthies is engaging the attention of the modern educators and statesmen; and as there is a soul of goodness in things evil, the good points in them must be taken advantage of and improved lest they be damned as irretrievables and incurables. According to the saint, punctual attendance, willing, cheerful, and implicit obedience, thirst for knowledge, mental concentration, a ready ear, an eager mind, and a retentive memory are the distinguishing marks of good pupils which he calls their duties.

The next section of his Pedagogics deals with the methods of study. Every careful student aims at a mastery of the usages of the language he learns, revises and re-revises what he has learnt, digests and assimilates what he has received, repairs to his master to clear his doubts and to bring on what is sublime, seeks the society of enlightened men, and discusses with them what he takes to be difficult or knotty or intricate. A study of the usages is of greater importance than the parrot-like learning of words and their meanings. Constant revision has a fixative value and facilitates clearer understanding. By going to the master often, the pupil gains opportunities to know at first-hand what is to be learnt in cases of doubt and difficulty and to revive in his mind what has passed into the limbo of things forgotten. Digestion and assimilation are operations as essential to the health of the mind as they are to bodily health. Undigested or ill digested crudities breed diseases. To be in constant touch with learned men is

a way of adding to and improving one's stock, and to debate and discuss with them clarifies one's powers of understanding and makes things, otherwise formidable, very easy to learn and to keep. No pupil can attain perfection by merely sitting at the feet of his *Guru* and gleaning his sapience. He must supplement what he has gathered from his teacher by moving in learned societies and when he turns out a teacher his progress approaches completion, and when he makes a *debut* on a public platform he becomes perfect in thought, word and action. Such a perfect scholar has the greatest respect for his master, follows him like his shadow, does whatever pleases him, and lives a virtuous life.

Thus, I have run over Saint Pavanandi's art of criticism and his pedagogy, pointing out *en route* that his critical canos are a jumble of the fundamental processes of composition, and that his pedagogy, bearing as it does all the marks of imperfection of the age in which he lived, offer some good points and happy suggestions to the modern thoughtful Educationist who is bent on revolutionising the current system of godless or irreverent education and who hopes to plant in its place a system of body-and- soul-saving learning with the hearty co-operation of apt, dis-interested, and self-sacrificing teachers, and docile, attentive and reverent pupils.

THE PROBLEM OF CASTE.

One thing among others which most distinguishes Indians from other nations is our rigid social system. The task of reconciling the shastras is hard and hopeless enough to great sanscrit scholars like Professor Sundraramier whom we all know so well, Mr. Mahadeva Sastrigal, the Superintendent of the Oriental Library, Mysore, and Mr. T. Rajagopala Chariar, M.A, B.L., of the Madras Law College. And it is not to be wondered at that even such great scholars as these are not able to say with any degree of certainty that this is the authority which ought to guide us and that this is the meaning of that authority.

Our religious texts are in the Sanskrit language and were written thousands of years ago and by different writers at different times. We have it on the authority of Vayu Purana that at first in Krita Uga there was no caste and that subsequently Brahma established divisions according to their works. Those of them who where suited for command and prone to deeds of violence he appointed to be Kshatriyas for protecting others; those disinterested men who spoke the truth and declared the Vedas aright were Brahmins; those of them who were feeble and engaged in cultivation and industries were Vaisyas; and those who did the rest of the work were Sudras. According to Mr. Rajagopala Chariar the oldest authority on caste the Rig Veda-Purusha Sukta 13th. Rig when translated literally says "The Brahmana became the purusha's mouth; the Kshatriya was made his arms; the Vaisya was his thighs and the Sudra his feet." Later in Bhagaved Gita Yudhistira gives as his opinion "that caste among men is undeterminable owing to the mixture of all castes with one another, and that where now you see good conduct, him would I call a true Brahmin." And Bharadwaja shares his opinion and adds that souls in themselves have no caste. But whatever may be the origin of caste and the exact meaning of the Vedic texts it is certain that it is an institution thousands of years old. If the merit of human institutions is at all measured by their strength and stability caste which has survived thousands of years of invasions, persecutions, and revolutions, must claim a certain

degree of toleration, for, if we were to throw it overboard today we have nothing ready to take its place and chaos would be inevitable. Brahmins whose duty was to minister to the spritual needs of man were expected to lead a simple, pure life of self-abnegation, and by the practice of Yoga to keep the body under subjection so that the spiritual powers may have the freeest scope possible for development. Even now there are some Brahmins whose powers of intellect and memory are phenomenal and whose mastery over the sensuous body is the wonder of the world. We all know a few such, the Sanskrit Pundit of the Kumbakonam College being the best I know. His performance of Sathavadhanam has evoked at least as much admiration as the respect commanded by his scholarship and saintly life. It will be an evil day if India in trying to rid herself of the more recent abnormal and baneful devopments of the caste-system, also throws overboard certain excellent virtues and powers which are the outcome of generations of mental and spiritual exercises. Caste as stated before belongs to the body and not to the spirit or soul. As a student of Anatomy and Physiology, I can make bold to say that neither the Anatomist's scalpel nor the Physiologist's Microscope can discover any difference in the organs or tissues of one man from those of another. The only noticeable differences are those of the colour of the skin and external configuration. Shave the bodies of the Brahmin, the Kshatriya, the Vaisya, the Sudra and of the Mlecha so as to slice off a thin membrane as thick as this paper, a membrane whose function is no more important than a coat of cloth, then you can challenge the most orthodox Brahmin, the most bigoted Shaivite, or the most conservative European to show any important differences from one and the other. It will be superfluous for me to tell you that all Brahmins are not white nor that all non- Brahmins are red, yellow or black. What then is the solution ? We must as thinking and reasonable men look round and take hint from other people in other countries. In the west also there was in the beginning some class-distinction, Archeological researches have discovered inscriptions which prove that some divisions like caste existed in Britain in the Roman Period. And Theodosian Code compelled the son to follow the father's profession and the adoption of the family employ-

ment when married into a family. Then came Tradeguilds which were social orgainsations unencumbered by religious obligations. In ancient Germany, Military associations required every member, page or knight, to prove his knightly descent. There is no doubt that at some time or other professions were hereditary in most countries. In some countries such as ours, religious observances marked off certain people from others. In others as in Rome, poetical considerations prevented marriage between classes as between Patricians and Plebians. The writer on caste in the Encyclopædia Britannica concludes that endogamous nations i-e those who marry within a narrow circle have not exhibited any high degree of civilization. I hear with regret that the Kotai Vellalas of this District are declining both in vigour and numbers on this scope. A historical survey of caste leaves no doubt that in the vedic times the distinctions were not rigid as evidenced by Vasishta's ascension from the stage of Kshatriya to that of Brahma Rishi. In the time of Mahabaratha marriages among different castes were recognised and interdining among them was not prohibited. Later still came Vaishnavism with all its catholicism and protest against caste exclusiveness as evidenced by the conversion to Brahmanism of many from lower castes to the dignity of Alwars.

As time advanced, further complications ensued until the four main castes multiplied themselves into about four thousand. The solution of the caste problem is one beset with many difficulties and it is no solution to throw the whole blame on the Brahmin. This is what Sir Romesh Chunder Dutt, one of the greatest historians and truest sons of India, and by no means a sympathetic critic of Brahminism, says on the subject:—

"Superficial and impulsive writers often hold the Brahmans of India to blame for monopolizing religious knowledge and observances, and creating a harmful and permanent disunion in the nation. The charge, however, is unphilosophical and unjust. Priestly supremacy and royal despotism are inevitable when the people become enervated and feeble, and are incapable of taking care of their conscience, of their political rights. Priests and Kings are no more responsible for these

results than the people themselves; indeed, the former are less responsible for assuming undue authority than the latter for submitting to such authority. Such claims are received ungrudgingly by a feeble and lifeless people; when the people awake to life and vigour, the chains fall asunder."

Fortunately for us, freedom of thought, speech and action are vouchsafed to us under the benign sway of the English Government. And the priestcraft is gradually losing its hold on the people and education is opening the eyes of the masses to the absurd limit to which the sanctity of the Brahmin was exaggerated and the lamentable depths to which men of professions had been lowered. How can arts and industries flourish in the land in which blacksmiths and weavers are condemned as impure, and where goldsmiths and physicians are classed with misers, thieves and eunuchs.

To every true patriot, to every true son of India, the caste question becomes therefore the most serious of problems, for it strikes at the very root of our national progress. If we are left behind, far behind, in the march of civilization, the explanation seems to be that God has punished us for our sins in the past, *viz.*, the arrogant presumptions of the Brahmins, the slavish imitations of them by the Kshatriya and the Vaisya, and the servile submission without protest by the Sudras. If the protest did not come earlier, it was perhaps because the caste did not work such havoc in early days. If Kshatrias and Vaisyas followed the Brahmins slavishly, it was perhaps because the latter did not start with the ideas of monopolising power and pelf to themselves. If the Brahmins became presumptuous and arrogant it was because they had too much ease and too little work in those early centuries of Aryan Colonisation. Even though degeneration had begun in the time of the Mahabharata, these are proofs that until a few centuries ago the caste system served a very useful purpose in keeping up our arts and industries from decay against the inroads of conquerors, and in preserving our ancient literature by providing a hereditary class of learners and interpreters. Let us not therefore unthinkingly fling abuses on our forefathers that caste had its orign in selfishness, but let us study the past historically in the light of the modern sciences and accord to

it such place in the history of India as it deserves. In the meanwhile let us gird our loins and rouse ourselves to action in the direction of not creating new castes and new sects but of fusing class with class and sect with sect by slow, deliberate, methodical and constitutional ways, lest, in trying to pull the mighty structure of the hoary past down to pieces too suddenly, we get ourselves drowned under the debris. Let us for instance make it the first rule of all class or caste organisations to bring about social amity and a more real and firmer brotherhood between man and man. Let us not scorn the poor Brahmin, for he is after all the creature of the combined degeneration of all classes in the past, but treat him with the sympathy due to a disinherited elder brother. Let us all endeavour to raise the Pariah and the Palla by removing his social disabilities, and treating him more and more like a brother. Let us call meetings to discuss Mr. Basu's Civil Marriage Bill and pass resolutions unanimously advocating its adoption, for nothing can cement caste with caste as intermarriage, for blood is thicker than water.

In trying to act on these lines, let us not forget that the road is by no means smooth, and that help cannot come either from the Government or from the Mattadhipathi. One is pledged to religious neutrality and the other has to maintain the past customs and traditions to keep himself alive. The remedy lies in our own hands, but it is not easy of application. The existence of other religions side by side with our own makes the solution of the caste problem still more difficult. The unbending Mullah and the scheming Missionary create further obstacle. But if people are educated and made to understand their position in society and their real interests, presence of other religious agencies ought not to be a bar to our combining as a people. Respect and love for one's country is not inconsistent with change of religion. In Japan under the same roof, the father is a Buddist, the son a Christian, and the daughter-in-law a shinto, and yet perfect harmony prevails in all matters except those of religion in which alone they agree to differ, and allow each to maintain his own beliefs and ceremonials.

While congratulating this Sabha on the wide outlook it takes of the present state of things, on the variety of subjects

it brings before the public, and on the catholicity it displays towards its non-Vaisya brethren, I beg to close this address with a suggestion that regular monthly lectures followed by debates on such subjects as caste, interdining among different castes, intermarriage between sub-castes, the significance of our ceremonials, the better management of our temple-trusts may be instituted to make the Sabha more and more useful and bring it within the reach of all.

சிவாலயங்களும் சிலாலிகிதங்களும்.

கடல்புடைசூழ்ந்த நெடிய உலகத்தின்கண் மிகச் சிறப்புற்றோங்கிய இப்பாதகண்டத்துள் செங்கோல் செலுத்திய அரசர் பலராவர். அவருள் மிகச் சிறப்புற்றவர் தமிழ்நாட்டு மூவேந்தருமேயன்றி வேறிலர். இவர்களைப் பற்றிக்கூறும் சரிதங்கள் பலவுளவேனும் அவையனைத்தையும் ஒருங்குபடத் தொகுத்துக்காட்டுதல் இவ்வுலகத்திற்கு இன்றியமையாததா யிருக்கின்றது. இங்ஙனம் மேற்கூறிய வேந்தர் சரித்திரங்களை ஓரளவாறு வகுத்துக் கூறுதற்கு இச்சிலா சாசனங்களே ஏற்ற கருவியாவன. அன்றி மற்றைக் கன்னபரம்பரை முதலியன விளக்காவென்பதை ஓரதலே. இக் கல்வெட்டுக்களிற் பழையன கரும்பாறைகண்மீதும் புதியன கோயில்களிலும் நிறைந்து கிடப்பனவேயன்றி வேறில. அச் சிலா லிகிதங்கள் மழையாலும் தேய்வினாலும், பொரிதல் ஒடிசல் முதலியவைகளினாலும் சுதை காவிமுதலியன தீட்டலினாலும் மழுங்கி ஒழிந்தனபோக எஞ்சியவைகளைக் கொண்டே சரித்திரங்கள் ஆராய்ச்சி செய்யக்கிடக்கின்றன. சிலாசாசனங்களின் அடி முடிகளைக்காணப்புகுதல் இறைவனுடைய அடிமுடிகளைக் காணப்புகுதல்போலும். இவைகளுள் அடங்கிக்கிடக்கும் விஷயங்கள் எத்துணைப் பெரியனவோ அத்துணையும் மிகப்பெரியனவா யிருக்கின்றன. அவைகளின் ஆராய்ச்சி முறைமைகள் அவற்றின் நுண்பொருளாய்ந்து சரித்திரத்தொகுத்து வெளியிடல் கூரியபுத்திமான்கட்குரியதேயன்றி மற்றையர்க்கு எவ்வாற்றானுஞ்சாலாது. இஃது இங்ஙனமாக அறிவிற்கடையனாகிய யான் கற்றூர் பலருங் குழுமிய இவ்வவையுள் இவ்வரிய பெரியவிஷயத்தை எடுத்துக்கூறத் துணிந்தேன். அது எனக்கே வியப்பைத் தருகின்றதென்றால் மற்றையர்க் கென்னுங்கொலோ அறிகேன். என்றாலும் ஈண்டுச் சிற்சில கூறவேண்டுவது எனது கடமையாக ஏற்பட்டமையின் ஒருசிறிது கூறலானேன்.

முதலாவது கூன்பாண்டியன் பரம்பரையில் வந்த வரகுண பாண்டியன் முதற்கொண்டே இங்குச் சரித்திரங் கூறப்படுகின்றது.

வரகுணன்:—இவனைப்பற்றிய சாசனங்கள் திருச்சிராப்பள்ளி, காஞ்சி, திருச்செந்தூர், அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி முதலிய இடங்களிற் சிறந்து விளங்குகின்றன. இவன் சோழநாட்டுத் திருவிடைமருதூர், பெண்ணையாற்றங்கரை மதுரை முதலான இடங்களிலும் கடற்கரையோரங்களிலும் மலையடிவாரங்களிலும் எப்பொழுதுஞ் சஞ்சாரஞ்செய்துகொண்டு எதிரிகளைத் தலையெடுக்க வொட்டாமல் ஆண்டுவந்தவன். இவனைப்பற்றிய திருச்செந்தூர் சாசனம்—"ஸ்ரீவரகுணமாராயற்கு யாண்டு-எதிர் பதின்மூன்று. இவ்வாண்டு திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய படாரர் உபாஸ்யர் திருமூலத்தானத்துப் படாரற்கு முதல் கொடாமை பொலிகொண்டு செலுத்துவதாக உடையாரடியாரான வரகுணமாராயர் பொற்றர், இருப்பக்குடிக்கிழவனும் சாத்தன் பெருமானும் அலிற்று நாட்டுக்கோனும் ஐயாயிரத்தான்.....கொண்டுவைத்த

நிறைகுறையாப் பழங்காசு ஆயிரத்து நானூறு. இக்காசில் கொற்கையூரார் சையின் முதல்கெடாமை பொலியூட்டுக்கொண்டு செலுத்துவதாக வைத்த நிறைகுறையாப் பழங்காசு தொண்ணூற்றாறு பொன்னெட்டு, இக்காசால் ஒருகாசுக்கு ஆண்டுவரை பொலிநிறை மதிநாராயத்தால் இருகலநெல்லாக வந்த நெல்லு நூற்றுத்தொண்ணூற்று முக்கலனே ஒன்பதின் குருணி. இந் நெல்லால் நியதிப்படி இவர்கள் கொண்டுவந்து செலுத்தக் கடவனவாழி அரிசிக்கு மூன்றாழி நெல்லாகத் திரு அமுதினுக்கு அரிசி செந்நெற்றீட்டல் ஒரு போதைக்கு அரிசி செந்நெற்றீட்டல் பதினாறுநாழியாக மார்கழித்திருவாதிரை, மாசி மகமும் வைகாசி விசாகமும் படி இரட்டி செலுத்துவது. இப்பரிசு செலுத்தாது குற்றுக்காற்படில் இத்தேவர்க்கே இருபத்தைஞ்சு காசுதண்டமும் பட்டுசெலுத்தாது விட்ட முதலிரட்டியும் கொடுப்பது முதலியன." இங்கு உபாஸ்வியர் என்றதனால் இல்வாகுண பாண்டியனுக்கு ஆத்மார்த்த மானகடவுள் ஸ்ரீ சண்முகப்பெருமானே யென்பதும் 'உடையாரடியாரான' என்றதனால் இவன் வேறு தெய்வங்களைச்சிறிதும் உன்னுவதில்லையென்பதும் தெற்றென விளங்குகின்றன. அன்றியும் இவ்வேந்தன் தனக்குக் கப்பமாகக் கிடைக்கும் திரவியங்களனைத்தையும் சிவாலயங்கள்தோறும் பகுந்தளித்து அவற்றின் வாசிவருவாயால் நித்திய நைமித்திய விசேடங்களனைத்தும் முட்டுப்படாவண்ணம் நீடிழிசெல்லுமாறு செய்திருக்கின்றனன். இதனால் இவனது பக்திவிசுவாசம் அளத்தற்கரிதாகின்றது. இவனுடைய கோயில் வழிபாடனைத்தும் சோநாட்டாரது ஒழுக்கத்தோடொத்துள்ளன. இவனைச் சோழன் விஜயாலயன் காலத்தவனென்று கூறுவர். இவனது செங்கோல் முறைமையையும் சைவாபிமானத்தையும் பற்றி விரிக்கிற் பெருகுமாதலால் அவ்வளவில் நிறுத்தப்பட்டது. இவன் காலம் கி.பி. 870 எனக்கூறுவர்.

அப்பால் பாண்டியில் அரசுபூண்டவன் இராசசிம்மன். இவன் விஜயாலயன்பேரன் பராந்தகன் காலத்திலுள்ளவனென்று ஊகிக்கப்படுகின்றது. இவன் பராந்தகனோடு போர்செய்து இலைத்து ஈழநாட்டரசனைத் துணைக்கொண்டு மீண்டு மற்றவனுடன் சமரியற்றியுந் தோற்றவன். இவனை வடஆற்காட்டிலுள்ள அநேக சிவாலயங்கட்கு வீரை நிலங்கள் பல கொடுத்தவனென்று ஆங்குள்ள உதேந்திரத்துச் செப்பேடுகள் கூறுகின்றன.

அப்பால் வீரபாண்டியன் முறை செலுத்துவானுயினன். இவனை இராஜசிம்மன் மகனென்று சொல்வார்கள். இவன் தன்னுடன் பொருதற்கு வந்த ஆதித்திய கரிகாலனது தலையைக்கவர்ந்தனன். ஆதலால் அன்றுதொட்டு இவனுக்குச் சோமன் தலைகொண்ட வீரபாண்டியன் என்றபெயர் வழங்குவதாயிற்று. இவனைப்பற்றிய கல்வெட்டுக்கள் பல இடங்களிற் காணப்படுகின்றன. இவன் மகா சிவபக்தன். அம்பாசமுத்திரமுள்ள ஓர் சாசனத்தில் "ஷி ஸ்ரீ சோழன் தலைகொண்ட வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு நாலு இதனெதிர் நாலு இவ்வாண்டு மூள்ளி நாட்டுப்பிரமதேயம் இளங்கோய்க்குடித்திருச் சாலைத்தறை நின்றருளிய எம்பெருமானுக்கு ஸ்ரீகாணதிருச்சிற்ற கூடத்திருந்து மூப்பத்திரண்டச்சையும் அஞ்சுவாராமோதி தாணம்

புக்கார் ....." இவன் திருச்சித்திர கூடத்திருந்து பாண்டிநாட்டிலுள்ள பற்பல சிவாலயங்கட்குப் பொற்காசளித்துப் புரந்தனன் என்றும் வேறு சில தீண்ட சாசனங்களிலுல் இவன் இமசேது பரியந்தம் அரசுசெலுத்தி ஒவ்வொரு சிவாலயத்திலும் தன்னுடைய சீர்த்தியை நிலைபெறச் செய்தா னென்றும் விளங்குகின்றன. இவன் காலம் கி. பி 925 ஆகலாமென ஊகிக் கப்படுகின்றது.

அப்பால் ஜடாவர் மன் குலசேகரபாண்டியன். இவனைப்பற்றிய சிலா சாசனங்களும் எல்லாவிடத்திலுங் காணப்படுகின்றன. அவைகளுள் ஒன்று வருமாறு. "ஸ்வஸ்தி ஸ்ரீபூவின் கிழத்தி மேவிவீற்றிருப்ப மேதினிமாது நீதியின் புணர வயப்போர் மடந்தை ஜயப்புயத்திருப்ப திசையிருநான்கு மிசைநிலா வெறிப்ப மறைநெறிவளர மநுநெறி திகழ, அறநெறிச்சமயங்க ளாறுந் தழைப்ப கானவேங்கை வில்லுடன் தாங்கி மீனங்கனகாசனத்து வீற்றிருப்ப எண்கிரி சூழ்ந்த எழுகடல் எழுபொழில், வெங்குடை நீழ (லில்) செங்கோல் நடப்ப, கொடுங்கலி யொடுங்கி நெடும்பிலத்தொளிப்ப, வில்லவர் செம்பியர்.....திறையுடன் முறை முறைபணிய, இருநேமியளவு மொரு நேமியோங்க, இன்னமுதாகிய இயலிசை நாடகம், மன்னிவளர மணிமுடி சூடி, வீரசிம்மாசனத்து வீற்றிருந்தருளிய ஸ்ரீ கோச்சடையப்பன் மரான திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீகுலசேகர தேவர்க்கு யாண்டு மூன்று வது நாள் 295. மதுரோதய வளநாட்டு மாடக்குளக்கீழ் மதுரைக்கோயிலில் பள்ளியறைக்கூடத்து பள்ளிப்பீடம் காலிங்கராயனில் எழுந்தருளி இருந்த முள்ளிநாட்டுச் சேரவன் மகாதெவி....." இக்கல்வெட்டுச் செய்யுளால் இவன் வெற்றியேயன்றித் தோல்வியை ஒருகாலத்து மறியாதவன் என்ப தும், முறைதவறுமல் குடிகள் களிப்பச் செங்கோல் செலுத்தி வந்தனன் என்பதும் சேரசோழ பல்லவர் முசலான வேந்தர்களைப்போரில் வென்று தன்னெருகுடைக்கீழ் உலகங்குளிரச் செய்தான் என்பதும் "இன்னமுதா கிய இயலிசை நாடகம் மன்னிவளர" என்றதனால் இவன் முத்தமிழ்களையும் முறையுடன் வளர்த்து வந்தானென்பதும், அகச்சமயமாறுந் தளராது போ ற்றிவந்தானுயினும் மற்றுள்ள சாசனங்களின் குறிப்பினுல் சிவாலய கைங் கர்யத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தனன் என்பதும் தெற்றென விளங்குகின்றன. இவனைப்பற்றிக் கூறும் மற்றெரு சாசனம் "இராஜராஜ சதுர்வேதி மங்கலத்து மகாசபையோம் இந்நாட்டுச் சடையார் திருவாலீசுர முடையார் கோயிலில் பிள்ளையார் சண்டேசுரப்பிள்ளையார்க்குத் திருவிடை விளாகமாக விட்டுக் கொடுத்த நிலம்" எனக் காணப்படுதலால் இவன் சிவ நேசச் செல்வன் எனவும் அளவிறந்த பொருளும் விளைநிலமும் அநேகதேவா லயங்கட்கு உதவினவன் எனவும் தெரிகின்றோம். அன்றியும் இக்காவலன் ஒவ்வொரு ஊரிலும் சபையொன்று ஏற்படுத்தி அதனுல் தருமகாரியங்க ளனைத்தையும் நடத்திவந்தான் எனத்தெரிகிறது. விரிவஞ்சி விடுக்கப்படுகி றது. இவன் காலம் கி. பி. 1195 என்பர்.

அப்பால் சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியன். இவனது சீர்த்தியை விளக்குவதாகிய சீண்டசாசனங்கள் பலவுள. ஆயினும் சிலவற்றை

மட்டும் இங்கு எடுத்துக்காட்டுதல் இன்றியமையாததாயிற்று. "பூமருவிய திருமடந்தையும் புவிமடந்தையும் புயத்திருப்ப, நாமருவிய கலைமடந்தையும் ஜயமடந்தையும் நலஞ்சிறப்ப, கோளார்ந்த சினப்புலியும் கொடுஞ்சிலையும் குலைந்தொளிப்ப, வாளார்ந்த பொற்கிரிமேல் வரிக்கயல்கள் வீறியாட, இருங் கடல் வலையத்தினிதறம் பெருக, சருங்கலி கடிந்த செங்கோல் நடப்ப ஒரு குடை நிழலில் இருநிலங்குளிர, மூவகைத்தமிழும் முறைமையின் விளங்க, நால்வகை வேதமும் நவின்றுடன்வளர, ஐவகை வேள்வியுஞ் செய்வினை யியற்ற, அறுவகைச் சமயமும் அடைவுடன் நிகழ, எழுவகைப் பாடலமிய லுடன் பரவ, எண்டிசையளவுஞ் சக்கரஞ் செல்ல, கொங்கணர் கலிங்கர் கோசலர் மாளவர், வில்லவர் மகதர் விக்கலர் செம்பியர், பல்லவர் முதலிய பார்த்திபர் எல்லாம் உறைவிட மருளென ஒருவர் மூன்றெருவர், முறை முறை கடவதாந்திறை கொணர்ந்திறைஞ்ச, இலங்கொளி மணி முடி இந்தி ரன் பூட்டிய பொலன்கதிர் ஆரம் மார்பினிற் பொலிய, பனிமலர்த் தாம ரைத் திசைமுகன் படைத்த, மது நெறி தழைப்ப மணி முடிசூடிய, பொன்னிசூழ் நாட்டுப் புலியானைப் போயிகல், கன்னிசூழ் நாட்டுக்கய..... கைவளர், வெஞ்சினவிவுளியும் வேஷமும் பரப்பி, தஞ்சையு முறந்தையுஞ் செந்தழல் கொளுத்தி, காவிய நிலமும்.....நீர்நிலமழித்து, கூடமாடங்களுங் கோபுரமும் ஆடரங்குமாளிகையும் மண்டபமும்பல இடித்து, தொழுதவந் தடையார் நிருபர் தோகையர், அழுதகண்ணீராறு பாய்பி, கழுதை கொண் டுழுது.....செம்பியனைச் சினம்விரியப் பொருது சுரம் புகவோட்டி, பைம் பொன் முடிபறித்துப் பாணனுக்குக் கொடுத்தருளி.....உலகமுழுதுடை யாரோடு வீற்றிருந்தருளிய ஸ்ரீ சோமாறபன்மரான திரிபுவன சக்கரவர்த்தி கள் ஸ்ரீசோணாடு கொடுமுடி கொண்டு சோளபுரத்து வீராபிஷேகம் பண் ணியருளிய ஸ்ரீ சுந்தர பாண்டியத் தேவர்க்குயாண்டு பத்தாவது நாள்—எசை ஞல் கீழவேம்பு நாட்டுத் திருநெல்வேலிக் கோயில் பள்ளியறைக் கூடத்துப் பள்ளிப்பீடம் மழவராயனில் எழுந்தருளி இருந்து உடையார் திருநெல்வேலி யுடையார்க்கு" எனவரையப்பட்டிருக்கிறது. இவனது பராக்கிரமம் மிகப் பெரிது. இவன் பெயர் சுந்தரபாண்டியன் என்றும், சோணாட்டை வெற்றி கொண்டமைபற்றிச்சோணாடு கொண்ட சுந்தரபாண்டியன் என்றும் அங்ஙனம் வெற்றிகொண்ட நாட்டைத்தன்னடி வணங்கி "என் குழந்தைக்கு நின் பெ யர்" எனக்கெஞ்சிக் கேட்டுக்கொண்ட சோழனுக்கு மீண்டும் அரசளித்த மைபற்றி சோணாடு வழங்கிய சுந்தரபாண்டியன் என்றும் விளங்காநிற்கும் இ வன் வடபுலத்து வேந்தர்களையும் ஜெயித்தான் என்று தெரிகின்றது. இவன் வேதாகமங்களையும் மூவகைத்தமிழையும் நன்கு பாதுகாத்தவன். சிவாலயங்கள் தோறுஞ்சென்று வணங்கிக்கலமுறை வழுதி பூசைமுறை செல்லுமாறு அ ளவற்ற பொன்னும் புவியும் அளித்ததாகப் மற்பல இடங்களிலுங் கூறியுள் ளான். "இலங்கொளி மணிமுடி இந்திரன் பூட்டிய, பொலன்கதி ராரம்மார் பினிற்பொலிய" என்றதனால் இவன் சந்திரகுலத்துத்தாதிபன் என்பதிற் கையமின்று. இத்தத் திருநெல்வேலி ஜில்லாவில் இவனுற் போற்றப்படாத கோயில்கள் மிகச்சிலவே: ஈவு இரக்கம் பக்தி கல்வியறிவு நல்லொழுக்கம்

முதலியவெல்லாம் இவனிடத்திற் குடிகொண்டிருந்தன. இவன் காலம் கி. பி. 1200 என ஊகிக்கப்படுகின்றது. விரிப்பிற் பெருகும்.

பிறகு இரண்டாவது சுந்தரபாண்டியன். இவன் இருவகைச்செல்வமும் வல்லமையும் நிரம்பியுள்ளவனென்று பற்பல கல்வெட்டுகள் கூறுகின்றன. திருவாலீச் சாத்திலுள்ள கல் வெட்டு "ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கேள்விக்கு மேல் ஸ்ரீ கோமாரபன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு (ம)டு வதினெதிராமாண்டு மாசிமாதம் மூள்ளி நாட்டு உடையார் திருவாலீசுரமுடைய நாயனார் கோயிலில் ஸ்ரீ காரியஞ் செய்வார் தெய்வக்கன்மிகளுக்கும் ஸ்ரீ மகேசுவரக்கண்காணி செய்வாருக்கும் இக்கோயில் எட்டுப்பங்கில் சிவப்பிராமணரோம்பிடியாகு கொடுத்த பரிசாவது இந்நாயனார் திருக்காமக்கோட்டமுடைய நாச்சியார்க்குச்சிறுகாலசந்தி.....நாழிகைப்பொழுது திருவிளக்கெரிய....." இக்கல்வெட்டிலுலும் இன்னு முள்ள சாசனங்களிலுலும் இவனது சிவபக்தி மிகச்சிறந்ததாகத்தெரிகின்றது. இலஞ்சப்பற்றிய சிலாலிகிதங்கள் தமிழ் நாடுகளிலன்றி மற்றைய நாடுகளிலும் பலவாய்க்காணப்படுகின்றன. இவன் ஒவ்வொரு ஊரிலுமுள்ள சபைகளிலேயே கோயில்களோ எற்பித்து நலம்பெறச்செய்தானெனத்தெரிகின்றது. இவன் சிவப்பிராமணரிடத்தில் மிகுதியும் அன்பு பாராட்டினவன். முற்கூறிய அரசன் காலமே இவன் காலமுமாம். இவன் அவனது அறுஜனைக்கூறுதல் தகுதியல்ல.

கோச்சடையன் சுந்தரபாண்டியன்:—இவன் பிரசித்தி பெற்ற வேந்தன். இவனது பராக்கிரமம் அளவிடற்பாலதன்று. இவன் அநேக சிவக்ஷேத்திரங்கட்கு முறைவழுவாது ஆராதனம் நடந்தேறச்செய்திருப்பதோடு மற்றுமுள்ளாரையும வழிபாடுகள் நடத்தும்படி செய்திருக்கின்றனன். இவன் காலத்திற் சைவமதம் மிகவும் பிரகாசித்ததாகத் தெரிகின்றது. கல்வெட்டு ஒன்று:- ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மகான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு பதிஞென்றாவது இராஜராஜபாண்டி சோழமுடி கொண்ட சோளவளநாட்டு முள்ளி நாட்டுப்பிரதேயம் இராஜராஜ சதுர்வேதி மங்கலத்து திருவாலீச்சரமுடையார்க்குமுன் மகாசபையான்..... சந்திர ளக்கு ஒன்று இடையன் காரிசேந்தன்....." இங்ஙனம் நீண்டு வரையப்பட்டிருப்பதில் இடையர்களும் வேளாளர் முதலியவர்களும் ஸ்மார்த்தப்பிராமணர்களும் சிவாலயவழிபாட்டில் இப்பொழுதினும் அதிகமான சிரத்தையை அக்காலத்திற் கொண்டிருந்தனராகத் தெரிகின்றனர். இவ்வாசன் சோழனை வென்றவன். இவனுடைய பிரதாபம் அளக்கத்தக்கதன்று. இவனது காலத்தைப்பலரும் பலவாறுகக் கூறுகின்றனர். "சகாத்தம் 1236 ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்பரான திரி புவனசக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டியத்தேவர்க்கு யாண்டு 12-வது" என்றிருக்கின்றது. மற்றொருகல்வெட்டு, ஆதலால் இவன் காலம் வெளிப்படை.

அப்பால் எம்மண்டலமுங் கொண்டருளிய சுந்தரபாண்டியன்:—இவனைப்பற்றிக்கூறுஞ் சாசனங்கள் பாண்டி நாட்டிற் சிற்சில இடங்களில் மட்டு

மிருக்கின்றன. மற்றைய நாடுகளில் மிகுந்துள்ளனவென்ப. இவனுடைய பெயரே இவனது பாக்கிரமத்தை விளக்குகின்றது. இவனுற் கட்டப்பட்ட சிவாலயங்கள் பல. மற்றொருமுறை இவனைப்பற்றி விரிவாய்க்கூற எண்ணுகின்றேன். இவன் காலம் கி. பி. 1260 என்னலாம்.

அப்பால் எம்மண்டலமுங் கொண்ட கோமாறன் குலசேகர பாண்டியன்:—இவன் மகாவீரன். இவனைப்பற்றிய கல்வெட்டுக்களனைத்தும் பெருநகரங்களிலும் கடல் மலைகளைச் சார்ந்த இடங்களிலும் பரக்கக் காணப்படுகின்றன. இவன் திருநெல்வேலி சுவாமி நெல்லையப்பருக்குப் பலவழிபாடுகள் செய்திருப்பதாக குறித்த கோயிலில் ஓர் சாசனங் காணப்படுகின்றது. "ஸ்வஸ்தி ஸ்ரீ கோமாற பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் எம்மண்டலமுங் கொண்டருளிய குலசேகர தேவர்க்குயாண்டு உயிர வுவது தைமாதம் ஒன்பதாந்தெய்தி உடையார் திருநெல்வேலி யுடையார்க்கு..." இது பொரிது. ஆதலால் இங்கு வரையப் படவில்லை. இந்தச் சாசனத்தின் கடைசிப் பாகத்தில் தீபமுதலான வழிபாடுகள் செய்திருப்பதாய்க் கூறப்பட்டிருக்கிறது. இவனுல் எற்படுத்தப்பட்ட கட்டளைகள் இன்னும் அழியாது நடந்து வருகின்றன. காலம் கி. பி. 1270 எனக் கொள்ளப் படுகின்றது.

அப்பால் இரண்டாவது சுந்தரபாண்டியன்:—ஜடாவர்மன். இவன் காலம். கி. பி. 1288. இவனைப் பற்றியும் மற்றொரு இடத்தில் விரிவாய்க் கூறுவேன்.

பிறகு இரண்டாவது மாறவர்மன் சுந்தரபாண்டியன். இவனது கீர்த்தியை விளக்கும் பாடல்கள் பல. இவனை "மாமுதல் மதிக்குலம் விளக்கிய கோ முதல் சோமாறபன்மன்" என்று சில கல் வெட்டுக்கள் கூறும். இவன் வெற்றிபெறுத நாடில்லை என்றுமவை கூறுகின்றன. இவனைச் செந்தமிழ்க் கல்விச் சீமான் என்று சொன்னலு மிழுக்காது. இவன் சிவாலயங்கட்குச் செய்த வழிபாடுகள் பலவும் திருஞான மோதும்படி செய்வித்தலேயாம். அங்ஙன மோதுபவர்கள் இன்னுரெனக் கணித்து அவர்கட்குச் சர்வமானியமாக வீளை நிலங்கள் பலவிட்டுக் கொடுத்திருக்கின்றனன். இவனே இசற்றுச் செவ்வை பெறவழி காட்டினனவனுவான். திருநெல்வேலி சுவாமி நெல்லையப்பர் கோயிலிலுள்ள கல்வெட்டொன்றின் பிற்பகுதியில் "கோமாற பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்குயாண்டு பதினுருவது நாள் நூற்றெழுபத்தாறினுல் மதுரோதய வளநாட்டு மதுரைக் கோயிலில் எழுந்தருளி———கீழவேம்பு வேம்புநாட்டு உடையார் திருநெல்வேலியுடையார் கோயில் பதிலாத முதல் பட்டுடை பஞ்சாசாரிய தெய்வக்கன்மிகள் செய்யதிருவாய் மொழிந்தருளினபடி இவ்வூருடையார் திருமுன்பு திருஞானமோத———விஷகண்ட தேவர் சந்தானத்து எல்லை இல்லாத் தேவர் சிஷ்யரில் தவப்பெருமாளுக்கும் லிபிவத் சந்தானத்து மஹா தேவசிஷ்யரில் அனபாயர்க்கும் திருவாரூர் வடக்கில் மடத்தில் சிவபாத இருதையர் சிஷ்யரில் திருநடனப் பெருமாளுக்கும், பிக்ஷாமட சந்தானத்து ஈசானவனர் பசுபதி தேவர் சிஷ்யரில் நின்றியங்கி யாடுவார்க்கும் திருவாரூர் வட

க்கில் மடத்து ஹஸ்ததேவ சிஷ்யரில்.....தேவனுக்கும் பிக்ஷாமட சந்தானத்து திருநாகீஸ்வரத்து இராவனர் பசுபதி தேவர் சிஷ்யரில் திரு ஞான சம்பந்தருக்கும் இச்சந்தானத்து இராவனர் பசுபதிதேவர் கலிகடிந்த கையனுக்கும் மதுரைத்தெற்கில் மடசந்தானத்து நீலகண்டசிவ சிஷ் யரில் திருநெல்வேலி புடையார்க்கும் திருநெல்வேலி மாளிகைமடத்து அழகிய நாயகர் சந்தானத்து உய்யக்கொண்ட தேவசிஷ்யரில் திருநெல் வேலியுடையார்க்கும் பிக்ஷாடன சந்தானத்து இராவனர் பசுபதிதேவ சிஷ் யரில் சிவமுத்தி காட்டினூர்க்கும், திருநெல்வேலி தெற்குமடத்து கீழமட சந் தானத்து அணுக்கவன் முண்டர் சிஷ்யரில் அறமுரைத்த பெருமானூர்க் கும் இவர்கள் வர்க்கத்தில் திருஞானமோதும் பேர்க்கும் போஜனமுள் ளிட்டு வேண்டுவனவுக்கும் முள்ளிநாட்டுச் சோவன்மகாதேவி சதுர்வேதி மங்கலத்து வெட்டி பற்றூன நிலம் முக்காலே ஒரு மாவரையும் இந் நாட்டு அரிகேசரி நல்லூர் வெற்றிப்பற்றூன நிலம் காலும் மேல வேம்பு நாட்டுச் சுத்தவல்லியான வீரவிஞ்ஞத சதுர்வேதி மங்கலத்து வெற்றிப் பற்றூன நிலம் அறுமாவரையும் ஆகநிலம்.....மாவும் முன்னுடையா ரைத்தவிர்த்துக்காராண்மை யாட்சியுங்கடமையும் அந்தாயமும் விநியோகமு ம் சருவதான அச்சும் காரியவாராட்சியும் உழுதான குடியும் பாடிக்காவலும் வெட்டிப்பாட்டமும் பஞ்சுவிலி சந்திவிக்கிரகப்பேறும் வாசற்பேரும் இலாஞ் ஜனப்பேறும் பொன்வரியுமற்று மெய்ப்பேர்ப்பட்டனவும் உட்பட பதினெந் தாவது முதல் திருஞான பற்றிறையிலியாக இடப்பெறவேணுமென்று நமக் குச்சொன்னமையில் இவ்வுடையார் திருமுன்பு திருஞானமோதும் தபசிகள் பேர் பதினெருவருக்கும் போஜன முள்ளிட்டு வேண்டுவனவுக்கு.....நிலம் ...சந்திராதித்தவர் செல்வதாகக்கல்லிலும் செம்பிலும் வெலித்துக்கொள்க வென்று திருவாய்மொழிந்தருளினூர்".....இச்சாசனத்தால் இவ்வரசன் சா க்ஷாத் ஸ்ரீ சிவபிரான் மாட்டும் அவர் அடியார் மாட்டும் தேவாரத்தினிடத் தும் காட்டி வந்த உள்ளார்ந்த அன்பினிற் கோரளவில்லை யென்பது நன்கு தெரிகின்றது. இவன் காலத்திற்றூன் இந்நாட்டிலுள்ள சிவாலயங்களெல்லா வற்றிலும் திருஞானமோதுதலாகிய (தேவாரமோதுதல்) பணிவிடை நிகழத் தொடங்கிற்று என ஊகிக்கலாம். இவனுடைய பெருமைகளைப் பேசுதற்கு இடம் போதாமையின் இம்மட்டோடு நிறுத்தலாயினேன். இவன் காலம் கி. பி. 1320 என்கின்றூர்கள்.

அப்பாலரசியற்றிய பாண்டியர்கள் சிலருளர். பின் கோனேரிமைகொண் டான் குலசேகரன் என்பான் முறை செய்தான். இவன் அநேக ஆலயங் கட்கும் காலைக்கட்டளைகள் நீடுழி நிலவச்செய்திருப்பதில் திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பருக்கும் மதுரை ஸ்ரீ சோமசுந்தர மூர்த்திக்கும் அளவற்ற வழிபாடுகள் செய்திருக்கின்றனன். திருநெல்லைக்கோயிலிலுள்ள கணக்கி லடங்காத கல்வெட்டுக்களில் இவ்வரசன் சம்பந்தமான சிலவிஷயங்கள் மாத்திரம் இங்கெடுத்துக்காட்டப்படுகின்றன. "ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனசக்கர வர்த்திகள் கோனேரிமைகொண்டான் உடையார் திருநெல்வேலியுடைய நாயனூர்.....க்கு திரு அர்த்த சாமத்து.....திருப்பள்ளியாம் அமுது

செய்வதற்கு முன்பாக தம்போல்.....சந்தி ஒன்று ஆடிமாதம் நிரு நாளொன்றுக்குப் பணிவர்க்கங்கள்.....அமுது செய்யவேண்டும் நித்த நிமந்தங்களுக்கும் இச்சந்தியில் அத்தியனம் பண்ண வேதமும் சாஸ்திரமும் (கற்ற) பெரியராகிய யாதாக்களாயிருக்கிற சதுர்வேதி பட்டர்கள் பேர் இருபத்து நால்வரை தம்போல் கிராமமமைக்கவும் தம்போல் சிவலிங்கப்பிரதிட்டை செய்யவும்" எனவும், மற்றொரு இடத்தில், "இக்கோயிலிலே உச்சிச் சந்தையிலே ஒருத்தர் அத்தியனம்பண்ண இராச்சந்தியிலே செங்கழுநீர்த் திருமாலை சாத்தி ஆண்டொன்றுக்கு நூறுகலநெல்லு வாடாக்கடமையாகக் கொடுப்பதாகவுஞ் சொல்லிவிட்டோம்" எனவும் மற்றும் பலபடவும் வரையப்பட்டிருக்கின்றது. இக்கோனேரிமை கொண்டாளுல் பலகோவில்களுக்கும் விடப்பட்ட மானியநிலங்கட்கோரளவின்று. இவன் தனக்கென ஒன்றையும் வைத்துக்கொள்ளாது, எல்லாம் சாக்ஷாத் ஸ்ரீ சங்கரமூர்த்திக்கேயென அர்ப்பிசஞ்செய்தவன். இவனுற் பலதேவாலயங்கட்கு உச்சி அர்த்த சாமக் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவனைப்போல் சிவதருமஞ் செய்தவர் எவருமிலர் என்பது திண்ணம். இவன் கொல்லத்து வேந்தனுடன் போர்செய்து வெற்றிபெற்றவன். அதற்றறிகுறியாக இத்திருநெல்வேலியிலே 'கொல்லங்கொண்டசோழ' என்றோர் பொழில் அமைத்தனனும். இவன் காலம் இற்றைக்கு 500 வருடங்கட்கு முற்பட்டிருக்கலாம்.

அப்பாற் சில பாண்டியர்கள் அரசுபுண்டிருந்தனர். பின் அபிராம பாண்டியன் கோலோச்சினன். இவனுடன் பிறந்தான் ஆதவராமபாண்டியன். இவன் அரசு சிறிது காலம் நிகழ்ந்தது. அப்பால் அபிராமபாண்டியன் குமாரரில் மூத்தோனுகிய பராக்கிரம பாண்டியன் செங்கோல் செலுத்தினன். இவனுடைய அநுஜனே சாலிவாடிப் பதியாகிய திருநெல்வேலிப்பெருமான்.

இங்குக் கூறிய பாண்டியர்கள் யாவரும் சிவபக்த சிரோன்மணிகள் என்பது இனிச் சொல்லாமலே யமையும். இவர்களைப் பற்றிய கல் வெட்டுக்களோ பெரும்பாலும் இத்திருநெல்வேலி ஜில்லாவிலும் மதுரை ஜில்லாவிலும் காணலாம்.

திருநெல்வேலிப் பெருமானுகிய சாலிவாடிபதி பெரும்போர் வீரன். இவனே வீர வெண்பாமாலையான். சாசனம்—"சூடாசுமக்குமேல் செல்லாநின்ற ஸ்ரீகோமாற பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் திருநெல்வேலிப் பெருமாள் வீரபாண்டியத் தேவர்க்கு யாண்டு இரண்டாவதினெதிர் பதினேழாவது" என்றிருப்பதால் இவனுக்கு வீரபாண்டியன் என்றோர் பட்டப் பெயருளதென்றும் இவனது இராஜதானி திருநெல்லையே யென்றும் தெளிவாய்ப் புலப்படுகின்றது. பாண்டியில் தக்ஷணபாகத்திலுள்ள கோயில்களுக்கு இவன் அளவிறந்த பொன்னும் நிலனும் கொடுத்திருக்கின்றனன். திருநெல்வேலியில் இவனைப்பற்றிக் கூறும் சாசனங்கள் மிகப் பெரியனவாயிருத்தலால் அவற்றை இங்கெடுத்துக் காட்டற்கியலவில்லை.

அப்பால் பராக்கிரமபாண்டியன் குமாரராகிய வரகுணராமபாண்டியன் என்பார் செங்கோலோச்சியிருந்தனர். இவ்விருவரும் கல்விச்செல்வம் நிரம்

பப் பெற்றிருந்தார்கள். சிவபக்தியிற் சிறந்தவர். இக்கூறிய வரதுங்கனே கருவையஞ்சாதி முதலிய பன்னூல்களியற்றியவன். கரிவலம்வந்த நல்லூரில் திருக்கோயில்கொண் டெழுந்தருளும் ஸ்ரீபால்வண்ணப்பெருமானே இவருக்கு ஆத்மார்த்தமாகிய தெய்வம். இவருடைய பக்தி விசேஷமுதலியவற்றை என்னுலெடுத்துரைக்க முடியாமையின் இவ்வளவோடு நிறுத்துகின்றேன்.

பின் சாலிவாடி பதியின் சகோதரர் அழகன் பெருமாள் குலசேகரபாண்டியன் என்பார் அரசியற்றினர். இவருடைய ஆட்சி திருநெல்வேலி ஜில்லாவின் வடபாகங்களில் நிகழ்ந்ததாகத் தெரிகின்றது. அழகன்பெருமாள் வட ஊர்நாட்டிலுள்ள தேவாலயங்கட்கு ஜீவாதாரமாயிருந்தனன் என்பது அங்குள்ள கல்வெட்டுக்களா லறியக்கிடக்கின்றது. இவர்தம்பியராகிய குலசேகரபாண்டியனே இலிங்கபுராண நூலாசிரியரெனக் கூறுகின்றனர். இவ்விருவரும் சிவபக்தியிற் சிறந்தவர் என்பது ஒருதலை.

அப்பாலிவர் குமாரர் அழகன்பெருமாள், அதிவீராமபாண்டியன், ஸ்ரீவல்லபன் என்போர் இவர்களுள் ஒவ்வொருவரும் உயர்வு ஒப்பு அற்றவர் என்பதை யாவரு மறிவர்.

மூற்கூறிய ஆகவராமபாண்டியன் குமாரனுகிய ஸ்ரீவல்லபபாண்டியன் மிகவும் பிரசித்தி பெற்றவன் என்பது சிலசெப்பேடுகளினுலும் தென்காசியிற் காணப்படும் சிலாசாசனங்களினுலும் தெரியவருகின்றது. இவனே பாண்டிய இராச்சியத்தைப் பிற்காலத்தில் ஸ்தாபித்தவன். இராணசூரன் சிவபெருமானுக்கும் அவனடியார்க்கும் தொண்டுபூண்டொழுகினவன். இவற்றிற்குச் சான்றுக அளவற்ற பாடல்களும் சாசனங்களு மிருக்கின்றன. பராக்கிரமபாண்டியன் காலத்துள்ளவன். இவனே தென்காசிப் பாலத்தைக் கட்டினவன். சேதுவிலும் ஓர் திருப்பணியியற்றியிருக்கின்றுன். இவனைச் சிவாலயதரிசனமின்றி உண்ணுதவன் என்றும் சிவபூஜாதுரந்தரனென்றும் சாசனங்கள் கூறுகின்றன.

அப்பாலிரண்டொரு பாண்டியர் இருந்தார்களென ஊகிக்கப் படுகின்றது. இவர்களுக்குப் பின்னிருந்த பாண்டியர்கள் இன்னின்னுரென வெளிப்படவில்லை. இப்பரம்பரை நிற்க :—

சற்றேறத்தாழக் கொல்லம் காளகாயல் காஞ்சி நாட்டிலுள்ள சிற்றரசனுகிய சிறைவாய் மூத்ததிருவடி சங்கர நாராயணன் என்பான், வடக்கே வைப்பாறு, தெற்கே குமரி மேற்கும் கிழக்கும் கடல் ஆகிய இந்நான்கெல்லைக்குட்பட்ட இராச்சியங்களைத் தனது வல்லமையால் வென்று அரசளிப்பதாயினன். அவன் அவ்வாறு வெற்றிபெற்ற காலமுதல் 'வென்று மண்கொண்ட சிறைவாய் மூத்தவராய சங்கர நாராயணன்' என்று அழைக்கப்பட்டான் எனத் தெரிகின்றது. மூற்கூறிய எல்லைக்குட்பட்ட கோயில்கள் பலவற்றுள்ளும் இவனைக் குறித்த சாசனங்களைக் காணலாம். இவன் மகாதர்மிஷ்டன், சைவப்பெரியோன். இவனுடைய சாசனங்கள் மூதற்கண் 'அருளிச்செயல்' என்னும் மூத்திரையை யுடையனவாய் விளங்குகின்றன. அவற்றுள் ஒன்

றுவருமாறு.! "அருளிச்செயல், கொல்லம் அறுநூற்றுத் தொண்ணூற்றின் மேல் நம்மாண்டு கார்த்திகைமாதம் அஞ்சாந்தெய்தி அமரபக்ஷத்து சுயோதசியும் ஆதித்தயவாரமும் சௌபாக்கிய யோகமும் பெற்ற சோதிநாள் செய்துங்கநாட்டுச் சங்கரநாராயணன் வென்று மண்கொண்ட பூதலவீர உதையமார்த்தாண்ட வர்மர் சிறைவாய் மூத்தவராய நாம் முள்ளிநாட்டுப் பிரமதேசம் ஸ்ரீ இராஜராஜ சதுர்வேதி மங்கலத்து நித்தல் மகாபூசைகொண் டெழுந்தருளி இருந்த நாயனார் ஸ்ரீகைலாசமுடைய நாயனாருக்குத் திரு அர்த்த சாமபூசை நடந்துபோகிற வகைக்கு நாளது முதல் நாளொன்று அரிசி குருணி நாழிக்கு.....நெல்லு முக்குருணி அறுநாழி....."இவனைச் சில சாசனங்கள் 'மூத்த திருவடி' யென்றும், 'வென்று மண்கொண்ட சங்கரநாராயணன்' என்றும், 'சிறைவாய் மூத்தவ' ரென்றும், சிறைவாய் மூத்த பூதலவீர உதையமார்த்தாண்டன்' என்றும் மற்றும் பலவிதங்களாகவும் வழங்குகின்றன. முற்காட்டிய சாசனத்தால் இவன் அழுத்தமான சிவபக்தியுள்ளவன் எனத்தெரிகின்றது. இவன் ஒவ்வொரு கோயில்களுக்கும் வீரை நிலங்களையே சர்வமானியமாகத் தானஞ்செய்திருக்கின்றான். இவன் நாடு செய்துங்க நாடு. அது நாஞ்சி நாடெனக் கொள்ளப்படுகின்றது. அது வேறென்றுஞ் சிலர் கூறுகின்றனர். காயக்க அரசர்களிற்சிலர் இவனுக்குக் கீழடங்கியிருந்தனரெனத் தெரிகின்றது. விரிப்பிற் பெருகுமாதலின் இங்ஙனம் நிறுத்துகின்றேன். இன்னுஞ்சில பாண்டியர்களுமுளர். அவர் காலமும் சரிதமும் நன்குவிளங்கவில்லை யாகலின் அவர்களைப்பற்றி இங்குக்கூறிலேன்.

No. C. மனத்தூய்மை

'மனத்துக்கண் மாசிலனுதல்' என்றார் வள்ளுவர். ஏன்? அனைத்து அறன்! மனத்தூய்மை யுடையனுதலே சிறந்த தர்மம். இதனினும் சிறந்த தர்மம் வேறிலதெனக் கூறுவார் பிற ஆகுல நீர வெனவும் முற்கூறியதனை யே பின்னரும் எதிர்மறை முகத்தான் வற்புறுத்தியும் கூறினர்.

ஒருவன் எத்தனைப் பெரும் பேரும் அருஞ்சீரு முடையனேயாயினும் மனத்தூய்மையெனும் ஒன்றின்றேல் அனைத்தும் பயனின்றி யொருங்கே பாழ்படுவனவாம். இருதய சுத்தமுள்ளார் பரிசுத்தர். அன்னூர் தெய்வத்தைத் தரிசிப்பர் என எம்பிரான் மலைமீது செய்த ஹிதோபதேசத்தினிடையே திருவாய் மலர்ந்தருளினர். மனத்துக்கண் தூய்மையுடையராதல் எல்லவர்க்கும் ஒப்ப முடிந்த வோர்விடயம். தேசம், ஜாதிமதம், முதலியவற்றிற்பேதமுடையவரே யெனினும் மனத்தூய்மை இருத்தல் வேண்டும் என்னும் இவ்வொரு விஷயத்திலோ எல்லோரும் உடன்படுவர்.

மனத்துக்கண் மாசிலனுதல்! மனத்தூய்மை. மனமாவதென்ன? மனத்தூய்மையை ஆராய்ச்சி செய்யுங்காலத்து மனமாவதென்னவெனும் கடா இயல்பாகவே எழுகின்றது. ஆதலின் மனம் இன்னதெனச் சற்றாராய்வாம்.

இதுதான் மனம் என்பதைப்பற்றிப் பலர்க்குள் பலவிதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. இவருக்குள் உலகாயிதர் என்பார் ஒருசாரார். இவர் ஆஸ்திகர் அல்லர், நாஸ்திகர். இவரது கொள்கைப்படி பிருதிவியாதி பூதங்களே மெய்ப்பொருள். இவை காட்சிப் பிரமாணத்தின் அளவைக்குட்பட்டவை. இந்த ஐந்துமகா பூதங்களினின்று தனித்தனி பிரிந்த ஐவகையணுக்கூட்டங்கள் வேண்டியவாறும் ஒத்தவாறும் ஒன்றோடொன்று கூடி மிலிராமித்தபோது பற்பல பேதமாய் உருக்களுண்டு படுகின்றன. மற்று, உருக்களே யமைக்கும் கடவுளொருவரிலர். மனம் புத்தி முதலிய தத்துவங்களும் அணுநுட்பத்திலிருந்தே வீர்த்தியாகின்றன வென்பர். எனவே இவரது கொள்கைப்படி மனமென்பது உடல்போலும் பஞ்ச பூதங்களானமைந்தவோர் வஸ்துவேயாம். எனின் இது கட்புலனுக்கெய்தாதோவெனின் அதிநுட்பமாயிருத்தலின் எய்தாதெனவும் உடலினும் மாறுபட்ட தோற்றமுடையதெனவும் கூறுவர். இந்த நிரீச்சுவாதிகள் கண்டதே காட்சி கொண்டதே கோலமாக் கொள்பவர், இவரை ஆங்கிலத்தில் Materialists என்பர்.

மற்றுமோர் சாராரை நோக்க அவர் உடல் வேறு மனம் வேறு என்பர். இவர் கொள்கைப்படி மனமானது ஸ்தூல சரீரத்தினும் மாறுபட்டு ஸ்தூலமல்லாத அசரீரியாகிய தத்துவமாயிருக்கின்றது. ஆனல் தாழ்ந்த ஜீவன்களுக்கு மனனெனவொன்றில்லை எனவும் கூறுவர். இவரை ஆங்கிலத்தில் Spiritualists என அழைப்பர். இவரிருவரினு மூரணியமற்றுமோர் பிரிவினருமுளர். இவர் இவர்க்கு மூன்றியவர் போன்றே மனமானது ஸ்தூலமல்லவென்றும் சரீரத்தினும் மாறுபட்டதெனவும் கூறுவர். ஆனல் இவர்கொள்கைப்படி

உலகில் உயிருள்ளனவெனக் கொளற்பாலன வெலாம் மனமுடையன. ஜீவிகள் அறிவில் விர்த்தியாகிக்கொண்டே வர மனமும் விர்த்தியாகிக்கொண்டே வருகின்றது. மரத்திற்கு அதற்குரிய மனமுண்டு மிருகத்திற்கு அதற்குரிய மனமுண்டு மனிதனுக்கு அவனுக்குரிய மனமுண்டு, ஆனால் மிருகத்திற்கும் மனிதனுக்கும் எத்துணைப் பேதமோ அத்துணைப்பேதம் மிருகத்தின் மனதிற்கும் மனிதனின் மனதிற்கும் உண்டு. இக்கொள்கையுடையார் ஆங்கிலத்தில் Evolutionists என அழைக்கப்பெறுவர். மனதிற்கும் உடலுக்கு மூள்ள சம்பந்தத்தைக் கூறும், முக்கிய கொள்கைகள் இவைகளே.

இனி மனமாவதென்ன? அல்லது மனதின் தன்மை யென்ன? மனதில டங்கிய முக்கிய தத்துவங்கள் மூன்று. அவை சித்தம், புத்தி, உணர்ச்சி என்பனவாம். மனிதனுடைய செயல்களிலெல்லாம் இம்மூன்று தத்துவங்களும் பெரும்பாலும் காணக்கிடைக்கும். எத்துணைச் சிறு செயலேயாயினும் இம்மூன்றின் அனுபவங்களும் அச்செயலினின்றும் மனிதனுக்குண்டாம். திருஷ்டாந்தமாக ஓர் பொருளை எடுத்தல் எனும் கருமத்தில் நான் எடுப்பேன் எனத்துணிதல் புத்தியான் அமைவது. குனிந்து கரம் நீட்டி எடுத்தல் சித்தத்தானமைவது. பொருளை யெடுத்தவுடனுண்டாம் திருப்தி ஆனந்தம் முதலியன உணர்ச்சியானமைவன. இவ்வாறுகவே ஒவ்வோர் செயலுக்கும் ஆகும். இம்மூன்று தத்துவங்களையு முடையதுவே மனமாகும்.

மனமானது சரீரத்துடன் சம்பந்தப்பட்டு நடந்துகொள்ளும் விதமென்ன? முதல் சாராராம் உலகாயிதருடைய கொள்கைப்படி மனம் என்பது சரீரத்தினின்றும் வேறன்றாய் சரீரத்தைப்போன்றே சரீரத்தோடு, ஒன்றிய வஸ்துவாயிருத்தலின் இரண்டுக்கும் உள்ள சம்பந்தமெனவும் சம்பந்தப்பட்டு நடந்துகொள்ளும் விதமெனவும் ஏற்படமாட்டா. எனவே அவ்விஷயத்தில் இவ்வாராய்ச்சி அவசியமின்றாம். இரண்டாவது மனமானது சரீரத்தின் வேறு யதத்துவமா யிருக்கின்றதெனக் கொள்ளின் அது எவ்விதமாய் நடந்துகொள்ளுகின்றதெனக் கூறல் எவர்க்கும் அரிதாம்: மூன்றாவது ஜீவிகளின் விர்த்திக்கேற்ப மனதும் விர்த்தியாகிக் கொண்டே வருகின்றதெனக் கொள்ளும்போது சரீரத்தின் அவசியத்திற் கேற்றபடி மனம் நடந்துகொள்ளுகின்றதென்பர். அதாவது உடல் ஜீவித்திருக்க வேண்டுவதவசியம். உடல் ஜீவித்திருக்கவேண்டியதற்கு மனம் எவ்வாறு நடந்துகொள்ளல் அவசியமோ அதற்கிசைய நடந்துகொள்ளும். இவ்விதமாய் ஒவ்வோர் விதத்திலும் ஒவ்வோர் வகையாய் மனம் சரீரத்தோடு சம்பந்தப்பட்டு நடந்துகொள்ளுமென வெவ்வேறு கொள்கையார் சாதிப்பார்.

இவ்விதமாக மனமானது சரீரத்தோடு சம்பந்தப்பட்டு நடந்துகொள்ளுதலின் பலபல விதமாம் செயல்கள் விளைகின்றன. இச்செயல்கள் விளையுங் காலத்தத்தான், 'மனத்தூய்மை' என்பதை யுற்றுநோக்க நேர்கின்றது. ஏனெனில் வினைகள் பலவும் இருபிரிவினவாம். அவை நல்வினை, தீவினையென்றழைக்கப்பெறும். செயல்கள் பலவும் இவ்விரண்டில் ஒன்றைச் சார்ந்ததாகவேயிருப்பன. இவற்றுள் நல்வினை செய்யவேண்டுமாயின் மனம் தூயதா

யிருக்கவேண்டும். அதாவது 'மனத்துக்கண் மாசிலனுதல்'. மனமானது நற் செயல்களைச் சிந்தித்தலும் இயற்றலும் நல்லொழுக்கம் அல்லது அறம் எனவும், தீயசெயல்களை சிந்தித்தலும் இயற்றலும் தீயொழுக்கம் அல்லது அறத்தின் மாறுபட்டதாம் மறம் எனவும் அழைக்கப்படும்.

இனி ஒருசெயலை நன்மைதீமை யென்றறிதற்கு மனிதன் சக்தியுடையவனே, அன்றே? சக்தியுடையனுயின் எவ்வாறு? ஒருசெயல் நன்மை தீமை யென்றுற்று அறிதற்குள சாதனங்களும் உளவோ? உளவாயின் அவைதாம்யாவை? இவற்றை நோக்கல் வேண்டும்.

மனிதன் ஓர் செயலைச் செய்தவுடன் அச்செயல் நியாயம் அல்லது அநியாயம், நன்மை அல்லது தீமை எனக் கூறுகின்றோம், ஆனல் எதனை நன்மையென்றழைப்பது எதனைத் தீமையென்றழைப்பது? ஆராய்ச்சி, அனுபவம், மற்று அந்தக் காரணங்களின் உதவியால் எதேனும் ஒன்றை நன்மையல்லது தீமையென்றறியலா மென்பர். இவற்றையாராய்தலி னின்றும் நன்மை தீமை யாவென வொருக்காலறியலாம்.

மனிதன் இயற்கையில் சுயபிரயோஜனத்தையே நாடுபவனும். பிறருடையவும் பிரயோசனத்தை நாடி செயல்களைப் புரிவது மனிதனுடைய இயற்கை லக்ஷணமன்று. ஆனல் ஜனசங்கைக் கூட்டறவில் ஒவ்வொருவரும் தத்தமக்கே பிரயோசனமானதை நாடிப்புரிவரேல் கூட்டுறவென்பது அசாத்தியமாய் விடும். மனிதர் ஒருங்குகூடி வாழ்தலென்பது கூடாதகார்யமாகும். ஆதலின் மனிதருடைய ஒழுக்கத்துக்கு ஆதாரமாகச் சட்டங்கள்போல் பலவற்றை மனிதர் ஏற்படுத்தியுள்ளார். இவ்வேற்பாடுகளுக்கு அடங்கி நடக்க முழுதும் தனது பிரயோசனத்தையே நாடாது சிறிது சுயவெறுப்புக்காட்டியேனும் பிறருடைய பிரயோசனத்தையும் நாடி நடக்கவேண்டி வருகின்றது. இவ்வாறுக நடக்க ஒருவன் செயல் நன்மையல்லது தீமையென்றறியலாம். ஆனல் மனசாரா மனிதன் சிறிதேனும் சுயவெறுப்புக் காட்டுவனே வெனின் காட்டுவன்; எனெனில் அஃதுகாட்டியமைக்குப் பிரதியுபகாரமாக உலகம் அவனுக்குப் புகழைப் பயக்கின்றதாதலின். இவ்வேற்பாட்டுக்கு ஒத்தஒழுக்கம் நன்றெனவும் மற்றது தீதெனவும் உரைப்பார். ஆகவே ஒருகருமத்தை முடித்தவுடன் கர்த்தா அக்கர்மத்தை இயற்றுகின்ற காரணமும் அதனுல் விளைந்த பயனுமோர்ந்து நன்மை தீமையைக்கைக்கொள்ள வேண்டுமென்பர். அதாவது செய்யப்பட்டகருமம் சுயப்பிரயோசனத்திற்காக அல்லது கர்த்தாவினுடைய பிரீதியை மாத்திரம் திருப்தி செய்வதற்கெனச் செய்யப்பட்டு பிறர்க்குயாதும் பயனற்றதாய்ப் போய்விடுமாயின் அது தீயொழுக்கத்தின் பாற்படும். அன்றேல் நல்லொழுக்கத்தின் பாற்படுமென்பர். இது ஒரு சாரார்கொள்கை. மற்றொருவர், எதேனும் ஓர் செய்கை செய்யும்போது அதனுல் உடன்விளைவதென்னபின்னர் விளைவதென்னவென ஆராய்ந்து கடைசிவரையில் அச்செயலால் பலர்க்கும்பிரயோசன முண்டாகக் கூடுமாயின் அதனைமாத்திரம் நன்மையெனவும் பிறவற்றைத் தீமையெனவும் அழைக்கவேண்டு மென்பர். இவர் கொள்கைபுறம்பாக பிறிதொரு சாரார், மனிதனுக்கு அந்தமில் இன்பத்

தைப் பயக்கக்கூடியதாய் ஈஸ்வரசித்தத்துக்கு ஒப்ப மனிதஜாதிக்குப்பிரயோசனமானவற்றைச் செய்தலே நன்மையென்றார். இவர்கொள்கைப்படி காரியம் மனிதஜாதியின்பிரயோஜனம், காரணம் அந்தமில் இன்பம், கருவி ஈஸ்வரசித்தம். மனிதனுக்குப்பிரயோசனமா யிருத்தலே ஈஸ்வரசித்தமோவெனின், ஆம் என்பர். எனெனில் கடவுள் படைத்தவையாவும் மனிதனின் பிரயோசனத்திற் கெனப் படைக்கப்பட்டுள்ளன. இத்தன்மை இயற்கையமைப்பை யுற்று நோக்க வெளியாம்.

இக்கொள்கைகளே யெல்லாம் தள்ளித் தாம் கொண்டதே கொள்கையாகச் சாதிக்கும் பிரிவினரும் உளர். அவர் சொல்வது: நன்மை தீமையென்பனவற்றை நாமாக அறிதல் இயலாது. எனெனில் நாமாக அறிதற்கு நமது அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியுமே சாதனங்களாம். ஆனால் இவை எப்போதும் எல்லார்மாட்டும் ஒன்றுபோலிருப்பனவல்ல. சரியெனத்தோற்றியவை ஒரோ விடங்களில் தப்பிதமாகத் தோற்றலுமுண்டு. அன்றேல் ஒரேகாரியம் ஒன்றினிடத்தில் சரியாகவும் வேறிடத்தில் விரோதமாகவும் காணப்படலுண்டு. ஆதலின் இவற்றால் நன்மை தீமையென அறிந்துகொள்ளல் இயலாது. ஆனால் இதனை யறியும் திறம் மனிதனின் உள்ளாகவே யிருக்கின்றது. ஏதேனும் ஓர் காரியம் நிகழ்ந்தவுடன் யாதும் ஆராய்ச்சியும் அனுபவமுமின்றியே நமது மனதில் இது தப்பு இதுஒப்பு எனத்தோன்றி விடுகிறது. சில காரியங்களை நாம் எப்பொழுதும் செய்யக் கடமைப் பட்டிருக்கிறதாக உணருகிறோம். இவை மறுக்கலாகாதபடி நியாயமாகவே நமக்குத் தோற்றுகின்றன. வேறு சில எவ்வகையானும் செய்யத்தகாதன. இவை மறுக்கலாகாதபடி விரோதமாகவே நமக்குத் தோற்றுகின்றன. இவற்றைப் பற்றிய திட்டமான அறிவு நமக்கு இயல்பிலேயே இருக்கின்றது. இவ்வறிவு நமது ஆராய்ச்சியாலும் நமக்குக் கிடைத்ததன்று. ஆனால் ஈஸ்வர சங்கற்பத்தினால் மனதிலேயே அமைத்திருக்கின்றது. எனினும் ஈஸ்வர சங்கற்பமிருப்பதினால் இவை நன்மையாகத் தோற்றுவனவல்ல. இவை நன்மையாகவிருத்தலின் ஈஸ்வர சங்கற்பம் நாம் அவற்றை அப்படியே நன்மையாக உணருமாறு செய்கிறது. இப்படி ஆராய்ச்சியும் அனுபவமும் இன்றி ஒன்றை நன்மை தீமையென அறியும் சக்தியை மனச்சாட்சி யென்பர். இந்த மனச்சாக்ஷி மனிதர் ஒவ்வொருவருக்கும் இயல்பாகவே உள்ளாக அமைந்திருக்கிறது. மனிதன் எந்த தேசத்தானாலும் மதஸ்தனாயினும் ஜாதியானாலும் காரியமில்லை. மனச்சாக்ஷி எல்லாருக்கும் அப்படி யிருத்தலினாற்றான் மனிதர் பலர்ஒன்று கூடி வசித்தற்கு எதுவாயும் சுலபமாயுமிருக்கின்றது. அன்றேல் பேரிடர்க்கேயிடனும். மனச்சாக்ஷியால் ஒப்புக்கொள்ளப்படுவன யாவராலும்ஒப்புக்கொள்ளப் படுவனவாம். ஆராய்ச்சி அனுபவம் முதலியவற்றால் ஒப்புக்கொள்ளப் படுபவற்றுக்குப் பல்வேறு அபிப்பிராயங்கள் உண்டாவதுண்டு. ஆனால் ஒரு செயலால் வீளையும் பயனைக் கவனியாது அது நன்மை தீமையெனக் காட்டவல்லது இம்மனச்சாக்ஷியே.

இவ்வாறு காட்டினும் இந்த மனச்சாக்ஷிக்கு மனதின்மீது பூரண அதிகாரமில்லை. மனம் நினைந்த காரியம் ஏதோ நன்று, அன்று எனக் கூறுதற்கு

மாத்திரம் அதற்கு அதிகாரமுண்டு. ஆனால் தான் கூறிய செய்விப்பதற்கோ அதிகாரமின்று. மனச்சாக்ஷியையும் மீறி நடக்கும் சுயாதீனம் மனிதற்கு உண்டு. மனச்சாக்ஷிக்கு மனதை யடக்கி யாளும் சக்தி யொன்றிருக்குமேல் உலகில் வேறு விதிவிலக்குகளும் சட்டங்களும் நியாயஸ்தலங்களும் அவசியமின்றாய்விடும். ஆனால் அந்த சக்தியதற்கில்லை. மனமானது மனச்சாக்ஷிக்கு அடங்கி நடத்தல் மனத்தூய்மைக்கு ஏதுவாம்.

பெரும்பாலும் மனதிலுதயமாம் எண்ணங்களே செயல்களாக வெளிப்படுவன. மனச்சாக்ஷிக்கு அடங்கி நடத்தலினால் விளையும் செயல்கள் யாவும் நல்லொழுக்கமுடையன வாதலினால் அவை நல்வினைகளாம். மற்றவை தீய வினைகளாம். ஆனால் மனிதன் மனத்தூய்மை யுடையனாய் நல்லொழுக்கம் குன்றாது நல்வினையே செய்யவேண்டிய தவசியமென 'மனத்துக்கண் மாசிலனாதல்' என்பதனால் விளங்கிற்று. அவ்வவசியத்திற்குக் காரணமென்? என்னெனில் மனத்தூய்மை யென்பது அவனது ஜன்மலக்ஷண மன்றென முன்னரே பார்த்தோம். அங்ஙனம் தூய்மையற் றிருப்பதினாற்றான் 'மாசிலனாதல்' என்றார் வள்ளுவரும். எனவே நல்வினை தீவினைகளைச் செய்தல் மனிதனால் இயன்ற காரியமாகின்றது. அவன் இங்ஙனம் செய்யவே அவற்றால் விளைந்த பயனையும் அனுபவிக்க வேண்டிய அவசியமுண்டாகும். இப்பயனையனுபவிப்பது யார்? செய்த மனிதனே யாகும். வினையின்பயன் இம்மையோடு முடிவதின்றாய் மரணத்தின்பின்னும் அவனைத்தொடரும். மரணத்தின்பின்னும் மரணத்தின் முன் செய்த வினைப்பயன்களையும் அனுபவிக்க வேண்டும். இவ்வாறு அனுபவிப்பது எதுவோ அதுவே ஆத்துமாவென் றழைக்கப்பெறும். இவ்வாத்மாவானது சரீரம் அழிந்தகாலத்தும் நீடுழிநிலைக்கக் கூடியது. சரீரம் உயிருடனிருந்த காலையில் மனதியற்றிய நல்வினை தீவினைகளின் பயனைச் சரீர மரணத்தின்பின்னும் அனுபவிக்கும் இயல்பினது. ஆகவே ஆத்மாவென்பது யாதெனின், மானிட சரீரம் உயிருட னிருக்கும்போது மனமானது அதனைச் சார்ந்து மனச்சாக்ஷிக்கு அடங்கியோ அடங்காமலோ நல்வினை தீவினைகளைச் செய்ய அவ்வினைப்பயனை உயிர் உடல் இரண்டும் பிரிவுபட்டு சரீரமரணமடைந்ததன் பின் அனுபவிப்பது எதுவோ அதுவே ஆத்மாவாம்.

உலகாயிதரும் அவர் போலும் நிரீச்சுரவாதிகளும் ஆன்மாவின் உண்மையையுமறப்பார். யாவும் இவ்வுடலோடு அழிவுறுவன வென்றும் இவ்வுடலழிவுக்குப்பின் அதியற்றிய வினைப்பயனை யது அனுபவிக்கவேண்டுவ தில்லென்றும் கூறுவர். ஆன்மாவில்லாதேபோயினும் அது காரணமாய் பின் அனுபவிக்க வேண்டுவ தில்லாதே போயினும், 'மேலுலகமில்லெனினும் ஈதலே நன்று' எனக்கூறிய வள்ளுவர் கூற்றையுணர்ந்து மனத்தூய்மையுடன் நல்வழியொழுகல் நன்றும். அங்ஙனம் ஒழுக மேலைப்பயனில்லாதேபோயினும், இம்மைப்புகழேனும் பலிக்குமென்பதற்கையமில்லை. மற்று என் போலியர் கொள்கைபோல ஆன்மாவென வொன்றிருந்து பயனனுபவிக்கவும் நேரு மேல் அக்காலத்தும் மேன்மை பெறலாம்.

மேலும் புகழடையுமாறும் தண்டனைக்குப்பயந்தும் நல்வினை செய்தல் மேன்மை யாமோ? நன்மை செய்யவேண்டுவதற்குக் காரணம் செய்யல் நன்மையாயிருப்பதொன்றே. இதுவே மேலான குணம்.

இது நிற்க நல்வினைசெய்தார் நற்பயனையும் தீவினை செய்தார், தீயபயனையும் அனுபவிப்பார் என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். மனத்தூய்மையா யிருத்தலே நல்வினைக்குக் காரணம். மனத்தூய்மை யுடையராய் நடந்துகொள்ள வேண்டியவிதம் இன்னதெனக் காண்பாம். விலக்கிய வோம் விதித்தனவே செய்தல் மனத்தூய்மையாகும். விலக்கிய யாவை, விதித்தன யாவை? மனத்தூய்மை யுடையராய் அறவழி யொழுகுதற்கு இடையூறாய் மனதின்கண் நிகழுங் குற்றங்கள் பல. அவற்றைச் சுருக்கிக் கூறுவான் போந்தவள்ளுவர் அழுக்காறு அவாவெகுளி இன்னுச்சொல் எனக்கூறி முடித்தார். இன்னுச்சொல் மற்றவை காரணமாக எழுதலின் அதனை நீக்கி மற்றவை நோக்குவாம். இவற்றுள் அழக்காறுவதென்? பிறராக்கம் பொறுமை யென்றோதினார் உரைகண்ட பரிமேலழகர். அடுத்தவீட்டில் ஆண்குழந்தை பிறந்தால் தன்வீட்டை மூடித் தலைவிரித்தழுவார்போற் பிறர் செல்வங் கண்டவிடத்து அதனைக்காண சகிக்கலாற்றாராய் மனம் நோவதே அழுக்காறும். 'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை' என்பது பழமொழி. இம்முதுமொழியின்பொருளுரை மனத்திடை யழுந்தப் பதிந்த அழுக்காறென்பது அகலப் பறக்கும். அழுக்காறு எனும் பதம் இருசெந்தமிழ்ப் பதங்களின் சேர்க்கையினையது. அழக்கு, மாசு, ஆறு, வழி. தீயவழி என்பது அழக்காறென்ற தன்பொருள். தீவழியிற் சேறல் நீதெனக் கண்ட பிறரையும் அழக்காற்றின் நீங்காதிருப்பது மனத்தூய்மையையல்ல மனமாசையே விளையாநிற்கும். மனதின்கண் அழக்காறுண்டாய் வழியுண்டாம் தீங்குகட்கோர் அளவிலது. எவர் ஆக்கம் பொறுமையால் அழக்காறுண்டாயதோ அவர் ஆக்கம் சிதைக்குமாறு மனதில் எழும் தீயவெண்ணங்கள் அனந்தம். தான் கெட்டேனும் பிறர்கேடு சூழும் தன்மையுடைத்திவ்வழுக்காறு. இத்தன்மையுடைத்தாதலின் அழுக்காறுடையார், எவர் ஆக்கம் பொறுமையினால் அழுக்காறுற்றாரோ அவர் உயிர்க்வரல் அவர் ஆக்கத்தைச் சூறையாடல் பிறவாற்றால் இன்னல் விளைத்தல் முதலிய பெரும் பழிகட்காளாய்த் தம் மனத்தூய்மை யொழிய புகழிழந்து இழிவடைந்தும் தாம் செய்த தீவினையே வியாதடியுறையும் நிழலொப்பத் தமைத்தொடர்ந்து கெடுத்தலின் இறுதியில் அழிவுறுவார்.

இது புறம்பாக அவாவினைப்ப தென்னென்றுரைப்பாம். ஈண்டு அவாவென்றது தீயவை நாடிடும் தன்மையை. ஆசையே மோசத்துக்கிடனும். அவாவினால் விளையாத்தீங்கு யாதுமிலது. இதனால் விளையும் பெருந்தீங்கையோர்ந்தே வள்ளுவர் தம் குறளில் பல விடங்களினும் தம் அவாகெட இவ்வவாவைவக் கடிந்தும் பின்னருந்திருத்தியுரைத்த அவாவெறுத்தலெனவும் ஓர் அதிகாரம் வரைந்து அவ்வதிகாரத்திற்கிட்டதலைமகமாகத் தூய்மை என்பது அவா வின்மை எனத்தூய்மையையும் விளக்கி அவ்வழியானே அவாவின் கொடுமையும் கூறிப்

போந்தார். மூவாசையொழித்தலே முத்திமார்க்கம் எனப் பலரும் கூறுவார். இம்மூவாசையும் மண் பொன் பெண் மேற்றும். உடலே ஆசைக்கயிற்றிலா டும் பம்பரமென்றார், ஆசைக்கயிற்றி லூசலாடியலுத்தினேத்த அடிகளொரு வர். இவ்வாசையே மனிதனேயுலகுடன் இறுகப்பிணிக்க வல்லதாதலின் அத னைப் பாசமெனப் பெயரிட்டழைத்தனராக்கும். அவாவுடையோர்க்கு அமை திபின்று. அவாவிய பொருளேயடைந்தனுபவிக்குங்காறும் அடங்காக் கவலை கொள்வர். ஊணின்றி உறக்கமின்றி உயிர் மாழ்குவார். கிட்டாதாயின் வெட் டென மறவாராய் எவ்வாற்றானும் கைக்கொளநினைவார். ஆற்றுசெயலின் விளைவறியாது ஆள்வினையாள நினைவார். களவென்னுர் கொலையென்னுர் கோளென்னுர் பொய்யென்னுர் புலையென்னுர் அவாவிய தடைதலே மே லென்பர். கோரம்! கோரம்! இவர்செயலின் கொடுமையை யுணர்ந்தோர் அ ஆ வென்றே யலறியோடுவர். இதன் கொடுமை கண்ட பெரியோர் அ ஆ! வென்று அலறியோடியகாரணமாய் அஆவென்றது அகரத்தின்பின் ஆகாரம் வர 'ஏனையுயிர் வழிவவ்வும்' எனும் விதிப்படி வகர உடம்படு மெய்பெற்று 'அவா' வெனும் பதமாய் நின்றவிட்டதோவெனும் ஐயமும் எழுகின்றது. அவாவினுக்கடிமை பூண்டார் தன்மையென்? விரும்பியகாரியம் கைக்கெட்டி யகாலத்தும் அத்துடன் திருப்தியாவதில்லை யிவர்மனம். ஒன்றுவிட்டொன்று பற்றி நிற்பதே அவாப்பேயுற்ற மனதின் குணம். ஆசைக்கோரளவில்லை யெனப் பெரியோர் கூறியதும் எக்காலத்தும் பொய்படுவதின்று. காமம் மோ கம் முதலியனவும் ஆசையின்பாற்பட்டனவேயாம். ஆசைமீதூர மதிதேயும் மானமாயும். பலந்தன்றி தேகமெலிந்து தம் தேகபலமிழந்து உருவமாறி உழல்பவர் எத்தனை? கூற்றுவன் தமையணுகா முன்னரே பரபரப்புடன் தாமே தாவியக் கூற்றுவன்வாயிற் குதித்தவரெத்தனை! உடலமாத்திரமன்று மனதையும் மாழ்விக்கும் மறலியன்றே இவ்வவா! இத்தனைபெருந் தீங்குக் கும் உறைவிடமாதல் நோக்கியே 'மனத்தூய்மை என்பதவா வின்மை' என வும் 'அவாவிலார்க்கு இல்லாகுந்துன்ப' மெனவும் கூறினர். தூய்மையே துர சாக மனதுக்கணிந்த மாண்பினர் அவாவெனும் இம்மாசியவாடையைத்தீண் டவும் துணியார்.

மற்று வெகுளியை நோக்குவாம். 'கோபமே பாவங்களுக்கெல்லாம் தாய் தந்தை' என்றார் இடைநாட் புலவரிலொருவர். கோபம் ஏனைப்பாவங்களுக் கெல்லாம் தாய்தந்தை யென்பதை எல்லோரும் ஒப்பாவிடினும் அது அவற் றின் உடன்பிறந்தோர் சுற்றத்தோனெனவாவது வேண்டும். 'கோபம்பாவம் பாவம் பழி' என்பது பாமாருக்குள்ளும் வழங்கும் ஓர் பழமொழி. 'வெல்வ தே வேண்டின் வெகுளிவிடல்' என்றார் பெரியோர். எதிர்த்தவன் ஏழையெ னின், கோபம் சண்டாளன் என்பது வழக்கச்சொல். 'தன்னைத்தான் காக் கிற் சினைக்காக்க வென்றார்' உத்தரவேத முடையார். 'வெகுளியேயறி வினைச்சிதைக்கும் வெம்மை சால்வெகுளியிற் கொடும்பகைவேறென்றில்லை' யென்றார் உண்மை யுணர்ந்த உத்தமரொருவர். ஆறுவதுசினம் என்றார் ஔவையார் தம் அறநூலிலும். இவ்வாறுகப் பலரும் வெகுளிமேல் வெகு ளிகொண்டு அதனை வெறுத்திழித் தரைத்ததென்? என்னென்றெழுந்த

கடாவுக்கு விடையளிப்பார் வள்ளுவர். என்னை?: 'காவாக்காற்றன்னையே கொல்லுஞ்சினம்' ஆம். உண்மையிதுவே. மனதினின்றும் வெகுளியை வெகுண்டு தூரத்தாவழி வெகுளி மனதின் தூய்மையை மாய்த்துவிடும். கோபம் கொலையை மீன்றதாய். கோபத்தாற் கெட்டகுடி யெத்தனை! வெகுளியைக்கண்ணுற்ற காலத்தே மனத்தூய்மை பறந்தகல மனமாசு குடிகொள்ளும். சினமுற்றூர் பித்துற்றூரிற் பிறரல்லார், பித்துற்றூர் தம் வயமிழத்தல் வெளிப்படை. அங்ஙனம் கோபம் குடிகொண்டாரும் தாம் ஆற்றுசெயல் யாதெனவறியாராய் தமைமறந்து செயலியற்றியதனால் இடர்ப்படுவார். 'ஆதலின் ஒங்குசினங் காத்துக்கொள்ளும் குணமே குணமென்க' சினம்வலியார் மீதும் ஒத்தார் மீதும் செல்லாததனின் 'மெலியவனிடத்தும் காக்கும் வெகுளியே யறம் என்பர்' என்றூர் அறநூற் கரைகண்ட அறிஞரொருவர்.

இவைநிற்க, இவைபோல்வனபலவும் இவற்றுக்குச்சார்பான பலவும் மனதிடைபுக மனம் தன்தூய்மை நீங்காமாசுறும் இவ்வகைத்தாம் தீயகுணங்களே ஒருதலையாக அகற்றியவழியன்றே மனத்தூய்மையுண்டாதற்கு எதுவாம் ஆயின்மனத்தூய்மையுடைமைக்குத் தீயொழுக்கில் நீங்குதல்மாத்திரம்போதுமோவென்னின் அற்றன்று. நல்லொழுக்கம் கடைப்பிடித்தொழுகலும் வேண்டும். தீமையின் நீங்குதல் மேன்மையுடைத்தே யெனினும் அதனினும் பன்மடங்கு சிறப்புடைத்து நன்மையையே கைக்கோடல். தீமைசெய்தாரெலுருவனைப்பொறுத்துக்கொள்ளுதல் மேன்மையுடைத் தென்பதற்கையமின்று. ஆனால் இதனினும் மேன்மையுடைத்து தீமைசெய்தார்க்கு நன்மைசெய்தல். இதுபற்றியன்றே எம்பிரான் 'தீமையை நன்மையினால் வெல்லல்' எனவிதித்ததும். எனவேமனத்தூய்மை வேண்டுபவர் தீமையின் நீங்கவேண்டுவதுமாத்திரமன்றுநன்மையை நாடிநல்லவைசெய்தலும் வேண்டுமென்பது ஒருதலை.

மனத்தூய்மைக்கு சாதனமாய் அனுசரிக்கவேண்டிய நல்லொழுக்கங்கள்பல. அன்பு, பொறைமுதலாய அனந்த லக்ஷணங்கள் மனத்தூய்மைக்கேதுவாம். அவற்றுள் மிகச்சிறந்த லக்ஷணமொன்றை மாத்திரம் கூறிமுடிப்பாம். இவ்விலக்ஷணந்தான் யாதோவெனின், அதுவே அன்பெனப்படும். இவ்வன்பே பிரதானம். அன்பிலாதாரிடத்து மனத்தூய்மை காணப்படல் என்பது பொய். எம்பிரானிடத்தி லொருவன்சென்று நல்லொழுக்கத்திற்கேதுவாய் மனிதன் அனுசரிக்கவேண்டிய விதிகளிற்சிறந்ததும் முக்கியமானதும் யாதோவென அவர் விடையளிப்பார்: 'கடவுளிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழுமனதோடும் உன்முழுஆத்துமாவோடும் உன் முழுபலத்தோடும் அன்புகூருவாயாக! இதுவே பிரதானமான நியாயப்பிரமாணம். இதற்குச் சமமாகக்கூறப்படும் தன்மையுடைய இரண்டாம் பிரமாணம் யாதெனின் உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோற் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக!' ஆ! எத்துணைச்சிறப்புடைத்து இவ்விதி! இதனைச் சுருங்கக்கூறின் தெய்வத்தின்மீது அன்புபூண்டொழுகல். தெய்வத்தின்மீது அன்புகொண்டா னெருவன்மனிதர்மீது அன்புடனெழுகுவன் என்பது வெளிப்படை. அன்பைச்சிறப்பித்துக் கூறியவள்ளுவர் 'அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை

வன்பார்கள் வற்றன்மரந்தளிர்த்தற்று'எனவிசைத்தார். அன்பொன்றிருக்க மேல் புல்லொழுக்கம் புகைந்துபோக நல்லொழுக்கம் நாடொறும் விர்த்தியாம். அன்பின்றி உலகில்யாதும் நடைபெறுவதின்று. நாம் இத்தருணத்தில் ஈண்டு ஒருங்குழுமியிருத்தலும் அவ்வன்பின் வலியாலன்றே? அன்பின்றி உலகின்றும்.

ஒன்றையொன்று ஒருவரையொருவர் தாங்கித் தழுவி நடத்தலே யன்பாம். உபரத்தனவென நம்மால்மதிக்கப் பெறுபவற்றிடையும் இத்தன்மை காணக் கிடக்கின்றது. சூரியன்முதலாம் எண்ணிறந்த ஜோதிகணங்கள் ஆகாசப்பரப்பில் உலாவித்திரிகின்றன. இவையெலாம் நிற்றற்குக் காரணமென்? ஒன்றையொன்று கவர்ந்துதாங்கி நடவாவழி அவையெல்லாம்ஒன்றோடொன்று மோதியும் கீழ்விழ்ந்தும் க்ஷணநேரத்தில் அழிவுறும். மேலக்கவர்ச்சியென்பதில்லெனின் நாம்வதியும் இப்பூமியும் இவ்வாறு நிலைபெறநின்று நம்மைத்தாங்க வல்லதாமோ! பூமியிடையுள சகலமும் ஒவ்வொன்றின் உதவிக்கும் பராமரிப்புக்கும் பாதுகாவலுக்கும் எதுவாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் நீங்கி மனிதனே யுற்றுநோக்க இவரிடம் இக்கவர்ச்சி அதாவது அன்பு அவசியமென்பது தெற்றெனவிளங்கா நிற்கும்.

மனிதனிடை இவ்வன்பின்றேல் ஜனசங்கை கூட்டுறவென்பது எங்ஙனம் இருத்தல் கூடும்? நகரமெனவும் நாடெனவும் உண்டாமோ? அரசரென வும் குடிகளெனவும் அரசர் மாட்டுக் குடிகள் அன்புபூண்டு அடங்கி நடத்தலெனவும் இனையவாற்றால் உலகம் நடைபெறுமோ குடும்பமெனவும் கூட்டமெனவும் உலகிடை வழங்குமோ? இவ்வாறெல்லா மில்லாவிடத்து பூமியின் ஸத்தியென்றும் நாம் இப்பொழுது பார்க்கிற மனிதஜலமைக்கப் பட்டவையாவும் உண்டாவதெங்ஙனம்? தற்சமயம் இப்பந்தரும் ஆதாரங்களும் அமைப்பவரார் அழைப்பவரார் அமர்பவரார்? எவருமிலர். காட்டில்வதியும் விலங்கின மொப்பத்,தன்னந் தனியே இரண்டொருவராய் இங்குமங்கும் அலைந்து திரிவர். உலகமே கூடாயிருக்குமென்பதற் கையமின்று. மனிதர் ஆண்டுவதியும் மிருகங்களொப்பார். மனிதனுக்கு இத்தனைச் சிறப்பையும் பெருமையையும் பயப்பது அன்பேயாகும். அன்புடையார் எவ்விதத் தீய குணங்களுமின்றி உயிர்வாழ்வார். எனெனில் அன்பின் சுபாவமே அத்தன்மையுடையது. அன்பு நீடியசாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறுமையில்லை. அன்பு தன்னைப்புகழாது. இறுமாப்பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது: தற்பொழிவை நாடாது. சினமடையாது. தீங்குநினையாது. அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும்! எனவிவிலியநூல் முழங்குகின்றது. ஆ! என்னே இவ்வன்பின் திறம்! என்னே இவ்வன்பின் ஆற்றல்! இவ்வன்பின் உயர்விருந்தவாறு மிகவழகிது. இவ்வன்பு இயல்பிலேயே மனிதனுக்கு எளிதிற் சித்தியாமோவென்னின், ஆகாது. கடவுள்மீது அன்புடையர்க்கே இதுபலிதமாம். முதலில் உண்டாக வேண்டுவது கடவுள் மீதுள அன்பு. அவ்வன்பின் வழியதாய் பிறஜீவிகள் மீதும் அன்புண்டாம். அன்புசெய்யாவிடில் அவனதருள் ஒருசிறிதும் சித்தியாகாது. அவனதருள் அற்றவிடத்தே எனையவைபெற்றும் பெற்றிலதே

யாகும். அவனருளற்றூல் அனேவருமற்றூர் என்பதும் வழக்கச்சொல். அவனருள் சிந்தையுட் செல்லு மெனின் மனத்தூய்மைக்கு வேறு ஏதுவின் அவசியமின்றூம். அன்பெனும் நாண்கொடி அவனே நாம் இருதயத்தோடு பிணித்துவைக்க அவன் அதனே விடித்துச் செல்பவனல்லன். 'அன்போடுருகிய கங்குழவார்க்கன்றி என் பொன்மணியினே யெய்தவொண்ணுதே' என்றூர்ஞானியும். அவனேயடைய அதுவே தூய்மையாம். இவ்விதமாகஅன்பே ஐஸ்வரியமாய்ப் பெற்றூர் பெருமையும் புகலுந்தரத்ததன்று. 'அன்பென்பதொன்றின் தன்மையமரரு மறிந்ததன்றூல்' என்றூர் அன்பை ருசித்த தமிழ் அன்பராம் கம்பநாடர். கடவுள் மீதும் அவரால் உண்டுபண்ணப்பட்ட சிருஷ்டிகள் மீதும் அன்புபூண்டொழுகவே சகலநற்குணங்களும் தாமாகவே வந்தெய்தும். பிறன்மீது அன்புடையானெருவன் அவனைக் கொலைபுரிய வெண்ணுவனே? எண்ணன் பிறரை வஞ்சிக்கத் துணியான். பிறர்க்கு விரோதமாய்ப் பொய்ம்மொழி புகலப்புகான். வேறெவ்வகைத்தாம் களங்கமு மனதிடையில்லாஞய் மனத்தூய்மை பெற்ற மாட்சியுடையோனுவன். 'மனமாசறக்கற்று நலமன்றே நல்லாறு.' மனத்தூய்மை வேண்டுபவன் நல்லாற்றின் ஒழுகற்பாலன். எவ்வகையான பொய்ம்மையும் தோன்றூது உண்மையான ஜீவியம்செய்க. வஞ்சனே நெஞ்சிற்புறம்பாக. 'எவரையும் வஞ்சித்தோமென்று மகிழற்க'. பிறரை வஞ்சிப்பினும் தன்னே வஞ்சித்தல் கூடாதகாரியம், தன்னைஞ்சே தன்னேச்சுடுமாதலின், வெளியாயின் நாணமடைய வேண்டிவரும். எந்நினேவும் எச்செயலும் தன்னிற்காணப்படாதகாக்க. பிறரறியினும் அறியாவிடினும் இகழற் பாலனவன்றூய் புகழற்கேதுவாயின செய்தலே மனத்தூய்மையாம். மனத்தூய்மையுடையோர் தேவனேத்தரிசிக்கும் சிலாக்கியம் பெறுவர், தூய்மையின்றேல் படுநரகக்குழியில் வீழ்தல்திண்ணம். ஆதலின் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, சாந்தம், இச்சையடக்கம் முதலியநற்குணங்களே யணிந்தவராய், உண்மையுள்ளவை எவையோ, ஒழுக்கமுள்ளவை யெவையோ, நீதியுள்ளவை யெவையோ, கற்புள்ளவை யெவையோ அன்புள்ளவை யெவையோ, நற்சீர்த்தியுள்ளவை யெவையோ, புண்ணியமானவை யெவையோ, புகழானவை யெவையோ அவற்றையே சிந்தித்து நடத்தல் கடமை. இதுவே மனத்தூய்மை. இதுவே வீடுபேற்றுக்குச் சாதனம்.

தெரிந்து செயல் வகை.

இதனாலாம், இதனாலழியும், இதனாலிலாபமுண்டாமென்று ஆராய்ந்து தொழில் செய்தல் திறமாம். ஆவது அறச்செயல்; அழிவனயாக்கை, இளமை, செல்வம்; அரும்பெரும் ஊதியம் அருள். இவ்வகைகளே ஆராயாமற் செய்யப்படும் கருமம் சிதைபடும். இவற்றினைத் தேர்ந்தவினத்தோடுசேர்தல் நலம். இவ்வாராய்ச்சிக்கு இன்றியமையாதன அறிவும் கல்வியுமாம். அறிவு இயற்கைப்பேறு, கல்வி செயற்கைப் பயனும். வடமொழியார் அறிவுடைமை மூவகைத்தென்பர். உலோகாசாரமும், ஒப்புரவும், சமுசாரமும், வாசனையும் அறிந்து "உடம்பேநா" னென்றிருத்தல் உலோகதிட்டியாம். அறம், பொருள், இன்பம், வீடென நான்கினையும் நூன்முகமாகக் கேட்டறிந்து "உடம்பு நானல்லேன்" என்றல் சாத்திரதிட்டியாம். ஞானதிட்டியாவது எப்பொருளினு முண்மையறிதல். அறஞ்செய்து அருட்பெறுதலும், பொருளாக்கி இன்பநுகர்தலும், ஞானத்தால் சுவர்க்கமடைதலும், மக்கட்பிறப்பிற் குரியனவாம். மக்கட்பிறப்போ காலவலியிற் பட்டுளது. புண்ணியம்பற்றியே மனிதவுட லெய்துவதனாற் புண்ணியத்தை நறுநெய்யாகவும், உலகியல் நடாத்தற்கு சந்திர சூரியர்க ளின்றியமையா அளவைகளாதலால் காலத்தை ஒப்பிகந்த திண்ணியதிரி யென்றும், தீத்தன்னைப் பற்றினுனைக் கெடுப்பது போன்று தன்னையாக்கினுனைக் கெடுத்தல் விதியாகிய தீயென்றும், பின்னவையிரண்டும் எஞ்சியவழி புண்ணியவுடலழிந்து உயிர் நீங்கும் என்றும் கம்பர் உருவகப் படுத்தியுளார்.

"சிலமும் தருமமுஞ் சிதைவில் செய்கையும்
சூலமும் திகிரியும் சொல்லுந் தாங்கிய
மூலம் வந்ததிய மூவர்க் காயினும்
காலமென் றொருவலை கடக்க லாகுமோ."

"புண்ணிய நறுநெயிற் பொருவில் காலமாம்
திண்ணிய திரியினில் விதியென் தீயினில்
எண்ணிய இன்னவை இரண்டும் எஞ்சினுல்
அண்ணலே! அவிவதற்கு ஐய மாவதோ!"

நெய்யும், திரியும், தீயுமின்றேல் விளக்கில்லை யாதலின் விளக்கு அவியாது எரியுமாறு வகைநாடல்வேண்டும். வகைபலதரப்படினும் பகைவரால் முக்கப்படாத அணுகிய அறிவு கல்வழியுய்க்கும், மெய்ப்பொருள்காணும், உலகந்தழுவும், அஞ்சத்தக்கதையஞ்சும், ஆவதையறியும், தன்பத்தை முன்னின்று காக்கும். "மணற்கேணி தொட்டனைத்தூறும், அறிவுகற்றனைத்தூறு" மென்றலாற் கல்வியின்பெருமை எளிதிற்புலப்படும். கல்வியே கண், கல்வியே கேடில்விழுச்செல்வம், கல்வியே இம்மை பயக்கும், ஈயக்குறைவின்றும். தம்மைவிளக்கும், மம்மாறுக்குமருந்து. கல்வியழகே யழகு என்றும், கற்றவரே மக்கள், கல்லாதவர் விலங்குகளென்றும் பலவாறு பு

வர்கள் புனைந்துரைர். இக்கல்வியைப் படுமழைமொக்குள், மலையாடுமஞ்சு, புல்நனிநீர் போன்று தோன்றிக்கெடும் இளமைப் பருவத்திற் கற்கவேண்டும். கற்கும் நூல்களும் கற்போர்க்கு உறுந்துணை யாதல்வேண்டும்.

"அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது
உலகுநூல் ஒதுவதெல்லாம்—கலகல
கூஉந் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்
போஒம் துணையறி வாரில்"

"நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்."

பன்னூல்களும் பாவலர் சுயானுபவங்களே விளக்கும். சுயானுபவங்களும் இயற்கைப்பொருள்களன்றி நிகழா. இயற்கைப்பொருள்களால் இம்மையினைக்குரிய பொருளிடங்காலங்கருவி இவற்றை நன்குணரலாம். திரு வேறு, தெள்ளியராதலும் வேறு என்றமையால் திருவுடையார்க்குத் தெள்ளிய அறிவுடைமை அரிதாம். நன்னெறியிற் பொருளீட்டுதல் பெருமை. அறிவாளன் திரு ஊருணிநீர் நிறைந்தற்றும். உபகாரியின் செல்வம் நடுவூரிற் பயன்மரம் பழுத்தற்றும். பெரியோர் செல்வம் மாமருந்து மாத்துக்கொப்பாம். நன்றியில் செல்வமோ நகைவிளக்கும், இடுகாட்டுள் ஏற்றுப்பனையாம். நடுவூரில் நச்சு (எட்டி) மரம்பழுத்தற்றும். ஆயினும் 'கைத்துடையான் காற்கீழொதுங்கு மிவ்வுலகு' என்பது நீதிநெறி விளக்க நூலார் துணிவு. பணத்தின் பெருமை கூறும் புல்லறி வாளர் "ஈட்டி எட்டுமட்டும், பணம் பாதாளம்வரை" என்பர். கல்லாரேயாயினும் கைப்பொருளொன்றுண்டாயின் எல்லாருமுவந்துவருகென்பர். அறவழி ஈட்டியபொருளாற் புகழும் மதிப்புமுண்டாம், தருமமுமின்பமுந் தலைகாக்கும், பகையுஞ்செருக்கும் பாழ்படும். 'திரைகடலோடியுந் திரவியந்தேடு' என்பது ஆன்றோர் கூற்று. தாமமதுபவியாது பிறர்க்குமளிக்காமல் பொருளீட்டிப் புதைத்து வைப்பவர் உய்த்தீட்டுந் தேனீக்கு ஒப்பாவர் கொள்ளைபோகாமற் காக்குஞ் செல்வரே செழுங்கிளைதாங்குவர், குயிலை வளர்த்துவிடுங் காக்கை இனத்தை யழையாம லுண்ணுதலிலை, சுற்றந்தழுவுதல் தலைமை, விலங்கும்புள்ளும் விலக்கும் வெளவால் போன்று சுற்றமிகழாமைநன்று. "நெல்லுக்குமியுண்டு, நீர்க்குநுரையுண்டு புல்லிதழ் பூவிற்குமுண்டு." குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை. கொடையுமின் சொலும் சுற்றங்கூட்டும். சுற்றத்தை நாடாதான் வாழ்க்கைக் கரையில்லாக்குளம் நீர் நிறைந்தாற்போன்றும். வறுமைவரினும் சுற்றம் கைவிடாது, வறுமையிற்கைவிடும் மாந்தர் அற்றம் நாடாதவர்.

"அழல்மாண்டு போழ்தினடைந்தவர்கட் கெல்லாம்
நிழல்மரம்போல் நேரொப்பத் தாங்கி—பழுமரம்போற்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்."

"பகல்வெல்லுங்கூகையைக் காக்கை." காகம் கோட்டானைப் பகலில் வெல்லும். எதனையுங் காலங்கருதிச் செயல்வேண்டும். "ஓடுமீலெடி உறு

மீன் வருமளவும் வாடியிருக்குமாங்கொக்கு" காலம் வாய்க்கும்வரை கூம்பி யிருந்து காலம்வாய்த்ததும் அது குத்துமாறு முயற்சியுடையான் காலம நிந்து ஒதுங்கித்தேறவேண்டும். ஆடு பின்வாங்குதல் பாய்தற் பொருட்டன் ரே? முதலே நீரிலிருந்தால் எல்லாவுயிரையும் வெல்லும். நீரை விட்டேகின் அதனை எல்லாவுயிரும் வெல்லும். யானை பெரியமிருகமாயினும் சேற்றில் நரியு மதனையடும். "காலங்கருதியிடத்தாற் செயின்ஞாலங் கருதினுங்கை கூடு" மென்ரூர் செந்நாப்போதார். மக்கட்கணிகலமாவது அடக்கம். அடக் கம் அமரருள் உய்க்கும். அபாயம் வருமென்று ஐயுறின் ஆமை தலை கால்க ளாகிய ஐந்தினையும் உள்ளடக்குமாப்போல் ஐம்பொறிகளையும் அடக்க வல்ல வன் எழுமையினும் உறுதியடைவான்.

"இடம்பட மெய்ஞானங் கற்பினு மென்றும்
அடங்காதா ரென்று மடங்கார்—தடங்கண்ணாய்
உப்பொடு, நெய், பால், தயிர், காயம் பெய்திடினும்
கைப்பரூப் பேய்ச்சுரையின் காய்."

"ஊக்கமது கைவிடேல்" என்ரூளவ்வை மூதாட்டியும். ஊக்கமுள்ள புலியிகூடிக்கு யானையஞ்சும். யானை கணையாற் புண்பட்டவிடத்தும் தளரா மற் பெருமையை நிலைநாட்டும். வருத்தம் வரினும் ஊக்கமுடையார் தளரார். புலிபசித்தால் புல்லைத்தின்னுது.

"உறுபுலி யூனிரை யின்றி யொருநாட்
சிறுதேரை பற்றியுந் தின்னும்."

"வேளாளனென்பான் விருந்திருக்கவுண்ணுதான்." விருந்தோம்பல் வேள்வியின்மிக்காம். விருந்தினரை உபசரியாதிருத்தல் செல்வத்துள்வறுமை யாம், இன்மையுளின்மையாம். விருந்தினர் முகம்வாடாமல் விருந்தளிப்பர் பெரியோர். அனிச்சப்பூ மோந்தவிடத்து வாடும். முகம்வேறுபட்டுப் பார்க்க விருந்தினர் வாடுவர். ஆதலால் வந்தவிருந்தினரை வைகலு மோம்புவான் வாழ்க்கை 'பருவந்து பாழ்படுதலின்று.'

அன்றியும், எதனை எதனுற்செய்தல் நலமோ அதனை அதனுற் செய லேதகுதி. "இதனை யிதனு லிவன்முடிக்கு மென்ரூய்ந்து அதனை யவன்கண் விடல்."

"வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையார்த் தற்று."

எலிகள் கூடி சத்தித்தால் பாம்புக்குத் தன்பமிலை. பாம்பு மூச்சுவிட்ட அளவில் எலிகள் மாயும். பனைகவன்மை யறியார் மேம்பாடுரூர். தூண்டி லிரும்பை மீன்விழுங்கிற் றுன்புறும். சூதும் வாதும் வேதனைசெய்யும்.

"உடை, செல்வ, மூ, ணெலி, கல்வியென்றைந்தும்
அடையாவா மாயங் கொளின்."

கயமை சிறுமையாம். உருவத்தால் மக்களெனினும் கவலையில்லாத நெஞ்சினராய்த் தாம் விரும்பியதையே செய்து, தன்பத்திற்கஞ்சி, தம்மை

விற்று, கரும்புபோன்று 'கொடிருடைக்குங் கூன்கையர்க்கு' ஈந்து, பொருமைக்குப் பீடமாய், மறைபொருளைப் பிதற்றுவர் முழுமக்கள்.

"கோட்டை, வயிரஞ்செறிப்பினும் வாட்கண்ணுய்
பன்றி செயிர்வேழ மாகுதலின்று."

அதுபோன்று காதிற்கமலமும், விரலில் வைரமும், இடையிற் பொன்னும் பனுர்சும், தோளிற்ரூகையும் இலங்க, வினைஞன் வேலையும், வண்ணன் நூய்மையும் விளங்கப்பெறினுங் கயவர் கயவரேயாம். ஆதலால் கயவரைக்கடிந்து சீருடையாரை சிநேகஞ்செய்யவேண்டும். நல்லிணக்கமல்லது அல்லற்படுத்தும். மகாமேருவைச் சேர்ந்த நாகமும் பொன்னிறம்பெறும். புதுப்பானீரில் பாதிரிப்பூச் சேர்தலால் நீர் வாசனைபெறும்.

"ஊரங் கணநீர் உரவநீர் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்."

மானம் பெரிது. "இடுக்கண் தலைவந்தக் கண்ணும், அரிமாகொடிப்புல் கரிக்குமா?" சுவரிமான் மயிர் நீத்தால் வாழாதாம். அஃதேபோல் நற்குடிப் பிறந்தார் மானம் அழியவரின் உடல்பெரிதென்றெண்ணு துயிர்துறப்பர். இவரை உலகந் தாங்கும்.

அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை, பொறைமுற்றட்ட பல்குணங்கள் ஒருங்கே பெற்றும், கற்பென்னுந்திண்மை பெறுமனைவியை விதிவசத்தாற்பெற்ற புருடனுக்கு ஏறுபோற் பீடுநடையின்றும். ஆதலால் எவர்மாட்டும் ஒழுக்கம்வேண்டும். ஒழுக்கம் விழுப்பந்தரும் ஒழுக்க முயர்குலத்து வைக்கும். "மழித்தலும் நீட்டலு வேண்டாவுலகம் பழித்த தொழித்து விடின்." உலகமென்பது உயர்ந்தோர்மாட்டே. புறத்தில் குன்றிமணி போன்று சுத்தமும், அகத்தில் அக்குன்றிமணியின் மூக்குப்போன்று களங்கமும் உடைத்தாதல் கொடிது. இன்பமளிக்கும் வீணைபோன்று வளைந்து, தவவேடம்பூண்டு, அவஞ்செய்யும் ஆண்மகன் கொடுமைசெயு மீண்ட அம்பிற்கு ஒப்பாவான். இத்தகையாளரையே 'கும்பிடு கள்ளன், குழைத்திடு கள்ளன்' என்பர் இலௌகீகர். 'கழுத்தில் தாவடம், மனதில் அவகடம்' என்பது அநுபவ உண்மை.

வெளிவேடமின்றி உள்ளன்புடையாரை எனைத்தானுங்கொடுத்துக் கொளல்வேண்டும். அன்புடையவர் பிறரின்புறுங்காலத்து 'இன்புற்றுத் துன்புறும்வேளையினில் துன்புறுவர். அன்பிற்கறிகுறி அங்கண்ணீர். அன்பீனு மார்வம். அதுவீனும் நட்பு. அன்பேஇம்மையில் மறுமையின்பம் விளைக்கும். அகத்துறப்பாகிய அன்பின்றேல் உயிர்நிலை என்புதோல் போர்த்தாம். எலும்பில்லாப் புழுக்களை வெய்யோன் சுடுதல்போல அன்பில்லாவுயிர்களை அறக்கடவுள் சுடும். அன்பே சிவமென்பர். அன்பின் குழவி அருள். அருளை வளர்க்கும் செவிலித்தாய் பொருளாயினும் அருளையிச்சிப்பான் பொருளைப் பொருளென்றுபேணுன். அருளே துணை. அருளே புணை. அருளிலார்க்கு அவ்வுலகமில்லை. பொருளற்றூர் ஒருக்கால் செல்வம்பெறுவர். அருளற்றவர் அழிந்தவரேயாவர்.

"பொருளற்றூர் பூப்பர் ஒருகால் அருளற்றூர்
அற்றூர்மற் றூதலரிது."

நண்பர்களே, சேக்கைமரவெழுழிய சேணிங்குபுட்போலும், குடம் பைதனித்தொதியப் புட்பறந்தவாறும், காலமும், பருவமும் வந்துழி, யாக்கை திறந்து உயிர்நீங்குமாதலால், காகம்போன்று சுற்றத்தைத் தழுவுமின். வெளவால்போன்று இனச்சோர்வுபடன்மின். ஆமைபோன்று அடங்குமின். முதலைபோன்று நிலையறியுமின். யானைபோன்று இடுக்கணுறினும் தளரன்மின். கொக்கனைத்துப் பக்கம் பார்மின். பாம்புபோன்று பகையடுமின். ஆடுபோன்று பின்வாங்கி முன்பாயுமின். அனிச்சமலர் போன்று விருந்தினரை ஓம்புமின். வெய்யோன்கைக் கிட்டிய புழுப்போன்று கையாமல் அறக்கடவுளைத்தொழுமின். மான், அரிமாபோன்று மானங்காவுமின். ஊருணி, பயன்மரம், மருந்துமரம்போன்று பிறர்க்குப் பயன்படுமின். இடுக்காட்டுளேற்றுபோன, நடுவூரில் எட்டிப்பழமரம்போன்று பயன்பெறுப்பொருள் நாடன்மின். தேனீப்போன்று, நுகராது தொகுத்த பெரும்பொருளை இழவன்மின். கரும்புபோன்று தன்புறின்றி இன்பளிக்காக் கயமையைக் கடியுமின். குன்றிமணிபோன்று முகட்புசெண்டு அகக்கருப்புக்கொள்ளன்மின். யாழ்போன்று வளைந்து இன்பமளியுமின். "இணைநுழ்த்து நாறு மலர்போன்று" சொல்வன்மையின்மை ஒருவுமின். சிவமாகிய அன்பைப் பெருக்குமின். அன்புப்பெருக்கால் அருள்பெறுமின். அருள்பெறின் அம்மைபெறுவீர். அம்மைபெறின் பிறிதாவதொன்றிலை. ஆதலால் நிலையா யாக்கையும், இளமையும், பொருளும், நிறைதரு அறனும், கல்வியுமொழுக்கமும், என்றுமழிவிலா அருள்பெறக்கருதி அமைந்தன வாதலின், 'அவனருளாலே அவன்ருள்வணங்குமின்'. இஃதே தெரிந்து செயல்வகையாம்.

"அருளினே நெஞ்சத் தடைகொடா தானும்
பொருளினைத் துவ்வான் புதைத்து வைப்பானும்
இறந்தின்ரு சொல்லகிற் பானும் இம்மூவர்
பிறந்தும் பிறந்திலா தார்.

தருமத்தாபனம்.

அறிவைப் பெருக்கி அறத்தை வளர்த்தால் தருமத் தடாகத்தில் தங்கத்தாமரை பூத்து தரும விருக்ஷத்தில் தங்கப் பழம் பழுத்து தருமத் திருக்கோயிலில் தங்கக் கலசமும் நடுவே நவரத்னக் கலசமும் நன்றாக விளங்குமென்று நாம் முன்வருடம் சொல்லியிருந்தோம். ஆம்! அறிவைப் பெருக்கி, அன்பைவளர்த்து, அருளைப் பொருளாகக் கொண்டு அறத்தை நடத்துவதே அரியசெயலாகும். அவ்வறிவு இயற்கையறிவு செயற்கையறிவு, என இருவகைப்படும். அறிவு விளக்கம் கல்லி நலத்தானமைவதாகும். 'கண்ணுடைய ரென்போர் கற்றோர், முகத்திரண்டு, புண்ணுடையவர் கல்லாதவர்' 'கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சைபுகினும் கற்கை நன்றே' 'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க வதற்குத்தக'. அறம் பொருளின்பம் வீடும் பயக்கும் கல்வி. ஆகவே, கல்வியை மக்கட்கு நல்குதல் அறங்களுட் டலைமையானது. கல்வி நலன் ஒன்றே மக்கட்குக் கவினைத்தரும், கருணையை உண்டாக்கும். இதனினும் சிறந்த உண்மை யாது? இதனினும் சிறந்த உயர்வு யாது? தருமத்நிற்குத் தாயகமாய், நன்மைக்கு நாயகமாய், குருட்டைப் போக்கும் அருட்டிறனுய், வேதாந்தப் பழம் பழுத்த போகாந்தத் திருவிளக்காய் நின்ற உத்தம அறிவை எவர்தாம் அவமதிப்பார்? அறிவை வளர்ப்பதே அறத்தை வளர்ப்பதாகும். பாத்திரமறிந்து பிச்சையிடுவான், நேத்திர மளிக்கும் நின்மலப் பொருள் அறிவைத் தவிர வேறொன்றும் அகிலத்தில் கிடையாது. அறிவை வளர்ப்பதற்கு இலக்கியமே இன்றியமையாச் சாதனமாம். இங்கு யாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டுவது ஒன்றுண்டு. இருட்டைப் போக்குவது இலக்கியமாமே யன்றி இருட்டையாக்குவது இலக்கியமாகாது. நம்மவர் அநேகர் இலக்கிய விருப்பம் இம்மியளவுமில்லாது வீணே காலங்கழிக்கின்றார்கள். நல்லிலக்கியத்தில் நாட்டம் வைப்பார் வெகு சிலரோ அதுவும் இலரோ எனக்குத் தெரியாது. இலக்கியங்களுக்கு இன்றியமையாத இலக்ஷணங்களும் அவைகள் மேன்மேலும் பெருகிக் கிளைவிட்டுத் தழைத்தழைக்க வேண்டியதற்கு நல்லாதரிப்பும் பாதுகாப்பும் காண்பது தற்காலம் கடினமாய்விட்டது. ஓ! கொடுமை! கொடுமை! எல்லாத் தருமங்களுக்கும் எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் இன்றியமையாத அறிவுப் பெருக்கத்திற்கும் இலக்கியத் திருத்தத்திற்கும் எத்தனை ஆபத்துகள் நேரிட்டிருக்கின்றன! அந்தோ! கொடுமை! கொடுமை! உயர்ந்த பொருளுக்கு உவமை கூறும்போது உயர்ந்த பொருளையே உவந்தெடுக்க வேண்டுமென்பது உலகறிந்த உண்மையே. அப்படியிருந்தும், கடவுள் முகத்திற்குக் கமலத்தை உவமை கூறுது, ஒரு புலவர் குரங்கின் பிருஷ்டத்தைக் கூசாது மொழிந்தாராம். அப்படிக் கூறினால் அறிவுடையோ ரெவரேனும் அதை மதிக்க ஆவல்கொள்வாரா? அல்லது ஆவல் கொள்ளல் ஆகுமா? அஃதப்படியாயினும் இத்தகைய போலி உவமைகளும் பொருத்தமென்று கொள்

ளத்தக்க காலம் எந்தமிழ்நாட்டாரே நந்தமக்கு வந்துவிட்டது! நம் இலக்கியத்தை நாம் மதியாதிருக்கும் வரைக்கும், உண்மையை உறுதியாய் நாடாது நன்மை கடைப்பிடியாது, பொருமையாலும் புல்லறிவாலும், கள்ளத்தாலும் கபடத்தாலும் நாம் ஆளப்படும் வரைக்கும், அறிவாக்கும் பொருளுற்றூர்க்கு ஆயிரமாயிரமாய்ப் பொருள் தந்து நம்நாட்டை நாம் அபிவிர்த்தி செய்ய முயலும் வரைக்கும், உண்மையில்லாத புஸ்தகங்களையும் சாரமில்லாத சருகுகளையும் பார்த்துப் படித்துப் பாழாய்ப்போகவே நேரும். நல்ல புஸ்தகத்திற்கு நாணயமாய்ச் சாத்துக்கவி கொடுத்த ஒருவர்—அவர் யார்? எனக்குச் சரியாய் ஞாபகமில்லை. அவர் ஒரு சந்நிதி ஐயங்காராயிருக்கக்கூடுமென்று நினைக்கிறேன். அவர் சொல்லுகிறார்— 'ஐயா, பாட்டின் சுவை என்னவாய் ருசிக்கின்றது, தத்துவத்தின் பெருமை என்னவாய் ஜொலிக்கின்றது, நல்லருசி, நல்லருசி, நல்லசுவை, நல்லசுவை, "அப்பமொடு தோசை வடையாய்" என்று அழகான வெண்பாவை அலங்காரமாய் முடித்தார். இது கட்டுக்கதையன்று! உண்மையாகவே ஒருவர் பாடிய உயர்வான சாத்துக்கவியே அஃது. தெவிட்டாத தேனையும், குமட்டாத பாலையும், முப்பழத்தின் முதிர்சுவையையும், கரும்பின் ரசத்தையும் கற்கண்டின் இனிமையையும் கவித்திறத்துக்கு உவமைகூறிக் களிப்படைவதைவிட்டு, கம்பன் பாட்டுக்குக் காராபூந்தியையும் மூவர் தமிழுக்கு முறுக்கு மசால்வடையையும் பொருத்திக்கூறிப் புகழ்பாடலாகுமா?

வைணவர்களில் "கூடாரை வெல்லி" என்று மார்கழி மாதத்தில் மகா உத்ஸவம் ஒன்று நடப்பதுண்டு. அன்று பாசுரம் "கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா" என்று ஆரம்பிப்பது பற்றி அற்றைக்கு "கூடாரை வெல்லி" உத்ஸவம் என்று பேர் வந்தது. அதன் பொருளென்னவென்றால் பக்தர்களோடு கூடாது பகவத் பக்தியிலீடுபடாதுள்ளவர்களைக்கூட மானைக்காட்டி மானைப் பிடிப்பார் போன்று ஆட்கொண்டு சீர்படுத்திச் செம்மையுறச் செய்யும் கோவிந்தா என்று பொருள். இதை யுணராத ஆவேஸ பாகவதர் ஒருவர் 'கூடாரம் போட்டுக் கொப்பியடிப்பதன்றோ கூடாரவல்லி' எனக் குளறி வழிந்தார். 'குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்லபிரான்' என்று வைணவப்பிரபந்தத்தில் மற்றோர் பாசுரமுண்டு. அதற்கு மதுரை மன்னன் கண்ணபிரான் என்று மதுரைவீரனுக்குப் பூசைபோட மனம் வைத்த மஹா பாகவதர் ஒருவர் குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடுவது என்பது பழைய குடக்கூத்தைக் குறிக்கிறதென்று உணராது தன் மதமாகிய குடி மதத்திற்கு ஒத்தபடி 'குடங்களை எடுத்து ஏறவிட்டு, சொகுசாய் உட்செலுத்தி கூத்தாடவல்ல பிரான் தம்மிம் என்று ஆடவல்ல பெருமான்' என்று அர்த்தஞ் சொன்னாராம். "சீர்மல்கு மாய்ப்பாடி செல்வச் சிறுமியர்காள்" என்ற சொற்றொடர்க்கு 'சீரகம் மிளகு இரண்டும் சேர்த்து இனிய பொங்கல் செய்து இலைப் பாறத்தின்னும் ஆய்ப்பாடி' என்று வேறொருவர் ஆனந்தப்பட்டு ஆபாச அர்த்தஞ் சொன்னாராம்.

மேற்சொன்னபடியெல்லாம் பசையற்ற நூற்களெழுதவதே பரம சாம்ப் ராஜயங்கொடுப்பது என்று பலவகையாலும் தப்பபிப்பிராயம் கொண்டு அவ ற்றையே எழுதி அவற்றையே ஆதரித்து அனர்த்த மாகாமலும் நல்லநூல் களுக்கு இல்லாத அர்த்தங்களைக்கற்பித்து இழிநரகுக்காளாகாமலும் நாம் நம் இலக்கியத்தை அபிவிர்த்தி செய்வோமாயின் அஃதே நம் தருமத் தாபனங்க ளெல்லாவற்றினுக்கும் உயிரைத்தந்து உணர்ச்சியைக்கொடுத்து உத்தம வழிக்கு உரிமையாக்கி விடும்.

நமது தருமத்தாபனங்கள் முக்கியமாக நான்கு வகுப்புகளில் அடங்கு மென்று எனக்குத் தோன்றுகின்றது. அவையாவன:—தேவஸ்தானங்கள், மடாலயங்கள், சீர்திருத்தச் சங்கங்கள், அன்னதானம் முதலிய தர்மச் சாலைகளாம்.

முதலாவது தேவஸ்தானங்கள்:—கடவுளை வழிபடுதற்குக் காசினியோர் க்குப் பொதுவாகிய கடவுளாலயங்கள் எங்கும் விளங்க வேண்டுமென்பதை எவர்தாம் மறுக்கக்கூடும்! ஆதிகாலந்தொட்டு இற்றை நாள் வரைக்கும் உல கத்தின் ஒவ்வொரு பாகத்திலும் சைவர்களுக்கும் வைணவர்களுக்கும், கிறிஸ் தவர்களுக்கும் மகமதியர்களுக்கும், ஆரிய சமாஜத்தாருக்கும் பிரம்ஹ சமாஜத்தாருக்கும், ஒவ்வொரு ஜாதியாருக்கும், ஒவ்வொரு மதத்தாருக் கும், கோயில்களில்லாமலும், குருவுபதேசங்களில்லாமலும், தின்பதுந்திரி வது மாத்திரமா யிருந்தால், இப்பூவுலக முழுவதும், பிசாசுதிரியும் பிணவ றைபோ லாகி, உண்ணக் கொள்கைகள் ஒரு சேர ஒழிந்து மிருகத்திலும் இழிவடைந்த மானிட மிருகங்களாய்த் திரிந்திருப்பார்க ளென்பது கரதலா மலகமே யாகும். கோயில்கள் விவகாரங்களிலும் தேவஸ்தான பூஜானுஷ்டா னங்களிலும் ஞானம் வீளைத்து பக்தி பெருக்கி மனிதர்களுடைய மூ ஹு பாவங்களையும் மன நிலைமைகளையும் ஒழுங்குபடுத்தலில்லாத குறையிலேலை பெருமாள் கோயிலில் பிரசாதமும், சிவன் கோயிலில் தூங்கலுமேயன்றி வேறொன்றும் விளங்கவில்லை! ஆழ்வாராதிகளும் பூர்வாசார்யர்களும் பிரபந் தங்களும் வியாக்கியானங்களும் பிரபலமாகக் கொடுத்திருக்க, நால்வர்களும், சைவ சமயாசாரியர்களும், தேவாரதிருவாசகாதிகளைத்திருத்தமாப்ந் தந்தி ருக்க, அவைகளை ஏன் நித்ய சந்நிதானங்களில் சோட்டிப் பாராட்டலாகாது? வைணவ சந்நிதிகளில் பாட்டுக்கு அர்த்தம் பார்க்கா விடினும் பரிபாஷையை மாத்திரம் விடுவதில்லை. "வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல்" என்று அச்சிட் டபுத்தகத்தில் "பட்டப்பரக்க"க்கூறி யிருக்கவும், "வாழாட்பட்டு நின்னீருள் ளீரேல்" என்று ஏன் கதறவேண்டும்? "செய்கின்னேன், என்கின்னேன், வருகின்னேன், போகின்னேன்" என்று வழக்கத்தால் பிராமணர்கள் சொ ன்னார்களேனும், அவ்வழிபயிலாத மற்றையோர்களும் ஏன் அதையே பின் பற்றி, வீம்புக்கு வேட்டையாடி, விருதாவில் காலொடித்துக்கொள்ளவேண் டும்? சேவாகாலத்தில் பெருமாள்கோயில்களில் செந்தமிழ்ப்பிரபந்தங்களைச் சீர்பெறவே பாடுவதில்லை. தமிழ்! தமிழ்! ஆ! அந்த சந்தம் மிருத்து, ஆனந் தப்பெருக்கும் அமிர்தப்பிரவாகமும் எங்கெங்கும் விளைத்து, இணையில்லாச்

சீர்த்தி பெற்ற இன் தமிழ், பொன் தமிழ்! இனிமை யென்னும் பொருளே யே இடையறாது கைக்கொண்டு நினைத்தோர் நிலைமையை நிமிஷத்தில் மேலாக்கி, மனதைக்கரைத்து, வினையைக்கெடுத்து மாண்புறச்செய்யும் மன்னவன் தமிழ், தென்னவன் தமிழ்! வீணையிலொலிக்கும் வியன்றமிழ், சில் லென விசைக்கும் நல்ல செந்தமிழ்! முத்து முத்தான பதங்களும், சத்து சத் தான பொருள்களும், கானமாகிய கமலத்தின் சாரமாகிய ஜிலுஜிலுப்பை ஊனமாகிய கண்ணிரண்டுங்கண்டு உளங்குளிரும் வண்ணம், மேனியெங்கும் பூண்டு மோனமுற்றிருப்பதும்—என்ன விந்தை! நந்தமிழ், செந்தமிழ் கண் டென வினிக்கு மொழி, கம்பன் சொல் சிறக்குமொழி, காதலித்தோர் மனத் தையெல்லாம், விண்டென வுருக்குமொழி, வீறுடனே பெருக்குமொழி வில்லிபுத்தூர்க் கோதை மொழியே, உண்டென வணர்த்து மொழி மூவர் மொழி நால்வர் மொழி குருகூர னுரைத்த மொழியோ, பண்டென மெய்ப் பழுத்தவர்க்கு வேதாந்தப் பழம் காட்டிப் பாகதியிலுய்க்கு மொழியே.

இத்தகைய தமிழைத் தமிழாய்ப்பேசுவோரும் தாறுமாறாக அதை வேறு வேறுக்கி விருத்தஞ்செய்வது விரும்புத்தக்க காரியமன்று. வைணவ ஆலயங் களிலானாலும் சரி, சைவ ஆலயங்களிலானாலும் சரி, அக்கரையோடு சர்க்க ரைப் பொங்கலேத்தின்று, ஒங்கிய தூக்கம் பாங்குடன் தூங்கி, உள்ளச் சூரி யன் உதயமாகாதவண்ணம், பள்ளத்திற் படிந்து பாழாய்ப்போவதே ஸ்ரீவை குண்டம் திருக்கைலாயம் என்றுசிந்திப்பதை விட்டு, ஞானநூலாராய்ச்சியும், Theology என்கிறதேவநூற்போதனையும், உண்டாக்கி கட்டுப்படாத கடவுள் எட்டப்படாதிருப்பினும், எங்கெங்கும் பாய்ந்து சிங்காரம் புரியும் சிறப்பைக் கூறும் Doctrine of the Absolute என்னும் தத்துவக்கொள்கையில் தலை யைச்செலுத்திஞல் அஃது எவ்வளவு அழகாயிருக்கும்? கல்வி, கல்வி! கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சைபுகினும் கற்கை நன்றே—என்று கதறினர், கதறினர், தொண்டை போமளவுங் கதறினர், அண்டை அயலைப் பார்த்துக் கொண்டகொள்கையைமாற்றாத பண்டைகாலத்துப் பாண்டியமன்னர்! ஈண் டிக்காலத்தும் வேண்டிய அளவு கல்வியைத் தோண்டிக்கொடுக்கப் பாண்டித் துரைமன்னர்பிரான் பூண்டகங்கணம் பூண்டேயிருக்கவும் அதையொருவரும் கவனியாதும், அதன் மூலமாக வேண்டுமளவும் நன்மையை விருத்திசெய்யா மலும், அவர்கொண்ட நன்முயற்சியைப் பின்பற்றுமலும், வாளாவிருத்தல் வகைதொகையற்ற காரியமல்லவா? தருமத்தலைமை வாய்ந்தது அருமையான கல்வியைத்தவிர அகிலத்தில் வேறொன்றும் கிடையாது தேவாலயங்களில் திருத்தமான கல்வியைப் பெருக்கி, ஞானத்தை அபிவிர்த்தி செய்வதே நல்ல காரியமாகும். பெருமாள் கோயிலில் ஞாபகத்திற்காகவாயினும், சேவா காலம்நடைபெற்று வருகின்றது. சந்தத்தில்பிழை, சங்கீதத்தில்குறை (One completely discordant Babel of sounds) அர்த்தமென்பது அடியோ டே ஸைபர் (cipher)! எத்தனை ஆபாஸம் எண்ணிலாதனவா யிருந்த போ திலும், உள்ள நூலுக்கு உயிர்த் தண்ணீராவது வார்த்து, புல் மூளைத்துப் போகாமல் பொருளையாவது உருவாய் வைத்திருக்கிறார்கள். அங்கே பகி

யோடே செய்யுஞ் சேவாகாலம் பரபரப்பாயிருக்கும். வண்ணமாடங்கள், பே
ணிச்சீருடை, வாடினேன் வாடி, ஓடினேன் ஓடி, கண்ணிநுண் சிறுத்தாம்பு,
என்று அஃது விரைந்து செல்லும்! அச்சமயம் முதல்பாட்டு முதலும் கடை
சிப்பாட்டுக்கடையும், அங்கும் இங்கும், ஒழித்தும் கழித்தும், இரைத்தும் பறத்
தும் ஓடிச்சென்றே பாடிச்செல்வது பசியோடே செய்யும் சேவாகாலத்தின்
இயற்கையாம். வயிறு நிறைந்து, எப்பம்வந்து, சந்தனம் பூசி, விசிறிகைக்
கொண்டு, மூச்சைவிடவும் மூக்காணம் போடுஞ் சமயத்தில், "வாழாட்பட்டு
நின்னீருள்ளீரேல்" என்று சொல்வதாலும், அதை அளவு கடந்து இழுத்
து, அளபெடை ஆயிரமாகவாயினும் வைத்து நீட்டுக்கூச்சல் நிகள ஓய்ச்ச
லோடு புரிவார்கள் "ஆவியுமொற்றுமளவுந்நிசைத்தலும் மேவுமிசைவிளி
பண்ட மாற்றுதியின்" என்ற நன்னூற் சூத்திரத்தின் பொருள் நன்றாக அப்
போது அறியலாகும். இஃதிங்ஙனமாக, சிவன் கோயிலில் ஜீவன் இல்லாதது
போலும், சிறப்பே இறப்பெடுத்தது போலும், ஆனந்தமென்பது அற நீங்கி
னதுபோலும், அறிவை வளர்க்கும் ஆவலே அற்றொழிந்தது போலும் தமிழ்
வேத பாராயணமென்பதே தலைகாட்டா தொளித்துவிட்டது. தமிழ்வேதம்
மாத்திரமா, அங்கு வடமொழியும் பயிலலில்லை, தென்மொழியும் ஒளிர்த
லில்லை. இந்த நிலைமையிலிருக்கும் நமது வைணவ சைவ தேவாலய தர்ம
ஸ்தாபனங்களின் வருவாயில் ஒருபாகம்— தேவசம்பந்தமான கல்வியைப்
பெருக்கி ஞானத்தை வளர்த்தலிலும், தேவ வழிபாட்டிற்காகக் கான உணர்ச்
சியை ஈனமில்லாது மூறைப்படுத்திப் பக்தியை உண்டாக்குதலிலும்—மே
வருவாயில் குறித்த ஒருபாகத்தை உபயோகப் படுத்துவார்களாயின், எவ்வ
ளவு சிறப்புண்டாக்கும்? அவ்வாறு செய்வது நம்மை உன்னத நிலைமையிற்
புகுத்தி, உயர்வான எண்ணத்தை நமக்குள் உண்டாக்கி அற்புதம் விளக்கும்.
தேவதத்துவ சாஸ்திரிகள் எத்தனை பேர் மேஜூட்டில், B. D. க்களென்
றும் D. D. க்களென்றும் விளங்குகின்றார்கள்? இவர்களெல்லாரும் தேவ
வழிபாட்டிற்கென்றே தெரிந்தெடுக்கப்பட்டு, தேவசாஸ்திர திவ்ய உபதேசத்
திற்கன்றே விஞ்ஞான சாஸ்திரங்களில் வித்வத்தன்மையடைந்து, கான
சாஸ்திரம் கைவரப்பெற்று பக்திப் பெருவலையைப் பரப்பி வருகின்றார்கள்!
ஏன் நம்மூர் தேவாலயங்களில் மாத்திரம் அந்தோ, அஞ்ஞானத்தை
வளர்க்க நம்மனோர் அதிகஷ்டப்படவேண்டும்? களங்கத்தை அகற்றுவதற்
குக் கல்வி அவசியமாவதுபோலவே, இறைவனை வழிபடுதற்கு இசையுணர்ச்சி
இன்றியமையாததாகும். ஹா! கீதம், சங்கீதம்! வேதனையகற்றிப் போதனை
புகட்டி நாதனைக் காட்டுவது நல்ல சங்கீதசீமையாகும். ஒமக்கனற்கும் யாகச்
செயற்கும் ஒரு வழிப்படாது ஓடியாடும் குரங்குமனம், தீர்த்தத்திலும்
திருவீழாவாலும் சிங்கை தெளியாச் சீர்கெட்ட நெஞ்சம்—இக்குறைவெல்
லாம் ஆங்கு நின்றும், கானம் கேட்டவுடன் போனவழி தெரியாது போயே
விடும். வேதநாதர், சாமகீதம், செந்தமிழின் சுந்தரவொலி, பூவாரமென்னப்
புலவர்போற்றும் தேவாரத்தன் திருந்தியநாதம், பண்ணின் பயனே விண்ணி
னின்றிழிந்த தெனப் பாவலர் மகிழும் பாகவதர் திருமொழி—நாவலர் மொழி
பாவலர்மொழி இவையெல்லாம் இசையைப்பொருந்தி இசையுற்றிருக்கின்

றன. இசையில்லாவிடின் இரக்கமேது? இசையில்லாவிடின் மனவுருக்க மேது? இசையில்லாவிடின் இன்பமேது? இசையில்லாவிடின் இனிமை யேது? இசையில்லாவிடின் பக்தியேது? இசையில்லாவிடின் செய்வதைச் செய்ய வல்ல சக்தியேது? இதைப்பற்றித்தான் இரும் புகழ்படைத்த பெருந் தகைப் புலவராகிய ஷேக்ஸ்பியரென்பார், யாவனொருவன் தன்னிடம் சங் கீதமில்லாமலிருக்கின்றானே, யாவனொருவன் தன்னிடம் சங்கீதமில்லாம லிருந்தாலும் இதரான் பாடும்போது உண்டாகும் இன்னிசைத் தொகுப் பால் இதயங் கனியா திருக்கின்றானே, அவன் ராஜத்துரோகத்திற்கும், சதிசர்ப்பனைகளுக்கும் தக்கவனாவான்— என்று உறுதிமொழியாக உண் மையைக் கூறுகிறார். யோகானுபவத்தால் கடவுளுடன் ஏகானுபவத்தைத் தரவல்லது போகானுபவத்திற் கென்றெடுத்த ராகானுபவமே யென்பதன் பொருளைக்கார்லைல் என்பாரும் ஹெல்ம் ஹோல்ட்ஸ் என்பாரும் களக்க மறச் சொல்லி விளக்கைக் காட்டுகிறார்கள். கீதையருளிய கண்ணன் கூட, கீதத்தாலன்றே போதங்கொடுத்தான்! கீதையுபதேசிக்கும் போது சொல் வான்வேறு, கேட்பான் வேறு. அதரக்கனியில் ஆதரங்காட்டிஇனிய குழ லோங்கு இசையப் பொருத்தினபோது, ஸர்வம் பிரம்ஹமயம் என்று சக லமும் ஒன்றாயின. மாடும் நின்றுவிட்டது; மரமும் அயர்ந்துவிட்டது; பறவைகள் யாவும் சிறகைமூடி, இருந்த மரங்களில் இருந்தே விட்டன! பேச்சுமில்லை, மூச்சுமில்லை! இவ்வளவு மேன்மை வாய்ந்த இனிய நற்கீதத் திற்கு இயைந்த சுருதிதான் யாது? நிச்சப்தம் எங்கும்; நிர்மலம் எங்கும்; நிஷ்களம் எங்கும்! வெந்தடியிட்டுச் சிந்தையை நொந்தடி செய்யும் பொல் லாச் சந்தடியில்லாத இயற்கைச் சமாதானமே அதற்கு இயைந்த சுருதியாய் விளங்கிற்று. இதற்குக்காரணம் யாது? மனக்கனிவே! மனக்கவர்வே! சித் தத்தை ஈசன்பால் நாட்ட ஒத்ததுணைவன் உறுதியுள்ள சங்கீதமேயாகும். நல்ல இசையை நாகரீக வல்லவன் பாடும்போது தத்துவம் பேசவும் மனம் வராது, தாளம் போடவும் மனம்வராது. "காதிஷ்வ டாதிஷ்வ பாதிபஞ்ச யாத் யஷ்ட" முதலிய சங்கீத சாஸ்திரப் பேச்சுக்களால் சிங்காரப் படுத்துவோருங் கூட சித்தத்தைக் கவாவல்ல சிறந்த புலவன்முன் வாயோய்ந்து கையோய்ந்து பேச்சோய்ந்து, மூச்சோய்ந்து அசையாப் பதுமைபோல் ஆகாயம் பார்ப்பார் கள்! இது பற்றித்தான் சம்பந்தரும் தாளம்தட்டிப் பாடினார், ஆழ்வார்களும் ராகத்தழுத்தியே பாடினார்கள்! இவ்வுண்மையறிந்து நம் தேவஸ்தானதிகாரி கள், தேவசாஸ்திரப் பயிற்சியும் கானசாஸ்திரப் பயிற்சியும் தேவஸ்தானங்க ளில் திருத்தமாயுண்டாக்குவார்களாயின் அஃது தற்காலத்துள்ள பெரிய குறைவை நிறைவு படுத்தினதேயாகும். பக்தியைப் பெருக்குவது மாத்திர மன்று, சங்கீதத்தாலுண்டாகும் சாதகம். இலக்கிய நடைக்கும் இசையே துணையாகும், சங்கீத ஞானமில்லாதவன் வாக்கியங்கள் சங்கடப்பட்டே நிற் கும் என்கிறார் டிக்வின்விப்புலவர் (His Essay on Style) வசன நடைக்கே சங்கீதம் வாகான துணையாகும் பக்ஷத்தில், செய்யுள் நடை (Poetry and Poetic Prose)—இவைகளுக்கு இசையாலேற்படும் உதவி எவ்வளவென்று சொல்ல எவராலாகும்? கற்பனைசக்தியும் கானரசமும் பொருந்தி, சொற்பொ

லிவும் சுந்தரத் தோற்றமும் உண்டாய் விடின், செய்யுளும் பாட்டுதான் வசனமும் பாட்டுதான்—இதுபற்றியே (Poetic Prose) என்பதுண்டென இயம்புவர் அறிஞர். "Sydney, Warbler of Poetic Prose!" என்று ஆதரக்கதறல் கதறினர், அறிஞரான Cowper என்பார். நிற்க, சாதாரணமாய், செய்யுளாகிற பாட்டுக்கும், கீதமாகிற பாட்டுக்கும் உள்ள ஒற்றுமையை நாம் சற்று நோக்கும்போது, எல்லாம் தெளிவாகின்றது. விருத்தங்களில் சாதாரணமாய் நாற்சீருடையனமுதல் எண்சீருடையன வரைக்குமே மேன்மையுடையனவாய்க் கருதப்படுகின்றன. ஐஞ்சீர்விருத்தமாகிற கலிநிலைத்துறைக்கும் ஐந்து அக்ஷரகால ரூபக தாளத்திற்கும், அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தத்திற்கும், ஆறு அக்ஷரகால ரூபக தாளத்திற்கும், எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தத்திற்கும், எழு அக்ஷரகால திரிபுடை தாளத்திற்கும், எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தித்திற்கும் எட்டு அக்ஷரகால சதுஸ்ர ஜாதி திரிபுடைதாளமென்கிற ஆதி தாளத்திற்கும் உண்டாயிருக்கிற சம்பந்தத்தையும் பொருத்தத்தையும் நாம் யோசித்துச் கவனிக்கும் பக்ஷத்தில் இவை யொன்றிற்கொன்று எவ்வளவு ஒத்தாசையுள்ளனவாயிருக்கின்றதென்பது விளங்காது போகாது. விருக்கிற் பெருகுமாதல்பற்றி இதோடு விடுத்தோம். தருமத்தாபனங்களில், தேவாலயங்களைப் பற்றி இதுவரை சிறிது கூறினேமாக, இனி இரண்டாவதாகிய மடாலயங்களைப் பற்றி இப்போது சிறிது பேச வேண்டியதிருக்கிறது. தருமத் தாபனங்களனைத்திற்கும் தலைமையாக நிற்பது கல்வியே, கல்வியைத் தவிரவேறின்று என்பது என்றுடைய அபிப்பிராயம். பொன்னின்றூனம், பூவையர் தானம் எல்லாவற்றைக் காட்டிலும் அன்னதானமே அதி சிறந்த தானமென்று அறிவோர் சொல்ல அனந்தம் தடவை கேட்டிருக்கின்றேன். ஆயினும் ஊன்றி ஆலோசித்து உற்று நோக்குங்கால் அனைத்தாகும் தானங்களிலும் அறிவின் தானமே அதிகமாய்ச் சிறந்ததென்பது அனைவோர்க்கும் விளங்காது போகாது. இறைக்க இறைக்கச் சுரக்கும் ஊற்றைப்போலக் கொடுக்கக் கொடுக்கப் பெருகும் கல்வி அபிவிர்த்தியை நாட வேண்டியவர்கள் மடாதிபதிகளேயாவர். கல்வியென்பது ஓர் பெருங்கோட்டை. காவலிட்ட வாயிலும் முதலேபாய்ந்த அகழியும் பொறிகள் வைத்த வழிகளும் ஆபத்தைத் தருவதாய் அனேகம் அங்கிருக்கின்றன. ஆயினும் ஆங்கு உள்ளே தோன்றும் உத்தியான வனங்களும், கூடமும், மாடமும், மச்சும், மாளிகையும், சோலைகளும் சாலைகளும் அனேகம் சிங்காரத்தோடே அங்கு சிறப்பாய் விளங்குகின்றன. கல்வியாகிய அரண்மனையில் கணக்கில்லா திருக்கிற சித்திரங்களையும் விசித்திரங்களையும் பாதுகாப்பில் வைத்து, அவ்வவைகளின் தன்மைகளையும் பெருமைகளையும் போதிக்க வேண்டுவோர் மடாதிபதிகளே யாவர். ஆங்குகாணப்படும் அரியதொரு பூந்தோட்டம் செந்தமிழுக் குரியதாய்ச் செம்மையுடன் விளங்குகின்றது. * அப்

---

* இத்தோட்ட வர்ணனை இவ்வுபந்யாசகாது மற்றோருபந்யாசத்தினின்றும் எண்டு எடுத்தாளப்பட்டது.

பூங்காவினுட்புறத்தி லேர்பால் அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், மந்தா ரம், பாரிஜாதம் என்னும் வந்திக்கத் தக்க ஐந்துபெரும் விருக்ஷங்களாய் ஐம் பெருங் காப்பியங்கள் விளங்குகின்றன. அவைகளே சீவகசிந்தாமணி, சிலப் பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன. அவைகளின் நிழலில் கொழுத்துத் தழைத்துப் பூத்துப் பழுத்த அனேகஞ் செடிகளும் கொடிகளும் மரங்களும் காணப்படுகின்றன. இவ்வித அற்புதமாகும் பொற் பிலே விட்டு, இன்னேர் புறஞ்செல்லவும், அங்கே மனதையியூத்து மாயஞ் செய்து, சல்லாபஞ் செய்யும் பொல்லாத மல்லிகையாகவும், இல்லையே என் னுத முல்லைப் பூவாகவும், சோகந்தீர்க்கும் அசோகமாகவும், ஏதம் நீங்க ஓதி னூர் தம்மையும் வாதனை செய்யும் சூதமாகவும், காமரை வெருட்டும் தாமரை யாகவும் கன்மனம் படைத்த மன்மதனுடைய பஞ்சபாண ஸ்வரூபங்களாய்க் கோவைத்துறைகளும் பற்பல கீர்த்தனைப் பதங்களும் குவிந்து கிடக்கின்றன. இழுத்த மனதையும் அழைத்துக் கொண்டே பிறிதொரு பக்கம் போக அவ் விடத்திலே என்னையும் விழுங்கி என்மனதையும் விழுங்குவேனென்று நன் றேயியற்றும் கொன்றை மலராகவும் களவு செய்த கண்ணனைக்காண உளவு காட்டி உறுதி கூறும் துளவச்செடியாகவும் ஆத்தியாகவும் அலரியாகவும் பத்திரமாகவும் புஷ்பமாகவும் பற்பலவிதமாய் உற்பவித்து விளங்கும் திவ்வி யப் பிரபந்தமும், திருவாசகமும், தேவாரமும், திருவருட்பாவுமாய் அனே கம் தரிசனமாகின்றன! ஆங்கு நின்றும் சற்றுத்திரும்பினால் அப்பூந்தோட் டத்தின் நடுமையத்தில் ஆலமரம் போன்று பெரிய விருக்ஷமொன்று தெரி கிறது. அதை நோ அண்ணாந்து பார்த்தால், ஆகாயத்தை அளாவுகின்றது, குனிந்து பார்த்தால், பாதாளத்தளவுஞ் சென்று முன்னரும் பின்னருமாக வேரோடிப்போய், பூமியிற்பரந்த சாமியை ஒத்திருக்கின்றது. அதனிடம் எல்லாப் பூக்களும் உல்லாசமாய்ப் படர்ந்து சொல்லவொண்ணா அழ கைத் தருகின்றன. அதன் அடிவாரத்தில் குழிந்து இழிந்த பள்ளமானது ஜலாதாரங்கொண்டு நிலாவுதலால் ஆங்கே கமலமும் குமுதமும் விமலமாய் விளங்கவும், அம்மரத்தின் உடலிலும் கிளையிலும் இலையிலும் விழுதிலும் தொத்தித் தொடர்ந்து பற்றிப் படர்ந்து எல்லாப் பூக்களும் உல்லாசமாய்ப் பரிமளிக்கவும் போதும் போதாததற்கு ஆகாயத்தில் விளங்கும் அழகிய நக்ஷத் திரங்களும் மரத்தினுடைய அதிகப் பிரகாசமான பூக்களாய்ச் சொலிக்கவும், எல்லா வனப்புகளுமமைந்த அவ்வரிய பெரிய மரமே தனக்கு ஒப்பாரும் மிக் காரும் இல்லையென்னும்படி ஒங்கி யுலகளந்த தீங்கவிக் கம்பனுமது.

நமது தீந்தமிழ்ப் பூந்தோட்டம் இவ்வாறு சீர்பெற்று சிறப்பமைந்தி ருந்த போதிலும் அங்கங்கே மூள்ளம் முருடும் கல்லுங் காடுமாகப் பண்படுத் தவாருமின்றிப் பாதுகாப்பாருமின்றி நிறைவற்றுக் குறைவுற்றிருக்கிறது. கல்வி யாண்மையிற் காணப்படும் விஞ்ஞான சாஸ்திர விளக்கம், தேச சரித்திர நூலாராய்ச்சி, Critical works என்கிற நூலாராய்ச்சி வியாசங் கள், ஆவல் வீளக்கும் நாவல்கள், இவைபோல்வனவற்றால் நம் உத்தியான வனத்தை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வந்தால் அதனுடைய அழகும் அமைதியும் இன்னவெனச் சொல்லலாகாதபடி மேன்மையுற்று விளங்கும்.

அவ்வாறு செய்வதில், 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே,' என்னும் பவணந்தியார் சூத்திரத்தின் கருத்தை யோர்ந்து, அதற்குத் தக்கபடி பண்டைய நடையில் கொண்டாட்டம் போடாது, காலத்திற் கிசைந்த கோலந்தாங்கி, அன்னிய நாட்டுச்சரக்குகளும் அவசியமாகிற படி அன்னிய பாஷைச் சொற்களையும் வேண்டிய இடங்களில் கொடுவந்து புகுத்தி நமது இலக்கியத்தை நாம் வீர்த்தி செய்யவேண்டும். அப்பொழுது ஏற்கெனவே அற்புதமான பொற்பினையுடைய நமது நந்தனவனத்தில் இப்போது நடப்போர் காலிற்கடிப்போமென்று இறைபட்டுக் கிடக்கும் முட்கள்ளெடுபட்டுப்போகும். திருத்தமான பாதைகளும் பொருத்தமான விளைதங்களும் எங்கு பார்த்தாலும் இங்கிதம் விளைக்கும். ஒரு புறம் குயில்கள் பாடவும், ஒரு புறம் மயில்களாடவும், மைனாக்குருவிகளும் 'மைடிங்கேல்'களும் இனிய குரலால் மதுரம் பயக்கவும் இலந்தையும் திராட்சையும், 'கொஸ்லிப்'புகளும், 'டாப்போடில்'களும், 'லிலி'க்களும், 'ரோஜா'க்களுமாக நமது பூங்கா ஒங்குவதைக் கண்டு அனைவர் மனதிலும் ஆனந்தம் உண்டாகும். இவ்வாறு அரிய செந்தமிழுக்கு ஆன இலக்கியங்களை நாலுவழிகளிலும் வீர்த்தி படுத்துவதற்குக் கற்றோர்க்கு அறிவை வளர்த்து மடாதிபதிகள் கல்விக்களஞ்சியத்திற்குக் கன உரிமை பூணல் வேண்டும். அப்போது மடாதிபதிகள் மடாதிபதிகளாகாது மடாதிபதிகளே யாவர். மடாதிபதிகளுடைய தொழில் இதை விட வேறு யாதென விளங்கவில்லை. விபூதி நாமமிட்டு, காவியுடுத்தும் தாடி வளர்த்தும், காதில் வளையமும் கையில் சுக்குமாத்தடியும் கொண்டு பல வேலி நிலத்திற்கும் லக்ஷக்கணக்கான ரூபாய்க்கும் அதிகாரஞ் செலுத்தி, வெள்ளிக்கட்டிலில் பட்டு மெத்தையிற் படுத்து, பன்னிரண்டு மணிக்குப் பூஜா மணியடித்து ஆசாவிகாரத்தை அதிகப்படுத்துவது மடாதிபதிகளின் தொழிலென விளங்கவில்லை. அகோரத்திற்கு லக்ஷம்பொன்னளித்த போஜராஜன் போன்ற புண்ணிய புருஷர்களில்லாத இக்காலத்தில் தாசிக்கென்றும் வேசிக்கென்றும் யானைகளுக்கென்றும் மடைப்பள்ளிப்பூனைகளுக்கென்றும் மடாதிபதிகள் பணத்தை வியயப்படுத்தாது, கல்வி வீர்த்திக்கென்றும் கற்றோர் ஆதரிப்புக்கென்றும் அவர்கள் கவனத்தை ஆதரவுடன் செலுத்துவார்களாயின் நமது தேசம் வெகு சீக்கிரம் நல்ல நிலைமைக்கு வந்து நமது கல்வி அதி துரிதத்தில் வீர்த்தி யடைந்து தருமம் வளர்ந்து தருமம் பிரகாசிக்கும்.

இதுவரைக்கும் நாம் தேவஸ்தான தருமஸ்தாபனங்களில் கல்வி வளர்ப்பது அவசியமென்பதையும், மடாதிபதிகளுடைய மாண்புள்ள கடமை கல்வியைப் பெருக்க வேண்டியதே யென்பதையும் ஒருவாறு கூறினோம். அன்னதான சமாஜங்களுக்கும் சத்திரம் சாவடி அமைத்தல் முதலியன செய்யும் தருமஸ்தாபனங்களுக்கும் கல்வியும் ஞானமும் கன அவசியமாகின்றன. "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்பது பழமொழி. 'சோம்பித்திரியேல்' என்பது மூதுமொழி. கையறுந்து, காலொடிந்து, கண்ணிழந்து, கருத்தழிந்து, மெய்வருந்துவோ ரெல்லாரும் உய்வழி காணுத மூலையில் வருந்த உடல்தடித்துக் குடல் பெருத்து, வம்புச்சண்டையில் வன்மைமிகுத்து, பாட்டுப் பாடித் தாட்

டியாய்த் திரிபவர்கள் வெகு சுலுவில் ஜீவனம் செய்வது விரும்பத்தக்கதன்று. ஆதலால் பட்டத்திற்கென்றும், படாடோபத்திற்கென்றும், பரத்தையர் கோலத்திற்கென்றும், பத்துலக்ஷமாயினும் செலவிடும் பணக்காரப் பிரபுக்கள் பற்பல ஆலைகளும் தொழிற்சாலைகளும் ஏற்படுத்தி எந்தெந்த வேலை எவரெவர் செய்யக்கூடுமோ, அந்தந்த வேலை அவரவர்க்கு நியமித்து, ஆதரவற்றிருப்பவர்களுக்கு ஆதரவளித்து, சக்தியுற்றிருப்பினும் தொழிலற்றிருப்பவர்க்கு வேலை கொடுத்து, வேதனை போக்கினால், எல்லாம் கருணையே, எல்லாம் இனிமையே, எல்லாம் நன்மையேயாக விளங்கும் இவ்வகுப்பிலடங்கிய தரும ஸ்தாபனங்களுக்கும் கல்வி அத்யாவசியமாகின்றது. வேலைச் சாலைகளில் விளக்கமாகும் யந்திர தந்திரங்களை (machines) நன்கறிந்து வேலைநடத்த விஞ்ஞான சாஸ்திரங்களாகிறவற்றை (Science) யறிவதும் முக்கியமான காரியமாகிறது. இவ்வாறு செய்வதால், தருமத்தாபனங்களிலேயே தனிவருவாய் நேரலும் பெரும்பாலும் அதனைக் கொண்டே அறத்தை நடத்தத் தருமம் நிலைத்துத் தழைத்தோங்கலும் ஆகும்.

இப்பொழுது நாம் பேசவேண்டிய இன்னொரு விஷயம் சீர்திருத்த ஸ்தாபனங்களைப் பற்றியது. சீர்திருத்த ஸ்தாபனங்களுண்டோ இலவோ எனக்குத் தெரியாது. அத்தகையன இல்லாவிட்டாலும் உடனே ஏற்பட வேண்டியது ஊருக்கு வேண்டிய உறுதியான அவசியம். நான் சீர்திருத்த சங்கத்தின் அங்கத்தவனுகாவிடினும் சீர்திருத்தக் கொள்கையையே சித்தத்தில் கொண்டவன். சீர்கெட்ட தேசத்தில் சீர்திருத்தம் வேண்டாமென்று எவர்தாம் சொல்லக்கூடும். ஒற்றுமை யென்பதேயின்றி சாதி நம்மைப் பாதியாக்க நம்மவர்கள் பாதியாகிய பெண்கள் பரிதாப நிலைமையடைந்து நம்மைப் பரதேசிகளாக்கிவிட்டது. ஜாதி வித்தியாசங்களென்னும் வீண் வித்தியாசங்கள் சாண்தூரமாவது அகன்று போனபிற்பாடுதான் நமது தேசம் சுதேசமாகும். 'தையல் சொற்கேளேல்' என்னும் தையல் சொல்லை நாம் சாதாரணமாய்க் கொள்ளும் வண்ணம் கொள்ளும் வரைக்கும் நாம் திமோற்ற மூற்றவர்களாய்த்தான் உருமாறிப்போக வேண்டும். இச்சீர்க்கேடுகள் இந்தியாவைக் கெடுக்க வந்த மாயாதேவியின் மாயச் செயலென்றே நாம் மனதில் கொள்ள வேண்டும். மாயாதேவி யென்பவள் மாயாஸ்வரூபி! காரமாகிய எண்ணமும்கோரமாகிய பேச்சுமுடையவள்! அவள் பயங்கரக்கோலம்பூண்ட பண்டோரா மாது (Pandora) அவள் எடுத்தாள் பெட்டியை, விடுத்தாள் ஏவலை! வடகலையும் தென்கலையும், சாதியும் பேதமும், சண்டையும் சச்சரவும் ஒற்றுமையை நீக்கி ஊரைப் பாழாக்கிற்று. ஜாதிபேதமும் சமய பேதமும் பெண்கள் நிலைமையும் உண்மையை மறைத்துஊரைக் கெடுத்தன! கருணையென்பது ஒழிந்தது; கள்ளமென்பது விளைந்தது! பொறுமை மிகுத்தது, பொய்வேஷம் பெருத்தது! கண்டாளிதைப் பண்டோராமாது! கல கலவெனச் சிரித்தாள், கக்கினாள் நெருப்பை, விட்டேனு இதோடென்று தட்டினாள் கையை! அந்தரங்கலங்கிற்று, ஆகாயம் நடுங்கிற்று! இடித்தன மேகம், துடித்தனநாடு! நல்லவை ஒதுங்கி நாசமாய்

விட்டன! வடகலை முட்டித் தென்கலையைத் தள்ளிற்று, தென்கலை யெழுந்து வடகலையை வதைத்தது! உள்ளுக்குள் சண்டை, ஊரெல்லாம் சண்டை. ஆ! மாயாதேவி! உன்மாயச் செயலை யென்னென்று சொல்லலாம்! பண்டோராப்பெட்டி செய்த பாழ்வினை யென்னென்போம்! பயங்கரமான பதங்கள்! Pandora's Box! Pandora's Box! சைவவைணவச் சண்டையும் சாதிபேதச் சண்டையும், சத்தியம் நீங்கிய பொய் வழக்குச் சண்டையும்! ஹா! ஹா! புற்றிலிருந்து ஈசல் புறப்படுவது போலவும் புதைபாணங்களொன்றின் பின் ஞெண்ரூகச் சரேலெனக் கிளம்பித் தடாலென வெடிப்பன போலவும் ஆகாத காரியங்களும் அடுக்காத செயல்களும் துடுக்காகத் தோன்றித் துயரம் விளைத்தன! மாயாதேவி உள்ளங்களித்தாள் உடலம் பூரித்தாள். 'ஐயும் கிலியும் ஆவும் சாவும்!' என்ரூள். 'சங்கரி புரஹரி கழுத்தரி' என்ரூள்! இவ்வித சீர் கோடான நிலையில் நல்லவர் நால்வர் நின்ரூரெதிரில். எடுத்தனர் ஜாலத்தைத் தொடுத்தனர் மந்திரம். பாம்பைவிட்டாள் பயங்காரமாது. பாட்டைவிட்டார் பாவலர் பெரியோர்! அயர்ந்தது பாம்பு, அடங்கிற்று விஷம்! பயங்காரமாது பல்லைக்கடித்தாள், அஞ்ஞானக்காற்றை அகோரமாய்ப் பெருக்கினாள்! அஃது விண்மாரியைக் கெடுத்து மண்மாரி பெய்து கண்மூடியாக்கி நம்மைக் கபோதிகளாக்கிற்று! சீர்திருத்தமென்னும் சிந்தை நோய் மருந்து ஆயிரந்தலையுள்ள ஆதிசேஷனாய் விளங்கி ஆகர்ஷித்தது அதனை! ஆவாரஞ் செய்த காற்று அடங்கிற்று முழுமையும்! ''நாற்றிசைகளிலும் அறிவை வளருங்கள், அன்பைப் பெருக்குங்கள், அதனாற் பொருத்தங்களேற்படும் திருத்தங்களுண்டாகும்! எல்லாத்தருமங்களும், எல்லாத்தாபனங்களும் உல்லாசங்கொண்டு உயர்வடைதற்குச் சல்லாபமான கல்வியும் சாத்திரமான நேத்திரமும் மிகவும் அவசியம். சீர்திருத்தக்காரர்கள் இதைச்சம்மையாயுணர்ந்து பாஷாபிவிர்த்தியில் முயன்று தேச இலக்கியங்களின் வன்மையைக் கொண்டு திருத்த முயலுவார்களானால் அன்றே அப்போதே அனைத்தும் கைகூடும்; இது சத்தியம், இது உண்மை!'' என்று நான்கு வேதங்களாகிய நால்வரும் ஏற்றமான மொழியியம்பி எத்திசையோ போயினர்!

ஆகலின், கனவான்களே, தனவான்களே! கற்றுணர்ந்தோரே, தர்மச்சிந்தையரே! தருமத்தாபனங்களெல்லாவற்றிற்கும் கல்வியே இன்றியமையாதது, கல்வியே கண்ணேத்திறந்து காசினிக்கெல்லாம் கவின் செய்வது! எல்லாத் தானங்களிலும் நமது சபா நாயகரவர்கள் கைக்கொண்ட கல்வித்தானமே உத்தமோத்தமமாவது! தருமத்தாபனங்களெல்லாவற்றையும் தக்கபடி நடத்தக்கல்வித் தாபனங்களும் அவைகளின் வழியாக இலக்கிய அபிவிர்த்தியும் இனிதினுண்டாகவேண்டும். அவ்வாரூயின், அழகும் ஆர்வமும் சீரும் சிறப்பும் செல்வமும் நாகரீகமும் அபரிமிதமாய் நமச்குக்கிடைக்கும். 'காக்கையின் கண்ணுக்குப் பீர்க்கம்பூ' என்கிறபடி, இப்போது பார்ப்பவர் கண்ணேப்பறித்து மாத்திரம் செல்லும் பீர்க்கம் பூவிற்கும் அப்போது பெருமணமுண்டாகும். இப்போது, காட்சிக்கு வினைதமேதரும் கடுகுப்பூவிற்கும் அப்போது கடிமணமேற்பட்டுக் கவினுற்று நிலாவும். மல்லிகைப் பெருமையை

யும் ரோஜாவின் சிறப்பையும் யாமெடுத்துரைக்கலாகுமோ? மந்தமாருதக் காற்றில் மலையமாருதாகம் படியவும், இரண்டையும் கலிழ்ந்து இருவாட்சியின் மணம் கம்மென்று சுற்றிக் கும் மென்று வீசவும், பூந்தாதுக்களோ பொன்தாதுக்குள் படிந்து நந்தனவன முழுதும் சுந்தரவனமாகவும், எங்கெங்கு பார்த்தாலும் இங்கிதமே தோன்றும். நவரத்னங்களும் குணரத்னங்களும் நளினச் சுடர் விட்டுத் தருமச்சுடர் விட்டுத் தருமம் தருமம் எங்கெங்கும் தருமமேவினங்கும்!

சைவ சமயாபிவிர்த்தி சபை,

பாளையங்கோட்டை.

பாலவநத்தம் ஜமீன்தாவர்கள்

ஸ்ரீமான். பொ. பாண்டித்துரைத் தேவர்களது தலைமையின் கீழ் நடந்த

கால் நூற்றண்டுக் கொண்டாட்ட சைவ மகா சங்கத்தில்,

1911-ம்வரு மேமீ 29உ நடந்த நிர்வாகசபைக் கூட்டம்.

(இருபாலாருமாக மூவாயிரவர் வீற்றிருந்தனர்.)

ஸ்ரீமான். N. A. V. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் B.A., B.L., தலைவர்

I. தீர்மானம். தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்கள் எல்லோரிடமும் சந்தா வசூல் செய்து வித்தியா சாலைகளில் கற்கும் மாணவர்களில் தமிழில் தேர்ச்சியுள்ளவர்களுக்கு ஜாதி, மத, சம்பந்தமன்னியில் பண உதவி Scholarships) செய்யவும், கலாசாலைகளை யடுத்துத் தமிழ் வாங்கிப்போர் யாவருக்கும் விடுதிகள் (Hostels) ஸ்தாபிக்கவும் தனித் தமிழ்க் கலாசாலைகள் ஏற்படும்பொழுது அதில் கற்கும் மாணவர்களுக்கு வேண்டும் உதவி செய்யவும் இது போன்ற தமிழ் மொழியின் விருத்திக்கும், தமிழ் மக்களின் கல்விக்கும், சாதகமான மற்ற ஏற்பாடுகள் செய்யவும் வேண்டும்.

கௌரவ (Hon.) S. T. ஷண்முகம் பிள்ளையவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான். M. S. பூரணலிங்கம் பிள்ளை B.A., L.T., அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீமதி. அலர்மேலுமங்கையம்மாள் அவர்களாலும் டிஸ்டிரிக்ட் முன்ஸீபு. J. M. நல்லசாமி பிள்ளை B.A., B.L., அவர்களாலும் ஆதரிக்கப்பட்டு பொது ஜன சம்மதமாய்த் தீர்மானிக்கலாயிற்று.

II. தீர்மானம். மடாலயங்களின் அறநிலைப் பொருட் பாதுகாப்பின் பொருட்டு திருவாவடுதுறை ஆதீன கர்த்தாவர்களிடமும் மற்றும் மடாதிபதிகளிடமும் நேரில் தெரிவித்தும் அவசியமானால் வியவகாரங்கள் செய்தும் (by representations and if necessary by legal steps) மடாலயங்களின் ஆதி. நோக்கம் நிறைவேறுமாறு வேண்டும் முயற்சிகள் செய்யவும் வேண்டும்.

அதற்காக வேண்டும் சந்தாக்கள் வசூல் செய்து நடவடிக்கைகள் நடத்தவும் இதனடியிற் கண்டவர்களைக் கமிட்டியாக இருக்க வேணுமென்றும் பின்னும் வேண்டியவர்களைச் சேர்த்துக் கொள்ளலாமென்றும் கேட்டுக் கொள்ளலாயிற்று.

ஸ்ரீமான். கௌரவ (Hon.) S. T. ஷண்முகம் பிள்ளையவர்கள், திவான், எட்டயாபுரம்.

,, பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள், ஜமீன்தார், பாலவநத்தம்.

,, சா. ரா. ம. மு. சி. த. பெத்தாச்சி செட்டியாரவர்கள்,
காஞ்சுகோத்தான்.

,, N. A. V. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் B.A., B.L., வக்கீல்
திருநெல்வேலி.

,, வள்ளல. சோ. சிவஞான தேசிகரவர்கள், பாளையங்கோட்டை.

,, S. பால்வண்ண முதலியாரவர்கள், திருநெல்வேலி.

,, V. P. காந்திமதிநாத பிள்ளையவர்கள் B.A., வக்கீல்,
அம்பா சமுத்திரம்.

,, S. T. பொன்னம்பலநாத முதலியாரவர்கள், வக்கீல்,
ஸ்ரீ வைகுண்டம்.

,, சுப்பிரமணியன் செட்டியாரவர்கள், சிவகமிட்டி மெம்பர்,
திருநெல்வேலி.

,, C. சடகோப பிள்ளையவர்கள், வக்கீல், திருநெல்வேலி.

ஸ்ரீமான் வள்ளல். சோ. சிவஞான தேசிகரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான். S. R. M. M. C. T. பெத்தாச்சி செட்டியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத் தேவரவர்களால் ஆதரிக்கப்பட்டுப் பொது ஜன சம்மதமாய்த் தீர்மானிக்கலாயிற்று.

III. தீர்மானம். துண்டுப் பத்திரிகை மூலமாயும், மாதாந்தரப் பத்திரிகை மூலமாயும், பாடப்புஸ்தகங்கள் மூலமாயும், சைவ விளக்கம் பரவச் செய்யவேண்டுமென்றும் அதற்காக அச்சியந்திரம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

ஸ்ரீமான். V. P. காந்திமதிநாத பிள்ளை B.A., அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான் S. T. பொன்னம்பலநாத முதலியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு டிஸ்டிரிக்டு முன்ஸீபு ஸ்ரீமான். J. M. கல்லசாமி பிள்ளை B.A., B.L., அவர்களால் ஆதரிக்கப்பட்டுப் பொது ஜன சம்மதமாய்த் தீர்மானிக்கலாயிற்று.

(Sd.) N. A. V. Somasundram, (Sd.) S. Palvanna Mudaliar.
தலைவர். [aliar.

,, S. T. Shanmugam. ,, S. T. Ponnambalanatha Mudaliar.

,, C. Sadagopa Pillai. ,, V. P. Kanthimathinatha Pillai

,, S. R. M. M. C. T. Pethachi Chetti. ,, V. S. Sivagnana Desigar.

,, P. Pandithorey.

(உண்மைப்பிரதி)

பாளையங்கோட்டை,
29—5—1911

V. S. சிவஞான தேசிகர்,
காரியதரிசி.

சிவமயம்.

சன்மார்க்கம்.

"முன்னெறியாகிய முதல்வன் முக்கண்ணன்
றன்னெறியே சரணதறிண்ணமே
யன்னெறியே சென்றங் கடைந்தவர்க்கெல்லா
நன்னெறியாவது நமச்சிவாயவே"

சத், மார்க்கம், என விரண்டுபதங்கள் சேர்ந்து சன்மார்க்கம் எனநிற்கும். இச்சொல் சத்துக்கு மார்க்கம், என விரிந்து, சத்துப்பொருளை யடையுமார்க்கம், எனவும் பொருள்தரும். என்பவே, சத்துப்பொருள் யாது? அதனையடையும் பொருள் யாது? யாண்டு நின்றும் அடையவேண்டுவது? என்பதே நாம் முதற் கண் ஆராய்ச்சி செய்யக் கிடப்பது. என்றைக்கு மூள்ள பொருள் எது? அதுவே சத்துப்பொருள். இதனையே "பண்டு மின்று மென்று மூள்ளபொருளென்று பல்லாண்டு கூறுதுமே", என விளக்கியதும். இப்பொருள், என்றும் ஒருபடித்தாயிருக்கும் பொருள். இதற்கு, ஒடுக்கந் தோற்ற மென்பதில்லை. இதுவே முழுமுதற்கடவுளாகிய சிவப்பொருள். இச்சிவத்தையே யிதன்றலைப்புத் தேவாரச்சுருதியில் 'முதல்வன்' 'முக்கண்ணன்' என்றுகூறியது. இதுபோலன்றி, உலகப் பொருள்களாகிய, ஏனைப்பொருள்கள், ஒடுங்கியும், மீளத்தோன்றியும், அவ்வாறே மாறி மாறித்தொழிற்பட்டும் வரும். இக்கருத்தினையே நமது ஆசாரிய சுவாமிகள் "தோற்ற முண்டேல் மரணமுண்டு" என்றருளிச்செய்ததும். இவ்வுலகப் பொருள்கள் காரணரூபத்தில், என்று மூள்ளவைகளே யாயினும், ஒருகாலத்துக் காரியரூபமாக வெளிபட்டுத் தோன்றும் காலம் வந்தழிக் காரணரூபமாக மறைந்தும் போம். ஆதலால் இவைகள் அசத்தெனவும், அநித்திய மெனவுங் கூறப்படும். ஜீவர்களாகிய நமக்குத் தனித்து நிற்குமியல்பு என்றுமில்லை. அசத்துப் பொருள்களைச் சார்ந்து நிற்போம். அவைகளைவிட்டு நீங்கியதும், சத்துப்பொளைச் சார்ந்து நிற்போம். அசத்துப்பொருளைச் சார்ந்து நிற்கும்போது அவற்றினியல்பாகிய தோற்ற வொடுக்கம், நம்மாட்டுங் காணப்படும். அவற்றைவிட்டு நீங்கிச்சத்துப் பொருளைச் சார்ந்ததும், அவற்றினியல்பாகிய, என்று மொருபடித்தாயிருக்குந்தன்மை, நம்மாட்டுங்காணப்படும். ஒருகாலத்துச் சத்தினியல்பும் ஒருகாலத்து, அசத்தினியல்பும், நம்மாட்டுக்காணப் படுதலால், நாம் சதசத்தெனப் படுவோம். சதசத்துப் பொருள்களாகிய நாம், அசத்துப் பொருள்களைச் சார்ந்து நிற்ப தொழிந்து, சத்துப்பொருளாகிய சிவப்பொருளையடையுமார்க்கமே, சன்மார்க்கமாம். இம்மார்க்கத்தினையே நமது ஆசாரிய சுவாமிகள் 'முன்னெறி'யென்றும், "முதல்வன் முக்கண்ணன் றன்னெறி" யென்றும் அருளிச்செய்தனர். இச்சன்மார்க்கமே, இன்றுசம்பாஷணைக்குஎடுத்துக்கொண்டவிஷயம்.

சத்துப்பொருளே யடைவது, சன்மார்க்கமெனக் கூறினேம். அதனை யடைய வேண்டுவதேன்? கூறுதும். ஜீவர்களாகிய நாம், சுகத்தையே விரும் புகிறோம். அச்சுகமும், என்றும் நிலைத்து நிற்க விரும்புகிறோம். அசத்துப் பொருள்களால் வருஞ்சுகம், அத்தன்மைத்தல்ல. அவைகளே துக்கத்திற் குங் காரணமாகின்றன. மனவி மக்களாதி சுற்றத்தாரால் நமக்கு வருஞ்சுக முமுண்டு. அவர்களால் நமக்கு வருந்துக்கமுமுண்டு. மாடமாளிகையாதி ஐஸ்வரியங்களால் நமக்கு வருஞ்சுகமுமுண்டு. அவைகளால் நமக்கு வருந் துக்கமுமுண்டு. "இன்பமுண்டேற் றுன்பமுண்டு, எழைமனை வாழ்க்கை" என்றார் நமது ஆசாரிய சுவாமிகள். இவ்வசத்துப் பொருள்களால் வருஞ் சுகத்தினுந்துக்கமே மிகுந்து நிற்கும். அச்சுகமும் என்றும் நிலைத்தவா றில்லே. சிறிதுகாலஞ் சுகத்தைத் தந்து வந்த மனைவிமக்கள், அதனைத் தாரா தே யொழியினு மொழிவர். மாறித் துக்கத்தையே தரினுந்தருவர். எனைப் பொருள்களுமப்படியே. அன்றியும், அப்பொருள்கள் ஒடுங்கிப் போங்காலத் தில், அவைகளால் வருஞ் சுகமுமின்றும். அவ்வாறொடுங்குவது மின்ன காலத் தென்பதுமில்லே. நீண்டகாலம் ஒருபொருள் நிற்குமென வெண்ணு கிறோம். கணப்பொழுதிலின்றுகின்றது. நல்ல விருகூத்தை யுண்டுபெண்ணி யதன் கனியை யுண்டு சுகிக்க, நீண்டகாலமாய், ஒருவன் எண்ணியிருக்கி ருன். திடீரென ஓர் சுழற்காற்று அதனை வீழ்த்துகின்றது. நல்ல புதல்வ னைப் பெற்று, இவன்றனக்கு நல்ல சுகத்தை தருவானென எதிர்பார்த்து நிற்கின்ருன், அவனுற் சுகங்கிடைக்கும் தருணத்தில், இவ்வுலக வாழ்க்கையி னின்றும் நீங்குகின்ருன்.

"உண்டுபோலின்ரு மூலகைத் திரமெனவுட்
கொண்டுநான் பெற்ற பலன் கூரய் பாபாமே"

என்றிரங்கினர் நமது தாயுமான சுவாமிகளும். நாங்கூறி வரும் ஸ்திரமின் மை, யிவ்வுலகப் பொருள்கட்கு மாத்திரமன்று. மறவுலக வாழ்க்கையு மிவ் வாறே. ஆண்டுள்ள இந்திராதி பதங்களுமிவ்வாறே. அவைகளும் ஸ்திரமல்ல. அவைகட்குமழிவுண்டு.

"நூறுகோடி பிரமர்க ளெந்தினர்
ஆறுகோடி நாராயண ரங்களே
ஏறு கங்கை மணலெண்ணிலிந்திரர்
ஈறிலாதவன் ஈசனொருவனே."

என்றருளிச் செய்தனர், நமது அப்பர் சுவாமிகளும். ஆதலால், இவ்வுலகத்தி லேனும் மறவுலகத்திலேனு முள்ள அசத்துப் பொருள்களால் வருஞ்சுகத் தில், நமக்குத் திருப்தி யென்பதேயில்லே. தனித்த சுகத்தையே, துக்கம் விரவாத சுயம்பு சுகத்தையே, என்றும் நிலைத்து நிற்குஞ் சுகத்தையே, நாம் எந்நாளும் பெற விரும்புகின்றோம்.

"துக்க மிக்க வாழ்க்கையின் சோர்வினைத் துறந்து நீர்
தக்கதோர் நெறியினைச் சார்தல் செய்யப்போதுமின்"

என்ற தமிழ்வேதச் சுருதியின் கருத்துமிதுவே.

அத்தன்மைத்தான சுகத்தைதரும்பொருள், சத்துப்பொரு ளொன்றே. அதற்கு மலமாயா கன்மங்களின், தொடர் பின்று. அதனைச் சார்ந்தார்க்கு மஃதின்றும். அதற்கு, அவற்றால் வருஞ் சுக துக்கங்களின்றும். அதனைச் சார்ந்தார்க்கு மின்றும். அதன்பாலுள்ள சுகம், அருளால் வீளையுஞ் சுகம். அது பரமானந்த சுகம். "சித்தத்துள் தித்திக்குந் தேன்" அச்சுகம். உலகிற் கிடைக்கு மெவ்வகைச் சுகங்களினு மிகவினியது. அதனையே

"கனியிலுங் கட்டிபட்ட கரும்பிலும்
பனி மலர்க்குழற் பாவை நல்லாரிலும்
தனிமுடி கவித்தாளு மரசிலு
மினியன்றன் னடைந்தார்க்கிடை மருதனே"

எனக்கூறுந் தமிழ்வேதம். அதனால் வருஞ்சுகம், நிறைந்த சுகம் "ஆனந்த பூர்த்தி" யதுவே. அச்சுகத்திற் கோளவில்லை. அது "சுகவாரி". அதனுட் படிந்தார் சுகக்கடலில் மூழ்கினராவர். அப்பொருட்டு அழிவென்பதே யில்லை. அதனால் வருஞ் சுகத்திற்கும், அஃதின்றும். அதற்குத் தேய்தல் வளர்தலில்லை. அதனால் வருஞ்சுகத்திற்கு மஃதில்லை. தன்பாலுள்ள சுகத்தைத் தன்னையடைந்தார்க்குதவும் வண்மை யதற்குண்டு. அன்பையே தனக்கு வடிவமாயுடையது. அதுவே தனது சத்தி

"அன்புஞ் சிவமுமிரண்டென்பரறிவிலார்
அன்பே சிவமாவதாருமறிந்திலர்"

என்பது திருமந்திரம். இதனையன்றி, சீவர்களாகிய நமக்கு நித்திய சுகத்தைக் கொடுப்பது வேறெது? இச்சுகத்தைப் பெறுதற்கன்றே,

"பத்தராருந்த பரமசுகம் யானருந்த
எத்தனைநாட் செல்லுமியம்பாய் பராபரமே"

என்று பரிந்திரங்கினர் நமது தாயுமான சுவாமிகளும். பிரமன் அன்ன வடிவாய் மேலேகிச் சென்றதும், விண்டுவாகவடிவாய்க் கீழ்நோக்கிச் சென்றதும், இச்சுகம் பெறுதற்கன்றே. இக்கருத்தினையே, ஸ்ரீவாசகப் பெருமான்

"ஒருத்தனே யுன்னை யோலமிட்டலறி
யுலகெலாந் தேடியுங்காணேன்"

என்றதும், நமதுதாயுமான சுவாமிகள்

"தேடினேன் றிக்கனைத்தும் தெண்ட னிட்டேன் சிந்தைநைந்து
வாடினேனென்மயக்க மாற்றாய் பராபரமே"

என்றதும். இத்தன்மைத்தான சத்துப்பொருளைத் தேடியடையு மார்க்கமன்றே உண்மைச் சன்மார்க்கம். இம்மார்க்கமன்றே துன்பக்கடலில் மூழ்கி வருந்துவார்க்குப் புகலிடமாய் நிற்பது,

"முன்னெறியாகிய முதல்வன் மூக்கண்ணன்
றன்னெறியே சரணதறிண்ணமே"

என்று இதன் தலைப்புச் சுருதியிற் கூறியது மிம்மார்க்கத்தையே.

சத்துப்பொருளொன்றே நித்தியானந்த சுகப்பொருளென்பது பொருந்தும். அது சிவப்பொருள். ஒன்றே யென்பதென்னே? சத்துப் பொருள் தவிர, ஏனையெல்லாப் பொருள்கட்கும், ஒடுக்கந்தோற்ற மூண்டெனக் கூறி னேம். அப்பொருள்கள், தனித்தனி வெவ்வேறு காலங்களில் ஒடுங்குவதோடு, அவையாவும், ஒருங்கே யொடுங்குங் காலமும் என்றாயினும் வரும். அக்காலம் வந்துழி, சர்வசம்மார கிருத்தியத்தை நேர்நின்றியற்றும் பொருள் ஒன்றே யொடுங்காது நிற்கும். அக்காலத்துப் பிறபொருளில்லை யாதலால், அவற் றைத் தான்றிட்டித்து நின்று சம்ஹாரம் நடத்துவ தென்பது மின்றாம். நேர் நின்று சர்வ சம்ஹாரம் நடத்தும் பொருளே, தானொடுக்கிய பொருள்களை மீளவும் தோற்றுவிக்கும். என்பவே; இச்சர்வ சம்ஹார கிருத்தியத்தை நேர் நின்று நடத்துதற்குரிய பொருள் யாதோ, அதுவே சத்துப்பொருளாம். சிவப்பொருளன்றி, பிரமவிட்ணு முதலிய ஏனைப் பொருள்களிலொன் றற்கேனு மவ்வாறியற்று மாறிமையாண்டும் கேட்கப்படவில்லை. சிவப் பொருளொன்றற்கே யவ்வரிமை யுளதென, எல்லாச் சுருதிகளும் கூறும். அதுவே நித்தியமாயுள்ள பொருள், அதுவே நித்தியானந்த பரமசுகத்தைத் தரும் பொருள்.

அச்சிவப் பொருளையடைய வேண்டுமென்னில், அதுதான் யாண்டுள் ளது? இவ்வுலகத்திலா? மறுவுலகத்திலா? இன்னவுலகத்தென்பது மில்லை, இன்ன விடத்தென்பதுமில்லை. "பார்க்குமிட மெங்கு மொரு நீக்கமறநிறைகி ன்ற பரிபூரணானந்த" மாயுள்ளது, அவ்வாறளதேல் அதனையடைவதென்ப தென்னை? அது எங்குமிருப்பினும், அதன்பால் நம்மறிவிச்சை செயல்கள் நிலைத்து நிற்பதில்லை அவையாவும் அசத்துப் பொருள்களின்பாலே நிலைபே றுடையன. அசத்தினையே யறிகிறோம். அதனையேயிச்சிக்கிறோம். அதன் பாலே நஞ்செயல் நிகழும். நமதறிவிச்சை செயல்கள் அசத்தின்பால் மூற்றும் நிகழும்போது சத்தின்பால் ஒரு சிறிதும் நிகழ்தலில்லை. அவ்வறிவிச்சை செயல்களைச் சத்தின்பால் செலுத்துதலே யதனையடையு மார்க்கம். இதுவே சன்மார்க்கம்.

ஒரு பொருளின்பால், அறிவிச்சை செயல்களை நிறுத்துதலேயதனை யடைதலென்றோம். ஜீவர்கட்கும் அறிவிச்சை செயல்களுண்டேல், அவை கள் சத்தின்பாற் சாராது நிற்பதென்னை? ஜீவர்களாகிய நமக்கு அறிவிச்சை செயல்க ளியற்கையே யுண்டு. ஆனல் ஏகதேசப் பட்டவைகளே. ஒருகா லத்து, ஒன்றனையே யறிகிறோம், ஒன்றனையே யிச்சிக்கிறோம், ஒன்றனையே செய்கிறோம். எல்லாப் பொருள்களையு மொருங்கே யறிந்து, ஒருங்கே யிச்சித்து, எல்லாச் செயல்களையு மொருங்கே செய்யும், வியாபக அறி விச்சை செயல்கள் நமக்கொன்று மில்லை. அவைகள் சிவப்பொருளொன் றற்கே யெந்நாளுமுள. அன்றியும், அச்சிவப்பொருளின் அறிவிச்சை செ யல்கட்கு எக்காலமும் நிகழ்ச்சியுண்டு. அது போலன்றி ஜீவர்களினறி விச்சை செயல்கள், துவக்கத்தில், ஆணவ மலத்தாற்றடைபட்டு யாதொரு நிகழ்ச்சியுமின்றிக் கிடந்தன. அத்தடை நீங்கிஞலன்றி, யவ்வறிவிச்சை செ

யல்கள், சத்தின்பாற் சாரா. அத்தடை நீக்குதற்கேற்ற சத்தாகிய சிவப் பொருள், மாயையினின்றுந் தனுகரணாதிகளைச் சிருட்டித்து ஜீவர்கட்குக் கூட்டுவிக்கும். கூட்டுவிக்கவும், அந்நிகழ்ச்சி சத்தின்பாற் செல்லாதாயினும், கூட்டுவிக்கப்பட்ட தனுகரணாதிகளாகிய அசத்துப் பொருள்களின்பாற் செல்வதாகும். அவ்வசத்துப் பொருள்களே, ஜீவர்களைப் பந்தித்துள்ள மலத்தைக் கழுவுமருந்தாம். ஆடையிற் படிந்துள்ள அழுக்கைப் பலவகை யுவர் மண்ணுலும் பலகாற் கழுவுகிறோம். அதுபோல், ஜீவர்களைப் பந்தி துள்ள ஆணவ மலமும், மாயாமலத்தினின்றுண்டாக்கப்பட்ட பலவகைத் தனுகரணாதிகளாற் பலகாற்கழுவப்படல் வேண்டும். உவர் மண்ணுற் கழுவுந் தோறும் கழுவுந்தோறும் ஆடையினழுக்குச் சிறிது சிறிதாய் நீங்கும். அவ் வழுக்கு முற்றும் நீங்கியவழி யவ்வாடை சுத்த வெண்மையை யடையும். அது போலப் பலவகைத் தனுகரணாதிகளோடு, ஜீவர்களைக்கூட்டிப் பிரிக் குந்தோறும் அவர்களைப் பந்தித்துள்ள ஆணவ மலமுஞ் சிறிது சிறிதாய் நீங் கும். அம்மலம் முற்றும் நீங்கவே, ஜீவனும், தன்னைப் பந்தித்துள்ள தடை யினின்று முற்றும் நீங்குவானுவான். அவனதறிவிச்சை செயல்களும், நித்தி யானந்த சுகவடிவாயுள்ள, சிவப் பொருளின்பால், தானே சார்வதாகும்.

"பசுத்தன்மை நீக்கியப் பாச மறுத்தாற்
பசுக்கள், தலைவனைப்பற்றி விடாவே" என்னுந் திருமந்திரத்தின் கரு த்து மிதுவே.

அசத்துப் பொருள்களின் பால், நமது அறிவிச்சை செயல்களைச் செ லுத்துதலே, அவற்றைச் சத்தின் பாற் செலுத்துதற் குரிய உபாயமா மென் றனம். அசத்துப் பொருள்கள்தான் யாவை? அவற்றை யடைந்து சத்துப் பொருளை யடைதல், எங்ஙனம்? கூறுதும். இவ்வுலகிலும், ஏனை யிந்திராதி தேவருலகிலும் நமக்கு எவ்வகைப் போகங்களையுங் கொடுக்குஞ் சகல பொ ருள்களும் அசத்துப் பொருள்களே.

"மண்டனில் வாழ்வும் வானத்தரசயன் மாலரர்வாழ்வு
மெண்டரு பூதபேத யோனிகளியாவு மெல்லாங்
கண்ட விந்திரமா சாலங்களுக் கழுதிரதங்காட்டி
யுண்டுபோலின்றும் பண்பிலுலகினை யசத்துமென்பர்"

என்று நமது சந்தான குரவர் சுவாமிகள் கூறியபடி, இவ்வுலக பதங்களும் ஏனையிந்திராதி பதங்களும், அசத்துப்பொருள்களே. அவைகளை யடையு மார்க்கம், அசத்துமார்க்கமாம்: இதுவன்றிச் சத்துப்பொருளை யடையுமார்க் கம் சத்துமார்க்கம். அல்லது சன்மார்க்கமென நிற்கும். இம்மார்க்கத்திற்கு அசத்து மார்க்கமே மார்க்கமாம். அஃதாவது இச்சன்மார்க்கத்திற்கு ஏனை மார்க்கங்களியாவுஞ் சோபன மார்க்கங்களாம். அச்சோபான மார்க்கத்திற் சென்றன்றி, யிச்சன்மார்க்கத்திற் செல்லுதல் கூடாதாகும். எதுபோலெ னில், கூறுவம். வாரணசியிற்போய் விசுவேசரைத் தரிசிக்கவிரும்பிய ஒரு வன், இடையிலுள்ள, ஏனைப் பட்டினங்களிற் சென்றே யவ்வாரணசி சேரல் வேண்டும். அப்பட்டினங்களை யுத்தேசமாய், மதராஸ், பம்பாய் முதலிய ஆறு

என்றுகொள்வோம். புறப்பட்ட தலத்தினின்றும், மதராஸ் சேருமளவும், மதராஸ், மார்க்கத்திற் செல்வான், அப்பால் பம்பாய் மார்க்கத்திற் செல்வான். இவ்வாறே சென்று மூடிவில் வாரணசி மார்க்கத்திற் செல்வான். வேனை மார்க்கங்களிற் சென்றன்றி யிவ்வாரணசி மார்க்கத்திற் செல்லுதல் கூடாது. இவ் வாரணசி மார்க்கத்திற்கு வேனையாறுமார்க்கங்களும், சோபானமார்க்கங்களாம். சன்மார்க்கத்திற்கு, வேனையறுவகைச்சமயங்களு மிதன்மைத்தேயாம்.

"நெறிகள் தாம்பல பலவு மாய்ந்த நெறிக்காஞ்
செறியுந் தெய்வமும் பலபல" என்று தாயுமான சுவாமிகள் கூறி

யபடி மார்க்கங்கள் பலவேயாக, அவற்றுள் சத்துப்பொருளாகிய சிவத்தை யடையுமார்க்க மிதுதானென்று கண்டு கொள்வ தெங்ஙனம்? முன்னரே, சன்மார்க்கம், வேனை மார்க்கங்களோடு மூணுது, அவற்றைத் தனக்குச்சோ பான மார்க்கங்களாகக் கொண்டு நிற்குமெனக் காட்டினேம். இக்கருத்தினை யுட்கொண்டே அருணந்தி சிவாசாரியரும்,

"இதுவாகு மதுவல்லவெனும் பிணக்கதின்றி நீதியிலு
னிவையெல்லா மோரிடத்தே காண நின்றது

யாதொரு சமயம், அது சமயம்" என்று உண்மைச் சன்மார்க்கத்தை யுணர்ந்து கொள்ளும், உபாயத்தையும் விளக்கினர். இவ்வுபாயத்தைக் கடைப் பிடித்தார்க்குச் சன்மார்க்க மின்னதென, வெள்ளிடை மலைபோல் விளங் கும். வேதம், சிவாகமம், இரண்டினையும், முதனூல் கரைக்கொள்ளும் மார்க் கம், எந்த மார்க்கம்? முதல்வனது வடிவம், உருவமே யென்னுமலும், அரு வமே யென்னுமலும், அருவும், உருவும், அருவுருவுமெனக் கூறுமார்க்கம், எந்தமார்க்கம்? முதல்வன் சகுணனே யென்னுமலும், நிற்குணனே என்னு மலும் குணமுள னென்றும், குணமிலனென்றுங் கூறுமார்க்கம், எந்தமார்க் கம்? முதல்வனும், ஜீவனும் ஒன்றே யென்னுமலும், இரண்டே யென்னும லும்,என்று என்றுமிரண்டு மின்றென்னுமலும், இரண்டற நிற்கும், உண்மை நிலையை யுணர்த்தும் மார்க்கம் எந்த மார்க்கம்? அந்த மார்க்கம், சைவமார்க்க மே. அதுவே யுண்மை மார்க்கமாகும். அதுவே ஓரேசத்துப் பொருளாகிய சிவப்பொருளின்பாற் சேர்க்கு மார்க்கம். அதுவே சன்மார்க்கம். இச்சன்மார் க்க நெறி நின்றுரையே,

"முன்னெறியாகிய முதல்வன் முக்கண்ணன்
றன்னெறியே சரணதறிண்ணமே
யன்னெறியே சென்றங் கடைந்தவர்க்கெல்லாம்" எனச்சுருதி கூறியதும்.

சைவ மார்க்கத்தினைச் சன்மார்க்க மென கூறினேம். இனியதன் சோ பான மார்க்கங்கள்தான்யாவை? என்பதைப் பரியாலோசிப்பாம். உலகிலுள்ள எல்லா மார்க்கங்களு மிதன் சோபான மார்க்கங்களாம். இப்போதுலகிலுள்ள மார்க்கங்கள் மாத்திரமல்ல இனி யுண்டாகு மார்க்கங்களு மிவ்வாறே

"விரிவிலா வறிவினரும் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினற்கொன்னுரேனு மெம்பிரான் கேற்றதாகும்"

என்றூர் நமதாசாரிய சுவாமிகளும். வேத சிவாகமங்களிரண்டினுக்கும் புறம்பாயுள்ள கிறிஸ்துவ மகம்மதிய மார்க்கங்களுள்பட உலோகாயுதாதி மார்க்கங்களியாவு மிதன்சோபான மார்க்கங்களே. வேதங்களின் கன்ம காண்டத்தை மாத்திரமேற் கொண்ட மீமாம்சாதி மார்க்கங்களும், அதிற்கூறிய விதிவிலக்குகளைப்பற்றி நின்று, ஜாதிபேதம். ஆச்சிரம பேத முதலியவைகளைக் கூறும் ஸ்மிருதியாதி மார்க்கங்களும், வேதசாரங்களைக் கதாரூபமாக விரித்துரைக்கும் பௌராணிகமார்க்கமு மிவ்வகுப்பினவே. வேதத்தின் ஞானகாண்டமாகிய உப நிடதங்களே யதன் கன்மகாண்டத்தோடு மேற் கொண்டு, அவ்வுபநிடதார்த்தங்களையெல்லாம், மிகத்தெளித் துணர்த்துதலாகிய வேதாந்த மார்க்கமும் இம்மார்க்கத்திற்குச் சோபான மார்க்கமேயாம். மேற்கூறிய இவ்வெல்லாக் கருத்துக்களு மினிது விளங்குவன்றே, நமது சந்தான குரவர் சுவாமிகள்,

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகல் மிருதிவழியுழன்றும் புகலுமாச்சிரம
அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணநூல் படித்தும்
சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதசிரப்
பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றூற் சைவத்
திறத்தடைவரிதிற் சரியைகிரியாயோகஞ் செலுத்திய
பின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"

என, இருபகுதிபடக் கூறியதும் இச்சுருதியின் முற்பகுதி "சைவத்திறத்தடைவர்" என்பதனோடும், பிற்பகுதி "சிவனடியைச் சேர்வர்" என்பதனோடும் முடிந்துள்ளன. பிற்பகுதியிற் கூறியுள்ள நான்கு மார்க்கங்களே சிவனடியிற் சேர்க்கு மார்க்கங்களாம். அவைகளே சைவமார்க்கங்களாம். "பன்மார்க்கப் பொருள் பலவுங் கீழாகப் பதிபசுபாசந் தெரிந்து பரசிவனைக் காட்டும், நன்மார்க்கம் நாலிவைதான்" என ஆசிரியர் கூறியதும் இவற்றையே. இதுபோலன்றி, முற்பகுதியிற் கூறியுள்ள மார்க்கங்கள், சிவனடியிற்சேர்க்காவாம். சைவ மார்க்கத்திலே சேர்ப்பதாம். இதுபற்றியே யிவைகள் யாவுஞ் சைவமார்க்கத்தினுக்குச் சோபான மார்க்கங்களாம். இச்சோபான மார்க்கங்களுள், வேத சிரப் பொருளை மிகத் தெளிதலாகிய வேதாந்த மார்க்கமும், ஒன்றேயாம். இம்மார்க்கமும், நேரிற் சிவனடியிற் சேர்க்குமார்க்கமன்று. இதனையுங் கடந்து அப்பாலுஞ் சென்றூரே, சைவமார்க்கத்தினை யடைவார். இக்கருத்துக் கொண்டே "வேத சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சைவத்திறத்தடைவர்" எனக் கூறுது "வேத சிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றூற் சைவத்திறத்தடைவர்" எனக் கூறியதும். இச்சுருதி கூறும் வேதாந்த மார்க்கமும், போலிவேதாந்த மார்க்கமன்று. உபநிடதங்கட்கு மயங்கிப் பொருள் கொள்வாருந் தம்மார்க்கத்தினை, வேதாந்த மார்க்கமெனக் கூறுவர். அதுவன்றெனக் காட்டுதற்கே, "வேதசிரப் பொருளை மிகத்தெளிந்தும்" எனக் கூறியதும். இக்கருத்தினையே "வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தம்" என்றூர் மற்றொரு சந்தானாசாரிய சுவாமிகளும்.

இச்சைவ மார்க்கமும் ஒரே மார்க்கமாய் நில்லாது நான்கு வேறு மார்க்கங்களாய் நிற்பதேன். வாரணசியிலெழுந்தருளி யிருக்கும் விசுவேசரை யடையச் செல்வானுக்கு, அவ்வாரணசி சேருமார்க்க மொன்று, அதனினின்றும், அவ்விசுவேசர் ஆலயஞ் சேரு மார்க்க மொன்று, அப்பால் அவர்சந்நிதி சேருமார்க்க மொன்று, அதன் பின்னர் அவனடியைச் சேருமார்க்க மொன்று ஆகநான்குவேறு மார்க்கங்களுளவாம். அதுபோல, சிவப்பொருளே யடைவானுக்கும் சிவனுலகிற் சேர்க்கு மார்க்கமாகிய சரியைமார்க்கமொன்று, அவனருகிற் சேர்க்கு மார்க்கமாகிய கிரியை மார்க்கமொன்று, அவனுருவிற் சேர்க்கு மார்க்கமாகிய யோகமார்க்க மொன்று, அவனடியிற் சேர்க்கு மார்க்கமாகிய ஞானமார்க்க மொன்று, ஆகநான்கு மார்க்கங்களுளவாம். இவைகள் முறையே தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனவும் பெயர் பெறும். இவைகளிற் சிவனடியிற் சேர்க்கு மார்க்கமாகிய ஞானமார்க்க மொன்றே, ஏனிற் சிவனடியிற் சேர்க்கு மூறிமை பற்றிச் சன்மார்க்க மெனப்பட்டது. என்றாலும் வேனை மார்க்கங்களும், சிவனுலகு சிவனருகு, சிவனரு எனயாதானு மோர்விதத்திற் சிவத்தின்பாலே சேர்க்கும். அன்றி வேறொரு பொருளின்பாற் சேர்க்கா. ஆதலால், அவை மூன்றும், சிவமார்க்கம், அல்லது சன்மார்க்க மெனவும் படும்.

"சரியை கிரியாயோக சாதனம் விடுத்தவெல்லாஞ்
சன்மார்க்கமல்ல" என்றார் நமது தாயுமான சுவாமிகளும். இந்நான்கு மார்க்கங்களையும், எடுத்து விளக்கும் மூதனூல்கள், சிவாகமங்களே யாதலால், இவையாவும்பொதுவாய்ச் சைவமார்க்கமென நிற்கும். இச்சைவமார்க்கமுற்றுஞ் சன்மார்க்கமேயென நமது தாயுமான சுவாமிகள்

"சந்தான கற்பகம் போலருளைக் காட்டத் தக்கநெறி யிந்நெறியேதான்
சன்மார்க்கம்" என்றருளிச் செய்தனர்.

இந்நான்கு மார்க்கங்களும், தனித்தனி கொண்டு சேர்ப்பது, வெவ்வேறு பதங்க ளென்று கூறினேனும். அவற்றின் தனித்தனியியல்பென்னை யென ஆலோசிப்பாம். அவைகள் நான்கும், சிவப்பொருளை நோக்கிச் செய்யும் வழிபாடேயாம். 'வழிபாடு' எனினும், 'மார்க்கத்திற்செல்லுதல்' எனினும், ஒன்றே. சைவத்திறத்தடைந்தார் அச்சிவப்பொருளை யன்றி வேறு பொருளை வழிபடார். அப்பொருளொன்றே வழிபடுதற் குரிய பொருளெனத் தெரிந்தே, சைவத் திறத்தடைவார். அடைந்து, அதன்படி யொழுகிப் பக்குவ முதிர்ச்சி யடைந்த பின்னரே, சிவப்பொருள், இன்னதன்மைத்தென உணர்வார். அதுகாறும், அப்பொருளின், உருவம், அருவுருவம், அருவம், ஆகிய மூவகைவடிவங்களி லொவ்வொன்றினையே, யப்பொருளென வுணர்ந்து வழிபடுவார். சரியையினின்றார், அப்பொருளினுருவ வடிவத்தையே யஃதென வுணர்ந்து அகத்தொழிலால் வழிபடுவார். கிரியையினின்றார், அவ்வுருவ வடிவத்தினுஞ் சூக்கும வடிவமாகிய அருவுருவவடித்தையே சிவப்பொருளெனவுணர்ந்து, அகத்தொழிலாலும் புறத்தொழிலாலும் வழிபடுவர். இவர்க்கு புறத்தொழிலால், உருவவழி பாடுமுண்டு. யோகத்தினின்றார், அவ்

வுருவ வடிவத்தி ருஞ் சூக்குமவடிவமாகிய, அருவ வடிவத்தையே சிவப்பொரு ளெனவுணர்ந்து, அகத்தொழிலால் வழிபடுவார். இவர்க்கு மூற்கூரிய இரு வகைவழிபாடுகளு மூண்டு. ஞானத்தினின்றுரோ, மேற்கூறிய மூன்று வடி வங்களுஞ் சிவப்பொருளல்ல, அதன் வடிவங்களே யெனத்தெரிந்து, அதனை யுள்ளபடி யுணர்ந்து, அறிவுத் தொழிலால் வழிபடுவார். இவர்க்கு மூற்கூரிய மூவகை வழிபாடுகளு மூண்டு. அன்றியும், சைவமார்க்கத்தி லொழுகுபவர், அதன்படி யொழுகுமுன்னரே, சிவப்பொருள், தமக்கருள் புரியு மாற்றை யுணர்வாரு மல்லர். அப்பொருள், உயிர்கட்கு, ஆண்டானுயும், பிதாவாயும், தோழனுயும், அவைகளேயாயும், இந்நால்வகையாயும் நின்றருளுந் திறத்தை, யிச்சைவமார்க்கத்திலொழுகிவரவே, ஒவ்வொன்றுயுணர்வாராவார். புறத்தொ ழிலால் மாத்திரம் வழிபடுஞ் சரியையாளர், முதல்வன், தமக்கு ஆண்டானுய் நின்று அருளுதலே மாத்திரை முணர்ந்து வழிபடுவார். அதுபற்றியே யிவ்வது மார்க்கம், தாசமார்க்க மெனப்பட்டது. அகத்தொழில் புறத்தொழில்களா லும் வழிபடுங் கிரியையாளர், அம்முதல்வன் தமக்குப்பிதாவாய் நின்றருளு தலேயு முணர்ந்து வழிபடுவார். அதனுலேயே, அவ்வது மார்க்கம் புத்திர மார்க் கம் எனப்பட்டது. தனித்த அகத்தொழிலாலும் வழிபடும் யோகிகள், முதல் வன் தமக்குத் தோழனுய் நின்றருளுதலேயு மூணர்ந்து வழிபடுவார். இவ்வது மார்க்கமிதுபற்றியே சகமார்க்க மெனப்பட்டது அறிவுத் தொழிலாலும் வழி படும் ஞானியோ, முதல்வன் தானேயாய் நின்றருளுதலேயு முணர்ந்து வழி படுவார். இக்காரணத்தானே, இவ்வது மார்க்கம், சன்மார்க்க மென விளங்கு கிறது. என்பவே, இக்நான்கு மார்க்கங்களும், முறையே ஒன்றற் கொன் றேற்றம் ஒன்றற் கொன்று சோபானமுமாம்.

ஆனுல், மேற்கூறிய நான்கு மார்க்கங்களும், ஒன்றற்கொன்றன்னிய மோவெனின், அல்ல. சிவப்பொருளினுருவ வழிபாடு, அதன் அருவுருவ வழிபாட்டிலும், அவ்விரண்டும், அதன் அருவ வழிபாட்டிலும், அம்மூன்றும் அதன் உண்மை வழிபாட்டிலும், உண்டெனக் கூறினேம். அன்றியும், இச் சரியையாதி வழிபாடுகள், முறையே, ஒன்று மூற்றி மற்றென்றுய் மாறுந் தகைமைத்து. அரும்பு மூற்றி மலராம், மலர் மூற்றிக்காயாம். காய்மூற்றிக் கனியாம். அதுபோல், சரியை மூற்றிக் கிரியையாம், கிரியை மூற்றி யோக மாம், யோகமூற்றி ஞானமாம். அதாவது ஒரேபொருள் ஒரே நிலையில் அரும்பெனவும், மற்றொரு நிலையில் மலரெனவும், பிறிதோர் நிலையிற்கா யெனவும், மற்றுமோர் நிலையிற் கனியெனவுங் கூறப்படும். அதுபோல் ஒரே மார்க்கம், நிலை வேறுபட்டால், சரியையெனவும், கிரியையெனவும் யோகமெனவும் ஞானமெனவும், நான்கு திறப்பட நிற்கும். இதனையே நமது தாயுமான சுவாமிகளும்,

"விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனிபோலன்றே பாபரமே"

என்று விளக்கியருளினர். 'திருக்கோவில் அலகிடல்' முதலிய சரியை கிருத்தியம் அத்துவித ஞானத்தை யெவ்வாறு தருவதாகும் என மலைவார்

கிலர். எதுபோ லெனில், மாவரும்பு, மாங்கனி, யிவ்விரண்டினையு முன்னர் பார்த்திராத ஒருவன், இவ்விரண்டினையும், உற்று நோக்கி இவற்றில், கந்தம் உருவம், ரசம், இவற்றுள் யாதானு மொன்றில் ஒற்றுமையில்லையே, இவ்வ ரும்பு இக்கனியாய் மாறுதல் எவ்வாறு கூடும் எனமலைதல் போலாம். என்ரு லும், இவ்விரண்டினையுந்தெரிந்துள்ளான், இவ்வரும்பு இக்கனியாய் மாறின திற் சந்தேகமில்லை யெனத்தெளிவான். அதுபோல சரியையாதிமார்க்கங் களை யுள்ளபடி யுணர்ந்தார்க்கு, இச்சரியை கிருத்தியம் ஞானத்தைப் பயக்கு மென்பதிற் சந்தேக மின்ரும். அன்றியும், கனியின்கண்காயும், காயின் கண் மலரும், மலரின்கண் அரும்பு முளவாபோல, ஞானிக்குச் சரியையாதி நான் கும் யோகிக்கு அதனுள் முதல் மூன்றும், கிரியாவானுக்குச் சரியை கிரியை யிரண்டு முரித்தாம்.

"ஞானயோகக் கிரியா சரியைகளும் நாதன்றன்பணி
ஞானி நாலினுக்கு முரியன்
ஊனமிலா யோகமுதல் மூன்றினுக்கு முரியன்யோகிக்
கிரியாவாஞெண் கிரியையாதி
யானவிரண்டினுக் குரியன் சரியை யினின்ரேனச்
சரியைக்கே யுரியன்"

என்ற சிவஞான சித்தித்திருவிருத்தமு மிக்கருத்தையே விளக்கிற்று. என்ரும் ஞானிக்குச் சிவாலய தரிசன முதலியன வேண்டப்படா வென்பது தவரும். அவர் சரியையாதி நான்கு மார்க்கங்களிலும் நின்ரே நாதன் பணியி யற்றுவாராவர். அந்நால் வகைப்பணியுமே ஞானமார்க்கம், அவை, முற்றுமே சன்மார்க்கம்.

மேற்கூறிய நான்கு மார்க்கங்களிலும் நின்று சிவப்பொருளை யடைந் தார், மேலுஞ் செய்யக் கிடக்கும் பணி யென்னதுண்டா? உண்டேல், எற்று க்கு? சிவப்பொருளை யடைந்தார், ஆண்டு நிலைபெற்று நிற்கவும் வேண்டும். அங்ஙனம் நிலைபெறுதலே, கலத்தல், அடிசார்தல், அல்லது முத்தி யெனப் படும். ஜீவர்கள் தம்மறிவிச்சை செயல்கள் முழுதினையுஞ் சிவத்தின்பாணி றுத்துதலே, சிவத்தோடு கலத்தலாகும்.

"தொண்டலாற்றுணையுமில்லைதோலலாதுடையுமில்லை
கண்டலாதருளுமில்லைக் கலந்தபின் பிரிவதில்லை"

எனத் தமிழ்வேதங் கூறுவது மிக்கலப்பினையே. இவ்வாறு சிவத்தோடு கலத்தலின்றி, யதனோடு சேர்ந்து மாத்திரமுள்ளார், அதனின்று மீளப்பிரி பவரே யாவர். சித்தாந்த மகாவாக்கிய மாகிய பஞ்சாக்கர மந்திரத்தை விதிப் படியுச்சரித்தலே, யவ்வாறு கலத்தற்குபாயமாம். வேதாந்த மகாவாக்கியம் பொதுப்படவுணர்த்தும் பொருளையே, யிம்மகாவாக்கியஞ் சிறப்பினதா யு ணர்த்தும். அம்மந்திரத்தின் பொருள் "அது நான் ஆனேன்" என்பது. இம் மந்திரத்தின் பொருள், "சிவத்தை நமஸ்கரிக்கின்றேன்" என்பது. அம்மந் திரத்தில் "அது" என்பதாற் பொதுவா யுணர்த்தப் பட்ட பொருள் யாது என ஆசங்கிப்பார்க்கு, அது சிவமே யென் விம்மந்திரஞ் சிறப்பித்துக் கூறும்

அம்மந்திரம் "நான் ஆதல்" எனப் பொதுப்படக் கூறியதை, எவ்வாறுதல்? என ஆசங்கிப்பார்க்கு, 'இறைபணி நிற்றல்' அதாவது "நமஸ்கரித்தலே" 'நான் ஆதல்' என, இம்மந்திரஞ் சிறப்பித்துக் காட்டும். வேதத்திற்குச் சிவாகமம், சிறப்பாதல்போல, வேதமஹா மந்திரமாகிய வேதாந்த மகாவாக்கியத்திற்கும், சிவாகம மஹா மந்திரமாகிய சித்தாந்த மகாவாக்கியமுஞ் சிறப்பினாய் விளக்கும். இம்மந்திரம், "ஏகஞ்சியிறை பணி நிற்றலே" யுணர்த்தும். இஃதுணர்த்தியபடி, தான் சிவப் பொருளின்பால், கசிந்த தொண்டினோடு நின்று, அதாவது, தனதறிவிச்சை செயல்களியாவும் அப்பொருளின்பாலே ஒருப்பட நின்று, தானுஞ் சிவமும் ஆண்டானடிமைத் திறமாய் நிற்பதை. இம்மந்திரம் ஒது முறையில் வைத்துச் சுத்தமானதாய் உச்சரித்து நிற்றல் வேண்டும். இம்மந்திரத்தை யிவ்வாறே தலே, சிவப்பொருளைச் சார்ந்தார் அதனோடு கலத்தற்கு நெறியாம் என நமது ஆசாரிய சுவாமிகளும்

"முன்னெறியாகிய முதல்வன் முக்கண்ணன்
நன்னெறியே சரணதறிண்ணமே
யந்நெறியே சென்றங்கடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே"

என இதன்றலைப்புச் சுருதியிற் கூறினர்.

இதுகாறுங் கூறிய பரம்பொருளாகிய சிவப்பொருளோடு ஜீவர்களைக் கூட்டுவிக்கு மார்க்கம், இச்சைவமார்க்கமே, அச்சிவப்பொருளோடு ஜீவர்களைக் கலப்பித்து அதனோடு நிலை நிறுத்து மார்க்கமுமிதுவே. எல்லா மார்க்கங்களுந் தன்பால் முடிவுபெற நிற்குஞ் சித்தாந்த மார்க்கமும் இதுவே. இம்மார்க்கமன்றே இந்திராதி தேவர்கட்கும், மற்றும் அரசர்கள், இருஷிகள், முனிவர்கள், சித்தர்கட்கும், தாரகமாயுள்ள மார்க்கம்.

"அந்தோ வீதகிசய மிச்சமயம் போலின்றறிஞ ரெலாம்
நடுவறிய வணிமாவாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசாமோனம் வைத்தி
ருந்த மாதவர்க்கு மற்ற மற்றும்
இந்திராதிபோக நலம் பெற்ற பேர்க்கு
மிதுவன்றித் தாரகம் வேறில்லை யில்லை"

என்று புகழ்தற்குரியது மிம்மார்க்கமே. இம்மார்க்கத்தை வளர்த்தற்கன்றே யிவ்வுலகிற் பல்லூழிகாலந் தொட்டுப் பலவரசர்கள் பலகோடித் திரவியங்கள் செலவு செய்து, பல சிவாலயங்களமைத்ததும், அவற்றிற்குப் பல பூஸ்திதிகளளித்ததும். இம்மார்க்க போதகத்திற்காக வன்றே, பல சைவாதீனங்கட்கு ஏராளமான நிதிகள், பல வேந்தர்களாலும் பிரபுக்களாலும், அளிக்கப்பட்டன. ஜன்மம் ஒன்றிலே தானே, ஜீவன் முத்தனுக்கி, ஞானமுதிப்பித்துப் பிறப்பை யறுத்துப் போனந்த முத்தியாலுஞ் சேர்க்கு மார்க்கமிதுவே. இம்மார்க்கத்தினையே நமது சந்தானகுரவர் சுவாமிகள்,

"சித்தாந்தத்தே சிவன்றன்றிருக்கடைக்கண் சேர்த்திச்
சென்ன மொன்றிலே சீவன் முத்தனுக
வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி மடித்தானந்தம்
பொழிந்து வரும்பிறப்பை யறுத்து,
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பனென்று மொழிந்
திடவு மூலகமெல்லா மூர்க்காகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப்பாவப் பெருங்
குழியில் வீழ்ந்திடவ ரிது வென்னபிராந்தி"

எனச் சித்தாந்த நெறி நின்ரு ருயர்வும், அதனை நிந்தித்துப் பிதற்றினுர் தாழ்வுமுடன் கூறினுர்.

இத்துணைப் பெருமை வாய்ந்த, இச்சன்மார்க்கத்தின் தற்கால நிலைமை யை யென் சொல்ல! அந்தோ பரிதாபம்! சைவம், இன்னதென உணர்ந்தார், ஒரு சிலரே. அதற்கு முதனூல்கள் யாவையென உணர்ந்தார், அதினுஞ் சில ரே. அம்முதனூல்களாகிய சிவாகமங்களிலெவைகள் தானுள? அவைகளும் யாண்டுள? என்றுணர்ந்தார் ஒருவருமேயில்லை. அந்நூல்களி லொன்றையே னும் முற்றும்படித்தாருளரோ, என்பது பெருஞ் சந்தேகம் சைவம், சூத்தி ரர் சமய மென்பார் சிலர். இவர், சைவ சாத்திரங்கள், பதத்திரள் இவற்றின் பெரும் பாகத்தை யியற்றினுர் பிராமணோத்தமரே யென்பதை யறியார். சை வம், தமிழ்ச்சமயமென்பார் சிலர், சைவமுதனூல்களும், மறறும் அனேக சைவக் கிரந்தங்களும், வடமொழியிலேயே யுள்ளனவென்பதை யறியார். சைவம் அவைதீக மென்பார் சிலர். சிவாகமங்களோடொப்ப, வேதங்களையுஞ் சைவம் முதனூல்களாகக் கொள்ளு மென்பதையும், அவ்விரண்டிற்கும், ஒன் ரே டொன்று முரணுத தாற்பரியங் கூறுவது சைவமே யென்பதையுமுண ரார். சைவம், அவைதீகமே யென்பார் சிலர். அத்துவித ஞானத்தை யுள்ளபடி யுணர்த்துவது சைவ மொன்றே யென்பதையுமுணரார். இம்மார்க்கத்தை யுள்ளபடி யுள்ளபடி யுணர்த்துவாரின்மையா னன்ரே, இதன் கதியிவ்வாரு யிற்று! இதனை விளக்குதற்கென்றே யேற்பட்டுப் பெரு நிதிகளு மளிக்கப் பெற்ற சைவாதீனங்களிற் பல, பயனிலவாய்ப் போயின. அவ்வாதீன கர்த்தர் கள், தம்மாதீன நோக்கங்களையு மாபுகளையுந் தமக்கிசைந்தவாறெல்லா மாற் றிக்கொண்டார்கள். அன்னதானத்தை முற்றுங் கைவிட்டனர். தரைமார்கட் குத் தீனி முதலியன வளிக்கத் துணிந்தனர். சன்மார்க்கபோதக மென்பதை யற வொழித்தனர், தன்மார்க்கத்திலே தலைப்பட்டு நின்றனர். வேஷமாத்தி ரமே யுடையார். அதுவும் அல்லும் பகலு மென்பது சந்தேகம். இவ்வாதீ னங்கள் மட்டுமா? அனேக சிவாலயங்களும், அவற்றினிதிகளும், இவர்கள் கையிற் சிக்கின. அவ்வாலயபூஜைகளும் முட்டின. விழாக்களும் நின்றன. அவ்வாலய நிதிகள் இவர்கள் கடன்களுக்கிலக்காயின. இவர்களாலன்ரே, இம்மார்க்க மிக்கதியினை யடையலாயிற்று!

நமது சைவ சன்மார்க்கம், இதுவாறு நிலைகுலைந்து நிற்க யார்தான் சகிப்பார்! பண்டைக்காலத்திற் பலசமயகுரவர்கள் முதலியோர், நமது சன்

மார்க்கத்தை வளர்த்தெடுத்து ஆதரித்தும் வந்தனர். இக்காலத்திலும் பல சைவாபிமானிகள், பலவிடங்களினின்றும் கிளம்பி வெளிவந்து, நமது சைவமார்க்கத்தைப்பேணி யாதரிப்பாராயினர். இச்சன்மார்க்க பரிபாலனத்திற்கென்றே, பல விடங்களிலும் பல சபைகள் ஏற்பட்டுள்ளன. பல புத்தக சாலைகளும், அமையப் பெற்றன, பல பத்திரிகைகளும் வெளிவந்தன, பல அச்சியந்திரங்களும் தாபிக்கப்பட்டன. பிரதி வருஷமும், இதுபோ லொத்த பல கூட்டங்கள் கூடி, இச்சன்மார்க்க சம்பாஷணைகளும் பிரசங்கங்களும், நடைபெறுகின்றன அக்கூட்டங்களே நமது அக்கிராசனாதிபதி போன்ற பல வேந்தர்களும், பிரபுக்களும், முன்னின்று நடத்துவாராயினர். சென்ற ஆறுமாதங்கட் குள்ளாக, சிதம்பரம் தூத்துக்குடி, இராமநாதபுரம், செவ்வலப்பட்டி, கூடலூர் முதலிய விடங்களில் இதுபோலொத்த பெருங்கூட்டங்கள் கூடி, இச்சன்மார்க்கத்தை விளக்குவாயினர், இம்மார்க்கத்தினைச் சைவரேயன்றி, ஏனையோரு மாராய்ச்சி செய்ய வெண்ணினர். இத்தேசத்தவர் மாத்திரமன்றி, அமெரிக்கா முதலிய தேசத்தவருள், கனம் பெல்ப்ஸ் முதலிய பெரியோர்களும், ஆராய்ச்சி செய்யப் புகுந்தனர். நமது சைவாதீன கர்த்தர்களும், தமது ஆதீனங்களைச் சீர்திருத்திக் கொள்ளு மார்க்கத்தைச் சிந்திப்பாராயினர். நாம் நேற்றுக் கூடிய நிர்வாக மகா சபையில் இச்சீர் திருத்தங்கட்கென்றே, ஓர் தீர்மானமுஞ்செய்து, அதைநிறைவேற்றுவதற்கு, ஒரு சபைக்கூட்டம் ஏற்படுத்தலாயினேம். நமது இராஜாங்கத்தாரும், இச்சீர் திருத்தங்களே நோக்குவாயினர். இவ்வாதீன சம்ரக்ஷணைக் கனுகூலமான பல தீர்ப்புகளும், உயர்ந்த நியாயஸ்தலங்களினின்றும் பிறந்துள்ளன. இத்தருணத்தில் நம்மவர்களெல்லாமொன்று சேர்ந்து ஒரே மனதுடையராய் நமது சன்மார்க்க பரிபாலனத்திற் சிறிது நாட்டம்வைப்போமேல், இம்மார்க்கம் அதன் பூர்வ நிலையை யடைந்து, "மௌன மோலி அயர்வறச் சென்னியில் வைத்திராஜாங்கத்தி லமர்ந்தது வைதீகசைவம், அழகிதந்தோ" என அழகில் நிற்குமென்பதிற் சந்தேகமில்லை. அவ்விதந் கூட்டுவிக்க நாமெல்லாருந் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

"வைய நீடுக மாமழை மன்னுக
மெய்விரும்பிய வன்பர் விளங்குக
சைவ நன்னெறிதான்றழைத் தோங்குக
தெய்வ வெண்டிருநீறு திகழ்கவே."

திருச்சிற்றம்பலம்.

ஓ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

"வைதிக சைவப்பிரபாவம்"

நண்பர்காள்.

பதினாற்பயின்று பெறுவது பெற்ற வுறுதி யுத்தமர்களும், இறைபணி யியற்றி கரையறுமின்ப நிறையருட் செல்வர்களும், அருந்தமிழ் பேணி பெரும்புகழ்கொண்ட புலவர்களும் நிறைந்துள்ள இம்மகாசபையின்கண், யான் வழுத்து பொருளின்றி வெறித்த வென்புன் சொற்கொண்டு வாய்திறக்க வல்லேனல்லனாயினும் ஆசைமேலீட்டால் சிறிது கூறத்துணிந்தனன்.

உயிர்க்குறுதி பயப்பான்வேண்டி மதங்களை அகச்சாக்ஷி (internal-evidence) புறச்சாக்ஷி (external evidence) எனு மிருவகை சாக்ஷியங்களையுங்கொண்டு அகத்திலாராய்ச்சி செய்யத் தொடங்குமொருவனுக்குத் தாம் கண்ட வுண்மைகளை உண்மை களெனத் தம்முயிரின்கட் கண்டு களிப்பதே பெரியதோர் சான்றாகும். இம்மெய்ச்சான்றின்றி எதுவும் உண்மையெனக் கொள்ளற் பாற்றன்று. எனவே உண்மையென உணரப்படு மொவ்வொரு உண்மையும் அவ்வாறுணரப்பட்ட பின்னரே உண்மையாகும். உண்மையெனுஞ் சொற்கு வேறெவ்வாற்றானும் பொருள் கூறுதலடாது. ஆங்கிலநூல்வல்லாரிதனை Individual judgment என்று கூறுவர். ஒவ்வொரு பகுத்தறிவுள்ள மனிதனும் உண்மை கேட்ட வொவ்வொரு பகுதியையு மிவ்வகவுணர்ச்சியெனு முறைக் கல்வினுறைத்துப் பார்த்த பின்னரே கொள்ளுவார்கள். எத்துணைப் பெரியோருரைத்ததாயினும் எவ்வித நூல் கூறிற்றேனு மிவ்வக வுணர்ச்சியெனும் கல்வி னுறைத்துப் பார்த்தபின்னர் தாம் கொள்ளப்படுகின்றன வெனு முண்மையை அவரவ ரகத்தின்கண் ணெவ்வொருவனு முணர்வான். இவ்வாறு உண்மையைக் கொள்ளவும் உண்மை யல்லவற்றைத் தள்ளவும், கொண்டதற்கேற்ப

ஒழுகவும் ஒவ்வொருவனுக்கும் ஓர் ஸ்வாதந்த்ரியம் உண்டு. அதை "The right and duty of individual judgment" என்று ஆங்கிலத்திலுரைப்பார். இவ்வக வொளியை நாம் புதிதாய் தேட வேண்டியதன்று. இவ்வொளி மழுங்காது மேன்மேற் பிரகாசிக்கச் செய்வதே எம் கடனும் எவ்வாறு புறச்செயல்களை ஒழுங்குபெறச் செய்தற்கு கை, கால், கண்முதலிய புறவுறுப்புகளமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அவ்வாறே நமது அகச் செயல்களை ஒழுங்குபெற நடத்தற்கு அந்தக்கரணங்கள் என்று பொதுப் பெயரானழைக்கப்படும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் வெவ்வேறு தொழில்களுடைய அகவுறுப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உடலின்பம் வேண்டினே னொருவன் எப்படி புறவுறுப்புகளைச் சமமாகப் பயிற்றல் கண் கூடோ அப்படியே உயிரின்பம் வேண்டினோ நம் இவ்வக வுறுப்புகளை சமமாகப் பயிற்றலத்தியாவசிகம். மக்கட்கு பகுத்தறிவைப்போலவே, உணர்ச்சி, பிரதிபை என்பவைகளும் உள்ளவைகளாதலால் என்க. குழவி தன் தாயினிடத்துக் காட்டும் உள்ளக்கிளர்ச்சி வுணர்ச்சியாலாயதோ அன்றி தருக்கித்தறிகண்டோ கூறுமின். எம் சகோதரனொருவன் துன்பப்படக்கண்டு யாம் மனமிரங்கல் உணர்ச்சியாலாயதோவன்றி கடாவச்சின்ன தருக்கத்திலாலாயதோ கூறுமின். யாமிருக்கிறோமென்னும் ஞானமும் பெரும்பாலும் உணர்ச்சியாலாயதேயாம்.

தார்க்கீக யுக்திகளெல்லாம் நமக்குள்ளதாய் உணர்ச்சி (feeling) பிரதிபை (imagination power) பகுத்தறிவு (Reason) முதலியவைகளை நல்வழிப் படுத்தற்கேயாம். ஆகையால் பகுத்தறிவினையுடைய மக்க டாம் செய்யவேண்டிய வேலையை பிறர் பாலொப்புவித்து இஃதென் தந்தையார் கொண்டது இஃதென் தோயத்தார்கொண்டது. இஃது யாமபிமானிக்கும் நூற்கள் கூறின வெனக்கொண்டு மாத்திரம் கொளல் தவறுடைத்து. ஒருவன் தன் கண்களை இறுக மூடிக்கொண்டு வேறொருவன் கண்ட காட்சியைத் தான் கண்டதாக வின்புறமுடியுமாயினன்றே அவ்வாறு அகக்கண் விஷயத்திலு மது பொருந்தும். இன்னோரன்ன தேதையரை நோக்கியே "**ताकस्य कूपोयमिति ब्रवाणाः क्षारं जल कापुरुषाः**

पिबन्ति''—இஃதென்றந்தை தோண்டிய கிணறு என்று புருஷப் பதர்களே உவர் நீரை குடிப்பார்கள்''—என்ற பழமொழி எழுந் ததுபோலும். ஸ்ரீகாளிதாஸனும் ''**पुराणमित्येव नसाधु सर्वं नचापि काव्यं नवमित्यवद्यम्**'' என்று கூறினர். இப்பொருளையே நமது உமாபதி சிவமும் ''தொன்மையவாமெனினு மெவையு நன்றுகா இன்று தோன்றிய தெனினுமவை தீதாகா'' என்று வலியுறுத்தார். ஆகை யால் பகுத்தறிவுள்ள ஒவ்வொரு மனிதனும் எக்காலத்தும், எத் தன்மைத்தும், எத்தேயத்தும் மாறுபடில்லாததும், முன் பின் முரணுமலுமுள்ள நியாயங்கட்கும் உண்மை நெறிக்கு மேற்பரி சோதித்துக்கொள்ளுதலே யமைவுடைத்தாம்.

உயர்வு தாழ்வுகளற்ற சிறிது பெரிதற்ற ஏகவஸ்துவே கட வுள் என்பதற்கு மாறுக உயர்வுதாழ்வு முடைய மூன்று புருஷர் களின் சமூகமே கடவுளென்றும், பல்லாயிரம் வருடங்கு முன் னொருவன் ஏதோ குற்றம் செய்தானென்றும், அவன் சந்ததியில் வந்ததால் அக்குற்றம் செய்யாமுங் குற்ற வாளிகளென்று, குற் றத்திற்கேற்ப குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டியது நியாய மாயிருக்கக் குற்றம் செய்யா வொருவன் அக்குற்றத்திற்காக தண் டிக்கப்பட்டா னென்றும், இவ்வாறு தண்டிக்கப்பட்டோனது பேரையும் ஊரையும் கேட்காமலும், கேட்டும் நம்பாமலுமிறந்து போன பல்லாயிரங் கோடியுயிர்களும் மீளாநரகத்தை யடைவார் களென்றும், பலவெண்ணவேறுபாட்டிற்கும் செய்கை வேறுபாட் டிற்கும் தக்கவாறு பின்னனுபவமும் பல திறத்தாகவேண்டி யிருக்க ஒரே தன்மைத்தான மீளாநரகமோ சொர்க்கமோ பய னென்றும், இறுதிக்காலம் வரையில் இறந்தார்கள் புதைக்கப்பட்ட கல்லறைகளிலேயே யிருப்பார்களென்றும் அக்காலத்தில் மேகத் தினடிவனொருவன் றூரியங்கொண்டூதுவானென்றும், அப்போத ணுவணுவாய்த்தேய்ந்து பல்வேறுபாடகத் திரிந்து போனவுடல் கள்மீண்டு முயிர்த் தெழுமென்றும், கடவுளைப் போலவே கடவு ளெண்ணங்களையும் மாற்றவல்ல சர்வவல்லமையுள்ள பிசாசொன்று கடவுளுக்கு மாறுக அரசியற்றுகிற தென்றும், சிறு பிள்ளைகள் களிக்குமாறு நாகரீகமற்ற ஜாதியார் கட்டிப்புனைந்த சில பல கதை களையும்மதங்களாகக் கொண்டு பலர் வர்த்திக்கின்றார்களென்பதை நீவிருணர்வீர்.

ஈண்டு யானெடுத்துக் கூறுவான் புகுந்த வைதிக சைவம் வெறுங்கதைகளைக் கொண்டதன்றென்பதூ உம், அளவை நூற்களிற் கூறிய அளவைகளால் நன்கு பரிசோதிக்கப்பட்டுத் தேர்ந்தவண்மைகளையே தங்கொள்கைகளாகவமையப் பெற்ற தென்பதூ உம் "प्रत्यक्षादिप्रमाणानि श्रुणु वत्स समाहितः। प्रत्यक्षमनुमानं च शब्दंचोपमया सह। अर्थापत्तिरभावश्च षट्प्रमाणमितिस्मृत । अक्षादिकरणैर्ईश्यं प्रत्यक्षंतदिहोच्यते। लिङ्गालिङ्गादिविज्ञानमनुमानमिति स्मृतम्। आप्तोक्तिवचनगम्यं शब्दमेवमुदाहृतम्" எனவெழும் சுப்பிரபேதாகமவசனங்களால் இனிது பெறப்படும். இது கொண்டே எம் பெரியாரும் அளவைகளை எடுத்துக் கூறிப்பின்னர் விஷயங்களை யெடுத்து விளக்குவாராயினர்.

சைவசித்தாந்தத்திற் பெறப்படும் இறை, உயிர், உலகு எனும் திரிபதார்த்தங்களின் லக்ஷணங்கள் யாவும் வேதங்களிற் பெறப்பட்டு வைதிக மாதலை முன்னர் நிரூபிப்பாம். இதற்கு வேதசிரஸுகளெனப்படும் உபநிடதங்களிற் காணப்படும் வசனங்களைமாத்திரம் பரிசோதித்தல் போதா தென்பது எனது துணிவு. ருக்சம் ஹிதை, யஜுர்ஸம் ஹிதை முதலிய ஸம்ஹிதைகளிலுள்ள வாக்கியங்களையுங் கூட எடுத்துப்பார்த்தால் தான் நம் பெரியாரம் முப்பொருள்களைப் பற்றிக் கொண்ட தணிவு ஈதெனப் புலப்படும்- உபநிஷதங்களிலும் "इति शुश्रुम धीराणां" இவ்வாறு உணர்ந்த ஞானிகளுரைத்தார்கள் "इति शुश्रुम पूर्वेषाम्" இவ்வாறு ஆன்றோர்களது துணிவைக் கேட்டோம்—எனது என்று கூறியிருத்தலால், அச்சம்ஹிதா வசனங்கள் அன்னோர்களது வபிப்ராயங்களை வெளியிடுமென்பதிலோரையமில்லை. ஸம்ஹிதைகளிலுள்ள வசனங்களில் பல உபநிஷதங்களில் அப்படியேயும், சிறிது வேற்றுமையுடனும் காணப்படுவதை நீங்கள் சாணலாம். அவை முழுமையுமிங்கு விரிப்பதற்குப் போதுமான சாவகாசமில்லை. முக்கியமாய் இன்னபல மந்திரங்களையே கொண்டு விளங்கலால் மந்திரோபநிஷத் என்று கூறப்படும சுவேதாசுவதர உபநிஷத்திலும், முண்டகம், அதர்வசிரசு முதலிய உபநிஷதங்களிலும் பல மந்திரங்கள் காணப்படுவதை நீங்கள் கவனிக்கலாம். கர்ம காண்டமெனும் சம்ஹிதைகளில் சில பலகர்மங்கட்கு இடையிலும், கர்மங்

களைப்புத்தேடித்தும் அஃதல்லாமல் தோத்திரங்களாகவும் அம் மந்திரங்கள் காணப்படுகிறதும், எனைகாண்டங்களில் அக்கர்மங்க ளின்றி ஈச்வரவிசாரணை லந்தர்ப்பத்தில் மாத்திரம் காணப்படு கிறதும் தான் வித்தியாசமே யொழிய மற்றொரு வகையாலும் வேற்றுமை காண்டலரிது. இடம் வந்துழியவைகளை கொஞ்ச மெடுத்துக் காட்டுவோம். முதலிற் பதிதர்மத்தைப் பற்றிக் கொஞ் சம் விசாரிப்போம்.

ருக்வேதம் லம்ஹிதையில் **इयं विसृष्टिर्यत आबभूव यदिवादधे यदि वान । यो अस्याध्यक्षः परमेव्योपन्त्सो अङ्गवेद यदिवानवेद** மக்காள், எவனி டமிருந்து பல்வேறு விதமாகக் காணப்படு மிவ்வுலகமுண்டாயிற் றோ, எவனுலிவைகள் தாங்கப்பட்டு, மாறுதலா மழிவையடைகின் றதோ, எவனிவைகளை நடாத்து மிறையாய் நிற்கிறானே, எவன் பர மாகாசத்தின் கண்ணுள்ளானே அவனை யறியுமின் வேறொருவனை யும்கினையேல் எனக்கூறியது. தைத்தரீய உபநிஷத்து பிருகுவல்லி யில் பிரம மினைத்தென **" यतोवा इमानि भूतानि जायन्तेयेन जातानि जीव-न्ति यत्प्रयन्त्यभिसंविशन्ति तद्विजिज्ञासस्व तदब्रह्मेति "** என்று கூறி **सषा भार्गवी वारुणीविद्या परमे व्योमन् प्रतिष्ठिता "** என்று முடித்தது எவனி டமிருந்து இந்த பூதங்கள் யாவும் உண்டாகின்றனவோ, உண்டா னவைகள் ஜீவிக்கின்றனவோ, எவனிடமுறைகின்றனவோ அது பிரமமென்று அறிவாயாக என்றும் இந்த வித்தையானது பரமா காசத்தில் நிலை பெற்றது எனக்கூறியிருக்கிறது. அன்றியும் ருக் வேதத்தில் 10-ம் மண்டலத்தில் அடியிற்கண்ட மந்திரங்கள் காணப் படுகின்றன.

(1) **हिरण्यगर्भस्समवर्तताग्रे भूतस्य जातः पतिरेक आसीत् सदाधारपृथिवीं द्यामुतेषां कस्मै देवाय हविषा विधेम** எல்லா வழகிய வண்டங்களையுந் தன் கையடக்கிய பதி ஒருவன் முந்தியிருந்தான். அவனே பூமியையும் இந்த விண்ணையும் தாங்குகிறான். அந்த காணப்படாத தேவ னுக்கு இந்த அவிஸ்.

(2) **यः प्राणतो निमिषतो महित्वैको राजा जगतो बभूव । यईशे अस्य द्विप-दश्चतुष्पदः कस्मै देवाय हविषाविधेम** எவன் உதுர்த்தியிம் இமைத்தும் ஜகத் தினது உற்பத்திலயங்களைச் செய்து இந்த ஜகத்திற்கு இறைவ

னுய் ஒருவனுய் நிற்கிறானே இந்த இருகால் நாற்கால் பசுக்களை ஆளுகிறானே அவ்வொரு காணப்படாத கடவுளுக்கு இந்த ஆகுதி.

(3) **य आत्मदा बलदायस्य विश्व उपासते प्रशिषं यस्य देवाः ।**
यस्य छाया अमतं यस्य मत्युः कस्मै देवाय हविषा विधेय । எவன் என்னை எனக்குத்தந்தான் எவன் ஆற்றலைக் கொடுக்கிறான் எவனை எல்லோரும் தொழுகிறார்கள்—எவன் தேவர்களுக்கு பிடிப்பாய் நின்றவன் எவனது அருகாமை முடிவிலின்பமும், அஃதல்லாததே துன்பமோ அவனுக்கு இந்த ஆகுதி.

(4**यस्य इम हिमवन्तः महित्वा यस्य समुद्रं रसायासह आहुः कस्मै देवाय हविषा विधेय** எவனுடைய கடைமையாக இந்த இமயமலைத் தொடரும் இந்தசமுத்திரமும் கூறப்படுகின்றதோ அவ்வொருவனுக்கு இந்த ஆகுதி.

(5) **योदेवेषु अधिदेव एकआसीत् कस्मै देवय हविषाविधेय** எவன் எல்லாதேவர்களுக்கு மிறைபாய் ஒருவனுய் விளங்குகிறானே அந்த ஒரு காணப்படாக் கடவுளுக்கு இந்த ஆகுதி.

(6) **यैन द्योः उग्रा पृथ्वी च दृढं येन सुवस्थितं ।**
येन नाकः कस्मै देवाय ववयी धीहेष ॥ எவனலிந்த விண்ணும் பலதிறப்பட்ட இப்பூமியும் ஆகாயத்தில் நிலைபெற்றதோ அவனுக்கு இந்த ஆகுதி.

(7) **जनिता यः पृथिव्याः योवा दिवे सत्यधर्मोजजान**
यआपः चन्द्रो बृहतीर्जजान कस्मै देवाय हविषा विधेम ॥

எவனிந்த பூமியையுண்டுபண்ணினவன், இந்த விண்ணை எந்த என்று மோரியல் போடுகின்ற காரணன் உண்டாக்கினன் எவன் இந்த ஜலம், பெரிதாம் சந்திரன் முதலிய வஸ்துக்களைபடைத்தவன் அவனுக்கு இந்த ஆகுதி " **अहं भुवं वसुनः पूर्व्यः पतिरहं धनानि संजयापि शाश्वतमांहवन्त पितरं** " என்ற பகுதியில் நானே எல்லோருக்கும் முந்தியுள்ள பதி நானே எல்லோருக்கும் வேண்டியவைகள் கொடுக்கிறேன். நான் என்றைக்கு அழிவற்றவன். என்னையே பிதாவென கூப்பிடுகிறார்கள் என்று பெறப்பட்டது. இவைகள் ருக்வேதத்திலுள்ளன. இம்மந்திரங்களை எஜுர்வேதத்தில் 4வது

காண்டத்திலும் 7வது காண்டத்திலும் சிறிது வேற்றுமையுடன் காணப்படுகின்றன. அன்றியும் இம்மந்திரங்களிலொன்றுன **யஈசே அஸ்ய த்விபதஶ்சதுஷ்பதஃ கஸ்மை தேவாய ஹவிஷாவிதேம** என்னும் மந்திரம் சுவேதாசுவதரத்திலுள்ள **"யோ தேவானாமதிபோயஸ்மின்லோகா ஆதிஶ்ரித யஈஶ அஸ்ய த்விபதஶ்சதுஷ்பதஃ கஸ்மை தேவாய ஹவிஷா விதேம** என்னும் மாந்த்ரத்தில் பிற் பாதியாயமைந்ததும் காண்க— அன்றியும் மந்திரமே **இமं பஶுं பஶுபதே தே அத்யபத்னாம்யக்னே ஸுகுதஸ்ய பதோ அனுமன்யஸ்வ ஸுயஜாயஜாயஜுஷ்ட தேவானாமிதமஸ்துஹவ்யம் ஏஷாபிஶேபஶுபாதஃ பஶூனாं உத ச த்விபதாம்** என்ற பகுதியில் சில வேற்றுமையுடன் காணப்படுகின்றது. அகின்றியுமிது. **யதா நஶமஸ த்விபதேசதுயதே** என்ற ருதருத்ரிய பாகத்திலும் காணப்பட்டது. **ருசோ அக்ஷரே பரமே வ்யோமன்ய ஸ்மிந்தேவா அதி விஶ்வே நிஷது । யஸ்தான்னவேதகிமூசாகரிஷ்யதி யத்தலாத்வது இமேஸமாஸதே** என்ற ருக்வேதத்திலுள்ள மந்திரம்சுவே தாசுவதரத்தில் 4வது அத்தியாயத்தில் 8 வது மந்திரமாகக் காண படுகின்றது. அன்றியும் யஜுர்வேதஸம்ஹிதையிலுள்ள **ஏகஏவ ருத்ரோ நத்விதீயாயதஸ்துஃ** என்னும் மந்திரமும் சதருத்ரியத்திலுள்ள **யாத பத்ரஶிவாதனுரகோரபாபகாஶினி தயானஸ்ததனுவாஶந்ததயாஸிரந்தாசி சாகஶீஹியாஷிகு கிரிஶந்த ஹஸ்தே விஷ்தவே ஶிவாं கிரித்ராதாருஹாஹிꣳஸோ புருஷꣳ ஜகத்** என்னும் மந்திரங்கள் சுவேதாசுவதரத்தில் மூன்றுவது அத்தியாயத்தில் பெறப்பட்டது. அன்றியும் யஜுஸ்ஸம்ஹிதையில் 5வது காண்டத்திலுள்ள **யோருத்ரோ அக்னாயா ஆஸ ய அரோருதா பதீபுவிஶ்வா புவனாவிவேஶ** என்னும் மந்திரம் சுவேதாசுவதரத்தில் **யோதேவோ அக்னௌ யோ அபாஸுயோவிஶ்வ புவனமாவிவேஶய ஓஷதீஷு யோவனஸ்பதிஷு தஸ்மை தேவாயனமஃ** என்று சுவேதாசுவதரத்தி லிரண்டாவதத்தியாயத்தில் பெறப் பட்டது. இப்படியே **மானஸ்தோகேன நயேமான ஆயுஷி மானோகோஷு** எனும் சதருத்ரிய மந்திரம் அவ்வுபநிஷத்தில் நாலாவது அத்தியாயத்தில் பெறப்பட்டது. எஜுஸ் ஸம்ஹிதை 4-வது காண்டத்திலுள்ள **விஶ்வதஶ்சக்ஷுருத விஶ்வதோமுகி** எங்கும்கண் எங்குமவன்முகம் எனும் மந் திரம் அவ்வுபநிஷத்தில் 3-வது அத்தியாயத்தில் பெறப்பட்டது. சதருத்ரியத்தில் **நமோஹிரண்யபாஹவே சேனான்யே திஶாं ச பதயே நமோனமோ வ்ருக்ஷேப்யோ ஹரிகேஶிப்யோ பஶூனாं பதயேநமோ நமஸ்ஸஸ்பிஞ்ஜராயத்விஷீமதே பதீனாं பதயேநமோ....** என்று எல்லாவற்றிற்கும் பதிலாகவிளக்கி **ஜகதாं பதயே நமோ நமோ** என்றும் மற்ற எல்லாவஸ்துக்களுக்கும் பதி இறைவனென்பதை

நிரூபித்தது. யாகமத்தியிலும் ஒரு கடவுளா முருத்திரனைக் குறித்து **भूपतये भुवनपतये भूतानां पतये,** என்று விளக்கியது. சுவேதாச்வதரத்தில் **पतिं पतीनां** என்று பதிகளுக்குப் பதியாக இறைவனை விளக்குகின்றது. முண்டகத்தில் **"यत्र देवानां पीतरकोधिवासः"** தேவர்களுக்கு பதி ஒருவன் உள்ளான் என்பதை விளக்கிற்று. அதர்வகாண்டத்தில் **नद्वितीयो नतृतीयो न चतुर्थोनाप्युच्यते । न पञ्चमेन षष्ठो सप्तमोनाप्युच्यते । नाष्टमा न नवमो देशमा नाप्युच्यते । तमिदं निगतं सहस एषएक एक वृदएक एव । अस्मिन्देवा एकवृतोभवन्ती"** என்று கடவுள் இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து அல்ல—அவன் ஒருவன் ஒருவன்தான்-ஒரே ஒருவன்-இவனிடத்தில் எல்லா வுலகும் நிலைபெறுகின்றன. இவனையே எல்லா தேவர்களும் பின் பற்றுகிறார்களென்று Max Muller-ம் தான் கடைசியில் எழுதிய Six systems of philosophy என்னும் கிரந்தத்தில்"Indeed we find many hymns in the Vedas which bring home to our mind the conviction that Monotheism is their fundamental doctrine" வேதங்களிற் காணப்படும் பல மந்திரங்களும் அந்நாட்களிலிருந்த பூர்வீகர்களுடைய முக்கியமான கொள்கை ஒரே தெய்வ வழிபாடுதானென்ற பூரண நம்பிக்கையை யுண்டாக்குகின்றன"என்று எழுதுவாராயினர். இதனால் ஒன்றென்றதொன்றேகாண் ஒன்றே பதி என்ற சிவஞான போத வுண்மை வெளிப்பட்டது.

நண்பர்காள்:—இம்மந்திரங்களையும் இன்னுமிதைப் போன்ற பல மந்திரங்களையும் நீங்கள் கவனித்துப் பார்ப்பீர்களானால், அவர்களிவ்வுலகத்தைப் பற்றிக்கொண்ட வபிப்பிராய மினைத்தென வெளிப்படும். அன்னோர்களுக்கு இவ்வுலகம் மித்தையாய் இல்பொருளாய் தோன்றிற்றோ அல்லது உள்பொருளாயமைந்ததோ வென்பதைக் கவனிப்போமாயின், வைதிகதிரியமான சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், மலைகள், சமுத்திரங்கள், நதிகள், முதலியவைகளும், தனுகரணம், புவனம், போகமா யமர்ந்தவைகளும் கொண்ட இவ்வுலகமாய் அவ்வான்றோர்களுக்கு சர்வசக்தியும் சர்வ ஞானமுமுடைய ஓர் இறைவனைக் காட்டிற்று. இவைகளால் கடவுளுடைய சர்வ வல்லமையும் அவருடைய சர்

வஞ்ஞத்வமும் அவருடைய மகிமையும் அக்காலத்துப் பெரியோர் களுக்கு விளங்கியது. நிர்மானுஷியமான ஒரு இடத்தில் ஒரு விசித்திரமான அழகிய கட்டடத்தைக் கண்ட ஒருவன் அக்கட்ட டத்தைக் கட்டிய வொருவனை நேரிற் காணுதிருப்பினும், அப் படிக் கட்டிய வொருவனிருந்தே தீரவேண்டுமென்று எப்படி நினைக்கிறானோ அப்படிப்போல விசித்திரமான, அழகிய இவ்வண்ட கோடிகளையும், அவைகள் ஒரே ஒழுங்காய் நடைபெற்று வரு வதையும், தனுகரண புவன போகாதிகளாய் உயிர்களுக்கு இச்சை ஞானக்கிரியை (Will knowledge and power) களையும் விளை விப்பதையுங் கண்ட நம் முன்னோர்கள் "These are thy wondrous works, How wondrous Thou" என்று மில்ட்டனர் கூறியதுபோல முதல்வனது அழகையும் ஆற்றல்களையும் பூசித்தார் களா அல்லவா என்பதைக் கவனியுங்கள். அந்தோ எம்பெருமா னுடைய சிருட்டி வல்லமையையும், அவனது புத்தி விசாலத்தை யும் கண்டு அவனை அறியவும் அடையவும் விரும்பாது, மின்மினி த்துணை யெனும் அறிவின்றிக் கிடந்த இவ்வுயிர்க் கூட்டங்கட்கு அறிவையும் செயலையுந் தந்து, பார்க்கக் கண்ணும், கேட்கக் காதும், வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்க்கச் சென் னியுந்தந்த தலைவனுக்கு, "எந் நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை செய்ந் நன்றிகொன்றமகற்கு" எனும் பொய்யாமொழி யைக் கவனித்து, நன்றி பாராட்டாமல், ராஜ்ஜியில் இல்லாச் சர்ப்பம் தோன்றுவதுபோல், இல்லாவுலகம் தன்னில் தோன் றுகிறதென்னுமஞ்ஞானிகளின் பெற்றியென்னே. கூகைபோற் கத்தி யழியு மிவ்வஞ்ஞானிகளது விவர்த்த வாதமெனும் வியர்த்த வாதம் ரிக்வேதாதிகளில் பெறப்பட்டதோ வன்றி உலகம் சத்திய மென்று கூறும் சைவசித்தாந்திகளது வுண்மை வெளியாகின் றதோ என்பதை மனோசாக்ஷியை வஞ்சிக்காமல் நடுவு நிலைமையை நாடும் பெரியோர்களுக்கு விளங்கும். சுவேதா சுவதர உபநிஷத் தின் துவக்கத்தில் "காரணமாய் பிரமமெது, எதினின்று யாமுண் டாயினோம், எதனல் உயிர்ப்பித்திருக்கிறோ மென்பன வாதி பிரம வாதிகள் வினாக்களுக்கு காலம், ஸ்வபாவம், நியதி, பூதங்கள், பிரக்ருதி முதலிய வள்பொருள்களாகிய அவைகள் அசேதனங் களாலையால் காரணங்களாகா, உயிர் சேதனமாயிருப்பினும் சுக

துக்கங்களில் மொத்துண்டு வாழ்தலால் காரணமாகா, வென்று காலம், நியதி, உயிர் ஆகிய வவாந்தர காரணங்களுக்கும் காரணமாய் இறைவன் ஒருவனே சர்வகாரணன்' என்று எற்பட்டிருக்கின்றது. அதர்வ சிகையிலும் "பிரம விஷ்ணு ருத்திர இந்திரர்கள் இந்திரிய களாகிய இவைகள் எல்லாம் பூதங்களுடன் பிறப்பிக்கப்படுகிறவைகள். காரணங்களுக்கும் காரணனுமிறைவன் ஒன்றிலும் எக்காலத்தும் பிறப்பிக்கப்படுவதில்லை. இன்பத்திற் குறைவிடமாதலால் சம்புவான சர்வைச்வர்யங்களையுங்கொண்ட சர்வேச்வரன் ஒருவனே பரமாகாசத்தின்கண் தியானிக்கற்பாலன் என்று கூறியிருக்கிறது. சேதனு சேதனங்களுள் பொருளாகாவாயினும் அவைகளுக்கு ஆற்றலில்லை. இறைவனுக்கே முழுவாற்றலுண்டு என்று கூறும் ஸாதுமார்க்கத்தை யுபதேசித்தும் வேதோபநிஷத்துக்களில் வெகு தூர்க்கந்தம் பொருந்திய விவர்த்தவாதம் பெறப்பட்டதேயில்லை. இத்தூர்க்கந்தத்தை வலிந்து நுகரவிச்சிக்கும் சிறுர்த்தொகுதிகளின் செய்கை அம்மம்ம கொடிது கொடிது:—ருக்வேதத்திற்முனே "**सूर्याचन्द्रमसौधाता य थापूर्वमकल्पयत् । दिवंच पृथिवींचान्तरिक्षम थोसुवः**" எனும் மந்திரத்தால் மீண்டும் மீண்டும் இறைவன் முன்போலவே சூரிய சந்திரர்களையும், விண்ணையும், மண்ணையும், இடைவெளிகளையும், உண்டாக்குகிறான், என்று பெறப்பட்ட துணர்ந்தவர்கள், இரஜ்ஜுவில் சர்ப்பத்தோற்றமில்லை யென்று கண்டபின்னர் சர்ப்பந்தோன்றுதெனும் வீண் வாதத்தை எப்படி இருக்காதி வேதங்களில் காண்பார்களோ. ஆகையால் இருக்காதி வேதங்களுக்கும் விவர்த்த வாதத்திற்கும் வெகுதூரமென்க. இருக்யஜுராதி சமஹிதா வாக்கியங்களாலும் உபநிஷத் வாக்யங்களாலும் உலகுமுண்டு, உலகுக்கிறையுமுண்டெனுஞ் சைவசித்தாந்தமே பெறப்படுவதேயன்றி வேறெவ்விதத் துன்மார்க்கமும் பெறப்பட்டதில்லை யென்பதை நன்று கடைப் பிடியுங்கள்.

अस्तिकश्चिद पर्यन्त रमणीय गुणाश्रयः ।
पतिर्विश्वस्य निर्याता पशु पाश विलक्षणः ॥

பசு பாசங்களுக்கு விலக்ஷணனுய், முடிவில்லா வழகிய குணங்களுக் குறைவிடமாகிய, உலகத்தை யுண்டாக்கிய பதி ஒருவன்

உளன்—என்னும் வாயுசங்கிதையின் கம்பீரமான் வாக்கையுங் கவனியுங்கள். இவ்வாக்கியம் சுவேதா சுவதர உபநிஷத்தை உபபிரும்மணம் செய்யப்புகுந்த இடத்திலுள்ளது என்பதையு மோர்க.

இனி பதியை ஒன்றென்று சுட்டிய பசுவினுண்மை பகர்வாம். பதிக்கும் பசுவுக்குமுள்ள வேற்றுமையை இருக்வேதத்திற் **"த்வாசுபர்ணா சயுஜாசகாயா சமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே। தயோரன்யஃ பிப்பலம் ஸ்வாத்வத்யனன்ய்ன்யோ அபிசாகசீதி"** எனும் மந்திரம் நன்கு விளக்கியது. இம்மந்திரம் சுவேதாச்வதரத்திலும் முண்டகோபநிஷத்திலுமுள்ளது. அழகிய சிறகுகளையுடைய, மித்திரபாவம் பூண்ட இரண்டு பக்ஷிகள் சேர்ந்து ஒரே விருக்ஷத்திலுள்ளன. அவ்விரண்டில் ஒன்று அம்மரத்தின் பழத்தை விருப்புடன் புசிக்கின்றது. மற்றொன்று புசியாது எங்கும் பிரகாசமா யிருக்கிறது. முண்டகத்திலிம்மந்திரத்திற்கடுத்த மந்திரம் **சமானேவ்ருக்ஷே புருஷோனிமக்னோ அனீசயாசோ சதிமுஹ்யமானஃ ஜுஷ்டம் யதா பஶ்ய த்யன்யம் மஹிமான மிதி வீதி மீசமஸ்ய சோகஃ।** என்ற மந்திரமுள்ளது. இது சுவேதா சுவதரத்திலுமுள்ளது. புருஷன் அநீசனுய் (ஆற்றலில்லாதவனுய் மோஹத்தை யடைந்தவனுய், அவ்விருக்ஷத்தில் முந்தினவனுய் துக்கிக்கிறன். நித்திய திருப்தனுய் வேறொருவனை (இறைவனை) எப்போது பார்க்கிறனோ அப்போது சோகத்தைப் போக்கடிக்கப்பட்டவனுய் இறைவனது மகிமையை யடைகிறன்—என்று பொருள்படும். சுவேதாசுவதரத்தில் இவ்விரண்டு மந்திரங்களுக்கும் முந்தி **"அஜாமேகாம் லோஹிதசுக்லகிருஷ்ணாம் பஹ்வீம் ப்ரஜாம் ஜனயந்தீம் சரூபாம்। அஜோஹ்யேகோஜுஷமாணோ஽னுசேதே ஜஹாத்யேனாம் புக்தபோகாம் அஜோன்யஃ।** எனும் மந்திரமுள்ளது. வெண்மை, செம்மை கருமை நிறம் வாய்ந்தும் எல்லாப் பிரஜையையு முண்டுபண்ணுவதாயுமுள்ள பிறப்பில்லா ஒருத்தியை, பிறப்பில்லா வொருவன் போகித்தவனுய் கூட சயனித்திருக்கிறன். வேறொரு பிறப்பில்லாதவன் பூஜிக்கப்பட்ட இவளைத்தொடாமல் விடுகிறன் என்று பெறப்பட்டது. இதனுல் விருக்ஷமாகச் சொல்லப்பட்டது ஸ்தூல சூக்ஷ்மபரமாய், அந்தக்காணக்கள், தன்மாத்திரைகள், பஞ்சபூதக்கள், ஞானேந்திரிய, கர்மேந்திரியக்களாம் சாகைகளாக விரிந்த பிரகிருதியும், அதில் அநீசனுய் தனுகாணபுவனக்களைக் கொண்டு பிரக்ருதியின் போகங்களையே நுகருபவன் ஜீவனும் (புருஷனும்), இவைகளை

புசிக்காமல் இவைகளைவிட்டு பிரகாசனுய் நித்திய திருப்தனுயுள்ள வன் ஈசனுகும். இரண்டுபேர்களுக்கும் அழகிய பக்ஷங்கள் என்பது ஈசனுக்குப்போலவே ஆத்மாவுக்கும் இச்சா ஞானக்கிரியைகளுள் ளதையும், மித்திரபாவமாய் என்றது ஈசனுல் ஆத்மா உஜ்ஜீவிப்ப தையும் அதாவது ஆத்மா உணர்ந்தும், உணராமலும் ஈசனே யாசரித்திருப்பதையும், ஈசன் கருணையினுல் ஆத்மாவைத் தாக்கு வதையும் விளக்கும். அன்றியும் "सयुजा" ஒன்றுசேர்ந்து என்பது வியாபக வியாப்திபாவமாய் ஈசன் அதீசனும் ஆத்மா எனுமிருவர் களும் எப்போதும் கலந்திருத்தலையும் விளக்கும். மற்றும் ஈசன் அதீசன் எனு மிருவர்களும் விருக்ஷத்திலிருக்கிறார்கள் என்றது, வியாபக, வியாப்திபாவனையாக வொன்றிலொன்று நின்ற முறை மையை விளக்கியது. ஈசனே யுற்று "एतज्ज्ञेयं नित्यमात्म संस्थं" எனறு கூறியதால் உடலுக்குயிர்போன்று, உயிர்க்குயிராய் இறை வனிருப்பதும் வியக்தம். இவ்வாறு இவர்கள் கலந்தும் போக்தா ஆத்மாவும், போக்யம் பிரகிருதியும், ஊட்டுகிறவன் ஈசனுமென் பது "भोक्ता भोग्यं प्रेरितारं च मत्वा" என்ற வாக்கியம் தெரிவிக்கும். அன்றியும் ஜீவனும் ஈசனும் வேறு வேருனவர்களும், வேறுவே ருனதொழில்களைக் கொண்டவர்களென்பதும் पृथगात्मानं प्रेरितारंच मत्वा" என்ற சுவேதாசுவதர வாக்கியம் விளக்கும். எது உள்ளுக் குள் வியாபகமா இருப்பதோ அது வெளியிலும் வியாபகமாகும். ஜீவன் தேகத்தினுள்ளும் புறம்புமுள்ளான். ஈசன், ஜீவஜகத்துக் களினுள்ளும் புறம்புமுள்ளான். இதனல் பதி வியாபகமும், பசு வியாப்தியும், பாசம் வியாப்பியமும், உள்ளனவென்பது வேத நூற்றுணிபு. ஈச்வரனது தன்மையைக் கூறவந்த யோக சூத்தி ரக்காரராம் பதஞ்சலி பகவானும் ஈச்வரனே "क्लेशकर्म विपाकाशयैर-परामृष्टः पुरुष विशेष ईश्वरः" என்று பஞ்ச கிலேசங்கள் முதலியவை களால் தாக்கற்றவன் என்று கூறினர். இவைகளே மலங்கள் எனப்படும் என்பதை அப்பகவானே "तदासर्वावरणमलापेत स्येशान-स्याऽनन्त्याज्ज्ञेयमल्पं" எனும் சூத்திரத்து விளக்குகிறார். பஞ்சகிலேசங் களுள் ஒன்றுகிய அவித்தையே ஆணவமெனப்படும். இதனுலே ஜீவன் ஆணவாதி மல பத்தனென்பது இருக்வேதாதிகளாலும், உபநிஷத்துக்களாலும் துணியப்படும். ரிக்வேதத்திற்றுனே "तम आसीत् तमसा गूढमग्रे" என்று கூறியிருத்தலால் சிருஷ்டிக்குமுன்,

ஜீவன் தனுகரணபுவன போகங்களைப் பெறுமுன், இருட்டில் இருந்தது. அப்போதும் மற்றவைகளும் இருட்டால் ஆவரிக்கப் பட்டிருந்தது என வெளியிட்டது. சுழப்தியிலிருப்பவன்தான் அஞ்ஞானத்திலமிழ்ந்து அஞ்ஞானமாயிருந்தபோது மற்ற தனு வாதிகள் விளங்காமலிருந்ததுபோல என்க. இறைவன் மாத்திரம் அவ்விருளால் ஆவரிக்கப்படாது நின்றான் என்பதை **"यदासीत् तन्म हि नाजानतैकम्"** எனும் வாக்கியம் விளக்கிற்று. அவனது போற் றலாலிவைகள் மறுபடியும் வெளியிடப்பட்டமையை யுரைத்தலா லென்க. **"धाताय यापूर्वं मकल्पयत्"** முன்போலவே இறைவன் மறு படியு மிவ்வுலகை யுண்டாக்கினன் என்று முன்னர் கூறிய மந்திரத் தாலும் வியக்தம். இத்தமஸ் அல்லது இருள் பூதவிருளல்ல வென் பதை **"मृत्युमेव अस्मात् अपनुदति उद्दयं तमसः पर इत्याह— पाप्मावतमः पाप्मानमेव अस्मात् अपहन्ति अगन्मज्योतिरुत्तमम्"** என்ற எஜுர்வேத மந்திரத்தின் 7வது காண்ட வாக்கியத்தால் விளங்கும். இங்கு தமஸ் என்று சொல்லப்படுவது மிருத்யு அல்லது பாபமா எனப்படும் அகவிருளையும், ஜ்யோதி என்பது உட்ஜோதியாம் கடவுளை முணர் த்தும். அஞ்ஞானத்தை யிருளாகவும், ஞானத்தை ஜோதி என் பதும் சாஸ்திரமரியாதை. சதபத பிராம்மணத்தில் **"असतो मासद्गम्य, तमसो माज्योतिर्गमय मृत्योमी अमृतं गमय"** அஸத்திலிருந்து என்னை ஸத்தை யடையச்செய், தமஸிலிருந்து ஜ்யோதியை யடையச் செய், மிருத்யுவிலிருந்து அமிர்தத்தை யடையச்செய் என்ற பெரியோர்களுடைய ஸ்தோத்திரத்தில் பெறப்படும் **असत् तमस् मृत्यु** எனும் பதங்கள் அகவிருளையும் **सत् ज्योति अमृतं** எனும் பதங் கள் கடவுளை விளக்குமென்பதை **मृत्युर्वै तमोज्योति रमृतम्**, மிருத்யு தான் தமஸ், ஜ்யோதி அமிர்தம் எனும் பிருகாதாரணிய வசனம் தெரிவிக்கும். மேல் கண்ட மந்திரத்தையே பிருகாதாரணியம் விளக்க வெழுந்தது. அன்றியும் எஜுர்வேதம் 7வது காண்டத் திலுள்ள **"यथैव मनुष्याः एवं देवा अग्रे आसन् ते अकामयन्त पाप्मानं मृत्युं अपहन्यदैवीं संसदं गच्छम"**—தேவர்கள், மனுஷ்யர்களைப்போலவே இருந்தார்கள். அவர்கள் பாப்மாவாம் மிருத்துவைப் போக்கின தைவபதத்தை அடைவோமாக என்று எண்ணினார்கள், என்று கூறியிருக்கிறது. **मृत्युमेव अस्मान् अपनुदति—पाप्मानमेव अस्मात् अपहन्ति**— நம்மிட மிருந்து மிருத்தியுவை போக்கடிக்கிறான்—

நம்மிடமிருந்து பாப்மாவைப் போக்குகிறான் என்பதால் அம்மிருத்யு, பாப்மா எனப்படும் இருள் அகவிருளாம் ஆணவமென்பது ஸித்தித்தது. இவ்வாணவம் ஆன்மாவின் அறிவை மறைத்ததாகும். **तदासर्वावरणमलापे तस्या ज्ञानस्य** '' எனும் யோக சூத்திரத்தால் விளங்கும். கேநோபநிஷத்திலும் **"नोवा एतामेवं वेजापहत्य पाप्मान अनन्ते स्वर्गलोके म्यारोहाने तिष्ठति** '' என்றதாலும் விளங்கும். **तरति शोकं तरति पाप्मानं गुहाग्रन्थिभ्जो विमुक्तोऽमनो भवान** '' எனும் முண்டகோபநிஷத்தாலும் இருதயத்திலுள்ள இருளே பாப்மாவெனப்பட்டது. இதனால் இறைவன் **"अपहतपाप्मापरदोव मत्युः"** எனச் சாந்தோக்கியத்தில் அனுதியிலேயே பாப்மா இல்லாதவனென வெளிப்பட்டது. அன்றியும் ஜீவன் பாப்மாவையுடையவனென்பதை **"सर्वे पाप्मानो अतो निवर्त्तन्ते** இவனிடமிருந்து எல்லா பாப்மாக்களும் கழிகின்றன" என்பதாலறியலாம். எஜுர்வேதம் 7வது காண்டத்தில் **पाशात् पशुं प्रतिमुंचतु एनसः विश्वान्मुंचतु अंहसः शपितारः उपेतन नमः पशुपत्ये करोमि** என்பதாலும் அது விளங்கும். பாசத்திலிருந்து பசு விலகட்டும்—பாவத்திலிருந்தும் உலகத்திலிருந்தும் விடுபடட்டும். பசுபதிக்கு நமஸ்காரம் என்று தெரிவித்து பாசங்களிலிருந்து விலகுமெனத் தெரிவித்ததற்கு **एनस अंहस** முதலியது கர்ம பாசத்திற்கும், பாப்மாவென்பது ஆணவபாசத்திற்கும் விச்வமென்பது மாயாபாசத்திற் கமைந்தன. அன்றியும் **नी हारेण प्रावृतः** எனும் எஜுஸ் ஸம்ஹிதா வாக்கியத்தாலும் நிஹாரமென்பதும் பாசத்திற்குப் பெயராதல் விளங்கும் **पश्यंत्व बहुभिर्गोत विदृष्ट पशुभिस्सदा । पशुरूक पशुनोहार मृत्युमूर्च्छा मलंजनैः । अविद्या वृति प्रगलानि पापमूल क्षयादिभिः । तदेकं सर्वभूतानाम नादिनिविडं महत्** '' என்ற மிருகேந்திர வசனத்தால் பாப, அவித்தை, மிருத்யு, நீஹாரம், ருக் முதலிய பதங்கள் ஆணவமலத்தின் பரியாயப் பெயர்கள் என்பது விளங்கும். உபநிஷத்தில் **पशुपाश विमोक्षाय**—பசுவின் பாசமோசனத்தின் பொருட்டு **ज्ञात्वादेवं मुच्यते सर्वपाशै** இறைவனை யறிந்து பாசத்தினின்றும் விடுபடுகிறான் **ज्ञात्वादेवं सर्वापाशापहानिः** முதல்வனை யறிந்து எல்லாப் பாசங்களுமிறும் என்றும் **तमेवविदित्वा अतिमृत्युमेति** என்றும் **ज्ञात्वा-तं मृत्युमत्येति** அவனை யறிந்து மிருத்யுவை கடக்கிறான் என்றும், **पाशं दहति पण्डितः** பாசத்தைப் 'பண்டிதன் கொளுத்துகிறான் என்பன வாதி சுவேதா சுவதரகைவல்ய அதர்வசிகாதி யுபநிஷதங்

களால் மிருத்யு முதலிய சப்தம் பாசத்திற்குப் பெயராதல் பெற்றும் பிருகதாரணியத்திலும் எஜுர்ஸம்ஹிதையாலும் தேவர்கள் பாசபத்தர்களென்று சொல்லப்படுகிறார்கள். **सावा एषां देवता एतासां देवतानां पाप्मानं मृत्युमपहत्य** என்றும் **मया मनुष्याः एवंदेवा अग्रे आसन् ते अकामन्तपाप्मानं मृत्युमपहत्य दैवीं संसद गच्छेम इति** என்பனவாதி வாக்கியங்களால் வெளியாகும். **मानुषेषुते उस्रत् पाशान् प्रतिमुंचातु अंहसः** என்ற யஜுர்வேத 4வது காண்ட வசனத்தாலும் எல்லா மானிடர்களும் பாசபத்தர்களென்பது வெளியாகும். சாந்தோக்கியத்திலும் **देवांवमृयो बिभ्यतः त्रयींविद्यां प्रावेशत्** மிருத்யுவுக்கு பயந்து தேவர்கள் வேதவித்தையை யடைந்தார்களென்றும் **च्छन्दोभि रच्छादयन्** வேதத்தால் மூடினார்களென்றும் கூறப்பட்டது. எஜுர்ஸம்ஹிதையில் **विष्णुमुच्चावदवोः छन्दोभिरमान् लोकान् अनयिजम्य अत्यजयन्** என்ற பகுதியில் விஷ்ணு முதலான தேவர்கள் வேதவித்தையால் ஜயிக்கக்கூடாத இந்த லோகங்களை ஜயித்தார்கள் என்று கூறியிருக்கிறது. **तहासुराः पप्मना विविधः** சாந்தோக சுருதியால் அசுரர்களும் பசுக்களென்பது பெற்றும். பாசஜாலங்களாகிய இந்திரியங்கள் பூதங்களுடன் பிரும்ம விஷ்ணு ருத்ரேந்திராதிகள் பிறப்பிக்கப்படுகிறார்கள் என்ற அதர்வசிகா வசனத்தால் பிரமவிஷ்ணு ருத்திராதிகளும் பாசபத்த பசுக்களென்பது வெளியாகும். எந்த சேதனங்களுடன் ஜடங்கள் சேர்க்கப்படுகின்றதோ அந்த சேதனங்கள் பசுக்கள் எல்பது திண்ணம். ஏனெனில் பாசங்களினால் பசுக்களுக்கு தநுவாதிகள் கொடுக்கப்படுவதே சிருஷ்டி எனப்படும். **"मए बध्यतेपाशैऽ सुखदुःखाशनः पशुः । लीलासाधन भूताय मीश्वरस्येति सूरयः"** பாசத்தாற் கட்டுப்பட்டு சுகதுக்காதிகளைப் பூஜிப்பதால் இவன் பசுவெனப்பட்டு ஈச்வரனது லீலையாகிய பஞ்சகிருத்தியங்கட்கு உரியவனாகிறான். **देवमान्मष्टकं मुख्यं मानुष्यमभमद्यमं । पश्चादयोऽधमः पंचयो न यस्ता चतुर्दश । अन्तराधरमावेपिनैजः संसारिणीपलः"** என்ற வாயு சம்ஹிதாவசனத்தால் எண்வகை தேவப்பிறப்பும் ஓர்நவகை மானிடப்பிறப்பும் ஐவகைக் கிழப்பிறப்புமாக பதினான்குவகை பிறப்புடைய ஜீவர்கள், உத்தம மத்தியம அதமபாவங்களாகி உண்மையாலே மலத்தாற் கட்டுண்டு போக்குவரவுள்ளவர்களாகிறார்கள். இப்படிப்பட்ட தேவயோனிகளில் **परस्तात्परपार्थान ब्रह्मविष्णुमहेश्वराः । जन्तर्न्तपशवः केचित् परपाप्पदाश्रया"** என்ற வாக்யத்தின்படி பிரும்ம

விஷ்ணு ருத்திரர்களாக சில பசுக்களிருக்கின்றனவென்பது பெறப்பட்டது. இதனால் மக்கள், தேவர் நாகர் முதலிய யாவர்களும் பசுக்களென்பது திண்ணம்—"**प्रजापत्मा. पशवः तेषांरुद्रः अधिपतिः**—முதல்வனால் சிருஷ்டிக்கப்பட்டார்கள். பசுக்கள் அவர்களால் முதல்வன் ருத்திரன் பதி-என்றும், **बहुरुपाः पशवः** பசுக்கள் அனேகபிரிவினர்கள் என்றும், **पांक्ताः पशवः** பசுக்கள் **ये अरण्याः पशवः**—காட்டிலுள்ளவர்களாம் பசுக்கள், **पशवो वै वयस्याः**—**नानामनसः खलुवै पशवः नाना वृताः** பலவெண்ணங்களையும் பல தொழில்களுடைய இவர்கள் பசுக்கள் **एतावन्तोवै पशवः द्विपादश्च तुष्पाट च** இருகால் நாற்கால்களுடையவர்கள் பசுக்கள்—**अग्निः पशुरासोत्**—அக்னி பசுவானான்—**वायुः पशुरासीत्**—வாயு பசுவானான். **आदित्यः पशुरासीत्**—ஆதித்யன் பசுவானான். **यजमानः पशुः**—யாகம் செய்பவனும் பசு **मन्यः पशु**—கோபமும் பசு **पुरुषं पशुं**—புருஷன் பசு என்பனவாதி வேதவாக்கியங்களில் பசுக்கள் பலர் கேட்கப்பட்டார்கள். இவைகளினால் பாசபசுக்களின் தன்மை கூறப்பட்டது. பதிக்கும் பசுவுக்கும் வித்தியாசமுவையென்றும், பாசத்திலொன்றும் பிரகிருதி உயிர்களுக்கு போகார்த்தமாய் இருப்பதொன்றென்றும் பெற்றோம்.

இறைவன் உயிர்களை ஈடேற்றவேண்டி பிறப்பான் இறப்பான் என்று சிலருரைக்கின்றனர். அதைப்பற்றி சிறிது கூறுவோம். இறைவன் நமக்குச் செய்யுமனுகூலம் யாதெனின் சிருஷ்டியாதி க்ருத்தியங்கள். இறைவன் சாவான் பிறப்பானென்று ருக்வேதாதிகளிலாவது முண்டக சுவேதாசுவதராதி உபனிஷதங்களில் ஒரு எழுத்தாவது காணோம். அப்படியிருந்தும் விச்வபதி என்றும், விச்வாதிப னென்றும் புவனங்களுக்கு கோபதாவென்றும் பதியென்றும், அடிக்கடி உபநிஷதங்களில் கூறப்படுகிறன். பதி எனின் காப்பாற்றுகிறவன் என்பது பொருள். இப்பதியை **एकोदेवः सर्वभूतेषु गूढः सर्वव्यापी सर्वभूतारात्पाकपीऽध्यक्षः सर्वभूताधिवासः**" என்று எங்கும் நிறைந்தவனாகவும், எல்லோருக்கும் அதிசமீபத்திலிருப்பவனாகவும், எல்லாக் கர்மங்களுக்கும் தலைவனாகவும் சொல்லப்படுகிறன். "**ईशः सर्वगोभुवनस्यास्यगोप्ता**" அறிஞன் எங்குநிறைந்து எல்லாரையும் காப்பாற்றுகிறவனாகச் சொல்லியிருக்கிறது. செத்துப்பிறந்து காப்பாற்றுகிறவனாக

ஒரு எழுத்துக்கூட வேதத்தில்காணேம். செத்துப் பிறந்து காப்பாற்றினன் என்று சொல்லப்படுகிற மதங்களிலுள்ள கடவுளரோ எங்கேயோ ஒரு மூலையில் ஜடதேகங்கொண்டு உட்கார்ந்தும் படுத்துமிருப்பதாகச் சொல்லப்படுகிறார்கள். தனக்குப் பதிலாக சில உத்தியோகஸ்தர்களை (Deputies) அனுப்புவதாகச் சொல்லுகிறார்கள். வியாபக தர்மத்தால் பாச பசுக்களில் என்று மிருப்பவனுகத் தெரியவில்லை. அப்படியிருந்தால் எங்கேயோ யிருந்து வரவும் போகவும் பிரதானிகளை அனுப்பவும் இடமில்லை. சிருஷ்டி, ஸ்திதி, லய, திரோபவ, அனுக்கிரகாதிகிருத்தியங்களை அவனுடைய கருணையினுலேற்பட்டு உயிர்கள் காப்பாற்றப்படுபவர்களாக வேதங் கூறுமாயின் தான் எங்கேயோ இருந்தும், சில காலத்தில் மாத்திரம் வந்தும், தனக்குப் பதிலாக ஏவலாட்களை அனுப்பியும் காப்பாற்ற வேண்டுவதில்லை. எமக்கு யாமினியவனுயிருப்பதைப்பார்க்கிலும் எம்மிறைவன் எமக்கு மிக்க இனியவன். யாம் எமக்கு சமீபமாயிருப்பதை விட எம்மிறைவன் எமக்குமிகவும் எளிமையன். **तेनविना तृणमपि** '' அவனன்றி ஓரணுவுமசையாது எனும் கேவோபநிஷத்துண்மைபடி ஒன்றும் அவனன்றி நடக்காது. எம் கடவுள் எங்கேயோ இருக்கவில்லை. அப்படி அவன் செத்துப் பிறந்து எம்மை காப்பாற்றவேண்டியதாயின், எப்போதும், எவ்விடத்தும், எக்காலத்தும் செத்துப்பிறந்தாகவேண்டும். இல்லாவிடில் பக்ஷபாதமுண்டாகும். வானமண்டலத்திற் கப்பாலுள்ள எதோ ஒரு இடத்தில் ஜட தேகங்கொண்டுவந்ததிலும் அவ்வக் கடவுளரும் உயர்வுதாழ்வுகள் என்னு மிருதன்மை யுடையவர்களாகி அதில் ஒரு கூறு உயர்வாயும், மற்றொருகூறு தாழ்வாயு மிருப்பதாக வன்னேர்கள் கூறுகின்றார்கள். உயர்ந்த கூறு பிறப்பதில்லையாம். தாழ்ந்தகூறுதான் பிறப்பதாம். இதனுல் உயர்வாய் நின்ற தன்மை பிறத்தலடாது என்றும் தாழ்ந்தே பிறந்திருக்குமென்றும் கூறுகிறார்கள். இதனுல் உயர்வாய் நின்ற தன்மையில் கடவுளுக்கு பிறப் பிறப்பாதியுயிர்க்குண முரைத்தலடாதென்பது அன்னேர் மனத்தின் கண்ணும் பதிந்து கிடக்கின்ற துணர்வீர். வைஷ்ணவர்கள் பர, வியூகமென்னும் இருபகுதியில் பரன் என்பது பரவாஸுதேவன், வியூகம், என்பது வாஸுதேவ, ஸங்கர்ஷண,

பிரத்யும்ன, அநிருத்தர்கள். பரவாஸுதேவனும் வியூகவாஸு தேவனும் சமானர்கள்—இருமூர்த்திகட்கும் ஆறுகுணங்கள், ஆறு வியாபாரங்கள் உள. ஆனல் ஸங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தர் எனும் மூன்றுபேர்களில் ஒவ்வொருவருக்கும் இரண்டு குணங்களும் இரண்டு வியாபாரங்களும் மாத்திரமுண்டு. இவர்களில் பரத்திலிருந்து வியூகமும், வியூக வாசுதேவனிடமிருந்து ஜீவனுக்கதிட்டானமான ஸங்கர்ஷணனும், அவனிடமிருந்து மனதிற்கதிட்டானமான பிரத்யும்னனும் அவனிடமிருந்து அகங்காரத்திற்கதிட்டானமான அநிருத்தனும் உண்டானர்கள். இவர்களில் கடைசியாகிய அநிருத்தனே "एतत्सवावताराणां निदानं बीजं अव्ययं" என்று எல்லாவவதாரங்கட்கு முறைவிடமாய் எண்ணப்பட்டான். பிறப்பிறப்பாதிகளை வைகுண்டத்திலுள்ள பரவாஸுதேவனுக்கும், க்ஷீராப்தியிலுள்ள வியூகவாசுதேவனுக்கும் கூறுவதில்லை. கேவலம் இரண்டுகுணமுடையவர்களிலும் கடைசியாகிய அனிருத்தனிடமன்றே வன்னேர்கள் பிறப்பிறப்பாதிகளை யொப்பினர். அதற்கும் பிறகு சபித்தான்—சாபம் வியாஜம் அவதாரம் ஐச்சம் என்பனவாதி துர்நாற்றக்கதைகளையும் கொண்டுவந்துபோடுகிறார்கள். அவ்வாறு கடவுளுக்குப் பிறப்பாதிகளை யொப்பும் நீராயினேரில் கிறிஸ்தவர்களுமொருவர். அவர்கள் பிதா, குமாரன், ஆவி என்று கடவுளை மூக்கூறுபடுத்தி இதில் குமாரன், என்பான், க்ரீக் சர்ச்சின்படி, சூனியோபாதானத்திற் பிறந்த ஆதிமனிதனுக்கு முன் கடவுள் தன் ஆவியினின்று பிரித்தெடுத்து வைக்கப்பட்டவன் என்றும் ஏனைய கத்தோலிக் முதலிய கிறிஸ்தவர்கள் கொள்கைப்படி கடவுளுள்ளபோதே கடவுள் சிம்மாசனத்தில் வலதுபக்கத்திலுறைந்தானென்றும் கூறப்படுகிறன். சென்ற வருஷத்தில் Rev Forquhar என்பார் சென்னை முதலிய இடங்களில் கிறிஸ்து மதப்பிரசாரம் செய்தபோது இந்துமதத்திலுள்ள அவதாரத்திற்கும் கிறிஸ்து மதத்திலுள்ள அவதாரத்திற்கும் வேற்றுமைகாட்டுவானெழுந்து "ஹிந்து மதத்தில் கடவுளுக்கு அவதாரம் கூறுகிறார்கள். அது பிசகு. கிறிஸ்து மதத்தில் குமாரன் பிறந்தானென்று கூறியிருக்கிறது. கடவுள் பிறக்க வொண்ணாது" என்று கூறிக்கடவுளை பிறப்பிறப்பினின்றும் தப்பிவைத்தார். கட

வுர் பகுக்கப்படாத ஒரேசேதனவஸ்துவென்று பலவேதவாக்கி யக்கொண்டு நிரூபித்தோம். அவரிடத்தில் உயர்வுதாழ்வுகள் கற்பித்தலடாது. அவரேவுயர்ந்தவர். அவர்தன்மை முழுமை யும் உயர்ந்தது. ஆகையால் பிறப்பில்லாதவர். மேலுமவர் எங்கேயோ ஓர் மூலையிலிருப்பவர் அல்லர். அப்படியாயின் ஒரு அரசன் ஓருகுக்கிராமவாலிக்கு தரிசனம் தந்து அருள்வதுபோல் அருள்வதற்கு இறங்கலாம். நக்கடவுளோ எங்கும் நிறைந்தவர். எல்லாவற்றையும் நேரிற்பார்ப்பவர் "**विश्वतश्चक्षुः**" என்று சொல் லப்பட்டவர். என்னிலுமெனக்கினியவர். அவரைவிட சமீபமாக எனக்கு வேறொன்று மில்லை. என் உயிர்க்குயிராய் நிற்பவர். இப்படிப்பட்டவரே வேதத்திற் பெறப்பட்ட எம்கடவுளாதலால் அவருக்கு பிறப்பிறப்பாதிகள் சொல்லப்படவில்லை. அன்றியும் எனக்குப்புறத்தேயுள்ளது எனதுடல், எனதுடலுக்குமப்புற மல்லவா! அக்கடவுள் உடல் கொண்டுவரின் நிற்கவேண்டும். அப்போது என்னுடலே எனக்கு தூரமாய் நிற்க அதற்கும் தூரமாகவல் லவோ கடவுளிருக்கவேண்டும். இப்படி தூரமான பதார்த்தைக்க டவுள் எமக்குவேண்டாம். என்னுயிரிலுமினிய உயிர்க்குயிரான எம் கடவுள் எனக்குப்போதும். இவ்வுயிர் பரிசுத்தனையசித்தும் பற்றியவைதாமாம் என்பது சொல்லவேண்டுவதில்லை. **यद्यभोषास्ते तदामेव भवति** சார்ந்ததன் வண்ணமாகிறுனென்று? உயிரை வேதம் கூறும் **ब्रह्मविदब्रह्मैव भवति**—பிரமத்தையறிந்தோன் பிரமமாகிறுன். **असन्नेव स भवति असद्ब्रह्मेति वेदचेत् । अस्ति ब्रह्मेति चेद्वेदसन्तमेनं ततोविदुः** பிரமம் அலத் எனின்தானும்லத்தாகிறுன். பிரமம் உண்டெ னின் இவனும் ஸத்தாகிறுன்— மூதலியவாக்யங்களுமிதை நிறு த்தும். அன்றியும் எம்மதஸ்தர்களும் ஸத்ஸங்கத்தைப்புகழ்ந்தும் துஸ்ஸங்கத்தை யிகழ்ந்துமிருக்கிறார்கள். என்தேகம், என்வீடு என்மனைவிமக்கள், என்பவையாவும் சார்ந்ததன்வண்ணமெ னும் நியாயத்தைப்பற்றி எழுந்தது. Habit is second nature "A man is known by the company he keeps" என்பனவாதி ஆங்கில மொழிகளும் "பழக்கங்கொடியது" எனும் பழமொழி யும் எழுந்தது. Mahommed Alexander Russel எனும் அமெரிக்காதேசத்து இஸ்லாம் மதஸ்தர் Man is a creation of habit and as a rule when he once drops into a

groove he rarely gets out of it without an unusual effort. If he acquires the habit of praying five times a day, it will cling to him until he dies" என்று தினந் தோறும் ஐந்து வேளைகளில் தொழுமப்பியாசத்தை யொருவன் கைக்கொள்ளுவானுயின் அது சாங்காறும் முந்துறும் என்றார். (Heredity) பிறப்பால் வருவன (Environment) சூழ்ந்த வைகளால் நேரிடுவன முதலியவைகள் ஒருவனோடொட்டுவதற் கும் "உயிரிலக்கணமாகிய சார்ந்ததன்வண்ணமென்பதே கனியா கும். மக்கட்பிறப்பன்றி மற்ற புள்விலங்கு, ஊர்வன, நீர்வாழ் வனவைகளும் தம்மினத்தைக்கண்டு வர்த்திப்பதுவும் தன்தே க்கத்திலபிமானிப்பதும் கண்கூடு. மற்றும் ஒருவனது அறிவு கல் விகேள்விகளுக்குத் தக்சுவாறே விளக்குவது முண்மை. தான்கற்ற நூலளவேயாகுதுண்ணறிவு என்றார் அன்னேயார். சார்ந்ததன் வண்ணம் எனுமுரிமை பற்றியே கிறிஸ்தவர், மகமதியர் முதலி யவர்கட்கு பிறந்தோராகிய பலகோடிமக்களும் மதமினைத்தென்று விசாரிக்குமுன்னரே தங்களே அவ்வம்மதஸ்தர்களாகக்கொண்டு வர்த்திக்கின்றனர். வேதாந்திகளினைவரும் நேதிகளேதலென்று கூறுகிறார். அதாவது தேகம் நானல்ல, இந்திரியம் நானல்ல, கரண ம்நானல்லவென்று காணவேண்டுமென்கிறார். ஏன் தேகமல்லாத ஆன்மாதேகமாகமயங்கவேண்டும். தேகம்நானென்றும், இந்திரியம் நானென்றும், கரணம் நானென்றும் வர்த்திப்பதுண்மையால் அவ்வாறே உலகாயுதன், பௌத்தர் முதலோர் உலகிலுணர்கின் றார்கள். பாசத்துடனிருந்த கூட்டுறவை யொழித்துமதியுடன் கூடுவதற்கும் சார்ந்ததன் வண்ணமாசலாம் உண்மையே யுபகரிக் கும். தானவனுய் நிற்பதும், சிவோஹமெனப்பாவித்தலும் அவ் வுண்மைபற்றியேயாம். சுழுப்தியில் அவித்தையுடன் அவித்தையா யும், சொப்பனத்தில் அந்தக்கரணுதிகளுடன் கூடி இங்கொன்றும் அங்கொன்றுமாய்கண்டும், ஜாக்கிரத்தில் தேகத்துடன் கூடி நான் அரசன், நான் தொழிலாளி, நான் எண்ணியாசி எனவெழுகிறான். இவையாவும் ஜீவன் சார்ந்ததன் வண்ணமென்பதை நிறுத்தும். தன் வசமழிந்து பிறிதொன்றின் வசமாயிருந்தாலல்லது பிறிதொன்றி னனுபவம் சித்திக்காது. இப்படி அததன் வசமாயிருந்தகாலத்தும் தான் முதல்கெட்டவ்வாறுகாமற் றனது செயலழிந்து அதன்

மயமாயிருப்பதுதான் சித்தித்தது. மோக்ஷத்திலும் உயிர்சிவ னுப் விளக்குமென்பது. உயிர் அறவே கெட்டுவிடுமென்பதல்ல. உயிரினது இச்சாஞானக்கிரியைகளொழிந்து சிவனுப் நின்று இவ்வினயனுப்பவிப்பான். இவ்வுண்மையே வேதத்திற் பெறப்படும் **ये पूर्वेदेवाऋषयश्चतद्विदुः तेतभया अमृताबभूवुः तद्यथा प्रियमयासं परिष्लक्तो नबाह्यंकिंचन वेदज्ञेनान्तरं एवमेवायंपुरुषः प्राविनिन्मनासं परिष्वक्तो नबाह्यं किंचन वेदनान्तरं-तद्व. अस्यतदाप्तकामं आत्मकामं दुरज्ञपेतम्** " முனிவர் தேவர்கள், ருஷிகள் அவ்வினயறிந்து சிவன்மயனுப் அவ்வின அனுபவித்தார்கள் என்றும் தன் காமக்கிழத்தியாற்றழுவப் பட்டானொருவன் எப்படி புறத்தும் அகத்தும் காணுது அவ்வினயனுபவிக்கிறானே அவ்வாறே பேரறிவாம் முதல்வனுற் றழுவப்பட்டு புறமகமென்னுது அவனுப் நின்று அவ்வின அனு பவிப்பான். இதுவே அடையப்பெற்ற இன்பென்றும், ஆத்மானு பவம் என்றும், துக்கத்தைக்கடந்து இச்சை யொழிவு என்றும் பெறும். தைத்திரியத்திலும் **"सोऽनुतेसर्वान् कामान् सहब्रह्मणा विपश्चि-ता"** என்ற பிரமத்துடன் கூட எல்லாவின்பையு நுகருகிறான் என்றும் கூறியதுணர்க. இதையே வேறொன்றையும் காணுத இடமென்று பிருகதாரணியமாதி உபநிஷதங்கள் கூறும். இத னுல் உயிர்பற்றியவைதாமாகு மென்பது எல்லோரும் ஒப்புக் கொண்டு தீரவேண்டியது. Else life itself in any condi-tion cannot be explained" பற்றியவைதாமாம் உயிர் பளிங்க னையத்தது. பளிங்கு அல்லது கண்ணுடியானது இருட்டி லிருட் டாகவும் ஒளியில் ஒளியாகவுமிருக்கும். எப்படி யழுக்குப்படிந்த கண்ணுடியானது அழுக்கு நீங்க நீங்க வெய்யோனொளியை வீசு கின்றதோ அவ்வாறே மலம் நீங்க நீங்க ஏற்கெனவே உள்ளிருக் கும் சிவவொளியை உயிர்வெளியிடும். அழுக்கிருந்தால் மாத்திரம் கண்ணுடி கண்ணுடியாகக் காணப்படும். அழுக்கில்லாவிட்டால் வெய்யோன் முன் வெய்யோனொளிகொண்டு வெய்யோனுகவே பிரகாசிக்கும். இவ்வாறே மல நீங்கிய விடத்து உயிர் சிவவொளியி னின்றும் வேறுபடாது சிவவொளியைப் பிரஸரித்து சிவமாய் விளங்கும். இதனுல் இதை உடல்கொடு பிறப்பான் என்பது பொய் யாயொழிந்து உயிரே மல நீங்கப்பெற்றவிடத்து இறை யருட்பிர காசத்தை வெளியிடுமென்பது பெற்றும். சைவ சாஸ்திரங்களி

லிப்படி உயிர் சிவவொளியை வெளியிடுவதையே சிவாவதாரமாகக் கூறப்படும். **யதாங்கிசமாவேசாத் நாயோபவதி கேவலம் । தத்வ மமஸாந்நித்யத் நं தே கேவலம் மானுஷாः** "அங்கியிலிட்ட விருப்பு வெறு மிருப்பாகாது அங்கியாவது போல என் சன்னிதி விசேஷத்தால் அவர்கள் சாமானிய மானிடராகாது சிவனும்" என்றும் **யுகாவர்த்தேஷுஸர்வேஷு யோகாசார்யச்சலேனது । அவதாராணிசர்வஸ்ய** என்று சுவேதாரதி யோகாசாரியர்கள் சிவாவதார மெனப்பட்டார்கள். அவரவர்கள் பக்குவத்திற்குத் தக்கவாறு இறையருட் பிரகாசத்தை பிரதிபலித்து இறையினின்றும் வேறுபடுத்துக் காணப்படாதவர்களே நம் சமயாசாரியர்களும் சந்தானாசாரியர்களும் மற்றும் கிருஷ்ணன், கிறிஸ்து, புத்தர், மகம்மது முதலிய எல்லையாளவந்த பெரியோர்களுமாம். அன்னாரைக் கடவுளராகவும், கடவுளது குமாரர்களாகவும், கடவுளது தீர்க்க தரிசிகளாகவும் கூறப்பட்டதும் சாலுமென்க. திருவாசகத்திலிவ்வுண்மை "ஊனினையொளித்து உள்ளொளி பெருக்கி" என்றும் "உள்ளத்தெழுகின்றவுயிரே போன்று" எனவும் இருந்திருந்துருகவென் மனத்துளே எழுகின்ற சோதியே" என்றும் வாசா வழியருளி வந்தெனக்கு மாறின்றி, யாராவமுதாய மைந்தன்றே—சீரார் திருத்தென் பெருந்துறையானினன் சிந்தைமேய வொருத்தன் பெருக்குமொளி" என்றும் "பாங்கினொடு பரிசொன்று மறியாதநாயேனை, யோங்கியுளத்தொளி வளரவுலப்பிலாவன்பருளி, வாங்கி வினைமல மறுத்து வான் கருணை தந்தானை, நான்குமறைபயிறில்லையம்பலத்தே கண்டேனே" என்று பெறப்பட்டது.

இதனால் பிறவாமுதல்வன் பிறப்பது உயிரிலேயே யன்றி யுடலிலல்ல. உயிரிற் பிறந்தாலன்றி உயிர்க்கு முத்தி கிட்டாதென்க. உடலிற் பிறத்தலே யொப்பினோமாயின் **"வைஷம்ய நைர்க்ருண்யேன ஸாபேக்ஷத்வாத் தथாஹி தர்ஶயதி"** என்று பெரியாருரைப்படி இறைவன் நிஷ்பக்ஷபாதி யென்பதொழிந்துவிடும். ஏனெனின் உயிர்களது உயர்ந்த பரிபாசத்திற்கேற்ப எல்லாரிடத்தும் உடல்கொண்டதவதரிப்பான் என்பது பெறப்படாதபோது அது என்னும். இவ்வவதாரங்களென்பது ஒன்று அல்லது பத்து அல்லது இருபத்தி நான்கு எனும் கணக்கிலடங்குவதாக வன்னோர் கூறுகின்றார்கள்.

உயிரிற்பிறத்தலே பொப்பினோர்க் கிவ்வல்லலில்லை. எல்லா வுயிரி னும் பாரபக்ஷமின்றிச் சர்வவியாபகமா யிருத்தல்போலவே, எல்லாவுயிரினும் பிறந்தாலல்லது உயிர்சட்கு வீடு கிடையாது. உடலிற் பிறத்தலன்றியே பல முனிவோர்சட்கும், அன்பர்களுக் கும் ஞானிகளுக்கும் வீடுகிடைத்தது. அன்னோர்களது உயிர் களின் எப்பெருமான் ஆவிர்ப்பவித்தலினால் அதாவது பக்குவங் கட்டேற்பவவுயிரும் கடவுள் ஒளியை பிரசரித்து வீடடையு மென்பது. இப்படிக் கடவுளொளியை பிரசரித்த விடத்தும் அன்னோர்களது அநாட்டன்மையாவும் முதல்வனுடையதும், இழந் ததுஎதாயினும் காணப்படின் அது மலத்தடையுள்ள உயிரினது மாம்.

अग्नावपिसमाविष्टं ताम्रंखलुपकालिकं च इतिनाग्निरसौ दुष्येत्ताम्रसंसर्गकार-णात् नाग्नेरशुभिसं सर्गात् अशुचित्वमुपेयते । अशुचेस्त्वग्नि संयोगाच्छुचित्वमपि जाथ । एव शुद्धात्मे संसर्गात् ब्रह्मशुद्धः शिवोभवेत् । शिवसंसर्गतस्त्वेषशु-द्धात्मै वहि शुध्यति ।अयस्यग्नौ समाविष्टदाहो ग्नेरेषनायसः । शुद्धात्मन्येवमैश्व-र्यं ईश्वरस्यवचात्मनां '' அக்னியிலிட்ட செப்புகளிம்பைக் கொண்டது. இதனால் அக்னியும் சலமும் தூஷிக்கப்பட மாட்டாது. அசுசியான பதார்த்தம் கனியிலிருந்தால் அக்கினிக்கு அழக்கேறாது. அசுசி யான பதார்த்தமே சுத்தியாகும். இவ்வாறு சுத்தியடையத்தகுந்த ஆத்மாவில் சிவனுறைவதால் சிவன் ஆத்மாகான். ஆத்மாவே சிவ சம்பந்தத்தால் சுத்திரியை யடைகிறன். நெருப்பிலிட்ட இரும் பானது சுடுதை அக்னியினுடையது இரும்பினதன்று, அதுபோல் ஆன்மாக்களிற்காணப்படும் அநாட்டன்மைகள் அவர்களுறுறை யும் இறைவனதேயன்றி உயிரினதன்று. உயிர் பளிங்கினைய சித் தெனு முண்மை நெறியே பலதேசங்களிற் பல பெரியோர்களுண் டாகியநல்வசற்கும் ஏது. இதுவன்றி வேறொரு சமைகளு மின்று. இவ்வொரு நியாயமே பல்லாயிரங்கோடி கிருஷ்ணன் களையும், கிறிஸ்துக்களையும் பல மகமத், மோஸ்ஸ், ஜொராஸ்டர் சைதன்யர், பட்டணத்தார் தாயுமானர் முதலிய எம்மைவாழ்விக வந்த பல பெரியோர்களையுண்டாக்க வலியுளது.

சைவ சித்தாந்தத்தில் ஜீவனை போதியன், சோதியன், பாச் யன் எனக்கூறியிருக்கின்றது. **प्राप्यशब्दो बोध्यो सः मतीः''** என்று

ஸித்தாந்த ஸாராவளியிலும், **स्वापेप्यास्ते बोधमन् बोध योग्यान् रोध्यान् रुन्धन् पाचयन् कार्यकर्म''** என்று மிருகேந்திரம் கூறியது. சைவ சித்தாந்தியைப்போலவே ஜீவனோபோத்தியன், அதாவது போதிக்கத் தகுந்தவன், சோத்தியன் சுத்திசெய்ய தகுந்தவன், பாச்யன் பர்குவத்தையடைவிக்கத்தகுந்தவன், என்று கொண்டாலொழிய ஏனையமதவாதிகள், சற்குருவைப்பேணல், சாஸ்திரம்வேண்டல், கல்விகேள்விகளால் அறிவைவிருத்திசெய்தல் முதலியவைகளை சொல்வதற்கு ஓர்வித நியாயமுங்காணும். ஆயினுமிவ்வுலகமுழுமையுமிந் நலங்களைக்கொண்டுய்ய வழிதேடுகின்றது இதற்கு காரணம்யாதெனில் அவர்களறியாமலே சைவசித்தாந்தவுண்மைகள் எங்கும் பிரகாசிக்கின்றதனாலென்க. எப்படியுயிர்சார்ந்ததன் வண்ணமென்பதை யவர்கள் அறியாதிருந்தும் உலகமுழுமையுமுள்ள சகலவழிகட்குந்திறவுகோலாயிருக்கிறதோ அதுபோலென்க. ஜீவனது லட்சணத்திற்கேற்ப பரனது லக்ஷணங்களையும் ஜகத்தினது லக்ஷணங்களையும் கொள்ளவேண்டாமோ. ஜீவன் போத்யனாகவே இறைவன் போதகன் ஆகவும், உயிர்சோத்யன் எனவே இறைவன் சோதகனாகவும், உயிர் பாச்யனாகவே இறைவன் பாசகனாகவும் வேண்டும. ஈச்வராதிபாம்பதஞ்சலி பகவானும் இறைவனியுற்று **''तस्य शास्त्रानिम त्त निरतिशय सार्वज्ञबीज** என்றும் **सपूर्वेषामपिगुरुः** எனவும் **तस्य वाचकः प्रणवः** என்றும் கூறினர். சுருதியும் **स नो बुद्ध्याशुभया संयुनक्तु''** அவன் எம்மை சுபமான புத்தியினால் சேர்க்கட்டும் **तं ह देवमात्मबुद्धिप्रकाशम्''** ஆத்ம புத்தி பிரகாசனும் இறைவனை என்னும் சுருதிகள் விளக்கிற்று. இறைவன் பாசகன் என்பதை **यच्चस्वभावंपचति विश्वयोनिः पाच्यांश्च सर्वान् परिणाम येद्यः''** என்று சுருதிவெளியிட்டது ஜீவன் சோத்யன் எனவே இறைவன் மலாஹிதனென்றும் அவன் றன்மை நிர்மலமென்பதும் பெற்றும். இதையே **''सुनिर्मलामिमां प्राप्ति मीशानोज्योतिरव्ययः''** என்று சுருதி வெளியிட்டது. அன்றியும் **न सहतैरप्याचरन् पाप्मनालिप्यते शुद्धः पूतः पुण्यलोको भवति** பாபத்தாற் பூசப்படாதவனாய் சுத்தனாய் புனிதனாய் புண்ணியலோகத்தையடைகிறான் என்றும் மகோபநிஷத்தில் **''प्राणापानव्यानोदानसमानामेशुद्धयन्तांज्योतिरहं विरजाविपाप्माभूयासगं स्वाहा । त्वकचर्ममांसरुधिरमेदोऽज्जास्नयवीऽस्थीनिमेशुध्यन्तांज्योतिरहं विरजा विमाप्याभूयासं स्वहा''** शिरः पाणिपादपार्श्वपृष्ठोरुन्दरजघाशिश्नोपस्थपायवोमेशुद्धयन्तां पृथिव्यापस्तेजोवायुराकाशामेशुध्यन्तां

शब्दस्पर्शरूपरसगन्धा मेशुध्यन्तां मनोवामानकर्माणिमेशुध्यन्ता आत्मामेशुध्यन्तां अन्तरात्मामेशुध्यन्तां परमात्मामेशुध्यन्तां अन्नमय प्राणमय मनोमय विज्ञानमय यानन्दमय मेशुध्यन्तां ज्योतिरहं विरजोविमाप्या भूयासं स्वाहा'' என்ப னவாதிவாக்கியங்களால் சகலதத்துவங்களும் ஆத்மாவினது சுத்தி யின் பொருட்டு ஏற்பட்டனவென்றும், பூதசுத்தியாலும் சைவ நூட்பமே வெளியாகியது. விராஜாதிக்ஷையிலும், பூதசுத்தியிலும், விசேஷதீக்ஷையிலும் இல்வுண்மைவெளிப்படுவதை கவனியுங்கள். ஆன்மாவுக்கு ஆணவத்தடை யுள்ளதால் போதம் வேண்டப்பட்ட மையும், கர்மத்தொடர்பால்பக்குவம் வேண்டலும் மாயையின் பூச் சிஞல் சுத்திவேண்டலும் உண்மை நூல்கள் கூறும். இவ்வாறு உயி ரிலக்கணமும், இறையிலக்கணமும் தலை யிலக்கணமும் ஒன்றற் கொன்று முரணுகாவாறு கொள்ளப்படல் வேண்டாமோ. சைவசித் தாந்தத்தில் பிரகிருதியானது ஸ்தூல ஸூக்ஷ்ம பராதிகளாய் பிற ந்து, பூதமுதல் நாதபரியந்தமாம் தத்துவங்களாய் விரிந்து, தனு கரண புவனபோகங்களாய்த்திரிந்து, பிரயோஜனங்களைதந்து, சுத் தியையும், பக்குவத்தையும், போதத்தையும் ஒருவாறு விளைவிப்ப தென்று பெறப்படுகின்றது. வேதமும் **''अजाह्येकाभोक्तृभोगार्थयुक्ता''** என்று உயிரினது போகார்த்தமே யுலகமமைந்துளதென்பதைவிள க்கிற்று. உலகம் மித்தையாய் ஒழியாது உள்பொருளாயும், கெடுதி யாயமையாது. எமது இச்சாஞானக்கிரியைகளை எழுப்பி நம்மை முதல்வன்றிருவடிவீட்டிற் செலுத்தி வாழவைக்கும் இறைவனதரு விகளிலொன்றுயமைந்ததென்பது தெற்றெனப்புலப்படும்''அறி விக்கவன்றி அறியாவுளங்கள்'' என்றும் ''இமைப்பொழுதேனும் தமக்கென வறிவிலா ஏழையாயித்திரள வாழவமைத்தனையென் றும், பொறியின்றி யுணராப்புந்திக்கறிவென்றபேர் நன்றற'' என் றும் எழுந்த அமுதவுரைகளுமிதை நிறுத்தும். இதனுல் எம்மதங் களுக்குமின்றியமையா இயற்கையுண்மைகளையேதம்கொள்கைகளா கவமையப்பெற்று, உணர்ச்சி, பகுத்தறிவு, பிரதிபை முதலிய உட் சாக்ஷிகளாலும், பிரத்தியக்ஷானுமான ஆகமாதி அளவைகளாலும் நிச்சயிக்கப்பட்டு முன்னுக்குப்பின் மஹீவின்றி யுள்ளதை யுள்ள வாறுரைத்து எம்மதங்கட்கு முயிராய் நிற்பது சைவசித்தாந்தம் என்பது அறிவாளிகளுக்கு விளங்கும்.

உபநிஷதங்கள் முழுமையும் சிவைகநிஷ்டமென்பதை வேத ரஹஸ்ய முணர்ந்த சிலர்கள் அறிவார்கள். உபநிஷதங்களுக்குரிய வதிகாரிகளின்னுசென்பதாலும் உபநிஷதங்களில் கூறப்படும் விஷ யங்களாலும் உபநிஷதங்கள்எம்மதத்தை யவலம்பித்து நிற்கின்றன வென்பதும் வெளியாகும். **"வேதான்த பரம குஹ்ய புராகல்ப ப்ரசோதிதம்"** வேதாந்தத்தில் மிகவும் ரஹஸ்யமானதென்றும் சுவேதாச்வதரத் தில் பெறப்படும் வித்தையாது?

இவ்வாகமங்களிற் பெறப்படும் ஆசாரமோ **"பர்வதாக்ரதபஸா அச்வமேதஸ்யயத்ஃல । ஃல ப்ராப்னோத்யயத்னேன மதுமாம்ஸச்யவர்ஜனாத்"** ॥ மலையுச்சிக ளில் தீவிரமான தபஸினாலும், அசுவமேதத்தினாலும் எப்புண்ணிய முண்டாகுமோ அதைமதுமாம்ஸங்களைத்தவிர்த்தலால் சிரமமின்றி யடைகிறான் என்றும். **க்ரமஃ க்ரிசிவே பக்தஃ க்ரமாம்ஸ க்ரிசவார்சனம் । மத்யமாம் ப்ரதிஷ்டானாம்தூரேதிஷ்டதி சங்கரஃ**॥மத்தியத்திற்கும் சிவபக்திக்கும் வெகுதூரம். மாம்ஸம் தின்னலுக்கும் சிவார்ச்சனைக்கும் வெகுதூரம். மத்யமாம் ஸத்தை சேவிப்பவர்களுக்கு வெகுதூரத்தில் சங்கரனிருக்கிறான் என்றும், **க்ரிமிக்ரிடபதங்காம்ச்ச ததோ தேவிவனஸ்பதீன் । சூர்ணமேத்யாதமன்னம் । பூதபாம் நகுர்வீத । ஜ்வரபூதக்ரஹாவேசவதாக்ர்ஷணபீடனம் । நகுர்யாத் க்ஷுத்ரகர்மாணி நமுத்ராம்ச்ச** பூச்சி புழுமுதலியவைகளை இட்சித்தலினின்றும் தவிர்தல், மற்ற உயிர் வர்க்கங்களைக் கொல்வதினின்றும் நிவர்த்தித்தல், ஜ்வரம் பேய் பிசாசுகளை ஏவல், ஸ்த்ரீ புருஷர்களைவசியம் செய்தல் முதலிய ஆகர் ஷண மோஹனாதி க்ஷுத்ரகாரியங்களினின்றும் விலகல், காய்ச்சின இரும்பு முதலிய உலோகங்களினால் லிங்கம், டமருகம், சக்கிர, சங் மாதி முத்திரிகைகளை தேகத்தில் பொறித்தல் முதலிய ஆசுரகிரு த்யங்களினின்றும் நிவர்த்தித்தல் முதலிய சதாசாரங்களையே லே விக்க விதிக்கும் தேவிகாலோத்திரம் சிவதர்மோத்திரம் முதலிய வாக்கியங்களினால் காமிகாதி சிவாகமங்கள் பரம பாவன கரங்க ளென்பது சித்தம்-

திரிபதார்த்தவுண்மைகளாம் சாரத்தை (Juice)க் கொண்ட வைதிக சைவமெனும் விருக்ஷத்திற்கு ருக்ஸ்ம்ஹிதை யாதிகள், வேரும், பிராம்மணங்கள் அடிமரமும், ஆரணியகங்கள் சாகைக ளும், உபநிஷதங்கள் பழங்களும், காமிகாதி சிவாகமங்கள் பழங்க ளின் சுவையுமாம். வேரிலான்றிய ரஸமே, அடிமரத்திலும்,

சாகைகளிலும் பழத்திலும் காணப்படினும், இவ்வுறுப்புகளின்பயன் பலதிறப்படுவதுபோல வேதஸம்ஹிதை, பிராம்மணங்கள், ஆரணியங்கள், உபநிஷதங்கள், சிவாகமங்கள் முதலியவைகளிற் பெறப்படும் பயனும் பலதிறத்ததாகும். ஸம்ஹிதையிலும், திரிபதார்த்தவுண்மையே பெறப்படும். அவ்வாறே மற்றையவுறுப்புகளிலுமாம். இல்வேத பாகுபாடுகளிற் பெறப்படும் எல்லாகர்மங்களும் யக்ஞங்களாயினும் அவைகளாற்படுபயன் பலவே. பசுவேட்டலால் சுவர்க்காதிகளும், மற்ற கர்மங்களினால், மந்திரமஹேச்வரர், சதாசிவாதிகள் பதமும், ஞானயோகாதிகளால் அதிகார, போக, லயாதிபதங்களும், ஞானத்தால் இறைவனின்பந்துய்த்தலும் பிரயோஜனங்களாகும். பிரபதப்பிராமணாதிகளில் எல்லாகர்மங்களுக்கும் முதல்வனே பயன்றருபவனுயிருத்தலே பெறப்பட்டது. "**तपश्चते जपश्चते**" தவமுமுன்னுடையது. ஜபமுமுன்னுடையது என்று ஆரம்பித்து **तत्रविरुपाक्षोसि**—அங்கு விரூபாக்ஷனுயிருக்கிறாய் என்று கூறி "**त्वां प्रपद्येवयाप्रसूत इदं कर्मकरिष्यामि तन्मेन्वसमृद्ध्यतां तन्मउपपद्यताम्**" "உன்னை சரணடைகிறேன். உன்னலதிட்டிக்கப்பட்டு இந்த கர்மத்தைசெய்கிறேன். அது எனக்கு முற்றுப்பெறட்டும். அதன் பயன் எனக்கு ஸித்திக்கட்டும்." என்று முதல்வன் வேண்டப்பட்டான். காத்யாயன முனிவர் தம்கிருஷ்யத்திலிதையே " "**यक्तिंचन कर्मकुर्वन् स्यात् तत्सर्वनमोरुद्राय इत्येव ब्रूयात् सर्वोह्येषरुद्रः इतिश्रुतेः**" "எந்த கர்மத்தைச்செய்துகொண்டிருந்த போதிலும் அவையெல்லாவற்றையும் உருத்திரன் பொருட்டு நமஸ்காரம் என்றே சொல்லவேண்டும். இவை எல்லாம் உருத்திரனே என்று வேதம் கூறலால்" என்று விளக்கினர். சௌனக ஆச்வலாயனதிக்ஷிதரும் " **सर्वाणि हवा एतस्य नामधेयानि सर्वास्सेनाः सर्वाघघ्नयायानि** " "எல்லாமிவனுடைய பெயர்கள், எல்லோருமிவனுடைய வாட்கள் என்று சூலகவம் முதலிய கர்மங்களில் விளக்கினர்கள். போதாயனதிகளும் இவ்வாறேவிளக்கினர்கள். வேதமே " **इमारुद्रायास्थिरधन्वनेगिरः**" இவ்வாக்குகள் யாவும் ஸ்திரமானதநுசையுடைய ருத்திரனுடைய பெருமையை விளக்குமெனக்கூறிற்று. ஆகையால் பசுபதிபெயரிய தனிமுதலே ஓரேபதியாவான்.

"குற்றமில்லாவைதிகசைவ" மென்று சிற்றம்பலநாடிகளும்-இராஜாக்கத்திலமர்ந்து "வைதிகசைவமழகிதந்தோ" என்று எமது

தாயுமானருரும் விதந்துகொண்டாடிய வைதிகசைவத்தின் பெருமையை யாமிருந்து சொன்ன போதே தொலையுமோ. "**यथै मां वाचे कल्याणी मावदानि जनंभ्यः। ब्रह्मराजन्याभ्यां शूद्राय चार्याय च स्वायचारणाय**" என்றயஜுர்ஸம்ஹிதா (26-2ம் மந்திரம்) வாக்கியத்தால் மங்களகரமான இந்த வாக்கு பிராம்மணர், க்ஷத்திரியர், சூத்திரர், வைசியர் அவர்கள்குமாரர்கள் அவர்கள் ஏவலாட்கள் முதலிய எல்லா ஜனங்கட்குங்கூறப்பட்டது என்றும் "**प्रकटयस्व इदं ज्ञानं**., இந்தஞானத்தை வெளியிடு என்றும்வாதுளாகம வசனத்தின்படி ஏதோ சிறிது கூறினேன். அவைகளைநீங்கள் ஏற்றுக்கொள்வீர்களென்று நம்புகிறேன் **शिवोम्**.

சுபமஸ்து.

கடவுளிலக்கணம்.

ஸ-ரி-ஸ்ரீ மான் அக்ராசனபதி அவர்கட்கும் அவர்கள் ஆதிபத்தியத தியத்தில் உயர்ந்தோர், ஒத்தோர், இழிந்தனர் என்னுமூன்று பகுப்பினராய் மெய்ப்பொருள் காட்சி வேட்கையோடு குழுஉக் கொண்டிருக்கும் சைவ மகா சங்கத்தினர்க்கும் வந்தனம்.

வாக்கு மனுதீதமாகிய கடவுள் இலக்கணத்தை வாக்கால் இவ்வுருவன் இவ்வண்ணத்தன் என்று அளவுபடுத்திக் கூற வந்தது இச்சபையினராகிய தங்கள் உத்தரவேயன்றி பிறிதின்று. அருள் இடங்கொளும் தாதையர் இட்டகாரியம் அடங்கலின்றியினும் மடங்கெழு மைந்தர்தாமறுக்கற்பாலர் அல்லர். ஆகலின் சிரமேற்கொண்டு சொல்லத் துணிகின்றேன். நான் சொல்வனவற்றுள் நன்றாகாதன ஆணவமல மறைப்பெனவும் நன்றாவன சிவதத்துவ விளக்கமெனவும் கொண்டு மேன்மேற் சிவதத்துவ விளக்கம் பெருகுமாறு ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்.

திருச்சிற்றம்பலம்.

கடவுளியல்.

அருந்துணையை அடியார் தம்மல்லல் தீர்க்குமரு மருந்தை அகன் ஞாலத்தகத்திட்டோன்றி, வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு வான்புலன்கள் அகத்தடக்கி மடவாரோடும், பொருந்தாமேல் வரும்பயனைப் போக மாற்றிப் பொது நீக்கித் தனதினைய வல்லார்க்கென்றும், பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

பஞ்சபௌதிக காரியமாகக் காணப்படும் இந்நில வுலகத்தின் கண் இயற்கையானும் செயற்கையானும் பல வேறு வகைப்பட்டு எடுத்தல் படைத்தல் முதலிய விகற்பங்களோடு யாங்கணும் பரவை வழக்காய் நிகழுகின்ற ஒலிவகைகளே புறத்தே நின்று அறிவில்லாத ஜடப்பொருளையும் அகத்தே நின்று அறிவுடைய சித்துப் பொருளாகிய ஆன்மாவின் கட்டோன்றும் அறிவு வேறுபாடுகளையும் நன்கு தெரிவித்தற்குக் கருவியாவனவாம். மிருகம் பறவை முதலிய எல்லாமும் ஒரொரு குறிப்பு மாத்திரையானிகழ்த்தும் ஓசை வேறுபாடுகளைக்கொண்டு தத்தம் வாழ்நாளை நடாத்த முயலுகின்றன. நமக்கு இந்திரியங்கண் முதலிய கருவிகளெல்லாம் சிறிதும் குறைபடுதலின்றி அமையப்பெற்ற மக்கள் யாக்கை நிலைத்தமையின் அவ்வோசை விகற்பங்களை அறிதலோடு அதன் வழிப்பட்டு நமது ஆன்ம அறிவானது பலவித விசித்திர அமைதியுள்ள சேதனசேதனப் பிரபஞ்சப் பொருளில் ஒற்றுமைப்பட்டு

விஷயானுபவஞ் செய்கின்றது. இச்சத்த வுணர்வறியும் ஆற்றலில்லா வழி உலகியல் பொருட்டுணி புணர்தல் கூடாதோவெனின்? சத்தமும் அதனாற் குறிக்கப்படும் பொருளும் மிக ஒற்றுமையுடையனவே யன்றி சிறிதும் வேற்றுமையுடையனவன்று.

இதனாலன்றோ வடநூற்கடல் நிலைகண்டுணர்ந்த சேனாவரையர் "சொன்னிகழ்ச்சிக்குப் பொருள் இடம்" என்றும் ஆங்கிலபாஷா தத்துவநூலர் "ஒரு சொல்லை நினையுங்கால் அதனாற்குறிக்கப்படும் பொருளும், ஒருபொருளை நினையுங்கால் அதனால் குறிக்கப்படும் சொல்லும் பிரிவின்றி ஒருங்கே யுள்ளத்தில் தோன்றும்" என்றுங் கூறுவாராயினர்.

காணுதற்குக் கருவியாகிய கண்ணிந்திரியத்தால் காணப்படும் பொருளைக் கண்டறிந்த வொருவன் கேட்டற்குக் கருவியாகிய செவியிந்திரியத்தால் கேட்டறியப்படும் அப்பொருளின்பெயரை உணராதபோது அப்பொருளை அல்லது அப்பொருளின் சம்பந்தமான வேறொன்றை பிறர் மாட்டுணர்த்த வியலாது ஒழிதல் பிறவிச்செவிட னிடத்துக் காண்டலானும் காணப்படாத பொருளைச் சத்தப்பிரமாணங் கொண்டே நிச்சயிக்க வேண்டுதலானும் ஒரு சாரார் சத்தமே பிரமமென்ப ஆகலானும், இச்சத்தம் உலகானுபவ விஷய அறிவிற்கு இன்றியமையாத தென்பது தெளிதற்பாலது.

இதனை,

> "எழுத்தறியத் தீருமிழிதகைமை தீர்த்தால்
> மொழித்திறத்தின் மூட்டறுப்பானுஞும்—மொழித்திறத்தின்
> மூட்டறுத்த கல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
> கட்டறுத்து வீடு பெறும்."

"ஓதாதார்க்கில்லை உணர்வொடு வொழுக்கம்" என்றுவரை செய்துணர்த்திய ஆன்றோர் வாக்கானுமுணர்க.

இனி நாமரூபங்களோடியைந்து வேறு வேறு தன்மையையுடைய உலகியற்பொருளில் நமது ஆன்ம அறிவுசென்று பதியும்போது அப்பொருள்களின் உண்மை நிலையை உள்ளவாறுணர்தலும் அல்லது திரித்துணர்தலுமாகிய அறிவு நிகழும். அவ்வறிவு கண் காது முதலிய இவ்விந்திரியங்கள் இல்லானுக்கு சத்தப்பிரபஞ்ச வுணர்ச்சியின் பேதமாகிய நாமங்களின் பாகுபாடும் அர்த்தப்பிரபஞ்ச உணர்ச்சியின் பேதமாகிய பொருள்களின் பாகுபாடும் சிறிதும் அறியவாராமையின் இந்திரியவுண்மையும் அதுவுங் காண்டற்றொழிற்குரியதாயின் கேட்டற்குரிய தாகாமையானும் கேட்டற்றொழிற்குரியதாயின் காண்டற்குரிய தாகாமையானும் வேறு வேறுமென்பது தெளியப்படும். இவ்விந்திரியங்களே பொருளுண்மையை அறித்தனவாவென்று ஆராயுமிடத்து கண் விழித்துக்கொண்டு முன்னே தோன்றும் பொருளைப் பார்த்திருக்குங் காலத்தே மன அறிவு அப்பாற்செல்லுமாயின் அப்பொருளுணர்ச்சி யெய்துமாறின்று. செவி ஒரு விஷயத்தைக் கேட்டிருக்குங் காலத்தே மன அறிவு அப்பாற்செல்லுமாயின் விஷயத்தொடர்பு விளங்குத

லின்று. இதனுன் இந்திரியத்திலுஞ் சிறந்து அவற்றை இயக்கும் ஆற்றலுடைய காரணங்கள் உளவென்பது பெறப்படும்.

"இதனை யான் கண்டறிந்தேன், இதனை யான் கேட்டறிந்தேன்" என இந்திரிய வியாபாரங்களைப்பற்றி வழங்குமாறுபோல "இதனையான் எண்ணியறிந்தேன், இதனை நான் நிச்சயித்தறிந்தேன்" என்பன முதலிய மொழிகளும் ஆங்காங்கு கேட்கப்படுதலால் இந்திரியத்தையும் காரணங்களையும் தனது அறிவு நிகழ்ச்சிக்கு உதவியாகக் கொண்டுள்ளது ஒன்றுண்டென்பது இனிது பெறப்படுமன்றே? அங்ஙனம் பெறப்படுவது யாது அதுவே ஆன்மாவென்றறிமின். சித்தாந்த வழிநிற்கும் உத்தமருண்பர்களே! ஆன்மாவானது உடம்பு இந்திரியங்காரண முதலியவைகளைப் பெற்று அனுபவித்தாலன்றி தான் பண்டை ஞான்றே ஈட்டிய கன்மானுபவம் செய்து தொலைக்கமுடியாது. ஆகலான் அவ்வான்மா தேகமுதலியவற்றோடு விரவியபோதேபோக்தாவென்று எண்ணப்படுகின்றது.

இது கடோபநிஷத் மூன்றாவது வல்லி மூன்றாவது நான்காவது மந்திரங்களில் ஆத்மாவைத் தேராழியாகவும் சரீரத்தைத் தேராகவும் புத்தியைச் சாரதியாகவும் மனத்தைக் கலினமாகவும் இந்திரியங்களைக் குதிரைகளாகவும் அவற்றானுகரப்படும் விஷயங்களை குதிரை செல்லும் மார்க்கங்களாகவும் இவையெல்லாம் நிரம்பப்பெற்ற ஆன்மாவே போக்தாவென்றும் நன்கு விளக்கப்பட்டிருத்தலானும் தெற்றெனப் புலப்படும். கலினம்—கடிவாளம்.

இனி கன்பம் பயனைத்தருவதா மென்பது ஒரு நிகானவாகிய மக்கள் யாக்கையைப் பெற்று ஒரே உபாத்தியாயரிடம் கல்வி பயிலும் மாணவர் பலரும் பல்வேறு அறிவுடையராதலும் அவருள் வருந்திக் கற்றான் நன்னிலைமைபெறுதலும் அங்ஙனங் கற்றானும் நன்னிலைமையெய்தாதொழிவதூஉம் கல்லாதான் நன்னிலைமை மேவிச் சிறத்தலூஉம் யாதுபற்றி? என்று ஆராப்புகின் கன்மம் பயனைத்தருவதா மென்பதூஉம் நிகழ்கால கன்மத்துக்குப் பூர்வகன்மம் பெரும்பான்மையும் உதவியாகற்பால தென்பதூஉம் நன்கு விளங்கும்.

இதனுலன்றே,

"பேறிழவின்பமோடு பிணி மூப்புச் சாக்கா டென்னு
மாறுமுன் கருவுட்பட்டதவ் வியனுபவத்தா
லேறிடுமுன்பு செய்த கன்மமிங் கிவற்றிற்கேது
தேறுநீயினிச் செய்கன்ம மேலுடற்சேருமென்றே"

என்று சித்தியார் திருவாக்கு மெழுந்தது. கன்மம் அறிவில்லாத ஜடப்பொருள் அது சன்னியுடைய வான்மாவை யறிந்து அணுகி அனுபவமாக வல்லதன்று. அக்கன்மத்தைச் செய்த ஆன்மாவோ தத் சுதந்தரமின்றி வினை வயப்பட்டுக் கிடந்து உழல்வதாகலின் தான் செய்த வினையையறிந்து அதனை நுகர்தற்கு இயை புடைத்தாகிய சரீரமெடுத்துக் கொள்ள வல்லதன்று ஆதலால் வினையையும் அதனைச் செய்த ஆன்மாவையும் தெரிந்து கூட்டுவித்தற்

குரியதொரு பொருள் இவ்விரண்டின் வேறாக உண்டென்பது பாரிசேட அளவையால் நிச்சயிக்கப்படும். அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட பொருள் எதுவோ அதுவே ஆன்மாவுக்குக் கன்மானுபாவத்திற் கேற்றவாறு தேக இந்திரியங்களைத் தரவல்லதென்பதூஉம் அப்பொருள் காணப்பட்ட உலகப் பொருளாயும் காணப்படாது நிச்சயிக்கின்ற ஆன்மாவாபுமிருப்பின் முழு முதற் றன்மை குறைபாடுறுதலின் அவ்விரு பொருட்கும் அப்பாற்பட்ட தென்பதூஉம் அறிதற்பாலன.

ஆன்திக மேன்மக்களே!

இவ்வாறு அதீத நிலைமையில் நிற்பதாலன்றே அப்பொருட்குக் கடவுள் எனப் பெயரிடப்பட்டது. இங்ஙனம் கடவுள் மாயாகாரிய உலகிற்கும் ஆன்மாவுக்கும் அப்பாற்பட்டதென்று உரைகூறின் காலதேச வரையறைக்குட்சிக்குண்டு, வியாபகமுடையதெனல், பயனில் கூற்றாய்முடியும் போலுமென்னின் முடியாது, யாங்கணும் பரந்து அபேதமாய் நிற்பது அதனியல்பாகலின், யாங்ஙனமெனின்? முன்னர்க் கூறியபடி ஏப்படியானுல் ஆன்மாநரம்பு என்புதசை முதலியவற்றான் ஆக்கப்பட்ட உடம்பையும் செவி கண் முதலிய இந்திரியங்களையுங் கொண்டு நின்று சாத்தா, கொற்ரு, முதலியவாக உடம்பிற் கிட்ட பெயரால் பிறர் அழைக்க நேர்ந்தபோது தான் என்னை? என வந்து முன்னிற்றல் காண்கின்றும். பலர் குழுஉக்கொண்டு நிற்பினும் அவருள் அழைக்கப்பட்டோனே வருகின்றனன். உடம்பிற் கிட்ட பெயரால் அழைத்தவழி உயிர் 'என்னை'? என்று விடை கூறியதற்குப் போதிய காரணம் யாதோ என ஆராயலுறின் அருத்தாபத்தி அளவையான் தானென்றும் உடம்பென்றும் பிரித்தறியாது அபேதமாய் நிற்றலேயாம் என்பது துணியப்படும். ஆயினும் உயிர்வேறு உடம்புவேறு. உயிர் உடம்பாயும் அதனின் வேறுயும் நிற்கும். உடம்போ அங்ஙனம் நில்லாது. அதுபோல யாங்கணும் நீக்கமற வியாபித்து நிற்பினும் முதல்வன் முதல்வனே. உயிர் உயிரே. முதல்வன் உயிராயும் அதனின் வேறுயும் நிற்பன். உயிர் அங்ஙனம் நில்லாது. இவ்வித அபேத ஒற்றுமைபற்றியே முதல்வனை எகன் என்று சுருதிகள் ஆங்காங்கு முழங்குகின்றன. அற்றேல் உயிர்களோடு ஒற்றித்து அவற்றின் அறிவை மறைத்து நிற்பது ஆணவம் என்று கூறுதல் மலைவாமெனின்? ஆகாது. முதல்வன் பரிபூரணத்திற்குக் குறைவில்லை, மலபரிபாகம் வராத ஆன்மாக்களிடத்து பசுமை மிக்க மரத்தில் அருவமாய் மறைத்து நிற்கும் தீப்போல் பிரகாசமில்லாமலும் மலபரிபாகம் வந்த ஆன்மாக்களிடத்து மிக்குலர்ந்த மரத்தில் தீப்போலப் பிரகாசித்து மலபங்கஞ் செய்து ஆன்மப் பிரகாசத்தை உண்டாக்கி காத்திடுவன் என்றறிக.

"பரமசிவன் பராசக்தி பல்லுயிர்க்கும் பயின்றிருக்க
விரவுவதென் னிருளெனிற்கேள் வெப்பவழற்பசு மரத்தின்
விரவியதே பசுமாரும் வெந்தவிய வெந்தவிழும்
பருவமுறக் காமுறபதியு முறப்பழுசறவே"

எனவருமுபாகம சிவதரு மோத்தாரும் இதனை நிலைபெறுத்தும்

இனி முதல்வன் இவ்வாறு உயிர்களோடு வேறுகாது அபேதமாய்நிற் பினும் முதற்கண்கூறியபடி உயிர்கட்கு வேறுகவும் நிற்குமென் றெண்ணப் படும். கண்ணினுடைய ஒளியும் வியஞ்சகமாகிய சூரியனுடைய ஒளியும் தம்முட்கலந்தா லன்றி புடம் படம் முதலிய உலக விஷயங்களைக் காணுதல் அரிது. இவ்வொளிகள் வேறு வேறுவனவன்றி ஒன்றுகா, இவற்றுள் கண் ணொளி தனித்து நிற்பினும் சூரியன் ஒளி தனித்து நிற்பினும் விஷய வுண ர்ச்சியின்று. அதுபோல உயிரும் முதல்வனும் தம்முள் ஒற்றுமையுற்று லன்றி ஆன்மா அறியுமாறில்லை. ஆகலின் உயிர் முதல்வனை இன்றியமை யாததாயினும் முதல்தன் அதற்கு வேறுதல் அறிக. இம்முறை ஒவ்வொரு வுயிர்க்கும் வேறுய்நின்று அவ்வுயிரைத் தொழிற்படுத்து மாற்றல் முதல்வனை அதேகன் என்று ஆங்காங்கு சுருதிகள் முழங்குகின்றன. வியஞ்சகம் விள க்கு கருவி.

இனி கண்ணொளி சூரியன் ஒளியை உதவியாகக்கொண்டு விஷய அறி வைப் பெறுங்கால் அக்கண்ணிந்திரியத்தோடு ஆன்ம அறிவு கூடுதல் வேண் டும். அங்ஙனமே ஆன்மா விஷயவுணர்ச்சி யெய்தும்போது முதல்வன் உட னின்று அறிவிக்கும் இதுபற்றியே இறைவன் என ஆங்காங்கு சுருதிகள் முழங்குகின்றன. இறுத்தல்—தங்குதல். அபேதம் பேதம் பேதா பேதம் என்ற மூன்று நிலைகளும் முதல்வனுக்கு உண்டென்று கூறுது இவற்றுள் ஒவ்வொரு நிலையை யுண்டென்று கூறி வேறு வேறு காரணங் காட்டுவாருமு ளர். அவையெல்லாம் எடுத்துக்கூறி பொருத்தமில்லாமையை விளக்குதற்கு காலம் போதாமையின் கூடாதாயிற்று. இம்மூன்றிலையும் முழுமுதற் கடவுட் குண்டென்பது "உலகெலாமாகி வேறுய் உடனுமாய்" என்றும் "ஏகனே கன் இறைவனடி வெல்க" என்றும் "ஒன்றுப்ப் பலவாய் உயிர்க்குயிராய்' என்றும் அநுபூதிமான்கள் விதந்து கூறுதல் ஈண்டுணர்தற்பாற்று.

இனி அனுதிமுத்த சித்துருவாகிய முதல்வன் ஒன்றினுந் தோய்வின்றி தானே சுயம்பிரகாசமாய் நிற்றும் தன்னுண்மையில் சிவம் என்றும் உலகெ லாமாகியும் வேறுகியும் உடனுகியும் உயிர்களின் நிற்குந் தன்மையின் சத்தி யெனவும் தாதாத்மியத்தால் இருதிறப்பட்டு நிற்கும். சுயம்பிரகாசப்பொருள் சிவம் என்றழைக்கப்படும் என்பது பின்னர் உரைக்கப்படும், இம்முறை நிற் கும் முதல்வனுக்கு பிரபத்துவ சாமர்த்திய குணங்கள் மூன்றென்ப. அவை கர்த்திருத்துவம் அகர்த்திருத்துவம் அன்னியதாகர்த்திருத்துவம் ஆம்.

இவற்றுள் கர்த்திருத்துவமாவது தானே தனித்தலைமை வாய்ந்துநிற் றல். அகர்த்திருத்துவமாவது பிறர்தலைமை யெய்துமாறு செய்துநிற்றல். அன்னியதாகர்த் திருத்துவமாவது ஒன்றைப் பிறிதொன்றுக மாற்றிநிற்றல் ஆம். எவ்விளவினதாகிய பெருந்தகைமை யுடையாரும் தன்னேவல் வழி நிற்க தான் அவர்க்குமேலாய் நிற்றலும் அத்தலைமை நடாத்தும் வழிதானே செயற்பாலவும் பிறரூற் செய்விக்கற்பாலவுமான தொழில் வேறுபாடுடை மையின் அதற்கு உரியாரை நிறுத்திநிற்றலும் வேறும் ஜடப்பொருளாகிய

கல்முதலியவற்றின் தோன்றல் முதலியன செய்து நிற்றலும் அம்முதல் வனுக்கு உரிமையுடையனவாயின.

இவ்வாறு ஆன்மாக்களோடு அத்துவிதமாய்க் கலந்து கர்த்திருத்துவம் முதலிய எய்திநிற்கும் அப்பொருள் உருவமா? அருவமா? அன்றி உருவா ரூபமா? எனின் அம்மூன்று நிலைமையும் உண்டென்றே கொள்க. ஒருசா ரார் அது அருவப்பொருளென்றும் மாயையால் நாமரூபங்களோடு கூடிய உலகமாய்த் தோன்றுகின்றதென்றும் இத்தோற்றம் வியவகாரத்தின் உண் மைபோலத் தோற்றினும் பாரமார்த்திகத்தில் பொய்யே யென்றும் கூறுவர்.

தோன்றுவது அருவமேயாயினும் உருவமேயாயினும் தோற்றமுடைய தன்றே. தோற்றப்படுகின்றவுலகையும் உயிரையுங்கொண்டு தோற்றுததாகிய கடவுளது உண்மையை அநுமானித் தறிதல்வேண்டும். தோன்றும் அவை வெறும் பொய்யே என்று கொள்வோமாயின் அவற்றைக்கண்டு அவற்றால் அறியப்படும் கடவுளுண்மை மாத்திரம் மெய்யாமாம். மெய்யாகிய கடவுளி டத்துப் பொய்யாகிய உலகுயிர்கள் தோற்றுதற்குத் தான் ஓதிய காரணம் என்னே? என்றிவ்வாறெல்லாம் பல ஆசங்கை நிகழ்தலின் அக்கடவுள் அரு வத்தன்மைமாத்திரம் உடையானென்று கூறுதல் பொருத்தாது. இனி ஒரு சாரார் பிரிதிவு அப்பு முதலிய பூதங்களைப்போல கடவுள் உருவப் பொருளே யென்றும் அஃதில் வழிபடைத்தல் காத்தல்முதலிய தொழின்மேற் கொள் ளல் இயலாதென்றும் உரை கூறுவர். உருவமுடைப் பொருளெல்லாம் காலத் தானும் இடத்தானும் வரையறை செய்தற்பாலனவே. ஒரு பொருளுக்கு உரு வங்கொள்ளின் மேல்காட்டியபடி நாமமும் கொள்ளுதல் வேண்டும், இரண் டுங் கூடிய தேவதத்தனென்பான் பொருநைக்கரையி லிருக்கின்றான் என்ற போது வைகைக்கரையில் இல்லையென்று ஏற்படும். வைகைக்கரையில் இருக் கின்றான் என்னின் பொருநைக்கரையில் இல்லை யென்றேற்படும்.

ஆதலான் அக்கடவுள் உருவம் ஒன்றே உடையவன் என்பது கூறுதலும் பொருந்தாது. எல்லாம் வல்ல முழு முதற்பொருள் அருவமே யென்னின் உருவம் ஆகும் வல்லமையில்லா தொழியும். உருவமே யென்னின் அருவமா கும் வல்லமையில்லா தொழியும். ஆகலான் எல்லாமாகும் எல்லா வாற்றலும் உண்டென்று கொள்க. இவ்வுண்மை

> ''உலகினிற் பதார்த்தமெல்லாம் உருவமோ டருவமாகி
> நிலவிடும் ஒன்றொன்றுகா நின்றவன் நிலையேபோல
> அலகிலாவறிவன்றானும் அருவமே யென்னிலாய்ந்து
> குலவிய பதார்த்தத்தொன்றாய் கூடுவன் குறித்திடாயே''

என்பதனால் விளங்கும்.

இனி மக்கள் அறிவெல்லாம் ஒரு பொருளைப் பற்றியே நிகழ்தற்பாலது. இவ்வாறு ஒவ்வொரு பொருளையும்பற்றி அதுவாக நின்றழுங்கும் ஆன்மா பரிபக்குவமாதல் வேண்டி முதல்வன் உருவத்திருமேனியுங் கொண்டருள்

வன். முதல்வன் திருவருள் உருவத்தையே முதல் முதல் ஆதாரமாகக் கொண்டு மேன்மேல் நெறிகளில் செல்லவேண்டுதலாலன்றே முத்தி மார்க்கம் நான்களுள் முதலாவதாக உருவத்தைப் பற்றி வழிபடும் சரியை மார்க்கம் நிறுத்தப்பட்டது.

சைவாபிமானச் செல்வர்களே!

புறத்தே உருவத்திருமேனி வழிபடுதல் போன்று அகத்தின் இருதய கமலத்தின் கண்ணும் அப்பொருளைத் தேசோமயமாய் தியானித்தல் கூடும். இவ்வாறு தியானிக்கும் முறையை தகரோபாசனை யென்று கூறுவர். பிருகதாரண்ணிய கோபநிஷத்.

"ஜனங்களிடத்தே அந்தர்யாமியாயிருக்கும் உருத்திரனை பராசக்தியோடு தியானிக்குமவர் அன்னத்தை நாவினுற் கிரகிக்கின்றனர்" என்றும் தமிழ் மறையில்

"புந்தியாய்ப் புண்டரிகத்துள்ளாய் போற்றி"

என்றும் வரும் பிரமாணங்களானுமுணர்க. இவ்வாகாசம் பூதாகாசம் போலாகாது சித்தேயாம். இதனுலன்றே இது சிதம்பரம் என்று கூறப்படுகின்றது இவ்வுபாசனாநிலையினைத்தையும் சாந்தோக்கியம் கைவல்லியம்முதலிய உபநிடதங்கள் விரித்துக் கூறும். இப்படித்தியானிக்கப்படும் பொருள் முற்காட்டிய சுருதிகளுள் ஈசானன் உருத்திரன் முதலிய சிறப்புநாமங்களே எடுத்தாளப் பட்டமையானும் மண்டலப் பிராமணோபநிஷத் இவ்வுபாசனையைக் கூறவந்தவிடத்து பஞ்சபக்ஷம் உமாசகாயம் நீலகண்டம் முதலிய விசேடணங்களோடு புணர்த்துக் கூறுதலானும் சிவனே யென்று நிச்சயிக்கப் படுகின்றது. இதனை அதர்வசிகோபநிஷத்

"சிவன் ஒருவனே தியானிக்கற்பாலன்" என்றுதணிபுரை கூறுகின்றது. சூதசங்கிதை

"அறையதர்வ சிகையிந்த தாற்பரியத்தே முடிவுண்டாயிருக்கும்
மறைபலவிற்கும் அதர்வண மறையே முடிபு"

என்று இவ்வுபநிஷதத்தைச் சிறப்பிக்கின்றது.

கடவுள் என்றதற்கு சரீரத்தின் கண்ணேதியானிக்கப் படுபவன் என்றது பொருள். கடம்—சரீரம்.

இனி எல்லாவறிவும் எல்லாவாற்றலும் எல்லா முதன்மையு முடைய சுயம்பிரகாசப் பொருள் என்று கூறப்படும். அதுவே படைத்தல், காத்தல், அழித்தன் முதலிய தொழில்களைச் செய்யும் கடவுளர் போலாது இவர்க்கு அநாதமாகிய நான்காவது பொருளாயும் எல்லாவுயிராகியும் அவற்றிற்கு வேறுகியும் அவற்றோடனுபவும் நின்று கன்மத்தைப் புசிப்பித்து தன்னுன் விரிந்த உலகங்களை மீட்டும் சுருக்கி ஒடுக்கிக்கொள்ளும் ஆற்றலுடையது. பிரமாணம்

"பிரமனும் விஷ்ணுவும் உருத்திரனும் எல்லாப் பூதங்களோடு சிவத் தாற்படைக்கப் படுகின்றனர். வடவைத்தீயாம் ஜலம் நாசமாதல்போல அப் பூதங்களோடு அவர்களும்லயமே அடைகின்றார்கள்" என்றும் "ஸ்வரூபதே ஜோ மயம் சாஸ்வதம் சிவம்"

என்றும் வரும் சாமவேதமோப நிடதமும் பிரபஞ்சலயத்தனமாய் சாந்தமாய் இருக்கின்ற சிவம் என்னும் அத்துவைத வஸ்துவை நான்காவது தெய்வமாக நினைக்கின்றனர் என்றும் மாண்டோக்கியோப நிடதமுதலியவை களுமாம் என்க. அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பொருளாகிய சிவபெருமான் கட்டு வீடு என்றும் பதங்களோயுடைய பசுபாச பதார்த்தங்களது இயல்புடையனல்லன். ஆகலானும் அவையிலனாகவே அவைகட்குக் கட்டுப் படாதவன் ஆகலானும் அருவம் உருவம் அருவுருவம் என்னுமூக் கூற்றனுள் இன்னனுவனென்று தான் அம்மூக்கூறுபடும் விருத்திபரிணமம் விவர்த்த னம் என்பவற்றுள் ஒன்றிற் படுவன் படான் என்று தான் கூறுதற்கு ஓர் ஆசங்கையுமில்லை ஆசங்கையின்மையின் அதற்கு மறுதலையாகிய பரிகார மும் இல்லையென்று அரும்பெறல் அனுபூதிமான்கள் கூறிய பரசிவத்தின் இலக்கணம் இன்னனென்று கூறுதற்கு யாரேவல்லன். அல்லனே யாயி னும் திருவருள் உண்ணின்று உணர்த்தியாங்கு ஏதோசில கூறப்பட்டன.

———

சிவமயம்.

ஆன்ம இலக்கணம்:—

இது ஆன்ம, இலக்கணம் என்னும் இருமொழிகள் சேர்ந்த ஒரு தொடர். ஆன்ம சப்தத்திற்கு வேதாந்தநூல் பரமான்மா வென்றும் சைவசித்தாந்தநூல் ஜீவான்மாவாகிய உயிரென்றும் பொருள்கூறும். ஈண்டு ஆன்மா என்ற சொல்லுக்கு சைவ சித்தாந்தத்தின்படி உயிர் என்பதே பொருள். இதனை "ஒன்றென மறைகளெல்லா மூரைத்திட வுயிர்களொன்றி நின்றனனென்று பன்மை நிகழ்த்துவதென்னை" யென்ற சிவஞான சித்தித் திரு விருத்தத்தானும் இதற்கு சித்தாந்த சைவத் தலைவராகிய மாதவச் சிவஞானயோகிகள் அருளிய உரையானும் தெளிக.

இலக்கணம்—தன்மை. ஆகவே ஆன்ம இலக்கணம் என்னுந் தொடருக்கு உயிரின் தன்மை யென்பது பொருளாம்.

உயிர்தனித்து நிற்குந் தன்மையதல்லாததாய் சார்ந்ததன் வண்ணமாய் நிற்குந் தன்மையுடையதென்றும், சார்தற்குரிய பொருள்கள் பதியும் பாசமுமாமென்றும், பாசத்தோடு சார்ந்தபோது பொதுவிலக்கண மென்றும் பதியோடு சார்ந்தபோது சிறப்பிலக்கணமென்றும் வகுத்தும் விரித்தும் உரைப்பதே இவ்வுபந்நியாசத்தின் கருத்து.

சிவமயம்.

ஆன்ம இலக்கணம்.

தனுகரண புவனபோகமென்னும் அறிவில்லாத சடப்பொருள்கள் நான்கனுள் தனுகரணங்களோயான் என தென்றும் புவனபோகங்களே என தென்றும் அபிமானித்து உடல்தோறும் நான் என்னும் சொல்லிற்குப் பொருளாய் அறிவுடையதாய் ஒரு பொருள் உண்டென்று அனுமான அளவையால் அறியப்படும் இதுவே உயிராம். இப்பொருள் அறிவுடைய சாயினும் முன்சென்றதையும் பின்வருவதையும் நிகழ்காலத்து வந்ததொன்றை இதனால் வந்ததென்றும் அறிதல் கூடாமையால் அறிவித்தாலறியும் தன்மையுடைய தெனப்பெறுதும். பெறவே அறிவிப்பான் ஒரு இறைவன் வேண்டப்படும். அவ்விறைவன் முற்றறிவுடையவனுய் உயிர்தோறும் அந்தரியாமியாய் இருந்தாலன்றி உயிர்களின் கன்மத்திற் கீடாக தனுகரண புவனபோகங்களைக் கூட்டுவிக்கவும் உயிர்களறியவும் இயலாது. இதனை

எண்பத்தொன்கு நூறுயிரமாமியோனி தொறுங்
கண்பொதிந்த சீவர்கருத்துள்ளே—பண்பொதிந்த
தேவியோடு மீசன் செறிந்திரானேயாயி [ர்க.
ஞவியொன்றை யுற்றறியாதாம்—என்ற ஆன்றோர் திருவாக்கானு முண

அங்ஙனமாயினும் தனுகரணபுவன போகங்களின் கட்டுப்பாட்டால் அந் தரியாமியாகிய இறைவனே உயிர்கள் அறியாது வருந்தும். அக்கட்டு நீங்குங் கால் அறிந்தின்புறும். ஆகவே இறைவன், உயிர், கட்டு அல்லது பாசம் என் னும் மூன்று பொருள்கள் உண்டென்பது அனுமான அளவையாலும் காட்சி அளவையாலும் ஆஸ்திக சமயம்யாவும் ஒப்புக்கொள்ளும்.

ஒப்புக்கொள்ளினும் இறைவனுக்குரிய முழு இலக்கணமும் அமையப் பெறுதானே இறைவனென்றும் உயிருக்குரிமையில்லாத இலக்கணத்தை உயிருக்குண்டென்றும், பாசத்தி னிலக்கணங்களே முறைபிறழவும் கூறும் சமயங்கள்பல. அவ்வாறன்றி அம்மூப் பொருள்களின் இலக்கணங்களே உள் ளவாறு கூறுவது சைவ சமயமேயாம்.

இம்மூப்பொருள்களுக்கும், சொரூபஇலக்கணம் எனப்படும் சிறப்பியல் பும், தடத்த இலக்கணம் எணப்படும் பொது வியல்புமென இரண்டு இயல் புகள் தனித்தனி உள்ளனவென்று சைவசமயம் கூறும்.

சிறப்பியல்பாவது நிலைபெயருடைய இயற்கைத்தன்மை. பொதுவியல் பாவது தோன்றியொடுங்கும் செயற்கைத் தன்மை. இலக்கண நூல்கள் ஒரு பொருளுக்கே உரியதன்மை சிறப்பென்றும் பல பொருளுக்குரிய தன்மை பொதுவென்றுங் கூறும். மேற் கூறியவாறு ஒரு பொருள் ஒரு தன்மையா கவும் இருக்கும் வேறுபாட்டினால் சிறப்பியல் என்றும் பொதுவியல் என்றும் கூறும் சித்தாந்த சாஸ்திர வழக்கிற்கும், இலக்கண நூல் வழக்கிற்கும் வேற் றுமை உண்டென்றறிய வேண்டும். இவ்வாறு இரண்டிலக்கணங்களே யுடைய இறைவன், உயிர், பாசம் என்னும் மூப்பொருள்களுள் நடுநின்ற உயிர்ப் பொருளாகிய ஆன்மாவின் இலக்கணத்தைப்பற்றி மீண்டு விசாரிப்பாம்.

ஆன்மாக்கள் அளவில்லாதன. அறிவு, இச்சை, செயல் என்னும் மூன்று சக்திகளையுடைய சித்துப்பொருள்கள். ஆயினும் சுதந்தரமாய் ஒன்றையும் அறி யாது. எதுபோல வென்னில் கண்ணுக்கு ஒளியிருந்தும் சூரியன், சந்திரன், அக்கினியின் பிரகாசங்களின் உதவியையின்றி அது பொருள்களைத் தெரிய மாட்டாதது போல என்க. அம்மூன்றுள் ஒன்றின் உதவியைக் கொண்டு ஒளியுடைய கண் பொருள்களைத் தெரிவதுபோல அறிவுடைய ஆன்மாவும் பரமான்மாவாகிய சிவபெருமானுல் அறிவிக்க அறியும். கண்ணொளி தொ ழிற்படுதற்கு மாத்திரமேயன்றி பொருள் விளங்குவதற்கும் சூரியாதிப் பிர காசம் வேண்டப்படுவது போல ஆன்மா அறிதலுக்குச் செய்தற்கு மட்டுமே யன்றி பொருள்கள் அறியப்படுதற்கு அவற்றினும் இறைவன் வியாபித்தி ருக்கவேண்டும். இவ்வாறு உயிரினும் விடயத்தினும் வியாபித் திருத்தலோடு உயிரொன்றனை யறிவதற்குத்தான் உடனிருந்தறியவும் வேண்டும். அறிவித்

தலைச் செய்வதுகாட்டும் உபகாரமென்றும் அறிதலைச் செய்வது காணுமுப காரமென்றும் கூறப்படும்.

கண்ணொளியானது ஒளியோடு கூடி ஒளியாயும் இருளோடு கூடி இரு ளாயும் விளங்குவது போலவும் பளிங்கு அடுத்ததன் வண்ணமாய் விளங்குமா று போலவும் ஆன்மாவும் பாசத்தோடுகூடிப் பாசமாயும் பதியோடு கூடிப் பதி யாயும் இவ்வாறு சார்ந்ததன் வண்ணமாய் வியாபித்து நிற்கும் சதசத்தாந்தன் மை யுடையது. பாசத்தோடு கூடி நிற்குங்கால் பசுவெனவும் பதியோடுகூடி பொதுவிலக்கணத்தி னின்றும் நீங்கிச் சிறப்பிலக்கண மாகிய பரசிவனுடன் நிற்குங்கால் ஆன்மா வெனவும் பெயர் பெறும்

பதியும், பசுவும் வியாபகமா யிருக்க கூடுதலும் கூடாமையும் எவ்வாறு பொருந்துமெனின், ஈண்டு கூடுதல் கூடாமை யென்பதற்கு உட்பட்டும் முற்பட்டும் இருத்தல் என்று பொருள் கொள்ள வேண்டும். அதாவது பாசத் தோடு நிற்குங்கால் பதிஉட்பட்டும் பதியோடு நிற்குங்கால் முற்பட்டும் விளங் கும். இவ்வாறு கொள்ளுதலால் பொருந்து மென்க.

பதியோடு கூடி அதனுள் அடங்கி நிற்கும் தன்மையே சொரூப இலக் கணமாகிய சிறப்பியல்பு. பாசத்தோடு கூடி பதியை உட்படுத்தி நிற்கும் தன்மை தடத்த இலக்கணமாகிய பொதுவியல்பு. சொரூப இலக்கணம் இயற்கையும் தடத்தலக்கணம் செயற்கையுமாம்.

சொரூப இலக்கணத்தையுடைய ஆன்மாவிற்கு செயற்கையான பாசம் நெல்லுக்குமியும் செம்பிற்குக் களிம்பும்போல் அனாதியே பொருந்தி யிருக் கும். இப்பாசம் ஆணவம், கன்மம், மாயை என மூத்திறப்படும். அவற்றுள் ஆ ணவ மலம் ஒன்றேயுடைய ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் என்றும் ஆணவம், கன்மம் இரண்டுமுடையஆன்மாக்கள் பிரளயகலரென்றும்ஆணவம் ,கன்மம், மாயை மூன்று முடைய ஆன்மாக்கள் சகலரென்றும் பெயர் பெறுவர். கலா என்பது பாசத்தைக் குறிக்கும். சகலர் என்றபோது எல்லாப் பாசமும் உடை யர் என்ற பொருள் கிடைக்கும். ஆதலால் மும்மலமுடையார் சகலர் என்று ஆயிற்று. பிரகிருதிமாயா காரியங்கள் பிரளயமாய் ஒடுங்கி அசுத்தமாயா புவனத்தில் போகம் புசித்துக் கொண்டிருக்கையில் பிரகிருதி மாயை பிர ளயமாயும் போகம் புசித்தற்குரிய கன்மமலம், ஆணவமலம் இருத்தலால் இவ்விருமலமுடையாருக்குப்பிரளயாகலர் எனப்பெயராயிற்று. அசுத்தமாயா புவனபோகங்களும் நீங்கிச் சுத்தமாயா புவனத்தில் சுகதுக்காதிக் கேதுவான விருப்பு வெறுப்பின்றி ஞானபரனுய்த் தான் முதலன்றென நில்லாமையால் ஒருமலமுடைய விஞ்ஞானகலரெனப் பெயராயிற்று.

இன்னும் சகலரில் இம்மூவகையும் உண்டென்று கூறுதலும் ஒன்று. அதாவது ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்னும் மூப் பத்தாறு தத்துவங்களோடு கூடி நிற்கும்போது மும்மலமுடைய சகலரென் றும் போக்கிய காண்டமாகிய ஆன்மதத்துவம் நீங்க போககாண்டமாகிய வித் தியா தத்துவமும் பிரோக காண்டமாகிய சிவதத்துவமும் பொருந்தி யிருக்

குங்கால் இருமலமுடைய பிரளயாகலரென்றும் வித்தியா தத்துவமும் நீங்க சிவதத்துவத்தோடு பொருந்தி நிற்குங்கால் ஒரு மலமுடைய விஞ்ஞானகல ரென்றும் கொள்ளப்படும்.

இவ்வான்மா பாசத்தின் பற்றுதலாலும் விடுதலாலும் கேவலம், சகலம், சுத்தமென மூன்றவத்தையினைப் பொருந்தும். அவை வருமாறு. ஆணவமலம் ஒன்றேபற்றி அறிவு இச்சை செயல்கள் தொழிற்படாமல் இருட்டறையில் குருட்டுச் சிசுப்போல் வருந்துவது கேவலாவத்தை. இதனை "சலதக்குருட்டுச் சந்ததி இருட்டறை வாய்ப்பட்டாங்கு மலவாய்ப்பட்டுப், பன்னாளழுங்கி பருவாலுழக்கு, மனுதி கேவலத்தாருயிர் அம்ம." என்னும் ஆன்றோர் வாக்கியத்தால் உணர்க. ஒரு மலத்தாலவத்தைப் படுதலின் கேவலாவத்தை யெனப் பெயராயிற்று.

இவ்வாறு மலத்தால் பிணிப்புண்டு வருந்தும் ஆன்மாவிற்கு சிவபெருமான் இரங்கிக் குருடனுக்குக் கோல் கொடுப்பது போல் மாயையினின்று சரீரத்தைக் கொடுத்து இதாகிதமாகிய கன்மத்தையும் கூட்டுவிக்குங்காலம் சகலாவத்தை எனப்பெயர் பெறும். மும்மலத்தாலும் அவத்தைப்படுதலின் சகலாவத்தை எனப் பெயராயிற்று.

மும்மலவாதனையும் நீங்கும் படியான சாதனங்களில் உறைத்து நின்று சாதிக்குங் காலத்தும் பயனடைந்தின்புறுங்காலத்தும் சுத்தாவத்தை எனப் பெயர் பெறும். மலமாகிய அழுக்கு நீங்கப்பெறுதலால் சுத்தாவத்தை எனப் பெயராயிற்று.

இம் மூன்றவத்தையுள் கேவலாவத்தை பொதுவியல்பிற் பொதுவாம்.

சகலாவத்தையைப் பொருந்தி உபாதிகளோடு நிற்குங் காலத்தும் சுத்தாவத்தையைப் பொருந்தி உபாதிகள் நீங்கி நிற்கும் காலத்தும் உயிர் ஆறுதன்மையினைப் பொருந்தும். அவற்றுள் சகலத்தின் நான்கும் சுத்தத்தில் இரண்டுமாம். மூன்னைய நான்கும் பூதான்மா, அந்தரான்மா, தத்துவ ஆன்மா, சீவஆன்மா என்பனவாம். பின்னைய இரண்டும் மந்திரான்மா, பரமான்மா என்பனவாம்.

இவற்றின் இலக்கணம் வருமாறு: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்துபூதங்களுடன் பொருந்தி எனைய தத்துவங்களைப் பின்னிட்டு நிற்கும் அவதரம் பூதான்மாவாகும்.

பிராணன் அபானன் என்னும் வாயுக்களுடன் கூடி சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்குகளைப் பொருந்துங்கால் அந்தராண்மாவாகும்.

மூப்பத்தாறு தத்துவங்களுடனும் கூடி ஜீவிக்கும் அவதரம் தத்துவ ஆன்மாவாகும்.

பூதம், வாக்கு, தத்துவம் மூன்றுடனும் கூடி சுகதுக்கங்களை அனுபவிக்கும் அவதரம் ஜீவான்மாவாகும்.

பூதம் முதலாகக் கூறிய உபாதிகளினின்றும் விடுதலை யெய்தக்கருதி மந்திரமாகிய சாதனத்தோடு கூடிநிற்கும் அவதாரம் மந்திரான்மாவாம்.

யாவும் யாவும் அறவே விடுதலை யெய்தப்பரஞ்சுடி கூடிநிற்கும் அவதாரம் பரமான்மாவாம்.

இவற்றுள் முன்னைய நான்கு தன்மையினைப் பொருந்தி ஜீவிக்கும் சகலாவத்தை சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்தவத்தை யுடையனவா யிருக்கும். அவற்றுள் சாக்கிராவத்தை மூப்பத்தைந்து தத்துவங்களுடன் லலாடத்தானத்தில் நின்று தொழிற்படும் அவதாரமாம்.

சொப்பனம் இருபத்தைந்து தத்துவங்களுடன் கண்டத்தானத்தில் நின்று தொழிற்படும் அவதாரமாம். சுழுத்தி பிராணன், சித்தம், புருடன் என்னும் மூன்றுதத்துவங்களுடன் இதயத்தினின்று தொழிற்படும் அவதாரமாம். துரியம்புருடன், பிராணன் என்னும் இரண்டுடன்கூடி நாபியில் நின்றும் தொழிற்படும் அவதாரமாம். துரியாதீதம் புருடதத்துவம் ஒன்றேகூடி நின்று மூலாதாரத்தினின்று தொழிற்படும் அவதாரமாம்.

இந்த அவத்தை ஐந்தும் கீழாலவத்தை என்று கூறப்படும். மேலாலவத்தை ஐந்துண்டு. அது இருதயம், கண்டம், நாக்கின் அடி, புருவநடு, பிரமரந்திரம் என்னும் மேல்நோக்கிய ஐந்து தானங்களில் மந்திரம், மூர்த்தி முதலியவற்றோடுகூடி நின்று தொழிற்படுதல்.

மத்தியாலவத்தை லலாடத்தில் நின்று ஐந்தொழிற் படல். மேற்கூறிய கீழாலவத்தை ஐந்தும் பொருந்துவதாகிய நான்கு தன்மைகளும் பொதுவியல் பிற்சிறப்பெனப்படும்.

இவ்வாறு ஐந்தவத்தைப்படுங்கால் இதாகிதமாகிய இருவினைகளாகிய ஆகாமியத்தைச்செய்து அதுமாயையிற்கிடந்து பக்குவமாங்காறும் புண்ணிய பாவமெனப் பெயர்பெற்று இன்பதுன்பமாய் அனுபவிக்க வருங்கால் பிராரத்தமென்றாகி அப்பிராரத்தம் இன்பமேயாயின் சொர்க்காதி லோகங்களேயும் துன்பமேயாயின் நரகலோகத்தையும் இரண்டும்ஒத்ததாயின் இம்மண்ணுலகத்தையும் பொருந்தி அங்ஙனம் அனுபவிக்குங்கால் அனுபவம் வினைகாரணமாக இறைவன் செயலெனக்கருதாது தன்செயலெனக்கருதும் அகங்காரத்தால் மேலும் மேலும் வினைகளே மீட்டிதேவர் முதலாக எழுவகைப் பிறவியைப் பெற்றுப்பிறந்திறந்தழலும்.

ஆன்மா அவற்றினின்றும் நீங்கி இன்பமடைய விரும்பி நூல்வழியாகத் தன்றன்மையையும் தன்னோடு அந்தரியாமியாயுள்ள இறைவன்றன்மையையும் அவ்விறைவனைத் தனக்குத் தெரிய ஒட்டாது மறைத்தற்குப் பாசத்தின் தன்மையையும் ஆராயவரும். வரவேபாசத்தினின்றும் நீங்கி பதியை அடைவதற்கு அங்ஙனம் அடைந்துள்ள ஒரு பெரியாரை ஆசிரியனாகப்பெற்றாலன்றிமுடியாதெனத்தேறும். தேறன்றவே தலையில் நெருப்புப்பற்றி

ஒருவன் தண்ணீரையே யன்றி பிறி தொன்றையும் நாடாததுபோலச் சரீ
ரசம்பந்தமான ஒன்றிலும் விருப்பில்லாதவனுய் ஆசிரியனே

உலகமுமாழியுமொண்கண்மாதரு
நிலையலவென்றுணர் நெடியமாணவன்
கலையெலாந்தெரிந்தவன் கதிவிருப்பின
னலமலிகுரவனேநாடித் தேடுவான்.

இவ்வாறு தேடும்போது

உலகநெருப்பைக்கடந்தொழியா ஞானவுதயமடுப்பேனே
விலகுகுடும்பத்தியர் நீங்கியெங்நாட்டுறவியாவேனே
திலகமறையின் பொருளிதெனத் தேற்றுங் குரவற்காண்பேனே
கலகவுடலப் பிணிதணந்து கடவுடனே யான் காண்பேனே.

எனச்சிந்தித்து வருந்துவன். வருந்தவே வேண்டுவார் வேண்டுவதே யீந்
தருளும் வள்ளற் றன்மையுடைய பரமகருணு நிதியாகிய சிவபெருமான்
விஞ்ஞானகலர்க்கு அறிவுக்கறிவாயுண்ணின்றும் பிரளயாகலர்க்கு நாற்கரு
ணும் மூக்கண்ணும் கரைமிடறு முதலிய உறுப்பிற்றாய் மூத்தொழில் நடாத்
தி நின்ற தன்னியற்கை வடிவே குருவடிவாகக் காட்டி முன்னின்றும், சக
லர்க்கு அவர்வடிவு போலும் வடிவுடைய குருவாகி அவ்வடிவின் பின்னுக
மறைந்து படர்க்கையினின்றும் தத்துவஞானத்தை அனுக்கிரகிக்கவேண்டு
வது முறைமையாதலின் இதுகாறும் உண்ணின்றுணர்த்திய அப்பரம் பொரு
ள் குருமூர்த்தியாய் எழுந்தருளிவந்தும். வரவே

தேனுண்டளிகள் பண்பாடுஞ் செறிகற் பகநேர்குருந்தடிக்கீழ்
மானுமழுவஞ் சதுர்ப்புயமு மணிகாந்தாமு மறைத்தருளி
மீனமகன்ற திருவாதவூரர்க்காக வெழுந்தருளு
ஞானமுனியே யிவனென்று தெளிந்து நாவாற்பழிச்சினனே.

என்றபடி எத்தவன். எத்தவே இருவினை யொப்பும் மல பரிபாகமும்
சத்நிபாதமும் நிறைந்த உத்தமத்தன்மையை நோக்கியருத்து தத்துவங்களி
னின்றும் நீங்கித்தன்னையும் தலைவனையும் தெரிசிக்கும் ஞானோபதேசத்தைச்
செய்தருளி அவ்வுபதேசத்தில் உறைத்து நிற்காது பண்டைப்பயிற்சி வய
த்தால் விடயத்திலமிழுமாயின் அவ்விடயங்களே அசத் தென்று காணும்
உபாயத்தையும் வாசனாமலம் நீங்கும்பொருட்டு அவ்விரண்டினையும் உணர்த்
துவதாய ஸ்ரீபஞ்சாக்ஷரோபதேசத்தையும் உபதேசித்தருளுவர்.

இவ்வாறு உபதேசம் பெற்று சாதனத்தில் உறைத்து நிற்கும்போது
மந்திரான்மாவாகும். இது ஆன்மாலிற்கு சிறப்பியல்பில்பொது எனப்படும்.

இனிமேற் கூறிய வாறு சாதனத்தில் உறைத்து நிற்றலாம் அசத்தா
யுள்ளபாசத்தினின்றும் அறிவு விடுதலையெய்தி பெத்தநிலையில் சிவம்
தோன்றுதுதான் தோன்றிநின்றவாறு போல இவ்விடத்தில் ஆன்மாவேறு
காணப்படுமாறின்றி சிவனே டொற்றுமைப்பட்டு தனக்கெனச்செயலின்றி
அவனருளாலல்லது ஒன்றையும் செய்யாதுய் இறை பணியில் நிற்பன்.

இவ்வடிமைத் திறமுடையார் எவ்வுடம்பினின்று எவ்வினைகளைச் செய்யினும் அவை அவர்க்குப் பந்தமாதலில்லை. ஏனையோர் செய்யும் வினை பந்தமாவதற்கும் இவர் செய்யும் வினை பந்தமாகாமைக்கும் எது வென்னை யெனின்? தான் முதலென நிற்றலும் தான் முதலன்றென இறைவனைச்சார்ந்து நிற்றலுமேயாமென்க. சார்ந்தாரைச்காத்தல் தலைவர் கடனாதலின் இங்ஙனம் இருவேறு வகைபடச் செய்யும் இறைவன் செயல் நடுநிலைமைக்கு விரோதம் அன்றென்க. பாசவெற்றி, சிவப்பேறு என்னும் பயன் இரண்டனுள் இது பாச வெற்றியாம்.

இவ்வாறுபாசவெற்றி வந்த பொழுது தூய நிலைக்கண்ண தாகிய அருள் நிலை அதாவது பதிநிலையாகிய சுகப்பிரபைமாத்திரையே, விளங்குவ தன்றி தூயாதீத நிலைக்கண்ணதாகிய சிவத்துவவிளக்க மென்னும் பரமசுக மாகிய ஆனந்தவிளக்கம் விளங்காமையின் அது விளங்குதற் பொருட்டு உருவத்தைக் காணும்படி கண்ணுக்குக் காட்டியும் கண்ணோடு ஒருங்கியைந்து நின்று உருவத்தைக்காணும் ஆண்மாப்போல அறிவிக்க அறியும் இயல்புடைய ஆன்மாவிற்கு விடயத்தை அறியும்படி உடனாய் நின்று அறிவித்தும் அறிந்தும் வரும் இறைவனுடைய அத்துவித நிலையைம்றவாது கடைப்பிடித்து அன்புசெய்யும். ஈண்டு, அன்பு=நிட்டை. செய்யவே இறைவன் திருவடியாகிய சிவானந்தானு பூதியைத்தலைப்படும். அத்துவிதம் இருபொருளை ஒப்புக்கொண்டு அப்பொருள் வேறு பிரிக்கமுடியாமல் இருப்பதை உணர்த்தும். இனி சைவசித்தாந்தத்தலைவராகிய ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள் சிவஞானப்போதச்சிற்றுரையில் அத்துவிதமாவது பேதப்பொருளிரண்டும் தம்முள் அப்பேதமாதற்குரிய சம்பந்த விசேடம் என அருளிச்செய்த திருவாக்கால் இனிது தெளிக. ஈண்டுவிரிப்பிற் பெருகும்.

இவ்வாறு இறைவன் உடனாய் நின்று உபகரித்து நிற்கும் உரிமையை நோக்குந் தொறும் நோக்குந் தொறும் அப்பொருட்கட்செல்லும் இச்சை அடங்காது மீதூறும் ஆதலின் அவ்வழி அவ்விச்சையே பேரானந்தமாக விளங்கித்தோன்றும். இந்தஅன்பு நிலையைத்தான் "அன்பேசிவமாவது யாரும் அறிந்தபின் அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" எனத்திருமூல நாயனாரும் "ஈறிலாப்பதங்களி யாவையுங்கடந்த இன்பமே என்னுடை அன்பே அன்பினில் விளைந்த ஆரமுதே" என மணிவாசகப்பெருமானும் "இன்பமெனும் அன்புமுண்டு" என ஸ்ரீதாயுமான சுவாமிகளும் அருளிச்செய்வாராயினர்.

இங்ஙனம் ஆனந்தம் அனுபவிக்குங்கால் ஆண்மாக்கள் இறைவனேயாய் நிற்றலால் இறைவனுக்கு தன்னைப்பற்றுதலென்னும் குற்றம் உண்டாகாதோ எனின் ஆகாது. என்னை? கண்ணொளியோடு கூடிநின்று ஆகித்தன் தன்னைக்காணுமாறு போல ஆன்மாவுடன் ஏகமாய் நின்று இறைவன தன்னைக் காணுமாதலால்என்க. தனக்கெனச் செயலில்லாத ஆன்மா கண்டதென்று கூறுவதற்குகெனின் காண்டற்பயன் கண்ணுக்குப்போல ஆன்மாவுக்காதலின் என்க.

இங்ஙனம் அன்பிலுல் மறவாது எத்த இறைவனது சீபாதத்தை அணை தலாகிய சிவப்பேறுகிட்டும்.

ஆன்மா இவ்வாறு பாசவிடுதி சிவப்பேறு என்னும் இருபயனும் ஒரு சே ரப்பெற்ற போது பரமான்மா வெனப்பெயர் பெறும். இக்நிலையே பரமுத்தி. உடம்பு நிற்குமளவும் ஜீவன் முத்தன் எனப் பெயர் பெறும். இத்தகைய முத்தி நிலையில் நிற்கும் ஆன்மா மல நீக்கத்தால் இறைவனோடு ஒற்றுமை யுடையதாயினும் அதுபற்றி சிவசமமென்றல் கூடாது. என்னை? இறைவன் இயல்பாகவே மலத்தில் நின்று நீங்குதலும் ஆன்மா இறைவனருளால் மலத்தினின்றும் நீங்குதலுமாகிய வேற்றுமை உண்மையானும், ஒன்றைச் சார்ந்தபோது அதுவாய் நிற்பதன்றி பிறிதொன்றனையும் சார்ந்து நிற்கும் தன்மை ஆன்மாவிற் கின்மையால் சிவ வியாபகத்தைச் சார்ந்தபோது அவ் வியாபகமாய் நின்று ஆனந்தம் அனுபவிப்பதன்றி அவ்விறைவன் செய்யும் பஞ்ச கிருத்தியங்களை தான் வியாபித்து செய்தல் கூடாமையானும் என்க. அன்றியும் கண்ணும் வாக்கும் கமனமும் இல்லாத ஒருவனிடத்தில் அவை யுடைய பசாசு ஆவேசமானுல் அவை தொழிற் படாமை போலுமாம்.

அங்ஙனமாயின் முத்தன் சிவனோடு சமமாவன் என்னும் சுருதிகளுக்குக் கருத்தென்னையெனின் சிவமும் முத்தனும் பஞ்சகிருத்தியத்திற்கு உட்படா மை ஒன்றேபற்றி என்க.

இங்ஙனம் பரமான்மாவாய் எல்லாமலங்களும் பற்றறத்துடைத்து மெய் யுணர்ந்து நிட்டைகூடினுர்க்கு உடம்பு நிற்குமளவும் பிராரத்தவினை அவ்வு டம்பைப்பற்றி நிற்றலால் ஒரோவழி வினைவயத்தால் வாசனைவந்து தாக்கும். தாக்கவே விருப்பு வெறப்புக்கள் உளவாம். உளவாகவே பரமேபாத்திருப் பார்க்கு நிலமுதலிய ஏகதேசப் பொருள் காட்சிப்படும். படவே அவற்றைச் சுட்டி அறிவதாகிய விபரீத உணர்வு மேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்படுத் துப்பிறவிக்கு வித்தாம். இவ்வாறு விருப்புவெறுப்பால் கன்மமலமும் நிலமு தலிய காட்சிப்படுதலால் மாயாமலமும் சுட்டியறிதலால் ஆணவமலமும் அறி வற்றம்பார்த்து தலைப்படுமாதலின் அறிவு, இச்சை, செயல்கள் புறத்து செல்லுங்கால் அம்மும்மலமும் தாக்கா திருத்தற் பொருட்டு அனுபவம் வரு வதற்கு முடிவாக அனுட்டித்த சாதனத்தை அனுட்டித்தலாகிய அறிவின் வியாபாரத்தையும் சிவனடியார்களோடு இணங்குதலாகிய இச்சையின் வியா பாரத்தையும் சிவனடியாரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெ னக்கண்டு வழிபடுதலாகிய செயல் வியாபாரத்தையும் மேற்கொள்ள வேண் டும். இவ்வாறு பிராரத்தவினை முடியுமளவும் அனுட்டித்து வினைமுடிவில் உடலும்உலகமும் தோன்றுது ஒப்பற்ற பேரானந்தப் பரவெளியாய் நிற்பன்.

இங்ஙனம் பாசவெற்றி, சிவப்பேறு, ஜீவன்முத்தநிலை ஆகிய இம்மூன் றும் ஆன்மாவிற்கு சிறப்பியல்பில் சிறப்பெனப்படும் சொரூபலக்கணமாம்.

மானுடப் பிறவிதானும் ஒருத்தது மனவாக்காயம் ஆனிடத்தைத்தமா கும் அரன் பணிக்காதலால் மானுட ஆக்கை பெற்ற ஒவ்வொருவரும் ஆன்மா வின் சிறப்பிலக்கணமாகிய சிவானந்தப்பேறை அடைதற்கு முயலவேண்டும்.

முடிவுரை

ஆஸ்திகசமயம் யாவும் கடவுள், ஆன்மா, பாசம் என்னும் முப்பொருளுண்மையை ஒப்புக் கொள்ளுமென்பதூஉம், கொள்ளினும் அப்பொருள்களி னிலக்கணம் உள்ளவாறு கூறுவது சைவசமயமே என்பதூஉம், முப்பொருள்களுக்கும் சொரூப இலக்கணம் எனப்படும் சிறப்பியல்பும் தடத்த இலக்கணம் எனப்படும் பொதுவியல்புமென இரண்டு இயல்புகள் தனித்தனி உண்டென்பதூஉம், இலக்கண நூலார் கூறும் இவ்வியல்புகட்கும் இவற்றிற்கும் வேற்றுமை உண்டென்பதூஉம், ஆன்மா சார்ந்ததன் வண்ணமாம் தன்மையுடைய வியாபகப் பொருளென்பதூஉம், மூவகையாய் மூன்றவத்தையுறு மென்பதூஉம், சகலம் பொதுலியல்பில் பொது என்பதூஉம், சகலம் சுத்தம் அறுவகைப் படுமென்பதூஉம் அவற்றுள்சகலத்தில் நிகழும் நான்கும் பொதுவியல்பிற் சிறப்பென்பதூஉம், சுத்தத்தில் நிகழும் இரண்டில் முன்னையசாதனம் சிறப்பியல்பிற் பொதுவென்பதூஉம், பின்னையபயன் சிறப்பியல்பிற் சிறபென்பதூஉம், பயனுகியமுத்தி பெற்ற காலத்தும் ஆன்மாசிவத்தைச் சடமையேயன்றி சிவசம மன்றென்பதூஉம், முத்தியிற் சிவசமமென்றது பஞ்சகிருத்தியத்திற் குட்படாமைபற்றி யென்பதூஉம், உடம்போடு கூடி சீவன்முத்தி நிலையில் நிற்குங்காறும் நிட்டை சாதித்தலும் சிவனடியாரோடிணங்குதலும் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனென வழிபடுதலும் வேண்டு மென்பதூஉம், இந்நிலையடைவதற்கே ஒவ்வொருவரும் முயல வேண்டு மென்பதூஉமாம்.

ESSENTIALS OF A TRUE RELIGION.

Before we begin to discuss the essentials of a true religion, it would be important to ascertain the import of what we mean by truth itself. In fact as I develop the subject, all that we have got to learn of the essentials of true religion will clearly be deduced from the definition of truth itself. The import of the word has been in doubt from the beginning. 'What is truths' said jesting Pilate. Some people try to make it a matter of mystery, something highly metaphysical and highly transcendental, something which we cannot grasp. However I can assure it is nothing of the sort. It is the plainest and simplest thing which even our children can grasp. I will now refer you to a definition which you learnt in your childhood days and which you have forgotten probably, in acquiring a true profound knowledge of religion and philosophy. I refer you to the definition of it given by our Sainted old mother Avvai, in her priceless book '*Attichudi*'. The definition is *கண்டொன்று சொல்லேல்* i.e. *கண்டு மற்றொன்றை சொல்லேல்*. i.e. having seen one thing, don't speak of it as another. It will be noticed that this definition is negative in its character but the true import could not be better brought out than by this way. What is Asatyam, *பொய்*, untruth? Untruth is where we speak having seen one thing as having seen another? Untruth is where we speak, having heard one thing as having heard another thing. Untruth is where we speak having felt one thing, as having felt another thing. Untruth is where we speak, having thought one thing, as having thought another thing. From this we gather what the definition of truth itself is. To speak whatever we have seen, heard, felt and thought as such is truth. This will exclude things in themselves. Every thing is in relation to ourselves. When we want to ascertain and know truth, it is in relation to ourselves. We can never talk a thing as a truth without any relation to ourselves. This definition it will be noticed excludes from it the case of persons who neither saw, nor heard, nor felt anything and yet deposed to having seen, heard or felt something. It cannot be denied that there are people who do such things, but somehow the definition of our old mother seems to place them outside the pale of such definition.

Every one knows that *Attichudi* is a profound ethical treatise. Each aphorism is condensed thought, condensed amrita. Each dose is very small and yet it is highly concentrated. Each such drop is allowed to be swallowed easily and as it slowly and surely circulates in our system, it gives life and vigour and tone to our body and mind. As I said as the definition as it goes is intended to over the field of ethics, and as such to influence all our activities in reference to our dealings with man and man. This governs all our business relations in the law courts, in trade and in politics and religion. A witness is put forward, in a law court as having seen or heard a fact. If the party puts forward a man as having seen or heard what he has never seen nor heard, then this comes altogether outside the realm of ethics which defines truth and untruth. If the witness deposes to having seen or heard what he really saw or heard, then we say he spoke truth. If having seen or heard anything, he deposes to seeing or hearing something else, then we say he spoke untruth. It may be that the fact deposed to was a fact in itself, but if the witness never saw it and yet spoke as having seen it, he would still be a lying witness. Raman killed Soman and Rangan deposed he saw Raman kill Soman, though he never saw it. And yet his evidence is rejected, as hearsay. * This is where the evidence excludes things in themselves without reference to ourselves.

Where a buyer passes a bad coin as a good one, a silvered coin as a real silver one, we hold his act as wrong. The case where he passes no coin will not come within the definition of truth and untruth. Where a seller sells a bad horse as a good one, this will be held to be wrong. The case where he sells nothing does not come in for consideration at all. This will apply to politicians and reformers who feel one way, and say another thing, who say one thing and act in another way. But it is a fact that people see one thing and yet speak of it as something else. How does this happen ? There are various causes which bring about this result. And they are, Interest,

* The evidence of the majority of witnesses who depose to their knowledge of facts resolves itself into hearsay testimony by a slight cross-examination. The illiterate and I may add some of the literate rarely distinguish between direct knowledge and hearsay.

Prejudice, Prideness-or Ahankara, and certain identity in the objects perceived, defect of vision, fear, darkness etc. Some of these causes affect the honesty of the witness and other causes induce the error though the witness may be perfectly honest Different people might be witnessing the same thing yet through one or other of these causes their statement is affected they depose to something else. The immediate psychological reasons are given as ஐயம் திரிபு and மயக்கம், Doubt, variance, and delusion. The result is the seeing of one thing and the mistaking of it as another.

Before I leave this part of the subject, I may note that as much of the knowledge of the external world is gained through the eye, the words Satyam and Asatyam originally denoted the seen and the unseen, the visible and the invisible; and the definition of St. Avvayar கண்டொன்று சொல்லேல் has reference to sight alone. But as the idea is fully developed, the definition extends to all kinds of perceptions by all the external and internal organs. Direct perception, un-influenced by doubt, variance and delusion will be truth and the mistaking of it will be untruth.

We have been considering the definition all this time in the field of ethics, and let us now see if this definition holds good in the field of Religion and philosophy. Just as our old Mother Avvai was our guide so far, her sainted Brother, Tiruvalluva Deva comes to our help at this stage. In the chapter entitled மெய்யுணர்தல் 'Perception of Truth' the very first sutra we meet with is the following.—

பொருளல்ல வற்றைப் பொருளென்றுணரு
மருளானுமாணப்பிறப்பு.

„ Men deem that as a thing which it is not. From this delusion doth birth arise."

The force of the word 'அல்ல' will have to be noted. If in the couplet 'இல்ல' be substitued for 'அல்ல' the whole meaning would be changed and this chapter instead of propounding truth will be doing just the opposite of it. The difference is this. As the couplet stands, the person sees a real object before him. The object is there. It is not a non-entity

or sunyam or void. He only mistakes it for something else which he had known and which he is anxious to know, as wish is the father to the thought as the saying goes. If we substitute இல்ல, then before the seer there is no object, no reality, but out of nothing he fancies he sees something. This is the first divergence in philosophic investigation. But we refuse to be led into this deviation and we won't define truth and untruth to cover this path. We relegate this path altogether as altogether outside the ken and scope of philosophy proper. The importance of this will appear when we know how our writers have classified religions and philosophies into Aham and Puram and Purapuram. We regard all those who would not conform to our definition as altogether outside the field of true religion and philosophy. Now therefore taking with us this definition which is but the paraphrase of கண்டொன்று சொல்லேல், we will consider the great truths of Religion and philosophy.

When we just open our eyes and allow the senses to play, what is the great truth that we see? We see the world, all around as all about us which resolve themselves into தனுகரணம் புவனம் and போகம், Bodies, senses, worlds and systems, and enjoyments. The whole external phenomena can be compressed in these words. This is the first truth we have got to accept, the reality of this universe of matter, called otherwise maya, Prakriti, Pradhana, &c. The philosophy will be no philosophy which denies the reality and existence of this universe, Achetana Prapancha. The next great truth that we perceive is that there is a concious mind who perceives this Achetana prapancha and there are innumerable minds dwelling in different Tanu or bodies This constitutes the chetana prapancha and each individual is called a Jiva, atma, Purusha, Pasu, a soul. Even the agnostic philosophy of the west has not succeeded in whittling away the essential distinction of this chetana and Achetana Prapancha, the unextended and the extended, the subject and the object. To deny the reality and existence of this atma, or soul, would be outside the scope of our definition of truth and untruth and outside the realm of religion and philosophy. You will note how the Purachchamayams branch off at all these points.

The next great truth that we see is the existence and Reality of a great Power behind this chetana and Achetana Prapancha, which we call God, Isa, Siva, Narayana, or Allah. This is as much a truth as the other things. It is not by the external senses alone we gain knowledge of the truth. When we, devoid of doubt and error, calmly reflect on the nature of chetana and Achetana prapancha and perceive the non-intelligent character of matter and feel our own helplessness in the immensity which stares us, we cannot but be driven to feel the Power behind us, who moves all this universe of matter and man. We can feel this power, this great Love and this great joy ; and this is truth. To deny the existence of god will be outside the scope of religion and philosophy. We perceive these three great truths and their relation between themselves and guide ourselves by our knowledge of these relations. This constitutes real religion and philosophy; and for a religion to be considered true it must contain all these essential truths.

We will now see what the untruth is and what the consequences are. Untruth as we have defined itis mistaking one thing for the other and not the denying of it. So, if the three essential truths, Padarthas that we have arrived at, Pathi, Pasu and Pasa, chit achit Iswara, Jagat Jiva Param, if we mistake one for the other, it will be untruth or error. When we mistake the body for the soul itself, and identify them, we minister to the wants of the body; we like what gives pleasure to the body and hate what gives pain. Hence karma and krodha are formed and this pulls us down and down and we commit sin and suffer. There is untruth also when we mistake the body or matter for God. Errors arise when we mistake the soul for matter or god and we mistake god for soul or matter. Thus different mistakes give rise to different systems and are the cause of sin and sinner also. I should like to develop this part of the subject now but the hour is late and the atmosphere buring and I take leave of you for the present.

After I left the hall. Mr. M. Nataraja thevar of Ramnad who was present all the time outside questioned me even fully about the points covered by my address. Alas he is no more! a most ardent and spiritual soul. I dedicate this paper to his memory. T. M. N.

A DISCOURSE ON A PROBLEM OF LIFE.

LADIES AND GENTLEMEN,

Beyond welcoming the President and the delegates, I had never intended to deliver a speech on any subject at this Meeting till I learned from the Programme that I should also address the Meeting at its close. Probably it was our Secretary's wish that the one that gives the start to a business should also give it the finish. Hence I appear again before you to make a speech, but you need not be afraid that I shall detain you unnecessarily long.

My theme is a Problem of Life.—whether life is worth living in this mortal world. There can be very few thinking men whom the question does not strike at almost every stage of existence, but it is doubtful whether they have all given it the consideration it deserves and got it satisfactorily solved. At any rate there is nothing in practical life to show that they have done it. Simple as it is, the problem is not an easy one to deal with, and I wish it is handled by a well-informed and practical gentleman. I shall, however, attempt a solution from the little I know of the teachings of the Great.

There are two aspects of the question to be considered, one from the point of view of this world, and another from that of the next—the one relating to the mortal body and the other to the immortal soul.

Now, from the worldly point of view, what is the goal of Life aimed at by the generality of mankind? It is a perfect enjoyment of life, meaning, worldly pleasures of all kinds which a man can possibly attain according to the station of life he is placed in—such as wealth, honour, apparel, jewels and the like pleasures of the senses, including the gratification of carnal appetites. These as briefly put by the great Saint Sri Rama Krishna Parama Hamsa are "*woman and Gold.*" From the King that sits on the Throne, to the beggar that waits at his gate, there are various gradations of life. Can any man of conscience in any of these grades say that he has been enjoying unmixed pleasure—or happiness all along his career without interruption? Not one can dare say so. But on the contrary, if we take stock, we shall find, in no case the

so-called pleasure or happiness to be permanent, not unmixed with pain or misery, in one form or other, say, poverty, distress, disease, discord, fear, anxiety or worry. There may be difference in different individual cases but the difference shall be only in degrees. In some cases, the pain or misery is so intolerable that even death is often courted and invited, if not self-inflicted. Thus, it would appear from an worldly point of view that life is not worth living. Then the only reasonable conclusion that can be arrived at, without questioning the wisdom of the Almighty Providence is that the goal of life must be different. It is indeed different if one would care to know it and live his life accordingly. Then comes the other aspect of the question for consideration and that is from the standpoint of the undying spirit or the higher self, *viz.* the Ego within man. Each human soul is free and the body is only a tenement or Temple of that soul. It is built up through the mineral, vegetable and animal kingdoms in the process of evolution. It is in this human body that the spirit or the real "I" the centre of divine consciousness with divine powers begins to awaken. Mrs. Madam Blavatsky says "Spirit sleeps in the mineral, breathes in the vegetable, dreams in the animal and awakens in the man." When it does so, it is in an infant state and cannot cope with the full grown animal soul or the lower self. Its nature is essentially divine and diametrically opposed to the lower self or animal soul. The higher self or the Ego I being the controlling agent in which is locked up all power, can silence the cries of the animal soul which is the seat of the passion and the appetites, by asserting its authority over it. While the lower self (animal soul) is working on the sub-conscious plane, directing and supervising the animal economy of the body, the Ego or the higher self is evolving its strength day by day and will eventually conquer death, disease and destiny. All desires to gratify the senses are due to the promptings of the lower self. The higher self must deny these desires sternly, continually affirming that he is part of that mighty power which is *All health, all peace, all love* and *all wisdom*. Among the promptings of the lower self, the lust or craving for carnal pleasure is the worst. It is said that the world's greatest sin is sexual sin which sucks out the vitals of the nations bringing disease and death

to millions and that from the lowest savage to highest civilized, all classes suffer from this scourge. "The church of England calls this a deadly sin. Those who committed it have no interitance in the kingdom of God and not part or lot in the heavenly jeruselam" The higher self must, therefore, shake itself free from the shackles of this sense-bound existence, and always live in God-consciousness. Every man must know that he has come into the world for a certain purpose———to make himself to be co-worker with the Supreme will and he can do and suffer all that is necessary to that end. The mightiest force he can manifest is Spiritualized will-force. This Sovereign Power or emblem of Divinity is developing in him and as evolution goes on, he becomes the inner Ruler and immortal. He must only be positive to the external world and negative and receptive to the Almighty's *Will Force*. The praying mind by its intensity of faith and love or rather will Power-plus love force opens itself out to the tremendous inflow of divine energy. It is said that Lord Rosebury once made a statement that whenever one is engaged in an earnestly felt prayer, the lower nature becomes quiescent and the Ego seems to be poised on a higher plane of consciousness that places it in direct conscious and living touch with the infinite intelligence which is at every point of the Universe and ever vibrates responsively to each throb of the human heart So long as man is conscious of this relation with the Universal will and makes way for the inrush of this divine energy he will have an inexhaustible reservoir of Will-Power back of him that shall be constant and unfailing. He shall have no fear, no worry, no distress, no anxiety, no disease and no death. The sufferings, if any, are of the body which is made of flesh and blood and not of the spirit within. Every man must work on without attachment and with his soul—mind fixed on the feet of the Almighty. The ultimate end of life is to see and realize the God absolute. This realization is a mere question of time. Man is thus a Prince born to a Crown. He is a king *dejure* though not a king *defacto* yet.

Thus gentlemen, you will see that life, in this world, is a most valuable heritage and is, by all means, worth living by each and every man on right lines in the interest of immorta bliss that awaits him in the next.